1460

வெற்றியுள்ள வாழ்க்கை

பண்டிதர் ஈ. ஸ்தான்லி ஜோன்ஸ்

பண்டிதர் ஜீ. எஸ். துரைசுவாமி பிள்ளையால்

மொழிபெயர்க்கப்பட்டது

VICTORIOUS LIVING

BY

E. STANLEY JONES

OFFICE OF THE ... 28 MAR 1939 MADRAS

420

1939 விலை, 12 அணா

வெற்றியுள்ள வாழ்க்கை

பண்டிதர் ஈ. ஸ்தான்லி ஜோன்ஸ்

VICTORIOUS LIVING

E. STANLEY JONES

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
28 MAR 1939
MADRAS

பண்டிதர் ஜீ. எஸ். துரைசுவாமி பிள்ளையால்

மொழிபெயர்க்கப்பட்டது.

Translated by

G. S. DORAISWAMY

CHRISTIAN LITERATURE SOCIETY FOR INDIA

MADRAS ALLAHABAD COLOMBO

1939

முன்னுரை

இந்நூலானது தனிஜெப தியானத்திற்கென்று ஆங்கிலேய பாஷையில் பண்டிதர் ஸ்தான்லி ஜோன்ஸ் அவர்களால் எழுதியுள்ளது. அவர்கள் தங்கள் முன்னுரையில் அதன் நோக்கத்தைப் பின்வருமாறு விளக்கினர்கள்.

"உயிர்வாழ்க்கையை வெற்றிபெறத்தக்கவாறு யாவரும் வாழ வேண்டும் என்பதே தற்போது உலகில் இன்றியமையாத அவசியம் என உணர்ந்து இந்நூலே எழுதியுள்ளேன். அனேகர் நன்னெறி விஷயங்களில் வெற்றிபெருமல் உயிர்வாழ்கின்றனர். அப்படிப்பட்டவர்கள் இந்நூலின் போதனைகளால் வெற்றிதரும் வழியைக் கண்டுபிடித்து அதில் நடப்பார்கள் என்று நம்புகிறேன்" என்பதே.

ஆங்கிலேய பாஷை யறியாத பலர் இவ்வாறு வாழ விரும்பி இந்நூலில் அதிக உதவி பெற்றுக்கொள்ளுவார்கள் என்று நினைத்து இதைத் தமிழில் மொழிபெயர்க்கச் செய்தோம். கிறிஸ்தவ புஸ்தக ஆலய சங்கத்தின் சகாயத்தினல் இது வெளியிடப்பெற்றது. இனிய தமிழ் நடையில் மொழிபெயர்ப்பு செய்த பண்டிதர் துரைசாமி பிள்ளையவர்களுக்கும் இதற்கென்று பண உதவி அருளி வெளியிட்ட கிறிஸ்தவ புத்தகாலய சங்கத்திற்கும் மொழிபெயர்ப்பு செய்து வெளியிட அனுமதி கொடுத்த பண்டிதர் ஸ்தான்லி ஜோன்ஸ் ஐயருக்கும் எமது அளவிறந்த நன்றியைத் தெரிவித்துள்ளோம்.

H. A. பாப்லி.

ஈரோடு,
ஜனவரி 31, 1939.

வெற்றியடையத்தக்க வாழ்வு

முதல் நாள்

நாம் தேடுவதைப்பற்றி யோசிக்கச் செய்யும் கேள்வி

யோபு 11: 7–9; 21: 15; 23: 3–9. யோவான் 14: 8.

ஆதியிலே கடவுள். ஆதியாகமம் 1: 1.

ஜெய ஜீவியம் இன்னதென நாம் தேடி ஆராய்கையில் நாமனைவரும் கடவுளிலிருந்தே அதை ஆரம்பித்துத் தேடிச் செல்வது நன்றும். அங்ஙனமாயின் நமது முயற்சி ஆகாயச்சிலம்பமாயல்ல உண்மையான காரியமாகும். முழு ஜீவியத்தின் அர்த்தம், நோக்கம் இன்னவென்பதும் அதினுல் விளங்கும். நம்மில் பலர்க்கோ அங்ஙனம் ஆரம்பிப்பது அரிதான காரியமாகும். காரணமென்ன? கடவுளை அவர்கள் தெளிவாயறியார். கடவுள் உண்மைக்கு மாறுபட்டவர்போல் அவர்களுக்குத் தோற்றுவார். அவரில் நம்பிக்கை வைக்கவேண்டும். அவரால் ஜீவிக்கும்படி அவரைப்பற்றிப் பிடித்துக்கொள்ளவேண்டுமென நாம் ஆசிக்கிறேம். சிறந்த தோழராகிய அவரில்லாவிடத்து நமது ஜீவியம் பொருள்படாமற் பாழாகும் என்பது நமக்குத்தெரியும். எனினும் கடவுளின் உண்மையைப்பற்றிய சந்தேகத்திற்காளானேம். சந்தேகத்தை மேற்கொள்ள வழியில்லை. நம்மைச் சுற்றிலும் காணப்படும் உலக நிகழ்ச்சிகளே அச்சந்தேகங்களை நம்மில் எழுப்புகின்றன. ஜனங்களுக்கு வேலைகிடைக்க வழியில்லை. சிறு குழந்தைகளும் நமது கண்முன் பசியால் வருந்துகின்றன. மெலியாரை வலியார் ஒடுக்குகின்றுர். எத்திசையும் போராட்டம். பலமுடையார் பலவீனரை ஒடுக்கித் தாம் வாழ்கின்றனர். நோக்குமிடமெல்லாம் துன்பம், துயரம். கடவுள் இன்றியமையாதவரல்ல,

எல்லாம் இயற்கையில் தோன்றிப் பிரவர்த்திக்கின்றன வெனச் சாஸ்திரவல்லாரும் கூறுகின்றனர். இவற்றை யெல்லாம் நோக்கவே கடவுள்மீதுள்ள நமது நம்பிக்கை தளர்ச்சியுற்றுக் குறைகின்றது. கடவுளின் உண்மையை மறந்தோ மென்பதல்ல. அந்நம்பிக்கை நாளடைவில் குறைந்து தேய்ந்து மாயமாய் விடுகிறது. நமக்கே உண்மையற்றதுபோற் காணப்படும் ஒன்றை நாம் உண் மையெனச் சாதித்து வற்புறுத்துவது எங்ஙனம்?

ஆராய்ச்சியறிவும் கல்வி கேள்வியுமிகுந்த இக்காலத் தில் இதுவரை நாம் கொண்டிருந்த பற்பல கொள்கைகளை மறந்து இழந்தோமெனினும் ஒன்றை மாத்திரம் இழ வாது கடைப்பிடித்தோம். என்ன? உள்ளவாறே உண் மையிற் காணப்பட விரும்புகிறோம். உள்ளான உண்மை யைக் காத்துக்கொள்ளும் ஆசை நமக்குண்டு. உண்மையி லேயே மாயத்தை அருவருக்கிறோம்.

இங்ஙனமாகவே, நாம் கொண்ட சந்தேகம், கடவுள் பேரிலுள்ள நம்பிக்கையில் மாத்திரமன்று, அதற்கு மேலாக நமது ஜீவனிலேயே சந்தேகங்கொள்ளத் தொடங் கினோம். நமது ஜீவனில் ஏதேனும் பொருளும் போக்கு முண்டோ? நமது ஜீவனாவதென்? ஜீவிய நோக்கமென்? நம்முள்ளிருக்கும் ஜீவனின் அனல் கட்டைகள் கொழுந்து விட்டெரியும் அனலினும் மாறுபட்டதோ? இரண்டும் ஒன்றுபோல் இயற்கைப்பொருட்களின் சம்பந்தத்தால் உண்டாயினவோ? இரண்டும் இறுதியில் சாம்பலாகி அழிவனவே. நமது ஜீவனுக்கு இறுதியிலே மேலான பொருள், அர்த்தம் என ஒன்றில்லையாயின் நமது தற் கால ஜீவனில் ஏதேனும் பொருளும் அர்த்தமும் உண் டாமோ?

கடவுளே, எங்கள் பிதாவே—நாங்கள் உம்மைப் பிதாவென அழைக்கலாமோ?—நாங்கள் தேடமுயலும் ஆரம்பத்திலேயே பயம், தடுமாற்றம், சந்தேகம் இவற்றால் கலக்கமுற்றோம். நாங்கள் இவற்றை முற்றிலும் மேற்கொண்டு, கூடுமானால் இவற்றுக்குத் தப்பி, அப்பால் ஜெய ஜீவியத்தினுட் பிரவேசிக்கத் துணைபுரிந்தருளும். ஆமென்.

இரண்டாம் நாள்

உயிர்வாழ்க்கை நலம் என்பதையோ உயிர்வாழ்க்கை ஒன்றுமில்லை என்பதையோ

எதைப் பின்பற்றுவோம்? பிரசங்கி 4: 1, 2; 9: 2, 3. யோவான் 10: 10.

ஜீவனைப்பற்றிய தத்துவ சாஸ்திர முறையான சாதாரண கோட்பாடுகள் இரண்டே. புத்தர் போதித்த சாஸ்திரம், கிறிஸ்து போதித்த சாஸ்திரம். மற்றுள்ள கோட்பாடுகள் அனைத்தும் இவ்விரண்டுக்கும் இடைப்பட்டு இவற்றைத் தழுவியனவே. உலகில் ஜீவித்த அனைவருள்ளும் மிகப் பெரியவரென மூவரைத் தெரிந்துகொண்ட எச். ஜி. வெல்ஸ் ஆசிரியர் அம்மூவருள்ளும் கிறிஸ்துவைத் தலைஸ்தானத்திலும், புத்தரை இடையிலும், அரிஸ்டோட்டலை கடைஸ்தானத்திலும் வைத்தனர். இம்மூவரும் முறையே உயிர்வாழ்க்கை நல்லதென்றும் உயிர்வாழ்க்கை ஒன்றுமில்லையென்றும் எல்லாம் சாஸ்திர முறையென்றும் போதித்தனர். உலகில் எவரினும் சிறந்தவரெனப் பாராட்டப்பெறும் இருவராகிய கிறிஸ்துவும் புத்தரும் உயிர்வாழ்க்கையைப்பற்றி ஒன்றுக்கொன்று முற்றிலும் மாறுபட்ட வெவ்வேறு கோட்பாடுகளைப் போதித்தனர். இவர்களிருவரும் உயிர்வாழ்க்கையில் ஒரேவிதமான காரியங்களையே உற்றுநோக்கினரெனினும் வெவ்வேறு விதமான முடிவைக் காட்டினர். ஒருவர் கண்ட முடிவு நலம், உண்டு என்பது; மற்றவர் கண்ட முடிவு ஒன்றுமில்லை என்பது. புத்தர் மரத்தடியிலிருந்து தவசுபுரிந்தெழுந்து உயிருடன் இருத்தலும் தீமையும் ஒன்றே என உலகுக்குரைத்தார். தீமையினின்று விலகுதற்கான ஒரேவழி, இருத்தலை வெறுத்து நீங்குவதே என்றனர். நிர்வாண தசைக்கும் முற்றிலும் அழிவுறுதற்கும் பேதமின்மையால் நிர்வாணதசை என்பது முற்றிலும் அழிந்து நசிப்பதேயோவென இன்றளவும் சாஸ்திரிகள் வாதாடுகின்றனர். சிலோன் தீவில் புத்தமத சந்நியாசி ஒருவரோடு

நான் சம்பாஷிக்கையில் அவரிடம் "நிர்வாண தசையில் 'இருத்தல்,' என ஒன்றுண்டோ" என வினவ அவர் "நிர் வாணதசை யடைந்தபின் இருத்தல் என்பது எங்ஙனம் பெறப்படும்? இருப்பு என ஒன்று ஏற்படுமாயின் அங்கே துன்பமுண்டே" என்றனர். "நிர்வாணதசை என்பது ஒன்றுமிலா வெறும் பாழோ" என, அவர் "ஆம். அது ஒன்றுமில்லா வெறுமையே. வெறும் பாழே" என்று முடிவு கட்டினர். இதுவே ஆனந்தமாகக் கருதப்படு கிறது உண்மையே யெனினும் இது உலகின்மீது சலிப் படைந்தவர்க்குள்ள ஆனந்தமேயாகும். ஆன்மாவானது ஜீவனுக்கு விரோதமாய்க் கலகஞ்செய்து இறுதியில் தற்கொலை புரிந்துகொள்கிறது, ஒருவாறு தூய்மையும் உயர்வுமுள்ளதாய் எண்ணப்படும் 'ஹரிகரி' அல்லது தற்கொலை புரிந்துகொள்கிறது. ஜீவனுக்கு இயல்பாகிய துன்பத்தையும் தீங்கையும் எடுத்து விடுதற்பொருட்டு ஜீவனையே நசிக்கச் செய்யவேண்டுமென்பது புத்தரின் கோட்பாடு. நாம் தூயமனத்தராகி உடலையும் தன்னை யும் தற்கொலை புரிந்துகொள்ள வேண்டுமென்பது புத்த ரின் போதனை. இதனால் போந்ததென்ன? ஜீவ நாஸ்தி அல்லது இன்மையான ஜீவனே.

புத்தரின் போதனை ஒருவாறு நியாயமே. எல்லாம் ஒருவாறு அழிவுக்குட்பட்டதாகவே தோற்றுகிறது. புஜபலமுடைய திடகாத்திர வாலிபனும் பலங்குன்றித் தண்டூன்றி உடல் சுரித்துச் சுருங்கி இறுதியில் ஒடுங்கி அடங்குவதைக் காண்கிறோம். சூரியாஸ்தமன நேரத் தில் கண்ணைக் கவரும் அழகிய நிறவேறுபாடு தோன் றும். சின்னேரத்தில் அது மறையவே இருள் மூடிவிடு கிறது. முதலில் அழகு, பின்னரோ இருள்.

கடவுளே, எங்கள் பரமபிதாவே, ஒரு வழியும் தோன்றாமல் நாங் கள் புத்தி தடுமாறி மதிமயங்குகிறோம். புத்தரைப்போல ஆன்மா வைப்பற்றிய அவநம்பிக்கையையே நாங்கள் கொண்டாடவேண்டுமோ வெனத் திகைக்கிறோம். மற்றுமோர் வழியும் உண்டுபோலும்; அதை நம்புதற்கும் மனந்துணியவில்லை. கடவுளே எங்களுக்கு அவ்வழி யைக் காட்டும். ஜீவனுக்கு வழியிருக்குமாயின் அவ்வழியை எங்க ளுக்குக் காட்டியருளும். ஆமென்.

மூன்றும் நாள்

உயிர்வாழ்க்கை குமிழியோ, முட்டையோ?

பிரசங்கி 1: 1–9. 2 கொரிந்தியர் 5: 1–4.

"அன்பு அதிகப்படவே துன்பம் அதிகரிக்கிறது" என ஒருவர் பெருமூச்சோடு கூறினர். இது கிட்டத் தட்ட புத்தருடைய கோட்பாட்டைத் தழுவிய அபிப் பிராயமாகும். மனிதனுக்கு நன்மையோ தீமையோ எது சம்பவித்தாலும் சரியே, அதைப்பற்றிக் கவையிலே யெனச் சராசரமனைத்தும் மனிதனுக்கு விரோதமாய்ப் போராடி நிற்கின்றது. "மனிதனே சராசரமனைத்திற்கும் நடுவே பக்கத்துணை யொன்றுமின்றித் தன்னந்தனியே தனக்குரிய ஒரு சிறிது தைரியத்தைக் கைவிடாதவனுய் அவற்றுக்கு விரோதமாய் எதிர்த்துப் போராடி நிற்கி முன்" எனக் கூறிய பெர்ட்ராண்ட் ரசல் எனும் பெரி யாரும் புத்தரின் கோட்பாட்டையே தழுவியவர்போல் காணப்படுகின்றனர். உலக ஜீவியத்திற் காணப்படும் அநீத அநியாயங்கள் அனைத்தையும் காணுந்தோறும் பற்பலர் தம்மை அறியாமலே புத்தர் கொண்ட கோட் பாடே உத்தம முறையெனக் கொள்ளவேண்டி நேர்கின் றது. இவரெல்லாம் மனச்சோர்புடையராய்ப் புத்தப் பள்ளியிலே தொழுதுகொள்வோராவர்.

அழிந்து கிடந்த புத்தப் பள்ளியொன்றை நான் பார்க்கச் சென்றபோது என்னேடு வந்த அறிவாளியான ஒரு இந்திய கலைஞரிடம் "புத்தப் பள்ளிகளெல்லாம் எப் பொழுதும் ஏன் நீண்ட அண்டாகாரமாய் அமைக்கப் படுகின்றன" எனக் கேட்க, அவர் "உயிர் வாழ்க்கை யாகிய ஜீவன் குமிழி என்பது புத்தமார்க்கச் சித்தாந்த மாதலின் புத்தப்பள்ளிகள் அவ்வுருவமா யமைக்கப்படு கின்றன" என்றனர். ஜீவன் குமிழி, சூன்யவாதம், இறுதியில் வெறுமையே! இதை நினைக்கவே என் இதயத்

தையும் இருள் மூடுவதுபோற் காணப்பட்டது. எனினும் நான் அதைநோக்கி நிற்கும்போதே என்னுள் வெளிச்சமும் உதயமாயிற்று. என்ன? "அது குமிழி வடிவமோ? அன்று. அது முட்டைவடிவமெனக் கூறினேன். கூறவே திடநம்பிக்கை எனும் பாறையின்மேல் நிற்பவனானேன்."

உயிர் வாழ்க்கை குமிழியோ, முட்டையோ? குமிழியெனில் வெறுமை, சூனியம்; முட்டையோ அப்படியன்று. ஜீவனின் கரு, வளர்ச்சி, தேர்ச்சி, பூரணத்துவம் எல்லாம் முட்டையினுள்ளுண்டு. உயிர் வாழ்க்கை முட்டையென்பதே என் கோட்பாடு. முட்டையைச் சரியானபடி பாதுகாவாத விடத்து அது கூழ்முட்டையாகிப் பாழ்படும் என்பது உண்மையே. ஜீவனும் சரியானபடி பாதுகாக்கப்படாத விடத்துக் கெட்டு நசித்துப்போவதை யறிவோம். ஆதலின் குமிழியோ முட்டையோ எனத் தீர்மானிக்க நேர்ந்தவிடத்து அது முட்டையே எனத் தீர்மானித்தேன். உயிர் வாழ்க்கை முட்டையே என நான் கூறுவதற்குக் காரணத்தையு முரைப்பேன்.

நான் பின்பற்றுபவர் புத்தரினும் அதி ஆழமாய் உயிர் வாழ்க்கையை ஆராய்ந்தவர். உலகின் துக்கம், ஜீவியத்துக்குரிய துயரம் முதலியவற்றைக் கண்டறிந்தவர். இவற்றையெல்லாம் அனுபவித்துக் கடைசியில் "நீங்கள் ஜீவனைப் பெறவேண்டும். அதை அபரிமிதமாய்ப் பெற வேண்டுமென்பதற்காகவே நான் வந்தேன்" எனக் கூறி ஜீவனில் தமக்குள்ள நம்பிக்கையை வெளியிட்டனர். உயிர்வாழ்க்கை குமிழியல்ல, அது முட்டையே என்பதை அவர் வற்புறுத்தினர். அவர் கூறியது சரியோ?

கடவுளே, எங்கள் பிதாவே, இந்தப் பூரண புருஷரின் போதனையைக் கேட்கவே இருள்மூடிய எங்களில் வெளிச்சம் தோன்றுகிறது. இது மாயமான ஒளியோ? உளையில் எங்களைத் தவிக்கவிட்டகலுமோ? அறியோம், வேண்டினோம், துணைசெய்யும். ஆமென்.

நான்காம் நாள்

உயிர்வாழ்க்கை குமிழியோ முட்டையோ என்பதை நோக்குவோம்

1 கொரிந்தியர் 15: 19–26.

உயிர்வாழ்க்கை முட்டையோ குமிழியோ? இவற்றில் ஒன்றைத் தெரிந்துகொள்ளவேண்டும். சராசர மனைத்தும் சிறிது சிறிதாகக் குறைந்துவருகின்றதெனவும் இறுதியில் அது சாம்பலாகி அழியவே அதிலுள்ள அனைத்தும், ஜீவன்கள் உட்பட சகலமும், அழிந்து நசித்துப் போமெனவும் ஒருசாரார் கூறுகின்றனர். மரணமே ஆளுகைசெய்யும் என்பது இவர்கள் கோட்பாடு. மற்றுமோர் சாரார் ஜீவசம்ரக்ஷணைக்கதிர்கள் இடைவிடாது வீசி உலகிலுள்ள அனைத்திற்கும் எவருமறியாமே ஜீவனளித்து வருகிறதெனவும் இறுதியில் நிலைப்பது மரணமல்ல ஜீவனே எனவும் கூறுகின்றனர். ஜீவனே ஆளுகைசெய்யும் என்பது இவர்கள் கோட்பாடு. உயிர்வாழக்கை குமிழி என்றார் ஒருவர். அது முட்டை என்றார் மற்றவர்.

மருந்துக்கடையிலே ஒரு ரூபாய் அளவுதானும் விலை பெருதனவாயுள்ள சிற்சில உப்புக்கள் தாதுக்கள் முதலியவற்றின் சேர்க்கையாலானவனே மானிடன். உயிர்வாழ்க்கை என்பது ஈழையும் துயரமுமே என்பர் ஒரு சாரார். மற்றுமோர் சாரார் மானிடன் கடவுளின் சாயலாய் உருவான சிறந்த ஜீவனுள்ளவனெனவும் அவன் வளர்ச்சிக்கும் தேர்ச்சிக்கும் வரையறையில்லையெனவும் கூறுவர். வீணும் சருகுக்கூட்டம் என்பர் ஒருவர். பேணி வளர்க்கும் பெருந்தனம் என்பவர் மற்றவர்.

மனிதன் சுயாதீனனல்ல, தன்னைச் சுற்றியுள்ளவற்றின். இயற்கைக்குத் தக்கவாறே மாறிப்போகிறவன். சுயாதீன சித்தமுடையவனுய்த் தனதிஷ்டம்போல்

வளர்பவனல்ல, பிறவற்ருல் ஆளப்படுபவனே என்பர் ஒரு பிரிவார். தனது நிலைமையைத் தீர்மானித்து நடந்து கொள்ளும் சுயாதீனம் மனிதனுக்குண்டு. மனிதனின் ஆன்மா தன்னைச் சுற்றியுள்ளவற்றை மாற்றியும் அவற்றிற்கியையத் தானே மாறியும் ஜீவிக்கின்றதென்பர் மற்ருெரு பிரிவார். மனித சுயாதீனம் குமிழியே என்பது ஒருவர் கொள்கை. அது முட்டையே என்பது மற்றவர் கொள்கை.

ஜெபமென்பது மனிதன் தான் மனது லகிக்குமாறு செய்துகொண்ட மனோநிலைமையே. தனது சொற்களின் எதிரொலியேயன்றி அதினுல் லபிப்பது வேருென்றுமில்லை என்பார் சிலர். மற்றும் சிலரோ ஜெபத்தின் மூலமாய்க் கடவுளோடு சம்பாஷணை நிகழ்கின்றதெனவும், அதன் மூலமாய் மனிதனின் சக்தி, அறிவு, சத்துவங்கள் விர்த்தியாகவே மானிட வாழ்க்கை பலமடைந்து தூய நிலைபெறுகிறதெனவும் கூறுகின்றனர். ஜெபமென்பது பயனிலா வீண்தொழில் என்பர் ஒரு சாரார். பயனிறைந்த மாண்பொருள் என்பர் மறு சாரார்.

கடவுளே, எங்கள் பிதாவே, எங்களுக்குத் தேவையானது ஜீவன், பொய் ஜீவனல்ல, உண்மையான ஜீவனுண்டோ என்பதை எங்களுக்குக் காட்டியருளும். அத்தகைய ஜீவனுண்டானுல் நாங்கள் அதைத் தெரிந்துகொள்ளத் துணைபுரிந்தருளும். ஆமென்.

ஐந்தாம் நாள்

உயிர்வாழ்க்கை குமிழியோ முட்டையோ என்பதைப் பின்னரும் நோக்குவோம்

சங்கீதம் 53: 1; 42: 1–5.

கடவுள் என ஒருவர் இருத்தற் கவசியமின்று, சாஸ்திரப்பயிற்சி யாவற்றையும் விளக்குவதாம், இயற்கையிலே நமக்கு விளங்காதனவற்றைக் கடவுளின் சக்தியால் விளைவனவாக நாம் மதித்து வந்தோம், சாஸ்திர ஆராய்ச்சி மிகுக்கவே யாவும் இயற்கையால் நிகழ்வன என்பதை உணர்கின்றோம், அண்ட சராசரங்கள் அனைத்தும் தாமே தமக்காகித் தம் ஒழுங்குப்படியே நடக்கின்றன, இனி என்ன நடக்கும் என்பதை நாம் முன்னறியக் கூடும், எனவே கடவுள் என ஒருவர் வேண்டுவதில்லை என்பர் ஒரு சாரார். மற்றும் சிலரோ இதற்கு மாறுகக் கூறுவர். விளங்காதனவெல்லாம் கடவுளால் நிகழ்ந்தன எனக்கொண்டதினாலல்ல. அண்ட சராசரங்களின் அயனமெல்லாம் அவரிலேயே நிகழ்கின்றது. அவற்றின் உயிர்க்குயிரானவர் அவரே. கடவுள் நம்பி எதிர்பார்க்கத் தக்கவராதலின் அண்டகோள அயனங்களும் அவ்வாறேயாம். கடவுளின் திருவருள் என்பது முறைபற்றி ஒழுங்காய் நடைபெறுவதாதலின் இயற்கையனைத்தும் தத்தம் முறையிலேயே பிரவர்த்தித்தொழுகுகின்றன. அவை தம் வரம்பு மீறி ஒழுகுவனவல்ல. அவற்றினின்று அறிவும் ஞானமும் வெளிப்படுகின்றன. அவற்றின் துணையால் நம் அறிவும், ஞானமும் விர்த்தியாகின்றன. "அகிலலோக பிரவர்த்தியை நோக்கினல் அது யந்திர ஓட்டமல்ல. அது மனோசக்தியாகிய அறிவுமய நினைவே" என்பர் ஜீன்ஸ் விஞ்ஞான நிபுணர். இயற்கையனைத்தும் ஏதோ கருமத்ந்த எதிர்நோக்கிச் செயல் புரிகின்றனவாதலின் இயற்கையனைத்தும் அறிவுப்பிழம்பே எனக் கொள்ள

வேண்டும். (அங்ஙனமாயின் அவை சடப்பொருள் மாத்திர மன்று.) அன்றேல் அவை அங்ஙனம் செயல்புரிதற்கேது வாய் ஏதோ பிறிதோர் அறிவுடைப் பெரும் பொருள் அவற்றினுள் நின்று செயல்புரிவதாதல்வேண்டும். அண்ட கோள மனைத்தும், அணுமுதல் பிரமாண்டமான சூரிய கோளம்வரை, ஒரு சிறிதும் கணக்கிற் பிசகாமே சுழன்று செயல் புரிகின்றனவாதலின் சடப்பொருட்களும் கணக் கறிவு வாய்ந்தனவெனவே கொள்ளல்வேண்டும். அன் றேல் "கடவுளே பெருங்கணக்கர்" ஆதலின் அளவினுட் படாப் பெருஞ்சக்தியாகிய கடவுள் இவற்றுள் நின்று காரணகாரிய வயத்தராய்ப் புத்திபூர்வ நன்னிகழ்ச்சியின் பொருட்டுக் கருமம் நிகழச்செய்து சிற்றறிவினராகிய நம்மையும் நாமறிய நற்கதியடைதற்பொருட்டு அவரோடு ஒத்துழைக்கச் செய்கிறார் என்பதை விட்டுச் சடப் பொருளே அறிவுமயம் என்னும் நம்பொணுக் கோட் பாட்டை நம்பவேண்டியதாகும்.

கடவுளின் உண்மையைக் குமிழியென்பர் ஒரு சிலர். அது முட்டையென்பர் மற்றொரு சிலர். நாம் இரண்டி லொன்றைத் தெரிந்துகொள்ளவேண்டும்.

கடவுளே, எங்கள் பிதாவே, இயற்கையின் முடிவெல்லாம் மரணம். அதற்கு ஜீவனில்லை. அப்படியிருக்கவும் நான் உம்மை அப்பால் அகற்றிவைத்து உயிரற்ற இயற்கையைக் கைக்கொள்ளுவதோ. அன் றேல் உம்மையே தனது உற்பத்திகாரணராகவும் தனது இடையீடில் லாக்கர்த்தாவாகவும் தனதுநோக்கமும் முடிவுமாகவுமுடைய உயிருள்ள இயற்கையைப்பற்றிச் சார்வதோ? என் மனதை, என் இதயத்தைத் தெளிவாக்கும். இவற்றினால் எழும் புத்திமயக்கத்தில் நான் என்னை யும் உம்மையும் இழந்துவிடாதபடி எனக்குத் தெளிந்த அறிவைக் கட்டளையிட்டருளும். ஆமென்.

ஆறும் நாள்

உயிர்வாழ்க்கை குமிழியோ முட்டையோ என்பதை இன்னும் ஆராய்வோம்

2 கொரிந்தியர் 13: 3. 2 தீமோத்தேயு 2: 8. எபிரேயர் 1: 1–3.

இத்தாலியா நாட்டில் ஓரிடத்திலே வழியருகே கிறிஸ்துவைச் சிலுவையில் அறைந்த ரூபமாய் நிறுத்தப் பட்டிருந்த சிலுவைமரத்தைக் கண்ணுற்ற கார்லைல் ஆசிரியர் அதனருகே போய் நின்று மெதுவாகத் தம் தலையை யசைத்து "பரிதாபம்! அப்பா ஒரு காலத்தில் உன் ஆதிக்கம் செழித்திருந்தது" எனக் கூறியது சரியே. கிறிஸ்துவானவரின் ஆதிக்கம் இனிமேற் செல்லாது. கிறிஸ்துவின் காலத்திலிருந்தவர்கள் அறிவு முதிர்ச்சியில் லாத சாமானிய மனிதர், அக்காலத்தில் அவர் சொல் லுக்கு மதிப்பிருந்தது, இப்போதோ காலம் மாறிவிட் டது, எங்கெங்கும் சாஸ்திரப் பயிற்சியும் ஆராய்ச்சியுமா யிருக்கிறது, கிறிஸ்துவானவர் மிகவும் நல்லவர்தான், தற்காலத்தவராகிய நாமோ அவ்வளவில் திருப்தியாவ தில்லை, இன்னும் அதிகமாய் எதிர்பார்க்கிறோம் எனச் சிற்சிலர் கூறுகின்றனர்.

மற்றும் சிலரோ இதற்கு மாறாய்க் கூறுவார். பிற் காலத்திலிருந்த மற்றொரு கார்லைல் ஆசிரியர் கூறியவாறு கிறிஸ்துவின் ஜெய காலம் இப்போதுதான் ஆரம்பித்திருக் கிறது. தேய்ந்து மங்கியது எனக் கூறப்படுவது அக்கா லத்தவர் எடுத்துக்காட்டிய மிகச் சாதாரணமான கற் பனை யுருவமேயாகும். கிறிஸ்துவின் உண்மைச் சொரூப வொளி மங்கியதன்று. கிறிஸ்துவானவரின் போதனையில் சிறிதளவு அனுசரிப்பதே மானிடவர்க்கம் அனைத்திற்கும் ஆன்ம ஜீவனைக் கொடுத்து வருகிறது. நாம் அவரைப் பற்றிப் பிடித்துக்கொள்வதால் கடவுளையறியும் வழி யைக் கற்றுக்கொள்ளுகிறோம். மானிடருக்குள் மகா சிறந்

ததும் அருமையானதுமெனக் கருதப்படும் அனைத்தும் அவரிலே காணப்படுகின்றன. அவரே அவற்றை உண்டு பண்ணியவர். நாம் அவரைப்பற்றிப் பிடிப்பதால் கடவுளையறியும் வழியைக் கற்றுக்கொள்ளுகிறோம். சரா சரங்கள், நமது சொந்த ஜீவன் இவற்றின் தாற்பரியம் இன்னவென்பதை யறியும் வழியையும் கற்றுக்கொள்ளு கிறோம். பிள்ளைப்பக்தியோடு கீழ்ப்படிதலுள்ளவர்களாய் நம்மை முழுவதுமாக அவருக்கு ஆட்படுத்தவே நமது ஜீவியம் மாறி உயர்வடைந்து புதுப்பிக்கப்படுகிறது. இதுவரை சக்தி குன்றாமல் வல்லமையோடு விளங்குபவர் கிறிஸ்து ஒருவரே. அவர் இக்காலத்தவராகிய நமது முன்னிலையில் தற்காலத்தவராகவும் தற்காலத்தை நியா யம் விசாரிப்பவராகவும் வெளிப்படுகிறார். இயேசுவின் மேல் சார்தல் குமிழி, மாயம் என்பார் சிலர். மற்றவரோ மீட்புறுதற்கான சகல சத்துக்களையுமுள்ளடக்கிய முட் டையே அது என்கின்றனர்.

மனந்திரும்புதல் என்பது பாலியப் பருவத்தின் ஒரு வகை இயல்பே. அது ஸ்திரீ புருஷசம்பந்தமான உணர்வு உதயமாம் காலத்தே உடன் தோன்றுவது என் பர் சிலர். பற்பலர் ஏகோபித்து முயல்வதால் எளிதில் தூண்டிவிடப்பட்டுண்டாகி அதிசீக்கிரம் மறைந்துபோ கும் ஒருவித உணர்ச்சியே அதுவெனவும் சிலர் கூறுவர். வேறு சிலரோ அதை மறுத்து மனந்திரும்புதல் என்னும் இம்மாறுதல் ஸ்திரீ புருஷசம்பந்தமான உணர்ச்சிகளை அடக்கி ஆண்டு நேர்வழியிற் செலுத்துவதெனவும் பலர் கூடியுரைப்பதும் தானே அறிவதும், தவறாய்க் காணப் படும்போது கூட்டமிகுந்தோர் வழியென அதிற் சார்ந்து விடாமல் அதை எதிர்த்துச்செல்லும் வலியுடையதென வும் கூறுவர். மனந்திரும்புதல் குமிழி என்பர் ஒரு சாரார், இது முட்டையென்பார் மற்றொரு சாரார்.

கடவுளே, எங்கள் பிதாவே, நாங்கள் இவற்றை ஆராயும்போது எங்களை ஸ்திரப்படுத்தியருளும். தாறுமாறானவற்றை நோக்கிச் சேரா மலும் போக்குச்சொல்லாமலு மிருக்கும்படி தடுத்தருளும். உண்மை வழிக்கென எங்களைக் காத்தருளும். ஆமென்.

ஏழாம் நாள்

இரண்டிலொன்றைத் தெரிந்துகொள்வது

யோசுவா 24: 15. மத்தேயு 4: 17–22.

இது உயிர்வாழ்க்கையைப்பற்றிய விவகாரம். மதிப்பும் பொருளும் நல்நோக்குமுடைய உயிர்வாழ்க்கையையோ இவையிலா உயிர்வாழ்க்கையையோ இரண்டிலொன்றை இப்பொழுது தெரிந்துகொள்ளவேண்டும். அண்ட சராசரமனைத்தும் அர்த்தமிலா அவப்பொருளென்னில் எனது ஜீவனும் அருளும் பொருளுமில்லாதாகும். எனது ஜீவனுக்கு அர்த்தமும் பொருளுமில்லெனில் அதற்கென ஒரு நோக்கமுமில்லையாகும். அங்ஙனமாயின் அது சிதைந்து அழிவுறும். ஜீவியத்தோடு இசைந்து அதை ஆண்டு நடத்தும் வலிபொருந்திய நல்நோக்கொன்று இல்லாவிடத்து மனது பல்வேறு வழிகளிலிழுப்புண்டு தானே அழிவுறும். நோக்கமில்லாவிடத்து ஜீவனையுடையதுமிலதாம் என மனோதத்துவ சாஸ்திரம் கூறுகிறது. எனது உயிர்வாழ்க்கையின் நோக்கம் என்னை என்னினின்று மேலே உயர்த்தக்கூடியதா யிருக்கவேண்டும். என் உயிர்வாழ்க்கை நோக்கமனைத்தும் என்னையே சார்ந்திருப்பதாயின் நான் சிதைந்து அழிவடைதல் திண்ணம். எனது உயிர்வாழ்க்கை கடவுளையும் நோக்கியதா யிருக்கவேண்டும். நோக்குக்கு ஆதாரமும் பொருளும் அவரே யாதலின் நான் கடவுளை இழப்பனேல் என்னையும் உலகனைத்தையும் யாவற்றையும் இழந்தவனுவேன். "கடவுளென ஒருவர் இல்லையாயின் நமது அறிவை நாம் இழவாமே வாழ்தற்குப் புதியதாய் வேறு தெய்வத்தை உண்டாக்கவேண்டும்" என வால்ற்றேர் கூறியது முக்காலும் உண்மையேயாம்.

நான் கிறிஸ்துவைக் கைநெகிழவிடுவனேல் கடவுள் எனக்கு வெகுதூரத்துக்கப்பாலுள்ள ஒருவராய்த் தெளி

வற்ற மெய்யிலா வஸ்துவாகிவிடுவார். கடவுளின் சமீபத் தோற்றம் கிறிஸ்துவிலேயே எனக்குத் தெரிகிறது. எனக்கு விளங்கக்கூடிய மானிட பாஷையில் கடவுள் என்னேடு பேசுவது கிறிஸ்துவிலேயே. நான் அவர் மொழிக்குச் செவிகொடுக்கும்போது உலகெலாம் தெய்வத்திருமுகமேபோல் எனக்குத் தோன்றுகிறது. இரக்கம், வலிமை, பரிதாபம், மீட்பு முதலியன காணப்படுகின்றன. சட்டமும் விதியும் அன்பேயாய் விளங்குகின்றன.

எழுதப்பட்டுள்ள அருள்மொழி வழியே அவரோடு ஐக்கியம் பெருது போவேனுனல் உலக சரிதம் முழுவதிலும் மகா பெரிதும் உயர்வான மீட்புமாக வெளிப்பட்டதொன்றை நான் அலக்ஷியஞ் செய்தவனுவேன். அலக்ஷியஞ்செய்யவே எனது வாழ்வுக்கு மிகவும் அவசியமாகத் தேடவேண்டியதொன்றை இழந்து துன்புறுவேன். நான் ஜெபஞ்செய்யாது போவேனுனல் ஆழ்ந்து நோக்கும் சக்தியிழந்த பரியாசக்காரனுவேன். ஜெபஞ்செய்து வருவேனுனல் பலமும் சத்துவமும் வேண்டியவளவு திடபுத்தியும், ஊசலாடி ஆசைவழி செல்லும் மனதை அடக்கும் சக்தியும் பெறுவேன். ஆவிக்குரிய மானத மாறுதலாகிய மனந்திரும்புதலை நான் அடையவே ஏக சிந்தையுடையனுகி நேரான ஒழுக்கமும் ஆவிக்குரிய அமைதியும் பெறுவேன். அஃதில்லாவிடத்து குறுகிப் பாழ்பட்ட ஆன்மாவுடையவனுவேன்.

தெரிந்துகொள்ளவேண்டியது அவசியமாயின், இதோ, தெரிந்துகொண்டேன். நான் தெரிந்துகொண்டது ஜீவனையே.

கடவுளே, எங்கள் பிதாவே, நான் தெரிந்துகொண்டேன். ஜீவனைத் தெரிந்துகொண்டேன். ஆழ்ந்ததும் பூரணமுடையதுமான ஜீவனைத் தெரிந்துகொண்டேன். ஜீவனைக் கண்டுபிடித்து வெற்றியுடன் வாழத் துணைபுரிந்தருளும். ஆமென்.

எட்டாம் நாள்

நாம் தெய்வபக்தி யுடையவர்களா யிருப்பதேன்?

ரோமர் 8: 19-23. மத்தேயு 5: 48.

பக்தியாவதென்ன? பற்பலர் பற்பலவாறுரைப்பர். நூற்றைம்பதின் மேற்பட்ட பல்வேறு விதங்களாய் உரைக்கப்பட்டுள்ளது. 'நமது ஏகாந்த நிலைமையைக் கருதிச் செய்வதே' என்பார் ஒருவர். "ஜனசமூகத்தோடு நம்மை ஒன்ருகச் செய்புமுறையே" என்பர் மற்ெருருவர். "பயமே பக்திக்கு வேர்" என்பார் பிறிதொருவர். இப்படியே பல்வேறு விதங்களா யுரைப்பார்.

ஜீவனென்பது இன்னதுதானெனக் கூறுவது அருமையாதலின் பக்திவிளக்கும் மதம் என்பதும் இன்னதுதான் எனக் கூறுவது அருமையாம். மதமானது வெளிப்படையாய்க் காணப்படும் விதங்களைக் கவனித்து இவ்வழியே இன்னதுதான் எனக் கூறப்புகுவோமாயின் நாம் கூறும் லக்ஷணிப்பு பூரணமான லக்ஷணிப்பாகாது. ஒன்றுக்கொன்று மாறுபட்ட லக்ஷணிப்புகளும் உரைக்க வேண்டிவரும். மதம் என்பது ஒரே வேரினின்று எழுந்து பல்வேறு விதங்களாய்க் காணப்படுவது. அடிவேரானது ஜீவனை, மென்மேலும் நிறைவான ஜீவனை, நோக்கி நிற்பது. ஓரறிவுப்பிராணிமுதல் முதிர்ந்த அறிவுடைய மானிடர்வரை எங்கெங்கும் முற்றுப்பெறுதல், பூரணத்துவம் அடைதல் எனும் முயற்சியே வெளிப்படுகிறது. அதுவே உயர்வும் மேன்மையுமானதொன்றை நோக்கி மென்மேலும் முயல்கின்றது. பூரணத்துவ ஜீவ முதிர்ச்சி யாவற்றினும் மிகச் சிறந்த ஜீவனாகிய கடவுள் என்பவரோடு இணைக்கப்படாவிடத்து நாம் பூரணத்துவம் அடைதல் கூடாத காரியமென்பதை உணருகிறோம். ஜீவனின் தன்மையை நன்னிலைமைக்கு மாற்று முயற்சியே பக்தி அல்லது மதமெனலாம். நல்ல தன்மை வாய்க்கப்

பெருத ஜீவன் மதக் கோட்பாட்டுக்கு உடன்பாடாகாது. பிரமாண்டமான உருவம் பெறுவதே ஜீவிய நோக்கம் என்றது பல்லாயிரம் ஆண்டுகட்கு முன்னரே அழிந்து பட்ட பேருருவப் பிராணிகளாகிய தைனசோரசுகளின் காலத்தோடு முடிந்தது. அம்முயற்சி சித்திபெறவில்லை. அவ்வழி மரணமாய் முடிந்தது. பிரமாண்ட உருவு பெற்றிருந்த பிராணிகளில் எதுவும் நிலைபெருமல் யாவும் மாண்டழிந்தன. மனித ஜீவனிலோ பேருருவம் வாய்க் கப் பெறுவதென்பதின்றிச் சிறந்த நல்வழிபெறுதல் என் பதே ஜீவிய நோக்கமாகியது. இது நற்றன்மை பொருந் திய நல்லொழுக்கச் சித்தியின்மேலெழுந்த ஆவல்.

நாம் மதச்சார்பினராயிருக்கிறோம் வேறு விதமா யிருக்க முடியாதாதலின்; மகோன்னதமான பூரண தேர்ச்சியுடையராய் ஜீவிக்க விரும்புகிறோம். வாழ்க்கை யில் நல்ல தன்மை வெளிப்பட வாழ்வதே பக்தியுள்ள வாழ்வு. பக்தியென்பது நாம் தரித்துக்கொள்ளும் ஆடை போன்றதன்று. அணிதலும் களைதலுமில்லை. பக்தியே வாழ்வோடு ஒட்டி ஒன்ருகியிருப்பது. பக்திவழிச் சார் பினராயிராமல் நம்மை மாற்றிக்கொள்வது கூடாதகாரி யம். மதத்தை இகழ்ந்துரைக்கும் பொது உடைமைக் கூட்டத்தாரும் நோக்குமிடத்து பக்தி வழிகாட்டும் மதச்சார்பினரே யாவார். அவர்களும் ஜனசமூகத் தேர்ச் சியை நாடுகின்றனர். அவர்கள் அத்தேர்ச்சியை விரும்பு முறை ஒப்போ தப்போ எதுவாயினும் ஜனசமூகத் தேர்ச்சி விருப்பே மதமாம். என்ன? மதமே நல்வாழ்க் கையை நாடுவதாம்.

கடவுளே, எங்கள் பிதாவே, பூரணத்துவம் பெறும் ஆவலை எங் களில் நாட்டியவர் யாவர்? நீரே நாட்டினீரோ? அங்ஙனமாயின், கடவுளே, இவ்வாசை வீணாசையன்று. அதை விளைத்தவர் நீர். நீரே அதை உமது மூலமாய்த் திருப்தியாக்கியருளும். ஆமென்.

ஒன்பதாம் நாள்

தெய்வீகத் தூண்டுதல்

யோவான் 1: 1, 9, 12, 13, 16, 17, 18.

ஜீவனின் ஆவல், நல்ல தன்மை வாய்க்கப் பெறுமாறுண்டான ஜீவனின் ஆவல், வெளிப்படுவதினாலேயே நாம் பக்தி சார்புடையராயிருக்கிறோமென்பதை நேற்றுப் பார்த்தோம். ஆனாலும் இது முழு உண்மையுமாகாது. இந்த மேலான ஆவலை எழுப்பும் மனித உற்சாகமாத்திரமே மனிதனின் பக்தி உற்சாகத்திற்குக் காரணமாகிவிடாது.

மற்றொரு விதமாய் நோக்கினால் உன்னதத்தினின்று நாம் இவ்வழியில் தூண்டிவிடப்படுகிறோமெனும் உண்மையும் விளங்கும். நாம் மேலான ஒரு ஆவலைக் கொண்டோமென்பது மாத்திரமன்று. இந்த ஆசை நம்மில் தூண்டிவிடப்படுகிறது. நம்மிலும் மிக மேலான ஒன்றினால் நாம் மனச்சலனமெய்தவே நாம் மனக்கண் திறந்து நோக்கி நமது தற்கால நிலைமையில் அதிர்ப்தி, தெய்வீகமாயெழுந்த அதிர்ப்தி கொள்ளுகிறோம். இதுவே நம்மை ஜெபத்திற்குத் தூண்டுகிறது, இன்னவிதமென உரைக்கக்கூடாத ஆசையோடு ஜெபிக்கத் தூண்டுகிறது. நமது தற்கால நிலைமையையும் நம்மைச் சுற்றியுள்ளவற்றின் தற்கால நிலைமையையும் சகித்துக்கொள்ள முடியாதவராகிறோம். இதுவே தெய்வீகத் தூண்டுதல். அண்டசராசர கர்த்தாவாகியவர் தமது சிருஷ்டியைத் தம்மிடமாக வசியஞ் செய்வதால் அது தானாகவே பூரணத்துவமடையுமாறு தூண்டுகிறார்.

வான்ஹ்யூகல் எனும் பேராசிரியர் மத சம்பந்தமாய் இதைப்பற்றிப் பேசும்போது ஒன்று ஒரு ஏணியின் வழியே மேலேறுவதாகவும், மற்றொன்று மற்றொரு ஏணியின் வழியே கீழிறங்குவதாகவும் கூறினார். மனி

தன் கடவுளை நோக்கி ஏறுகிறான். கடவுள் மனிதனை நோக்கி இறங்குகிறார். மனிதன் கடவுளைத் தேடிய முறை பழைய ஏற்பாட்டில் கூறப்படுவது. கடவுள் மனிதனைத் தேடிவந்த முறை புதிய ஏற்பாட்டில் கூறப் படுவது. பொதுப்பட இது உண்மையேயெனினும் இது முழு உண்மையுமாகாது. ஏனெனில் இவ்வாறு தேடுதற் கெனக் கடவுளே மனிதனுடைய இதயத்தைத் தூண்டி விடாதிருப்பாராயின் பழைய ஏற்பாட்டிலும் பிறமதங் களிலும் காணப்படுகிறபடி மனிதன் கடவுளைத் தேடி யிரான். ஆகவே மனிதர் தேட ஆரம்பித்தபோது அவர் கள் ஒருவாறு அவரைக் கண்டுகொண்டார்கள். கடவுளே தம்மைத்தாமே தேடியவராவார். ஏனெனில் தேடுதற் குக் காரணராயிருந்தவரும் தேடிக் கண்டுபிடிக்கப் பட்டவரும் அவரே.

இது நடக்கக்கூடிய காரியமோ? நம்பொணு நற் காரியமாகாதோ? ஜீவனின் இயல்பு இன்னதென ஆராய் வோமாயின் இது உண்மையேயென வெளிப்படும். ஜீவனு னது இன்னும் அதிக ஜீவனை விரும்புவதோடும் அமை யாமே இன்னும் பலவற்றுக்கு ஜீவனை யளிக்கவும் கருது கிறது. புதிது புதிதாய் ஜீவனை விர்த்திசெய்யும் ஆவல் அதனுள் இருக்கிறது. கடவுளே பூரண ஜீவனுதலின் தமது இருப்பின் உண்மைக்கிசைய ஜீவனைப் பிறவற்றி னுள் பரப்பவும் பிறவற்றேடு பகிர்ந்துகொள்ளவும் புதிது புதிதாய்ப் படைக்கவும் ஆசிக்கிறார். இதுவே கடவுளின் தூண்டுதலாகிறது. நாம் பக்தியுடையராதற்குக் கார ணம் நமது விருப்பமும் அவரது அன்புமேயாம். அவர் படைக்கிறார், நாம் கெஞ்சி ஆசிக்கிறோம்.

எங்கள் பிதாவே, இது உண்மையானுல் நான் உமக்குத் தூரமா னவனல்ல. ஏனெனில் நீர் எனக்குத் தூரமானவரல்ல. என் இத யத்திலெழுந்த இந்த ஆவல் ஒருகால் உமது இருப்பின் உண்மையால் விளைந்ததாம். என் இதயத்தின் ஆவல் அதிகரிக்கிறது. ஏனெனில் நான் உம்மைக் கண்டுகொள்வேன். ஆமென்.

பத்தாம் நாள்

பக்தியாவதென்னவென நமக்குக் காட்டுவது

1 யோவான் 1: 1–4. யோவான் 1: 14.

நமது மேலான ஆவலும் கடவுளின் தூண்டுதலும் ஆகிய இரண்டினாலும் மதப்பற்று, பக்தி, உண்டாகிற தென்பதை நேற்று நோக்கினோம். கடவுளின் ஜீவன் நமது ஜீவனை எவ்விடங்களிலும் மோதி நெருக்குகிறது. நாம் சலனமுற்று மேலான ஆசைகொள்ளுகிறோம், ஜெபிக்கிறோம். நமது தற்கால நிலைமை தகாததென விலக்க முயலுகிறோம்.

நாம் தாழ்விலிருந்து மேல் நோக்கிக்கொள்ளும் ஆவலும் கடவுள் மேலிருந்து கீழ்நோக்கி நம்மீது கொண்ட ஆவலும் சந்திப்பது கிறிஸ்துவிலேயே. ஓர் ஏணியில் ஏறிச்செல்லும் மனிதனும் அடுத்த ஏணியில் இறங்கி வரும் கடவுளும் கிறிஸ்துவே, மனிதகுமாரன், கடவுளின் குமாரன். பக்தியின் இருபக்கங்களும் சந்திக்குமிடம் கிறிஸ்துவேயாதலின் அவரே பக்தி என்பதின் பொருளும் அர்த்தமுமாவார். முன் ஒரு இடத்தில் கூறியபடி மதம் அல்லது பக்தி என்பதற்குள்ள நூற்றைம்பதின் மேற்பட்ட லக்ஷணிப்புகளோடு 'கிறிஸ்து' எனும் மற்றொன்றையும் கூட்டுவோம். கிறிஸ்துவெனக் கூறி விளக்கி லக்ஷணிப்பது சொல்லி விளக்குவதன்று. அது நமது ஜீவனில், நாம் ஜீவிப்பதில், நமது வாழ்க்கையில் விளங்குவது. சிற்சிலவற்றைச் சொல்லி விளக்கமுடியாது. அவற்றைக் காட்டியே விளக்கவேண்டும். பக்தி என்பது எதினால் ஆகிறது என்பது இங்கே நமக்குத் தெளிவாகக் காட்டப்படுகிறது. கிறிஸ்துவின் ஜீவியமுறை, மனிதனோடும் கடவுளோடும் அவருக்குள்ள சம்பந்தம், அவருடைய தூய்மை, அன்பு, தம்மைச் சுற்றியிருந்த மனிதரையும் மற்றவைகளையும் அவர் மேற்கொண்ட

விதம், பாவிகள், தாழ்ந்தோர் இவர்பொருட்டு அவர் கொண்ட கவலே, மனிதனேயும் ஜன சமூகத்தையும் மீட்கு மாறு அவர் கொண்டருளிய நோக்கம், ஜாதி ஜனங் களுக்கிருந்த பேதங்களே அகற்றி மனிதர் அனேவரையும் ஒரே சகோதரக் கட்டுக்குள் அமைத்த அவருடைய அள வற்ற அநுதாபம், கடைசியாக மனிதரின் துன்பம், கஷ்டம், பலவீனம், பாவம் முதலிய அனேத்தையும் தாமே தமது இதயத்தில் ஏற்று அவர்களுக்காகத் தமது ஜீவனேக் கொடுக்கத் திருவுளம் கொண்ட பேரருள், மனித ருக்குப் புதிய வழியையும் முறையையும் போதித்தருளி யது—பூமியிலே கடவுளின் ராஜ்யம்—ஆகிய இவைகளும் ஆவியிலே அவர் இவைகள் அனேத்தின்மீதும் கொண்ட வெற்றியும் எல்லாம் பக்தியெனப்படும்.

இவர் தம்மை விளக்கிக்காட்டிப் பக்தியை வெளிப் படுத்திய இவ்விதமான பக்தி லக்ஷணிப்பு வேறெங்கு மில்லே. சகலவிதத் தாறுமாறுகள், மந்திரம், சகுன சாஸ்திரங்கள், விதிவிலக்கு அனுஷ்டானங்கள், மேல் கீழ் எனும் கோட்பாடுகள் அனேத்தையும் விலக்கி எப்படி ஜீவிப்பது எப்படி வெற்றியுள்ள வாழ்க்கை வாழ்வது என்னும் ஒன்றையே காரியமாகக் காட்டுகிறது. ஆகவே பற்பலர் என்னிடம் வந்து இந்த முறை, அந்த ஒழுங்கு, இந்தச் சடங்கு, அந்தச் சபைக் கட்டுப்பாடு முதலிய வற்றைப்பற்றிக் கேட்கும்போது நான் இவையெல்லாம் வெளிப்போர்வை, இவை காரியமல்ல, உள்ளான ஜீவியங் கண்டேன், அதுவே சிரேஷ்டம் எனக் கூறுவேன். இதுவே என்னேப் பற்றிக்கொள்வது.

கடவுளே, நாங்கள் ஜீவனேடிருக்க விரும்பினுல் எப்படியாக வேண்டும், எப்படி இருக்கவேண்டும் என்பதைப் பார்த்தோம். இன்றுமுதல் நாங்கள் அதிலே நிலேத்து அது எங்களுக்குள் உண்மை யாய் விளங்கும்படி முழுபக்தியோடும் நாங்கள் அதிலே சாரும்படி எங்களுக்குத் துணே புரிந்தருளும், இயேசுவின் நாமத்திலே. ஆமென்.

பதினேராம் நாள்

பக்திலக்ஷணிப்பில் மிகவும் முக்கியமான அம்சம்

லூக்கா 17: 20, 21; 21: 27. மத்தேயு 4: 23.

பக்திலக்ஷணம் இன்னதென இங்கே கூறப்பட்டதில் வற்புறுத்திக் கவனிக்கவேண்டியதொன்றுண்டு—பூலோகத்திலே கடவுளின் ராஜ்யம். இயேசுவானவர் அதை வற்புறுத்திக் கூறினபடியினுல் நாமும் அதை வற்புறுத்த வேண்டும். சகல காரியங்களும் இதையே சார்ந்திருக்கிறது. "இயேசு கலிலேயா எங்கும் சுற்றி நடந்து அவர்கள் ஜெபாலயங்களில் உபதேசித்து ராஜ்யத்தின் நற்செய்தியைப் பிரசங்கித்தார்." இந்த ராஜ்யம் என்பதென்ன?

கடவுளின் ராஜ்யம் என்பது கடவுளினுடைய பிதாமேரையான அன்பினுலுண்டான புது முறையென்றும் பொருளாசை, தன்னயம், மெலியாரை ஒடுக்குதல், சகோதரத்துவமின்மை முதலியன காரணமாய் நடைபெறும் தாழ்வான முறையை நீக்கி, மீட்பு, நீதி; சகோதரத்துவம் முதலியவற்றுல் நடைபெறுவதென்றும் மற்றுமோர் நூலில் கூறினேன். மனிதரில் ஒவ்வொருவரிடத்திலும் ஜனசமூகத்திலும் காணப்படும் தாழ்வான முறையை இவ்வுயர் முறையானது சுத்திகரித்துப் புதிப்பித்து நற்சீர் பெறச்செய்கிறது. இதுவே உண்மையெனினும் இது முழு உண்மையுமாகாது. இம்முறை வெளியேயிருந்து நமக்குக் கிடைப்பது. அது வாசலில் நின்று தட்டுகிறது. எனினும் அது நமக்குள் இருக்கிறது. "பரலோகராஜ்யம் உங்களுக்குள் இருக்கிறதே." இந்த ராஜ்யம் "உலகின் அஸ்திபாரத்திலிருந்து கட்டப்பட்டிருக்கிறது." இந்த ராஜ்யம் உலகின் அஸ்திபாரங்களுக்குள்ளேயே, நமது இதயமும் மனதும் ஆக்கப்பட்டிருக்கிற அமைப்பினுள்ளேயே கட்டப்பட்டிருக்கிறதென கூறினுரோ? ஆம், அவர் அப்படியே கூறினர் என நம்புகிறேன்.

அதற்கு அப்பாலும் ஏதோ சிறிது இருக்கலாம் எனக் கொள்ளலாம். ஏனெனில் அது நமது வாசலில் நின்று தட்டுகிறது. இதனுல் குறிக்கப்பட்டது இன்னதென் பதைப் பின்னர் ஆராய்வோம். திட்டமாய் விளங்கும் ஒரு காரியமுண்டு. அதாவது பரலோக ராஜ்யமானது பரிசுத்த கிரந்தங்களில் மாத்திரமல்ல, அண்ட சராசரங் களும் நாமும் ஜனசமூகத்தவரும் அமைந்துள்ள அமைப் பிலேயும் எழுதப்பட்டிருக்கிறது என்பதையே குறித் தார். அண்ட கோளங்களின் இயற்கையிலும் நமது மெய் மனம் இதயம் இவற்றின் இயற்கையிலும் கவனிக்கப் படத்தக்க சட்டமுறைகளையும் ஜன சமூகக் கூட்டுற வுக்குச் சாதகமான இயற்கைச் சட்டமுறைகளையும் நாம் ஆராயும்போது கடவுளின் ராஜ்ய சட்டங்கள் இன்ன வெனக் கண்டுகொள்ளுகிருேம். முழுவதுமாய் அறிந்து கொள்ளுகிருே மென்பதில்லையாயினும் உண்மையாகவே நாம் கடவுளின் ராஜ்ய சட்டங்களைக் காண்கிருேம். இது மிகவும் முக்கியமானது. ஏனெனில் நாம் நமது வெற்றி வாழ்க்கையை ஆரம்பிக்கும் துவக்கத்திலேயே நமக்குள் ளும் சமூகக்கட்டிலும் நம்மைச் சுற்றியுள்ள அண்ட சராசர மனைத்திலும் எழுதப்பட்டனபோல் காணப் படும் சட்ட முறைகளைக்கண்டு அவற்றைக் கையாடி ஆரம்பிக்கிருேம்.

எங்கள் பிதாவே, நாங்கள் உம்மோடு இசைக்கப்பட்டிருக்கிருேம். நாங்கள் இருப்பதற்கும் அசைவதற்கும் சாதகமான விதிகள் உமது விதிமுறைச் சட்டங்களே. எல்லாவற்றினும் உள்ளும் புறம்பும் உமது சித்தமே விளங்கி நிற்கின்றது. நாங்கள் உமது ராஜ்யத்தைக் கண்டு பிடித்து அதற்குக் கீழடங்கி நடக்க எங்களுக்குத் துணைபுரிந்தருளும். ஆமென்.

பன்னிரண்டாம் நாள்

நமக்குள்ளேயே எழுதப்பட்டுள்ள ராஜ்யம்

ரோமர் 2: 14–16. 2 கொரிந்தியர் 3: 1–3. எரேமியர் 31: 33.

நாம் பரலோக ராஜ்யமென ஆரம்பிக்கும்போது வெளியினின்று ஜீவன்மேல் சுமத்தப்பட்ட ஏதோ ஒன்றை ஆரம்பிக்கிறோமென்பதல்ல, ஜீவனையே, அதன் விதிவிலக்குகளையும் அவை நிறைவேறும் வழிகளையுமே, ஆரம்பிக்கிறோமென்பதை நாம் நேற்று ஆராய்ந்தோம்.

காரியங்களின் கட்டுப்பாட்டு அமைப்பிலேயே ஒழுக்க முறைகள் ஆழ்ந்தமைந்துள்ளன. நாம் அவற்றை மீறி ஒழிக்கிறதில்லை. அவற்றுக்கடங்காமையால் நாமே ஒழிந்துபோகிறோம். உதாரணமாகப் பார்ப்போம். யுத்த முடிவிலே பலர் தத்தம் இஷ்டம்போல் நடந்துகொள்ள வேண்டுமெனச் சுயாதீனத்தை விரும்பினர். நல்லொழுக்கம் என்பது மானிட சட்டம் எனக்கூறி அதற்கு விரோதமாய்க் கிளம்பினர். தாம் ஆசித்த வழியே நடக்கத் தலைப்பட்டார். விளைந்ததென்ன? அம்முறையைக் கையாண்ட தலைமுறையார் தாம் செய்வது தவறெனக் காணவேண்டியதாயிற்று, துக்கத்தில் ஆழ்ந்தனர். வெட்கத்துக்கும், கலக்கத்துக்கும் உட்பட நேர்ந்தது. காரணமென்ன? அவர்கள் விரும்பிய பிரகாரம் காரியங்கள் நடைபெற முடியாதென்பதைக் கண்டனர். "ஒருவருக்கே உண்மையாயிருக்கும்படி விவாகஞ் செய்துகொள்வது நரகவேதனை என நினைத்துக்கொண்டேன். ஆனால் நான் ஜீவித்த ஜீவியத்தையோ என்ன சொல்ல" என்று ஒரு அம்மாள் கூறினள். இந்த ஸ்திரீ நல்லொழுக்கு விதிவிலக்குகளை மீறி நடந்து ஏமாந்து கலக்கமுற்றவள் என்பதைக் கூறவேண்டியதில்லை. தான் மீறி நடந்தது நல்லொழுக்க முறைகளை மாத்திரமல்ல, தனக்கும் தனது நல்வாழ்வுக்கும் விரோதமாய்த் தான் நடந்ததை அறிந்துகொண்டாள்.

கடவுளின் ராஜ்ய சட்டங்களை மீறி நடந்து தானே ஒழிந்துபோனுள். "மனதைச் சுத்தமாய்க் காத்துக் கொள்வதற்குரிய முதல் சட்டமாவது நமது சகல சம்பந்தங்களிலும், விசேஷமாகத் தன்னேடு தனக்குள்ள சம்பந்தத்திலேயே, நாம் நேர்மையும் உண்மையுமாயிருக்கவேண்டுமென்பதே" என மனேதர்ம சாஸ்திரிகள் கூறுவதன் தாற்பரியமென்ன? அண்ட சராசரங்களும் நீங்களும் நானும் உண்மைக்கென்றே அமைந்திருக்கிறேம். உலக அமைப்பில் பொய் என்பது நிலைநிற்பதில்லை. பொய்கள் அனைத்தும் காரியங்களின் உண்மை நிகழ்ச்சிகளினுல் நாளடைவில் தாமே ஒழிந்தழியும் என்பதேயல்லவோ? கடவுளின் ராஜ்யம் முற்றிலும் உண்மையையே நாடுகிறது. நமது மனதின் அமைப்பும் அதையே நாடுகிறது. அப்படியானுல் கடவுளின் ராஜ்ய உண்மைகள் நமக்குள்ளேயே எழுதப்பட்டிருக்கின்றனவல்லவோ?

மேலும் "நியாயமான காரியமே சுகானுகூல காரியம்" என மனேதர்ம சாஸ்திரிகள் கூறுவதென்ன? இதை மாற்றிக்கூறினுல் நியாய விரோதமான எதுவும் சுகவீனத்திற்கேதுவாம் என முடியும். அங்ஙனமாயின் சரியானமுறை எதுவெனத் தெளிந்து அதற்குக் கீழடங்கி நடவாதவிடத்து நாம் சுகமாயிருப்பதும் நாம் சிறப்போடு காரியங்களை நடத்தலும் முடியாதெனக் கூறியதேயல்லவா? பாவம் என்பது தீயது மாத்திரமன்று, அது சுகவீனத்திற்கேதுவானதும் நம்மைக் குறுக்கி நசிக்கச் செய்வதுமன்றே? பாவம் நிறைந்தோர் வியாதியுற்றேர், குற்றவாளிகள் அல்லவோ? இதுவே நமக்கு சாந்தியளிக்கிறது.

கடவுளே, எங்களுக்குள் வரையப்பட்டுள்ள நல்லொழுக்க விதிகள் எங்களை நடுங்கச் செய்கின்றன. இவ்விதிகள் மீட்கப்படத்தக்கனவோ? கடினமாய் மறுப்பதின் மூலமாய் எங்களை இரட்சிக்கிறீரோ, எங்களுக்குப் போதித்தருளும். நாங்கள் செவிகொடுத்துக் கேட்கிறேம். ஆமென்.

பதின்மூன்றும் நாள்

ராஜ்யமும் வாழ்க்கையும்

யோவான் 11 : 25; 14 : 6; 1 : 4; 17 : 3; 20: 31.

கடவுளின் வழியிலன்றி வேறு வழியிலே வாழ முயல்வது கூடாத காரியம் என்பதை நேற்று கவனித்தோம். கடவுளின் ராஜ்யத்தைக் கண்டுகொண்டால் நம்மையே கண்டுகொள்ளுகிறோம்.

இயேசுவானவரும் அதையே கூறினர். ராஜ்யமும் வாழ்க்கையும் ஒன்றே என்பதைக்காட்டி, 'அங்கவீனமுள்ளவனாய் நீ ஜீவனுக்குள் பிரவேசிப்பது நலம்' 'ஒற்றைக் கண்ணனாய் நீ கடவுளின் ராஜ்யத்தினுள் பிரவேசிப்பது நலம்' (மாற்கு 9: 43–47) எனக் கூறினர். 'கடவுளின் ராஜ்யம்' 'ஜீவன்' இரண்டையும் ஒன்றுக்குப் பதில் மற்றதை வழங்கக்கூடியதாய்ப் பேசுகிருர். அவருக்கு இவ்விரண்டும் ஒன்றே.

தாம் குறிக்கும் ஜீவன் மகோன்னதமான ஜீவன் என்பதே அவர் கருத்து. அது நமக்குள்ளும் உலகெங்கும் காணப்படும் ஜீவனும் அதற்குரிய ஒழுங்கு முறைகளுமே என்பது உண்மையே யெனினும், ஜீவன் என்பது அம்மட்டிலே அமையாமல் அதற்கு மேற்பட்டு மிருப்பதாகும். அது அம்மட்டேயாயிருக்குமாயின் அது இயற்கைப் பிரமாணமாய் முடியும். இயற்கை என்றதினல் நாம் அதை இகழ்ந்துரைத்ததுமாகாது. மானிடவர்க்கமும் ஏனையவர்க்கங்களும் இயற்கைப் பிரமாண இயற்கைகளே யெனினும் அவையனைத்தும் கடவுளின் கிரியைகளே என்பதை நாம் மறந்துரைப்பதில்லை. ஆனல் கடவுள் தமது ராஜ்யத்துக்குரிய அதிசாதாரண ஆதி நியமங்களை நமக்குள் வரைந்தபோது அவர் அவ்வளவில் நிறுத்திவிடவில்லை. கடவுளின் ராஜ்யம் நமக்குள்ளு

மிருக்கிறது. அது 'நமது வாசலில் வந்து நின்றுகொண்டு மிருக்கிறது.' அதாவது நமக்குப் புறத்தே அல்லது வெளியேயுள்ள வேறொன்று நம்மை நெருக்கி மாற்றிப் பூரண நிலைமைக்குள் நம்மைக் கொண்டுவருவதற்கு ஆயத்தமாயிருக்கிறது. அது நிகழும்போது ஜீவன் என்பதை நாமும் மகோன்னத காரியமாகப் பாவிக்கவேண்டியதாகும். ஏனெனில் நம்மிலுள்ள ஒவ்வோர் அவயவமும் நாடியும் தசையும் இது அந்த மகோன்னதமான ஜீவன் என்பதை அறிந்துகொள்ளும். ஒன்றிணொன்று பேதமுடைய மின்சார சக்திகள் சந்திக்கவே வெண்ணிற ஒளி பிறப்பதேபோன்று இயற்கை ஜீவனும் தெய்விக அருள் ஜீவனும் சந்திக்கவே இந்த மகோன்னதமான ஜீவன் பிறக்கிறது.

ராஜ்யம் எனப்படுவது இயற்கை வாழ்வும் அதனோடு அதாவது தாழ்ந்ததரமான ஜீவனோடு மிகவும் உயர்தர வாழ்வை இணைப்பதாம். அடித்தண்டும் வேரும் தூரும் இயற்கையான மண்ணிலேயே ஊன்றியிருப்பினும் புதிதும் சிறந்ததுமான அரும்பும் பூவும் பழமும் பயக்கும். ராஜ்யம் என்பது இப்போதிருப்பது என்பதற்கு மாறாக எப்படி இருக்கவேண்டியதென்பதைக் குறிப்பது. இப்போதுள்ள வாழ்வின் குறைகளை மாற்றி அதற்கு மகோன்னத வாழ்வை யளிப்பது. அது நமது வாசலில வந்து நின்று தட்டுகிறது. இப்போதுள்ள வாழ்வே போதும் என்பதையோ மகோன்னதமான வாழ்வு வேண்டு மென்பதையோ தீர்மானிக்கவேண்டியவர்கள் நாமே.

கடவுளே, எங்கள் பிதாவே, நாங்கள் ராஜ்யத்தைப்பற்றிப் பேசுகிறோம். ஆனால் நீரே அந்த ராஜ்யம். நீர் வாசல் வந்து நின்று தட்டுகிறீர். நாங்கள் உம்மை உள்ளே அழைத்துக்கொள்வதற்குத் தாழ்ப்பாளைத் திறக்கும்படி எங்கள் விரல்களை நடுக்கத்தோடே நீட்டுகிறோம். நீர் உள்ளே வரும்போது மகோன்னத ஜீவன் உள்ளே வந்துவிட்டதென்பதை அறிவோம். ஆமென்.

பதினைன்காம் நாள்

பக்தியுள்ளவர்கள் இயற்கைக்கு மாறுபட்டவரோ?

1 கொரிந்தியர் 1: 21–31; 2: 15.

சிற்சில வேளைகளில் அவர்கள் விபரீதமானவராகவே யிருக்கிறார்கள். ஆகையினால் நேர்மையாளர் பலர் தாம் பக்தி வழியிற் சார விரும்பும்போது ஆலோசித்துத் தாமதிக்கிறார்கள். தாம் விபரீத மனிதராகக் காணப்படுவது அவர்களுக்கு இஷ்டமில்லை. பக்தியுடையராகும்போது மனிதர் நமது இயற்கைக்கு மாறாக நடக்கவேண்டி நேரிடும் என்பதாக நினைக்கிறார்கள். பக்தி என்பது ஏதோ நமது மீது சுமத்தப்பட்டதொன்றெனவும் அது நம்மைச் சுய இயல்புக்கு மாறாய் நேர்வழியல்லாததொன்றில் செலுத்துவதெனவும் யோசிக்கின்றனர்.

வைத்திய சாஸ்திரம் படிக்கும் ஒருவரோடு நான் பேசிக்கொண்டிருக்கையில் அவர் தமக்கு இவ்வகையான பயம் உண்டென்பதைக் கூறி "பக்தி வழி என்பது இயற்கையேயோ?" எனக் கேட்டனர். பக்தியுள்ள ஜீவியம் இயற்கைக்கு மாறுபட்டதென்பது அவருடைய அபிப்பிராயம். ஆனால் தெர்துல்லியன் என்பவர் "ஆன்மாவானது இயற்கையாக கிறிஸ்து மார்க்கானுசாரமுடையது" என்றனர். எனது அபிப்பிராயமும் அதுவே. நான் கிறிஸ்துவின் போதனைகளைக் கைக்கொண்டு நடக்கும்போது அதுவே எனக்கு இயற்கையானதாகவும் சாதாரணமானதாகவும் எல்லாவற்றிற்கும் பொருந்தினதாகவும் காணப்படுகிறது. நான் கிறிஸ்துவின் கட்டளைக்கு விரோதமாக நடக்கும்போதோ இயல்புமீறி ஒன்றோடும் சம்பந்தமில்லாத ஒருவனாய் என் இயல்புக்கும் யாவற்றுக்கும் விரோதமாய் நடப்பவனாகத் தோற்றுகிறது. மனிதகுமாரனாகிய அவருக்கும் அவருடைய ராஜ்யத்துக்கும் இசைந்தவனாகவே நான் படைக்கப்பட்டதாகத் தோன்றுகிறது.

உண்மைதான் நாம் கிறிஸ்துவுக்குக் கீழடங்கும்போது ஜனசமூக ஒழுக்கங்கள் பலவற்றுக்கு விலகி இருக்கவேண்டி நேரிடுகிறது. இது நம்மை விபரீதமுடையராக்குகிறது. பிறரோடு இசைந்து வாழத்தகாதவர்களென நம்மை விலக்குகிறது. அப்படிப்பட்ட சம

யங்களில் விபரீதமானவர்கள் நாமோ, நம்மைச் சுற்றி யிருக்கும் ஜன சமூகத்தவரோ எனப் பார்க்கவேண்டும். மனிதன் தன் நடுவு நிலைமையை இழந்து ஜீவிக்கும்போது அவன் விபரீத ஒழுக்கமுள்ளவன் எனக் கொள்ளு கிறோம். அப்படியே ஜனசமூகமானது தனது சுயநலம், விரோதம், பொருளாசை முதலியன காரணமாகத் தன் நடுவுநிலையை மீறித் தன் அழிவுக்கே காரணமாக நடந்து கொள்ளும்போது அது புத்தி மாருட்டங்கொண்டது எனத் தீர்மானிப்பது தவறோ? பெரிய கைத்தொழிற் சாலைகளில் இன்ஜின் அறையில் சுழலும் பெரிய சக்கர மானது தான் நடுவாகச் சுற்றவேண்டியதைவிட்டுச் சிறிது விலகுமேயானல் அது தானும் கீழ்விழுந்து அழியும், கட்டடத்தையும் அழித்துவிடும். அது நடுவிலேயே நின்று சுழலுமானல் அச்சாலையின் தொழில் நடந்தேறுவ தற்கு ஏதுவாகும். நமது ஜீவியத்திற்கு நடுவானவர் கிறிஸ்துவே. நாம் அவரோடு இசைந்து நடக்குமளவும் நமது ஜீவியம் இசைவும் இன்பமுமாகும். கிறிஸ்துவை விட்டு விலகி நடக்கவே தானும் அழியும், தன்னை அடுத்த வரையும் அழித்துவிடும்.

கிறிஸ்துவானவர் விபரீதமாயிருந்தாரோ? அவர் காலத்தவர் அவரை அப்படியே நினைத்தார்கள். நாமோ அவர் ஒருவரே மகா ஞானமுள்ளவராக நடந்துவந்தார் எனக் காண்கிறோம். ஏழைகள் வீடுகளிலும் தனவந்தர், அதிகாரிகள் நடுவிலும் அவர் முழுதும் தமது இயல்புக்கு இசைந்தவராகவும் யாவற்றையும் மேற்கொண்டு நடப்ப வராகவும் காணப்பட்டார். அவர் ஒருவரே ஞான முள்ளவர், பேரறிவாளர். ஒன்றில் நாம் அவரைப்போல் நடந்து ஞானமுள்ளவராகவேண்டும், அல்லது அவரி னின்று விலகித் தன்வயமிழந்து பித்தராகவேண்டும்.

கடவுளே, எங்கள் பிதாவே, நாங்கள் முழுவதும் மதிகேட்டி லேயே நடந்து பழகிவிட்டபடியால் ஞானம் எங்களுக்கு மதிகேடாய்க் காணப்படுகிறது. எங்கள் மனதிலும் இதயத்திலும் தெளிவைக் கட்டளையிட்டருளும். அப்படியானல் நாங்கள் எங்களுடைய சுயநலம் பொருளாசை முதலியவற்றினின்று விலகி நீர் காட்டிய அறிவின் வழியில் வந்து சேருவோம். நீர் காட்டிய வழியிலேயேயன்றி வேறு வழி நடப்பதால் எங்கள் ஜீவியம் செவ்வனே நடைபெருது என்பது எங்களுக்குத் தெரியும். இயேசுவின் நாமத்திலே; ஆமென்.

பதினைந்தாம் நாள்

இருளில் உழைத்தல்

யோவான் 6: 16–21.

செய்யத்தகாததோர் காரியத்தை நாம் செய்ய நினைக்கிறோம். அப்படிச் செய்வது நம்மைச் சுற்றியுள்ள இயற்கை முழுவதற்கும் நேர் விரோதமானது என யோசிக்கும் சந்தேகம் நமது மனதில் குடிகொண்டிருக்குமளவும் நாம் திமிர்வாதங்கொண்டவர்களைப்போல் செயவிழந்திருப்போமாதலினால், வெற்றியுள்ள வாழ்வு இன்னதென்பதை நாம் ஆராயப்போகுமுன்னமே, கிறிஸ்துவானவர் காட்டிய வழியில் நடப்பதென்பது சாதகமான வழியோ அல்லவோ என்பதை நாம் திட்டமாய், வெகு தெளிவாய், அறிந்துகொள்ளவேண்டும். இவ்விஷயத்தில் தெளிவடைந்து, நாம் செய்வதனைத்தும் எல்லாவற்றுக்கும் பொருத்தமானதே எனும் நிச்சயம் கொள்வோமேயானால், இதுவரை பொருந்தாத அல்லது கூடாத காரியமென நினைப்பவற்றை சாதிப்பதற்கும் நமது மனம் தைரியங்கொள்ளும்.

சிஷரைப்பற்றி, அவர்கள் இருளிலே உழைத்தவர்கள், இருளிலே தண்டுவலித்தவர்கள், ஒரு வழியும் கண்டுகொள்ளாதவர்கள் எனக் கூறப்பட்டது. காற்றும் அலைகளும் அவர்களுக்கு எதிரே அடித்துக்கொண்டிருந்தபடியினால் அவர்கள முயற்சியனைத்தும் வீணாயிற்று. அச்சமயத்தில் இயேசுவானவர் வந்துவிட்டார். அவர்களோ ஆவேசம் என நினைத்துப் பயந்து அலறினார்கள். கடைசியாக அவர்கள் அவரைப் படவினுள் ஏற்றிக்கொண்டார்கள். 'உடனே படவு அவர்கள் போகவேண்டிய இடம் போய்ச்சேர்ந்தது.' நமது ஜீவிய சரித்திரமும் இதுவே தானே? நாம் போய்ச் சேரக்கூடாத இலக்குநோக்கிச் செல்ல வருந்தியுழைக்கிறோம். முழுவதும் வியர்த்த

மாகிறது — கஷ்டப்பட்டுத் தண்டுவலிக்கிறோம், எனினும் சேரவேண்டிய இடம்போய்ச் சேர்வதில்லை. நோக்கின்றி வீணே உழைக்கிறோம் என்பது நமக்குத் தெரியவருகிறது. நாமே அதற்கு எதிர்த்துச் செல்லுகிறோம், எங்கும் இருள். வாழ்க்கையைத் தாங்கக்கூடவில்லை. இயேசுவானவர் நமது முன்வந்து தோன்றுகிறார். நாம் பயப்படுகிறோம். அவர் ஆவேசமேபோல், இயற்கைக்கு மாறுபட்டவர்போல், காணப்படுகிறார். இயற்கைக்கு மாறானதும் முடியாததுமான காரியங்களைச் செய்யுமாறு கேட்கிறார். மனக்குழப்பமுண்டாகிறது. கடைசியாக் அவர் உள்ளே வரும்படி இடங்கொடுக்கிறோம்—கொடுக்கவே இதுவரை நாம் போய்ச் சேரும்படி பிரயாசப்பட்ட இடம்வந்து சேர்ந்துவிடுகிறோம். நாம் நினைத்திருந்த இடம் சேர்கிறோம். இந்த விதமாகவே அது வேலைசெய்கிறது.

நாமோ இயேசுவைப் பார்த்தவுடன் பயப்படுகிறோம் என்பதில் சந்தேகமே யில்லை. இயேசுவானவர் வந்தபோது, ஏரோது அதைப்பற்றிக் கேள்விப்பட்டமாத்திரமே "அவனும் அவனோடுகூட எருசலேம் பட்டணம் முழுதும் கலங்கினது" எனக் கூறப்பட்டது. மீட்பர் வருவது கேட்டுக் கலக்கம்! தங்களின் மதிகெட்ட வாழ்வே அவர்களுக்கு இயல்பான வாழ்வாகிவிட்டது. எனினும் சூரியோதயங் கண்டு பூக்கள் கலங்குமோ? அன்பின் வருகையைக் கண்டு மனது கலங்குமோ? மகோன்னத ஜீவன் வருவது கண்டு நமது ஜீவன் கலங்குமோ?

என்னை நெருக்கித் தூண்டி ஏவுகிற கடவுளே, சாந்தமூர்த்தி, என்னை மீட்க வல்லவரே, நான் பயந்து கலங்கி உம்மைத் தூரத்திலே விட்டுவிடாதபடி எனக்குத் துணைசெய்தருளும். அலைவாய்ப்பட்டுழலும் என் சிறிய படவினுள் உம்மை ஏற்றிக்கொள்ள எனக்குத் துணைசெய்தருளும். ஆமென்.

பதினுரும் நாள்

பூரண ஆனந்தமாகிய இலக்கைக் கிட்டிச் சேர்வதெப்படி?

பிலிப்பியர் 3: 1. கலாத்தியர் 5: 22. அப்போஸ்தலர் 5: 41.

நாமனைவரும் சந்தோஷமாயிருக்க விரும்புகிறோம். இது நமது இதயத்தில் பதிந்துள்ள இயற்கைகுணமாத லின் நாம் அங்ஙனம் விரும்புவது நியாயமே. அந்த குணத்தை நமது இதயத்தில் கொடுத்திருக்கிறவர் கடவுளே. சூரியாஸ்தமன நேரத்தில் கண்ணுக்கினிய காட்சி உண்டாகச்செய்கிறவரும், ரோசா மலருக்குப் பலவித நிறங்களைக் கொடுத்தவரும், பூனைக்குட்டிகள் துள்ளிவிளையாடவும் பசுங்குழந்தைகள் சிரிக்கவும் செய்த வரும், நமது ஆன்மாக்களில் நகைப்பைக் கொடுத்தவரு மாகிய கடவுள் நாம் மாத்திரம் சந்தோஷமில்லாதிருப்ப தைக் கண்டால் தாம் சந்தோஷமாயிரார். சுரித்து வலித்த முகத்துடனிராமல் மலர்ந்த முகங்காட்டி விளங்குவோமாக.

இப்படியாக நாம் சந்தோஷ நாட்டை, இன்ப நாட்டை, நோக்கிப் புறப்படுகிறோம். அந்த நாட்டிலே நாம் சந்தோஷமாய்க் காலங்கழிப்போமெனச் சொல்லு கிறோம். அந்நாடோ நமது கண்ணுக்குப் புலப்படாமலே போகிறது. பற்றிப்பிடியாமுன் நழுவிவிடுவதுபோற் காணப்படுகிறது. சலிப்படைந்து களைத்து மிகுந்த துக்கமாயிருப்போரே தாங்கள் சந்தோஷமாயிருக்க வேண்டுமென மிகவும் ஆசிக்கின்றனர். தாங்கள் செய்யும் காரியங்களின் மூலமாகவே தாங்கள் சலித்துப்போகாத படி ஒன்றைவிட்டு மற்றொன்றைச் செய்து இப்படியே காலங்கழிக்கின்றனர். சர்க்கஸ் பார்க்கும்படி தான் கூட்டிக்கொண்டுபோயிருந்த தனது பேரன் பயந்து அழு ததைக் கண்டு அவனுடைய பேத்தியார் அவனைக் குலுக்கி ஆட்டி "இதோபார், நீ இப்பொழுது சந்தோஷமாயிருக்க

வேண்டும். உன்னை அதற்காகத்தான் இங்கே கூட்டிக் கொண்டுவந்தேன். உனக்கு விளங்குகிறதா, சந்தோஷமா யிரு, ஜாக்கிரதை" என்று கூறியபிரகாரமே இவர்களும் தங்கள் மனதுக்குள் சொல்லிக்கொள்ளுகிறார்கள். இதே பிரகாரம் நாமும் நமது மனது சந்தோஷமாயிருக்கும் படி பிரயாசப்படுகிறோம். நமது ஆத்துமாவோ துக்க சாகரத்தில் அமுந்திச் சந்தோஷத்தை அனுபவிக்க வகை யறியாதிருக்கிறது. அது நேர் வழியைவிட்டு விலகிவிட் டது. வருந்தித் தண்டுவலித்தும் சேரவேண்டிய இடம் போய்ச் சேராமலிருக்கிறது. இருட்டாயிருக்கிறது. சில ருடைய இருதயத்தில் காரிருள் கவிந்திருக்கிறது. இன்ப நாடு கண்ணுக்குத் தோற்றவில்லை. அப்பொழுது இதோ, நீர்மேல் நடந்துவரும் ஒரு உருவம் காணப்படுகிறது. நாம் பயப்படுகிறோம். இவ்வுருவம் "உலகின் தன்மையைத் தன் சுவாசத்தால் மாற்றிவிட்ட கலிலேயனின் பசந்த உருவமல்லவோ?" நாம் பயந்து கதறுகிறோம். இவ்வுரு வம் பொறுமையோடு காத்திருந்து பின்னும் பின்னும் உள்வர முயலவே அவர் உள்ளே பிரவேசிக்க இடங்கொடுக் கிறோம். உடனே நமது சந்தோஷத்தை முற்றிலும் மறந்த வர்களாய்ப் பிறருடைய சந்தோஷத்தைப்பற்றி நினைக்க ஆரம்பிக்கிறோம். நாமும் அவரோடுகூடச் சேர்ந்து நடந்து துக்கப்படுவோர் வீடுகளுக்குச் சென்று அவர்கள் துக்கத்தை மாற்ற முயலுகிறோம். உடனே, இதோ, நமது இதயமும் ஒருவித புதிய சந்தோஷத்தைப் பெற் றுப் பாடுகிறது. இச்சந்தோஷமே ஆழ்ந்ததும் நிலைப்பது மாகிய உண்மை மகிழ்ச்சியாம். இவ்வழியாக நாம் போய்ச் சேரவேண்டிய இடம் சேருகிறோம்; சேர்ந்து விட்டோம்.

கிறிஸ்துவே, நாங்கள் உம்மை அறியாமற்போனோம். சிலுவை மரமே உமது அடையாளமாதலின் நீர் துக்க சுரூபியாகிய கிறிஸ்து வெனத் தப்பிதமாய் நினைத்துவந்தோம். எங்களை மன்னித்தருளும். நீர் சந்தோஷப் பிழம்பாம் கிறிஸ்துவென்பதை இப்போதுதான் கண் டோம். உமது சந்தோஷத்தில் சிறிதளவை நாங்கள் பெறவே எங்கள் இதயம் ஓய்வின்றிப் பாடிக் களிக்கிறது. உமக்கு நன்றிசெலுத்து கிறோம். ஆமென்.

பதினேழாம் நாள்

இருபாலினர் கவர்ச்சியால் விளையும் மேலான இலக்கை நாம் சேர்வ தெங்ஙனம்

கலாத்தியர் 5: 19–21. மத்தேயு 5: 27–30; 19: 3–6.

ஸ்திரீ புருஷ கவர்ச்சி மனிதர்க்கு இயற்கையாயுள்ளது. அது தெய்வத்தால் உண்டாக்கப்பட்டது. தானுகவே அக்கவர்ச்சி அசுத்தமானதன்று. நமக்குள் பசிக் கவர்ச்சியேபோல் இதுவும் இயற்கையான ஒரு கவர்ச்சியே. இதனுலாகும் விசேஷ வல்லமையை நமக்குக் கொடுத்தவர் கடவுள். இதன் மூலமாய் அவருடைய படைப்புத்தொழிலில் நாம் பங்குபெறுகிறும். ஆகையினுல் அது மறைவிடங்களிலே உட்கார்ந்து அந்தரங்கமாகப் பேசிக்கொள்ளும் காரியமன்று. மனதிலேயே இடைவிடாமல் யோசித்து யோசித்து வாடியிருக்கும் காரியமுமன்று. அதைத் தெளிவாகவும் வெளியரங்கமாகவும் ஆராய்ந்து உணரவேண்டும்.

இக்கவர்ச்சியாலுண்டான சக்தியே பெண்ணைத் தாயாகவும் ஆணைத் தந்தையாகவும் மாற்றுகிறது. இருவர் கூடிவாழவே ஒரு தனி வீடாகிறது. பிள்ளை பிறக்கிறது, குடும்பமாகிவிடுகிறது. தாய் தந்தை பிள்ளை மூவரையும் அன்பு கவர்ந்துகொள்ளுகிறது. இதனினும் அழகியது உலகில் வேறென்றுமில்லை. வானுலகம் பூமி வரை தாழ்ந்து பூமியைத் தொடவே மண்ணுலக காரியம் விண்ணுலக காரியமாய் மாறிவிடுகிறது.

இக்கவர்ச்சியானது உண்மை அன்பு அல்லது காதல் என்பதில் ஈடுபட்டு நிகழுமாயின் அது தூயதான விண்ணுலகப்பேறும். தகாதவழியில் அதை வழங்கினுலோ அது உலகை நரகமாக்கிவிடும். உலகிலே வேறெக்காரியத்திலும் அதிகமாக மகிழ்ச்சியை விளைத்ததும் துன்ப துயரத்தை விளைத்ததும் இக்கவர்ச்சியே. அக்கவர்ச்

சியை நாம் உபயோகிக்கும் விதத்தினாலே இன்பமோ துன்பமோ விளையும்.

காதல் கவர்ச்சியின் அனுபவ இலக்கைக் கட்டுக்கடங்காத சுயாதீனமுறையாய் அடையுமாறு பலர் முயல்கின்றனர். உலகிலே காதல் கவர்ச்சி உள்படச் சகல அனுபவங்களையும் நல்லொழுக்க முறைகளாலன்றித் தமது இஷ்டம்போலவே அனுபவித்துச் சுகிக்கும் உரிமையும் பாத்தியமும் தங்களுக்கு உண்டெனக் கூறுகின்றனர். அவ்வழியே முயல்கின்றனர். இப்படி முயலவே, இதோ, தாங்கள் வீணிலே தண்டுவலிப்பதைக் கண்டுகொள்கின்றனர். இருளும் வரவர அதிகரித்து அவர்களை மூடுகிறது. பரம சந்தோஷத்திற்கு மாறாக நரக வேதனைக்கு இடமாகிறது. தம்மையே தாம் அருவருத்து வெறுக்கக்கூடிய நிலைமைக்கு வந்துவிடுகின்றனர். அச்சமயத்திலே இயேசுவானவர் வந்துவிடுகிறார். அவரைக் காணவே பயந்து நடுங்குகிறோம். அவரோ கண்டிப்பாகவும் இயற்கைக்கு மாறுபட்டவர்போலவும் காணப்படுகிறார். அவரின்றி நாம் நமது இலக்குபோய்ச் சேரமுடியாதாகையால் அவரை ஏற்றுக்கொண்டு அவருக்கு இடங்கொடுக்கிறோம். இடங்கொடுக்கவே, இதோ, நமது இலக்கைச் சேருகிறோம். விவாகத்திற்கிசைந்து கிரகஸ்தராவோமானால் நல்லொழுக்கத்திற்குக் கட்டுப்பட்டவர்களாய் உலக விர்த்தியில் ஈடுபடுகிறோம். விவாகஞ்செய்துகொள்ளாமல் பிரமச்சாரியம் கைக்கொண்ட விடத்தும் இக்கவர்ச்சியைச் சங்கீதம், சிற்பம், சித்திரம், கவி, பக்தி முதலிய வேறு பல சிறந்த விர்த்திகளில் வழங்கி உலகை அலங்கரிக்கிறோம். அக்கவர்ச்சியால் பெறும் பேற்றை இருவழியிலும் அடைந்துகொள்ளுகிறோம்.

கிறிஸ்துவே, எங்களுக்கு மேலான ஜீவிய வாசலைத் திறக்கும்படி சாதாரண ஜீவிய வாசலை யடைத்துவைத்தீர். நாங்கள் தாழ்வான இழிகுணமக்களா யிருக்கவேண்டுமென்பது உமது திருச்சித்தமன்று. நாங்கள் முறுமுறுக்காதபடி எங்களைக் காத்தருளும். உமது திருச்சாயலின்படியே எங்களையும் மனிதராக்கச் சித்தங்கொண்டீர். நாங்கள் எழுந்து உம்மைப் பின்பற்றிக்கொள்ளத் துணைபுரிந்தருளும். ஆமென்.

பதினெட்டாம் நாள்

உள்ளான ஒருமைப்பாடாகிய இலக்கை நாம் சேர்வதெப்படி?
யாக்கோபு 4: 8. எபேசியர் 4: 1-6. மத்தேயு 6: 22.

கிறிஸ்துவானவர் காட்டிய வழியும் தற்கால மனோ தர்ம சாஸ்திரிகள் கூறுவதும் ஒன்றே எனக் கூறக்கூடிய ஏதேனும் ஒரு காரியமிருக்குமேயானுல் அது இதுவே: உள்ளான ஐக்கியமில்லாவிடத்துச் சுயசந்தோஷமும் பயனுள்ள ஜீவியமும் இருப்பதில்லை என்பதே.

"தனக்குத்தானே விரோதமாய்ப் பிரிந்திருக்கும் எந்த ராஜ்யமும் அழிவுறும்" என இயேசுவானவர் கூறினார். இது மிகவும் சாதாரண சொற்போற் காணப்படுகிறது. எனினும் தற்கால மனோதர்ம சாஸ்திரவல்லார் உள்ளான ஜீவியத்தில் உண்மையென விளங்குபவற்றினின்று கண்டுகொண்ட கோட்பாடுகள் அனைத்தும் இயேசுவானவர் கூறிய அச்சாதாரண வாக்கியத்தில் அடங்கியுள்ளன. தனக்குத்தானே விரோதமாய்ப் பிரிந்திருத்தல், உள்ளே கலகம், குழப்பம், இவையே மனுஷன் தனக்குள் தானே பாழ்படுதற்கேதுவாம்.

கவலையுற்றுக் கலங்கியிருப்பான் ஒருவனைப் பார்த்துப் பலர் "மனதை ஒருநிலைப்படுத்தி அமைதியாயிருக்கப்பார்" என ஆலோசனை கூறுவதுண்டு. இது பயனற்ற ஆலோசனை. நமக்குள்ளே ஒன்றுக்கொன்று விரோதமான பலவித கவலைகளும் எண்ணங்களுமுண்டு. அவற்றையெல்லாம் ஒருவழிப்படுத்துதல் கூடாத காரியம். ஒரே ஏரில் கழுதையையும் எருதையும் பூட்டி உழுவது பயனிலாவேலை என்பதைப் பழைய ஏற்பாட்டின் காலத்தவர் அறிந்திருந்தனர். அக்காலப் பிரமாணங்களை வகுத்தவர் அங்ஙனம் செய்யலாகாதென விலக்கினர். நமக்குள்ளே பிரிவினையான வேறுபட்ட பலபல அபிப்பிராயங்களையுடைய மனதிருக்கும்போது நாம் ஒருநிலைப்பட முயல்வது வீண் என்பதை நமது அனுபவத்தின் மூலமாயறிகிறோம்.

"உறுதியுள்ள மனதுடன் நடக்கப் பார்" என வேறு சிலர் ஆலோசனை கூறுவார். நமது செயலால் வெளிப்படும் நமது மனம் அல்லது சித்தம் என்பதுவே பிரிவினையுடையதாய் ஒருவழிப்படாதிருக்குமாயின் இது எங்ஙனம் சாத்தியமாகும். இந்த ஆலோசனையும் வீணே.

மனோநிலையாவதென்ன வென்பதைப் பகுதி பகுதி யாய் ஆராய்ந்தறிந்த மனோதர்ம சாஸ்திரிகள், ஒருவனுடைய ஒழுங்கீன ஜீவியத்திலே அவனைத் தாறுமாறுக்கும் பகுதி யின்னதென்பதையறிந்து அதற்கும் அவனுடைய ஜீவியத்திலே பிறவற்றுக்குமுள்ள சம்பந்தங்களை யுணர்ந்து ஒருவன் ஒருநிலைப்பட்டவனா யிருக்க வேண்டுமாயின் அவன் ஏதாவதொன்றின்மேல் பற்றுடையவனாயிருக்கவேண்டும், அதாவது அவன் அன்புகூரக் கூடிய ஏதேனுமொன்றிருக்க வேண்டுமெனக் கூறுவர். ஒருவனை ஒருநிலைப்படுத்தி அவன் தனக்குள்தானே ஐக்கியமாயிருக்கும்படி செய்வதே அவனுக்குள் காணப்படும் சீர்கேடுகளுக்குமேலாக அவனை உயர்த்தும் வழியாகும். அப்படிப்பட்ட ஒருவனிடம் பெரும்பாலும் இத்தகைய தொன்று காணப்படுவதில்லை. தன்னையே யன்றிப் பிறிதொன்றும் அவனிடம் இல்லாதிருக்கலாம். இதைப் பற்றி அதிகம் கூறியென்ன? இது திருப்திகரமான நிலைமையல்ல.

ஆகவே நாம் வருந்தியுழைத்துத் தண்டுவலிக்கிறோம். உள்ளான ஐக்கியம் பெறவேண்டுமென வீணே உழைக்கிறோம். காற்றும் அலைகளும் நமதுமேல் மோதுகின்றன. இருளும் அதிகரிக்கிறது. இயேசுவானவரும் அச்சமயம் நம்மிடம் வருகிறார். நமக்கும் வேறே வழியில்லாமையால் உள்ளே வரும்படி அவருக்கு இடங்கொடுக்கிறோம். "எஜமானன் வந்துவிட்டார்" என நமது ஆன்மாவும் இயல்பாகவே உணர்ந்துகொள்ளுகிறது. அவரோ உள்ளே காணப்படும் தாறுமாறுகளையெல்லாம் வாரி எடுத்து விரோதமானவற்றையெல்லாம் அகற்றிச் சுத்திகரித்து நமது வாழ்வை அவரில் அவர்மீது சார்புடையதாக்கி ஐக்கியப்படுத்துகிறார். இதோ, நாம் போய்ச் சேர வேண்டிய இலக்குபோய்ச் சேர்ந்தோம்.

கிறிஸ்துவே, எங்களுக்கு ஒரு எஜமானன் வேண்டும். எங்களை ஆண்டு நடத்தும் ஒருவர் வேண்டும். நீரே எங்கள் நியாயப்பிரமாண சட்டம். உமது கற்பனைகளே எங்கள் சுயாதீனம். எங்களுடைய வழியை நாங்கள் கண்டுகொள்வதற்கேதுவாக நாங்கள் உமது வழியை அனுசரித்து நடக்க எங்களுக்குத் துணைபுரிந்தருளும். ஆமென்.

பத்தொன்பதாம் நாள்

நான் கடவுளைக் கண்டுகொள்வதெவ்வாறு?

அப்போஸ்தலர் 17: 23-28.

உயிர்வாழ்க்கை இயன்று நடப்பதற்கு ஒரே வழிதானுண்டு. அது கடவுளின் வழியே என்பதைப் பார்த்தோம். "எங்களை உமக்கென்றே படைத்தீர், நாங்கள் உம்மில் வந்து அமருந்தனையும் அமைதியின்றியிருக்கிறோம்" என அகுஸ்தீன் அத்தியக்ஷர் கூறியது பலகாலும் பொருத்தமாயிருப்பதினால் அதையே பலர் பல விடங்களில் உரைக்கின்றனர். இவ்வுண்மை நமது மனதிலும் ஆழ்ந்து பதியவேண்டும். இவ்வுண்மை நமது மனதில் பதியுமானால் நாம் விளையாட்டாக இங்குமங்கும் அலைவதைவிட்டு விலகிக் கடவுளையும் அவர் காட்டிய வழியையும் கண்டுபிடிக்க முயலுவோம்.

கடவுளை நோக்கும் முதற்கண் நாம் சிற்சில காரியங்களை நோக்கவேண்டும். நாம் இருப்பதின் முழுநோக்கமும் நாம் படைக்கப்பட்டதன் முடிந்த நோக்கும் கடவுளைக் கண்டுபிடித்து அவரில் ஜீவிக்கவேண்டியதற்சென்றே என்பதை நாம் மறந்துவிடாமல் எப்பொழுதும் நினைத்துக்கொள்ளவேண்டும். ஒளியைக் கண்டுகொள்வதற்கு ஏதுவாகக் கண் படைக்கப்பட்டிருக்கிற விதமாகவே நாம் கடவுளைக் கண்டுகொள்வதற்கேதுவாகப் படைக்கப்பட்டிருக்கிறோம். பற்பலர் இதை ஆக்ஷேபிப்பார்கள். ஒரு இந்து மாணவன் என்னிடம் வந்து "கடவுள் என ஒருவர் இருப்பதுண்மையாயின் எக்காலும் துக்கத்துக்கே இடமாயிருக்கும் உலகனைத்தையும் அவர் படைத்ததில் அவருடைய நோக்கம் இருந்தவாறென்ன?" எனக் கேட்டான். ஒரு நாட் காலையில் பலரும் என்னிடம் வந்து பேசலாமென நான் காத்திருக்கையில் ஐந்து மாணவர் ஒருவரோடொருவர் கலந்து பேசிக்கொள்ளாமலே என்னிடம்

வந்து பேசினர். அவர்களில் ஒவ்வொருவரும் "நான் ஏன் படைக்கப்பட்டேன்" எனவே கேள்விகேட்டு மயங்கினர். அநேகரின் இதயங்களை வாதிப்பது இக்கேள்வியே.

நான் இதற்கு என்ன பதிலுரைப்பது? ஏதோ ஒருவாறு கூறலாம். நாம் அற்ப அறிவுடையராதலின் கடவுளுடைய படைப்பின் நோக்கம் முழுவதையும் நாம் அளவிட்டறிதல் கூடாதகாரியம். பெற்றோர் ஏன் பிள்ளைகளைப் பெறவேண்டும்? மாமிச இச்சையே காரணமோ? பெற்றோரின் பொறுப்பு இன்னதென அறிந்தோர்க்கு இது உடன்பாடாகாது. அன்பினால் ஏவப்பட்டுப் பிள்ளைகளைப் பெறுதலில்லையோ? தான் மனதார அன்புகூரக் கூடிய ஒன்று வேண்டும். பிள்ளை வளர்ந்து தேர்வதில் தன்னை முழுவதுமாய் அதற்காகக் கொடுத்தல் வேண்டுமெனும் ஆசையினாலல்லவோ? பிள்ளையின்றி மலடாயிருப்போர் பலகாலும் இவ்வாசையை வெளியிடுவதை நாம்கேட்டதில்லையோ? மனிதர் விஷயத்தில் இஃதுண்மையாயின் கடவுளின் விஷயத்தில் அது இன்னும் அதிகமாய் உண்மையாகாதோ? தாமே அன்பாய் விளங்கும் கடவுள் தமது அன்பைச் செலுத்தக்கூடிய ஜீவராசிகளைப் படைத்துக்கொள்ளாதிருப்ப தெங்ஙனம்? இவ்வாறாக நம்மைப் படைத்தவர் தம்மையே நமக்காகக் கொடாதிருப்பாரோ? அன்றேல் முழு இலக்கும் போலியாய் முடியும். கடவுளைப்பற்றிய இவ்வெண்ணம் நமது மனதில் குடிகொள்ளுமாயின் நாம் நினைப்பது துக்ககரமாகாது. நமது நினைப்பு ஆவலோடு எதிர்நோக்கும் நம்பிக்கையாக முடியும். நம்மைப் படைத்து நம்மை நேசிப்பவர் நமது வாசலில் வந்து தட்டுகிறார்.

பிதாவாகிய கடவுளே, படைப்பின் மூலமாய் நீர் மிகவும் நெருங்கி வந்து என் இதயக்கதவைத் தட்டி நிற்கிறீர். நீர் நடந்துவரும் காலடிச் சப்தம் எனக்குக் கேட்கிறது. உம்மை உள்ளே வரவிடுகிறேன். எனது ஆன்ம நேசரே, உம்மை முக்காலும் வரவேற்று நிற்கிறேன். ஆமென்.

இருபதாம் நாள்

கடவுளின் துணிகரச்செயல்

மத்தேயு 25: 34–40. 2 கோரிந்தியர் 5: 21.

கடவுள் தமது அன்பினாலே நம்மைப் படைத்தார் என்றும் தம்மையே நமக்கு அளிக்கவும் அவருடைய சாயலில் நாம் வளர்ந்து தேர்வதன் மூலமாய்த் தமது அன்பு நம்மில் நிறைவேறுவதைக் காணவும் நம்மைப் படைத்தாரெனப் பார்த்தோம். கடவுள் நம்மைத் தொடர்ந்து வருகிறபடியினால் இன்னும் அதே கருத்தையே தொடர்ந்து நோக்குவோம்.

இவ்விதமாகக் கடவுள் நம்மைப் படைத்தது மிகவும் துணிகரமான ஒரு செயலல்லவோ? நம்மைப் படைக்கும் போதே நமக்குச் சுயாதீன சித்தத்தை யளித்தார். இதனால் நாம் தவறி நடந்து நமது மனதுக்கும் அவருடைய மனதிற்கும் மகா வேதனையும் துக்கமும் விளைக்க மாட்டோமோ என நாம் கேட்கலாம். இப்படிக்கேட்பது சரியே. இவையெல்லாம் நேரிடுதற்கு இடமுண்டு. சுயாதீன சித்தத்தை அவர் நமக்கு அளியாமலிருந்திருக்கலாம். அல்லது நலமானவற்றை மாத்திரம் தெரிந்து கொண்டு நடக்கும் வலிமையை அவர் நமக்கு அளித்திருக்கலாம். இங்ஙனம் அளித்திருப்பாராயின் தெரிந்து கொள்ளும் சக்தியை அவர் நமக்குக் கொடுத்ததெனவாகாது. தெரிந்துகொள்வதென்றாலே ஒன்றுக்கு மேற்பட்டவற்றி லொன்றைத் தெரிந்துகொள்வதெனப் பொருள்படும். அன்றியும் நலமானதை மாத்திரம்தெரிந்து கொள்ளும் சக்தி நமக்கு இருக்குமாயின் அது நமக்கு நன்மையுமாகாது. நாம் ஒருவாறு மனவுறுதியுடையரா யிருப்போம். நல்லதல்லதை விலக்குவதினாலேயே நாம் நல்லவராதல் கூடும். சுயாதீன சித்தமில்லாவிடத்து நல்லாரென்பது எங்ஙனம் பெறப்படும்? "நற்சித்தம் என்பதையே தவிர உலக முழுவதிலும் அதற்கு வெளியேயும் நல்லதெனக் கூறக்கூடியது வேறொன்றுமில்லை" என்றனர் கண்ட் பண்டிதர். ஆகவே சித்தமென ஒன்றில்லையாயின் நலமெனவும் தீதெனவுமில்லை. நல்லாரெனவும் பொல்லா

ரெனவும் இல்லையாம். நல்லார் தீயாரெனப் பாராட்டப் படுமாறு சுயாதீன சித்தமுடையராய்ப் படைக்கவேண்டியது அவசியமாம். அப்படிக் கொடுத்தது துணிந்து கொடுத்ததேயோ? ஆம், அப்படியே.

பெற்றோர் பிள்ளைகளை உலகில் பிறப்பிக்கும்போது அவர்களும் இப்படியே துணிந்து செய்கின்றனர். பிள்ளைகள் தவறி நடந்து தங்கள் ஜீவியத்தையும் பெற்றோரின் ஜீவியத்தையும் பாழாக்கிவிடலாம். ஆனாலும் பெற்றோர் அவ்விஷயத்தில் வந்தது வரட்டுமெனத் துணிந்தே பிள்ளைகளைப் பெறுகின்றனர். காரணமென்ன? என்னதான் நேரிடினும் தாங்கள் தங்கள் பிள்ளைக்கு நலமானதையே செய்வதெனுந் தீர்மானத்தோடிருக்கின்றனர். பிள்ளையின் வாழ்வோடு தங்களை மிகவும் நெருங்கிய ஐக்கியமுடையராக்கிக்கொள்கின்றனர். பிள்ளையின் லாப நஷ்டங்களைத் தங்கள் லாப நஷ்டங்களாகவும் பிள்ளையின் கஷ்டங்களைத் தங்கள் கஷ்டங்களாகவும் பிள்ளையின் வளர்ச்சி மகிழ்ச்சிகளைத் தங்களுடையனவாகவும் பாராட்டிப் பிள்ளையோடு தாங்களும் அனுபவித்துணர்கின்றனர். இப்படிக் கொள்வது துன்பமே, சிலுவையே! எனினும் பெற்றோர் அச்சிலுவையைத் தூக்கிக்கொள்ளச் சம்மதிக்கின்றனர். அதை அகற்றிவிடமுடியாது. கடவுள் விஷயத்திலும் அப்படியே நம்மைப் படைத்தாரென்றால் அவர் நமது ஜீவியத்தில் உடன்சம்பந்தமுடையராகி நமது கஷ்டங்களைத் தமது கஷ்டங்களாகவும் நமது பாவங்களை அவரது பாவங்களாகவும் நமது சந்தோஷத்தைத் தமது சந்தோஷமாகவும் அனுபவிப்பார். ஆகவே படைப்பினால் கடவுளுக்கு வாய்த்தது சிலுவையே. இது விலக்கக்கூடியதல்ல. அவர் சிலுவையைத் தாங்கினார். அன்புடையராதலின் வேறு விதமாய்ச் செய்யமுடியாது.

கடவுளே, உமது துணிகரங் கண்டு பேராச்சரியங்கொள்ளுகிறோம். ஆனால் நீரே எங்களை உண்மையாகவே படைத்தீர். எங்களை மறுசிருஷ்டியாக்குமாறு முதலில் படைத்திருக்கலாம். இதுவே எங்கள் நம்பிக்கை. அந்நம்பிக்கையை எங்கள் மனதினுள் காத்துக்கொள்வோம். ஆமென்.

இருபத்தோராம் நாள்

கடவுள் என்னைத் தேடிவருவது

லூக்கா 15: 1–10. யோவான் 3: 16.

நாம் நேற்றுக் கற்றுக்கொண்ட பொருள் உண்மையே யானால் கடவுள் நமது மீட்பின்பொருட்டு இடைவிடாமல் நம்மைத் தேடிக்கொண்டிருக்கிறார் என்னும் கருத்தையும் நாம் ஒப்புக்கொள்ளவேண்டியதே. நம்பக்கூடாதபடி அது அவ்வளவு நல்ல காரியமாயிருக்கிறது. நானோ அது முற்றிலும் நம்பக்கூடியதாக அத்தனை நன்றாயிருக்கிறது எனக் கூறுவேன்.

புதிய ஏற்பாட்டை எடுத்து அதின் ஏடுகளைத் திருப்பி லூக்கா சுவிசேஷம் பதினைந்தாம் அதிகாரத்தில் கூறப்படும் உவமைகளைப் பாருங்கள்: காணாமற்போன ஆடு, காணாமற்போன நாணயம், காணாமற்போன மகன். இதற்கு முன் எக்காலும் இத்தகைய ஆச்சரியமான உண்மையை மனிதன் வாசித்தும் பேசியும் அறிந்ததில்லை. "அண்டகோளங்களைப் படைத்தவர் காணற்கரியர்" என்றார் பிளாற்றோ சாஸ்திரி. "நீர் தவசுபுரிந்து தூங்கவிடாதபடி என் கடவுளைத் துன்பப்படுத்துகிறீர்" என்று ஒருவர் ஒரு இந்து சந்நியாசியைக் குற்றப்படுத்தினார். "கடவுளைக் காணவிரும்பினால் மிகவும் பொறுமைவேண்டும். ஒரு வைக்கோல் துரும்பைக் கையில் வைத்துக்கொண்டு கடற்கரையில் அமர்ந்து ஒவ்வொரு துளியாகச் சமுத்திர நீரை எடுத்து வெளியே கொட்டிக் கடல்நீர் முழுவதையும் வற்றவைக்க நினைக்கும் ஒருவனுக்கிருக்க வேண்டிய அளவு பொறுமை கடவுளைக் காண விரும்புபவனுக்கும் இருக்கவேண்டும்" என மகாத்மா காந்தி என்னிடம் கூறினர். கிறிஸ்துவோ இங்கே திரையை நீக்கி, காணாமற்போன ஆட்டைக் கண்டுபிடிக்குமளவும் மாறி மாறி அதைத் தேடியலைந்த மேய்ப்பனின் இதயம்

போன்ற பரிதாப சிந்தையுள்ள இதயமுடைய கடவுளைக் காணுமாறு செய்கிறார். காணாமற்போன நாணயத்தைத் தேடிக் கண்டுபிடித்த ஸ்திரீயின் உவமையென்ன? இவ்வாறாகவே கடவுளும் காணாமற்போன ஆத்துமாவைக் கண்டு பிடிக்குமளவும் தமது மீட்பாங் கருணையால் சர்வாண்டமும் விளக்கித் தேடுவார் என இயேசுவானவர் உரைக்கிறார். ராஜ சுரூபம் நாணயத்திற் பதிந்திருப்பதேபோல் தெய்வ சுரூபமும் மனித இருதயத்தில் பதிந்திருக்கிறது. அழுக்கான குப்பையில் அந்நாணயம் மறைந்துகிடப்பினும் ராஜசுரூபம் அதைவிட்டு நீங்குவதில்லை. காணாமற்போன கெட்ட குமாரனைத் தேடி அவனுடைய தந்தை தூரதேசம் வரையும் செல்லவில்லை என்பது உண்மையே யெனினும் தந்தையின் அன்பு மகனோடிருந்ததென்பதும் கெட்ட குமாரன் அந்த அன்பின் வழியாகவே தனது தந்தையினிடம் திரும்பி வந்தான் என்பதும் உண்மையல்லவோ? தாங்கள் ஓடவேண்டிய இலக்குக்கு நேராகப் போடப்பட்டிருந்த கம்பியில் மாட்டப்பெற்ற வளையத்திலே கட்டியிருந்த கயிற்றைப் பிடித்துக்கொண்டு குருட்டுப்பிள்ளைகள் பந்தய ஓட்டம் ஓடியதை நான் ஒருநாள் பார்த்தேன். அவ்வாறாகவே இந்தக் கெட்ட குமாரனும் தன் தந்தையினிடமிருந்து வரும் அன்பின் கயிற்றைப் பற்றிப் பிடித்துக்கொண்டவனாய் அதன் வழியே சென்று தந்தையின் மடியிற் சேர்ந்தான். வருஷங்களாக நம்மைப் பின்தொடர்ந்து கண்டுபிடிக்கும்படி வானலோக கர்த்தாவானவர் தேடிக்கொண்டிருக்கிறார்.

கடவுளே, நான் என் இதயத்தை உமக்கு அடைத்துவிடத் துணியேன். நீர் இடையீடின்றி முயன்று என்னை மேற்கொண்டீர். நான் கண்டுபிடிக்கப்படுவது எனக்கும் பெரு மகிழ்ச்சியைத் தரும். உமக்கு நன்றி செலுத்துகிறேன். ஆமென்.

இருபத்திரண்டாம் நாள்

தேர்ந்து தெளிதல்

லூக்கா 11: 33–36.

கடவுளைக் காணவிடாமல் தடுப்பன கடவுளால் விளைந்தனவல்ல, நம்மால் விளைந்தனவே. கடவுள் நம்மைத் தேடிக்கொண்டிருக்கிறபடியினால், நாம் அவரைக் கண்டு பிடிக்கவேண்டுமென்பதல்ல; அவர் நம்மைக் கண்டுபிடிக்கும்படி விடவேண்டுமென்பதே. கடவுள் நம்மைக் கண்டு கொள்ளத்தக்கதாக அவர் தேடிக்கொண்டுவரும் வழியில் நாம் போய் நிற்கவேண்டும். நம்மிற் பலரோ அவ்வழியிற்போய் நிற்பதில்லை. ஆகவே தடுப்புகள் நம்மால் விளைவனவேயாம்.

இத்தடுப்புகளிற் சில நமது மனதிற்குரியன. சிலருக்கு உண்மையாகவே சந்தேகங்கள் உண்டு. நான் பல வருடங்களாக அநேகருடன் பழகி அநேகருடைய சந்தேகங்களைக் கேட்டறிந்து அவற்றை நிவிர்த்திசெய்திருக்கிறேன். சந்தேகங்கள் சாதாரணமான வெளிப்பாங்கான சந்தேகங்களல்ல. அவை பெரும்பாலும் பலருடைய இதயங்களிற் பலபல காரணங்கள்பற்றி ஆழ்ந்து கிடப்பன. ஒருதடவை ஒரு வாலிபன் என்னிடம்வந்து திரித்துவக் கொள்கையைப்பற்றித் தனக்குள சந்தேகத்தை வெளியிட்டான். அது தனக்கு விளங்குகிறதில்லை எனக் கூறினான். நான் அவனோடு பேசி “கிறிஸ்து மார்க்கத்தில் வற்புறுத்தப்படுவது திரித்துவமல்ல, அவதாரமே; திரித்துவத்தைப்பற்றிய கோட்பாடு புதிய ஏற்பாட்டில் ஒருவாறு கூறப்படுவதேயன்றித் திட்டவட்டமாய் உரைக்கப்பட்டதல்ல. ஓரறிவுப் பிராணிகளின் ஜீவன் அதி சாதாரணமானது. அதற்கு மேற் செல்லச் செல்ல மற்றப் பிராணிகளின் வாழ்விலே நமது புத்திக்கு எளிதில் விளங்காத அநேக காரியங்களுண்டு.

மனித வாழ்வை நோக்கும்போதோ நமது புத்திக்கு விளங்காத பற்பல காரியங்களைப் பார்க்கிறோம். உடல் மனம் ஆத்மாவெனும் பாகுபாடுகள் மனிதனிலுண்டு. மனிதனும் திரித்துவமே. ஜீவனானது மேல்நோக்கி வளர வளரப் பற்பல பாகுபாடுகளுடன் வளர்ந்துகொண்டே போகிறது. எல்லாவற்றினும் மேலான ஜீவனாகிய கடவுளை நோக்கும்போதோ அது அதி சாதாரணமாய் நமக்கு எளிதில் விளங்கக்கூடியதாயிருக்குமென நாம் எதிர்பார்த்தலொண்ணாது. திரித்துவம் என்பது இவ்வாறான இயல்புடையதே. மேலே செல்லச் செல்ல வாழ்வு பல் பாகுபாடுடையதாய்க் காணப்படினும் அவற்றினுள் ஐக்கியம், ஒற்றுமை என்பது காணப்படுகிறது. மனிதன் திரித்துவமே எனினும் அவனில் ஐக்கியமாகிய ஏகத்துவமுண்டு. மனிதனிலும் மேலான கடவுளிலோ திரித்துவமும் ஏகத்துவமும் மிகச் சிறந்து விளங்குகின்றன" எனக் கூறினேன். நான் கூறியது அவ்வாலிபனுக்கு எவ்வளவாயினும் பயன்படாதோவெனப் பார்த்தேன். ஆனாலும் அவனுக்கோ அது பிரயோசனப்படவில்லை. அவ்வாலிபனுக்கிருந்த சந்தேகம் அறிவுக்கு விளங்காமையாலுண்டான சந்தேகமன்று. அது அவனுடைய ஒழுக்கக் குறைவினாலுண்டான சந்தேகமெனக்கண்டுகொண்டேன். அப்போது நான் அவன்மேல் கையை வைத்து நீ சுத்தமாய் நடக்கிறாயோ என வினவவே அவன் தலைகவிழ்ந்தான். அவன் சுத்தமாய் நடக்கிறவனல்ல. நல்லொழுக்கமுடையவனல்ல. அவனுக்கிருந்த கஷ்டம் உண்மையாகவே விளைந்த சந்தேகமன்று. அது உண்மைக்கேடான பாவ ஜீவியத்தால் உண்டானது.

கடவுளே, இந்த உண்மையை நாங்கள் திட்டமாய் அறிந்துணரச் செய்தருளும். நாங்கள் ஒரு சிறிதும் களங்கமின்றி உண்மையாயிருக்கத் துணைபுரிந்தருளும். எங்களிற் காணப்படும் தடைப்புகள் நீங்க நீங்க உமது பிரசன்னம் எங்கள் இதயங்களில் நாங்கள் அறியாத பிரகாரம் அனலை மூட்டிவிடுதற் கேதுவாகலாம்; இயேசுவின் நாமத்திலே. ஆமென்.

இருபத்துமூன்றும் நாள்

பரிசோதனை செய்து தெளிதல்

2 கொரிந்தியர் 13: 5–8. 1 தெசலோனிக்கேயர் 5: 21, 22.

மத்தேயு 5: 8. 1 யோவான் 3: 3.

ஒழுக்கக் குறைவினால் அறிவு குருடாகும் என்பதை நேற்று ஆராய்ந்தோம். சரியாகவே நினைத்து வாழ்வதிலும் சரியாகவே வாழ்ந்து நினைப்பது அதிகக் கஷ்டமானது. ஒழுக்கமுறையைப் பாராட்டும் உலகிலே எதையும் சரி, தப்பு என நிதானிக்கும் அறிவே மிகவும் விசேஷமானது. அஃதில்லாவிடத்து நாம் எவ்வளவு தூரம் யோசிக்கக்கூடியவராயிருப்பினும் நாம் குருடரேயாவோம். ஆகவே ஒழுக்கக் குறையாலான தடுப்புகள் நம்மில் உண்டோ என்பதை நாம் ஆராயவேண்டும். தடுப்புகளாயிருப்பன ஒழுக்கக் குறைவினாலானவை மாத்திரமேயல்லவெனினும் முதற்கண் அவற்றை நோக்குதல் மிகவும் அவசியம்.

எனக்கு ஒரு சிநேகிதருண்டு. அவர் ஒழுக்க விஷயமாகவும் ஆவிக்குரிய சம்பந்தமாகவும் எவரையும் வசப்படுத்தும் வலிமையுடையவர். அவர் தமது சொந்த விஷயத்திலே ஒரு சிறிதும் தயைதாக்ஷணியமின்றித் தம்மை அடக்கி நடப்பவராதலினாலே இவ்வலிமையுடையரானார் என்பதைக் கண்டேன். வாரமொருமுறை அவர் தனியே வெளியே போய் ஐந்து கேள்விகளுக்கு உண்மையான விடைகூறித் தமது ஜீவியத்தை ஆராய்வார். கடவுளின் சந்நிதியில் அமர்ந்திருந்து ஒரு சிறிதும் ஏமாற்றமும் கபடமுமின்றி இந்த ஐந்து கேள்விகளையும் கேட்டுத் தம்மை ஆராய்வார். அவையாவன:

1. நான் உண்மை யுரைப்பவனா? நான் பொய்யுரைக்க வேண்டிய அல்லது பொய்யுரைக்கக்கூடிய, காரியங்கள் சந்தர்ப்பங்கள் என உண்டா? என்னதான் நேரிடினும் நான் மெய்யையே யுரைப்பேன் என எதிர்பார்க்கக் கூடுமோ? என்ன பதில்? ஆம், உண்டு என்பதோ? அல்ல. இல்லை என்பதோ?

2. நான் நாணயமுள்ளவனா? பண விஷயத்தில் முழுது மாய் என்னை நம்பலாமா? என் வேலையில் என்னை நம்ப லாமா? பிறருடைய மானம், கௌரவம் சம்பந்தப்பட்ட காரியங்களில் என்னை நம்பலாமா? என்ன பதில்? ஆமோ ஆகாதோ?

3. நான் சுத்தனா? பெண்கள் சம்பந்தப்பட்ட விஷயத் தில் நான் எப்படி? என்னுடைய பழக்கங்களில்? என் னுடைய நினைவுகளில்? எப்படி? நல்லனோ? பொல்லனோ?

4. நான் எளிதில் கோபப்படக்கூடியவனா? அன் புடையவனா? எனக்குச் சீக்கிரம் கோபம் வந்துவிடு கிறதா? பிறர் என்னை அற்பமாய் மதித்துவிட்டார்க ளெனச் சீக்கிரம் எண்ணுகிறேனா? அன்பினால் ஏவப்பட்டு எல்லாவற்றையும் சகித்துக்கொள்ளும் தன்மை எனக் குள் உண்டா? என்ன பதில்?

5. நான் சுயநலப்பிரியனா? ஊழியத்திற்கெனப் பிர திஷ்டை செய்யப்பட்டவனா? நான் எதற்காக ஜீவிக் கிறேன்? எனக்காகவோ, என் பதவி, என் பொருள், என் ஸ்தானம், என் அதிகாரம் இவற்றுக்காகவோ? எனது தாலந்துகளை, வரங்களையெல்லாம், மற்றவர்களின் பிரயோ சனத்திற்காக வழங்குகிறேனா? கடவுளின் ராஜ்யமகிமைக் கென வழங்குகிறேனா? மறுபடியும் கேட்கிறேன். நான் ஜீவிப்பது எதற்கு? எனக்காகவோ பிறர்பொருட்டோ?

நாம் முன்னேறிச் செல்லவேண்டியவர்களாதலின் நம்மையே நமது முன்னிலையில் நிறுத்தி நம்மை ஆராய் வோமாக. தயை தாக்ஷண்யமின்றி, நீக்குப்போக்குக் கிடமின்றித் தனது குற்றங்களையும் குறைகளையும் பார்க் கும்படி தன்னையே தன் முன்னிலையில் நிறுத்தி ஆராய் பவன் மிகவும் தைரிய புருஷனே.

கிறிஸ்துவே, ஒவ்வொருவர் இதயத்திலுமுள்ளவற்றையெல்லாம் நீர் அறிகிறவர் என்று சொல்லப்பட்டது. நாங்களோ எங்களுக்குள் உள்ளவற்றையும் அறியக்கூடியவர்களல்ல. உண்மையான நோக்கோடு நாங்கள் எங்களை ஆராய்ந்து பார்த்தவர்களல்ல. இன்றே நாங்கள் அப்படிச் செய்யும்படி எங்களுக்கு உதவி புரிந்தருளும். உமது நாமத் திலே. ஆமென்.

இருபத்துநான்காம் நாள்

பாவ அறிக்கை செய்வது அவசியமோ?

யாக்கோபு 5: 13–16. லூக்கா 12: 2–9.

முந்தின தினத்திலே பார்த்த ஐந்து கேள்விகளையும் கேட்டு நீ உன்னை ஆராயும்போது நீ எப்படிக் காணப்படுகிறாய்? ஒவ்வொரு கேள்வியையும் சாவதானமாய்த் தனித்தனியே கேட்டு உண்மையான பதில் உரைக்கப் பார். சாக்குப்போக்குச் சொல்லவும் நியாயங்கூறி வாதாடவும் சம்பந்தமற்ற காரணங்களைக் கூறவும் உனக்குத் தோன்றுமாயினும் அதற்கிடங்கொடாமல் உண்மையான பதிலை யுரைக்கப்பார்.

இவற்றில் ஏதேனுமொன்றிலோ பலவற்றிலோ அனைத்திலுமோ நீ தவறியதுண்டானால் உண்மையாக நேராக உன் தப்பிதத்தை ஒப்புக்கொள். இயேசுவின் போதனையும் அதுவே. "மனச்சாட்சியானது நியாயாதிபதியாக ஒருவனுடைய தீச்செயல்களைக் கண்டுபிடிக்கும்போது ஒருவன் தான் குற்றவாளியேயென உணர்வானேயானால் மனச்சாட்சியையுடைய மனிதன் அடியிற்கண்ட மூன்று காரியங்களில் ஒன்றைச் செய்வான், ஒன்றில் மனச்சாட்சியானது யாதொன்றும் செய்ய வழியின்றித் தன் இஷ்டம்போல் தன்னை நடக்க விட்டுவிடும்படி செய்வான். அல்லது குற்றவாளியென எழும் உணர்ச்சியானது வெளிப்படாமல் அதை மாய்த்து மழுக்கிவிடுவான். அன்றேல் பாவ அறிக்கையின் மூலமாய் உண்டாகும் ஆவிக்குரிய சுத்திகரிப்பினால்தான் குற்றவாளியென விருந்ததால் உண்டாகும் கிலேசத்தை மாற்றுவான்." என பார்பர் சாஸ்திரியார் தாம் எழுதியுள்ள "பாவமும் மனோதர்ம சாஸ்திரப் புதுமுறையும்" எனும் நூலில் கூறுகின்றனர். முதல் இருமுறைகளும் திருப்திகரமானவையல்ல. அவற்றால் விளைவது விபத்தே. தன்னைக் குற்றவாளி

யெனக் கண்டும் அதற்காக ஒருவன் ஒன்றுஞ் செய்யாது விட்டுவிடுவது தன்னை மதியாத ஒன்ருேடு தன்னைப் பிணைத்து வாழும் இழிந்த வாழ்வாம். அது நரகத்தி லிருப்பதின் ஆரம்பம். அதை அப்படியே அடக்கிவிடுவ தும் அதனினும் கேடாம். மனோதர்ம சாஸ்திர நிபுணர் அனைவரும் ப்ரூராய்ட், ஆட்லர், ஜூங், மக்டூகேல் முதலிய மனோதத்துவ ஞானிகளுக்கும் அது கேடென்பதே உடன் பாடாம். பயம் தோஷம் முதலியவற்றை அப்படியே கீழடக்கிமூடிவிடுவதினால் அவை நீங்கிவிடுவதில்லை. அவை பிரக்ஞையற்ற மனதில் பலுகி வேதனையை விளைவிக்கும். வாழ்வு சந்தோஷமிழக்கும், பயமும் கோழைத்தனமும் பிறக்கும். அதன் காரணம் ஏதென நமக்கு விளங்குவ தில்லை. இப்படி அடக்கிவிடுவதினாலேயே இது சம்ப விக்கும்.

தற்கால மனோதத்துவ சாஸ்திரபோதனைகளும் இயேசு வானவரின் போதனைகளும் இவ்விஷயத்தில் ஒத்திருப் பன, ஒரே அபிப்பிராயங்கொடுப்பன. ஆதலினால் குற்ற முள்ள எண்ணத்தை அடக்கிவிடாமல் அதை வெளிப் படுத்தி அறிக்கை செய்து மாற்றிவிடவேண்டும். அதற்கு வேறு வழியில்லை.

கிறிஸ்துவே, நாங்கள் பெருமூச்சோடு நிற்கிறோம். அறிக்கை செய்வதால் எங்களுக்கு நாங்களே இழிவும் தாழ்வுமானவர்களாகிறோ மென நினைக்கிறோம். எனினும் எங்கள் காரியங்களை மறைக்கத் துணியோம். எங்களுக்குத் துணிவில்லை. அதை உமக்குத் திறந்து வெளிப்படுத்துகிறோம். உமக்கே திறந்து வெளிப்படுத்த, இப்போதே வெளியிடத் துணிந்தோம். ஆமென்.

இருபத்தைந்தாம் நாள்

நான் யாரிடம் அறிக்கையிடவேண்டும்

லூக்கா 18: 9–14. 1 யோவான் 1: 9, 10.

அப்போஸ்தலர் 19: 18, 19. சங்கீதம் 32: 6.

நமக்குள்ளும் நமது மீதுமுள்ள குற்றமுள்ள எண்ணத்தை நாம் நீக்கிவிடவேண்டுமானால் அதைப் புறப்படுத்தி வெளியாக்கி அறிக்கை செய்யவேண்டுமென நேற்றுப் பார்த்தோம். இப்பொழுதோ, யாரிடம் அறிக்கையிடுவது எனும் வினா எழுகிறது.

யாருக்கு விரோதமாய்க் குற்றஞ் செய்தோமோ அவரிடம் சென்று குற்றத்தை அறிக்கையிடவேண்டுமென்பது வெளிப்படை. அங்ஙனமாயின் நாம் மூவரிடம் அறிக்கையிடவேண்டும். நாம் தப்பிதம் செய்யும்போதெல்லாம் நமக்கே விரோதமாகவும் கடவுளுக்கு விரோதமாகவும் ஜனசமூகம் அல்லது ஒரு சகோதரனுக்கு விரோதமாகவும் தப்பிதம் செய்கிறோம்.

முதலாவது, நாம் நமக்கு விரோதமாகத் தப்பிதம் செய்கிறோம். மிகவும் மேலான நமது நன்மைக்கு விரோதமாய்த் தப்பிதஞ் செய்து நமது உயர்வான கோட்பாடுகளை மறந்து அகற்றி நமது உயர்வான தன்மைக்கு மாறாகக் குற்றஞ்செய்கிறோம். ஆகவே நாம் தப்பிதம் செய்தோமென நாமே நமக்குள் ஒப்புக்கொள்ளவேண்டும். நாமே நமக்குள் அதை ஒப்புக்கொண்டாலன்றி அதை நாம் பிறரிடத்திலும் கடவுளினிடத்திலும் ஒப்புக்கொள்ளமுடியாது. உனது குற்றத்தை யுணர்ந்து நீயே உனக்குள் அதை அறிக்கையிட்டுக்கொள்ளுகிறாயா? முழுவதுமாய் அறிக்கையிடுகிறாயா? சாக்குப் போக்குச் சொல்லாமல் அறிக்கையிடுகிறாயா? முழுவதும் என்பது முக்கியம். ஏனெனில் அரைகுறையான அறிக்கை செய்து மனஸ்தாபப்படுவதில் பயனில்லை.

இரண்டாவது, நாம் கடவுளிடம் நமது பாவத்தை அறிக்கையிடவேண்டும். நாம் சட்டத்தை மீறினது மாத்திரமல்ல கடவுளின் இதயத்தில் பெருந்துயரை விளைத்தோம். கடவுளினிடம் நாம் அப்படியே சொல்லவேண்டும். இப்பொழுது நாம் இயேசுவானவரின் மூலமாய்க் கடவுளினிடம் வெகு எளிதாய்ச் செல்லக்கூடும். அவருடைய அற்புத பரிசுத்தகுணம் பாவிகளைக் கண்டித்ததெனினும் அவர்களைக் கடவுளினிடம் அழைக்கிறது. அவருடைய பரிசுத்தம் தங்களை விலக்குவதன்று, தங்களை மன்னிப்பதே எனப் பாவிகளும் கண்டனர். தூய சிந்தையராகிய கடவுளின் சந்நிதியில்உன் பாவ இதயத்தைத் திறந்து காட்டத் துணியவேண்டும். உனக்கு நிவிர்த்தி வேண்டுமானல் நீ துணியாமல் தீராது. முழுமனதோடும் துணிந்து அறிக்கையிடவேண்டும். அரைகுறையான அறிக்கையை அவர் ஒப்புக்கொள்ளமாட்டார். ஏதேனும் ஒன்றை ஒளித்துக்கொண்டால் முழுவதும் கெட்டுப்போம். அறிக்கையும் பயனற்றதாகும்.

மூன்ருவது, நாம் யாருக்கு விரோதமாய்த் தப்பிதம் செய்தோமோ அவர்களிடம் சென்று நமது குற்றத்தை அறிக்கையிடவேண்டும். நமது பாவங்களைப் பலருமறியத் தூற்றித் திரியவேண்டுமென்பதல்ல. பொதுவான கூட்டங்களில் பொதுவாக அறிக்கையிடுவது நல்ல முறையன்று. கடவுளினிடம் நாம் நேராகவே அறிக்கையிட்டு அவரால் நேராகவே தீர்க்கப்படும் குற்றங்களுமுண்டு. ஆனல் நாம் பிறருக்கு விரோதமாகவும் பிறர் நமக்கு விரோதமாகவும் குற்றஞ் செய்திருந்தால் இருவரும் ஒருவரிடத்திலொருவர் அறிக்கையிட்டு ஒருவரையொருவர் மன்னிக்கவேண்டும்.

கிறிஸ்துவே; நீர் ஆழமாய்க் கருவியையிட்டு புண்ணைப் பரிசோதிக்கிறீர். சகிக்கமுடியாத வேதனை யுறுகிறேரும். எனினும் களங்கமனைத்தும் வேரற எடுபடவேண்டுமெனப் பொறுத்துக்கொள்ளுகிறேரும். சிறிதளவும் விட்டுவிடாமல் முழுவதையும் எடுத்துவிடும். சற்றே சுகமானல் போதுமென்பதல்ல. பூரணசுகமடைய வேண்டுமென நாங்கள் விரும்புகிறேரும். ஆமென்.

இருபத்தாறும் நாள்

நமது வாழ்க்கையின் கட்டவிழ்த்து விடுவித்தல்

மத்தேயு 6: 9–15; 5: 23–26. ரோமர் 12: 18.

நமது சகோதரனுக்கு விரோதமாய் நாம் செய்த தப்பிதத்தை நாம் அவனிடம் அறிக்கையிடவேண்டுமென்றும் அவன் நமக்கு விரோதமாய்ச் செய்த தப்பிதத்தை நாம் மன்னிக்கவேண்டுமென்றும் முந்தின நாளில் பார்த்தோம். இவ்விஷயம் இன்னும் ஆழ்ந்து செல்வது.

உதாரணமாக, நாம் உண்மைக்கேடாக நடந்ததுண்டாயின் நாம் அதை அறிக்கைசெய்து அக்குற்றத்திற்குப் பிரதிசெய்யவேண்டும். நமக்கும் நமது பதவிக்கும் என்னவாகும் என்பதை யோசியாமலும் எண்ணுமலும் நாம் அறிக்கையிடவேண்டும். கிறிஸ்துமார்க்க குரு ஒருவர் தான் அபகரித்திருந்த நானூற்றைம்பது ரூபாயை ஒரு நாள் கொண்டுவந்து மேசையின்மேல் வைத்துவிட்டு இது இருபது ஆண்டுகளின் மேலாகத் தனது மனதில் பாரச்சுமையாயிருந்ததெனவும் தனது ஊழியம் பயனின்றிப் பாழ்படுவதற்கு அது ஏதுவாயிருந்ததெனவும் அறிக்கையிட்டார். இது கஷ்டமான காரியமே எனினும் நற்சீர் பெறுதற்கு இதுவே வழி.

கோபமூட்டுகிற காரியத்தை எடுத்துக்கொள்வோம். மத். 5: 23, 24-ல் கூறியிருக்கிற பிரகாரம் நீ பலிபீடத்தண்டையில் வந்து நிற்கும்போது உன் சகோதரனுக்கு உன்மீது ஏதோ மனவருத்தம் உண்டென்று நீ கண்டு நீ உன் சகோதரனுக்கு விரோதமாய்த் தப்பிதம் செய்திருப்பதாய் உணர்ந்தாலும் சரி; மத். 18: 15-ல் கூறியிருக்கிற பிரகாரம் உன் சகோதரன் உனக்கு விரோதமாய்த் தீமை செய்திருந்தாலும் சரியே, நீ போய் அவனோடு சமாதானஞ் செய்துகொள்ளவேண்டும். உனக்கு விரோதமாக ஒருவன் தப்பிதஞ் செய்திருந்தாலும் சரி, ஒருவனுக்கு விரோதமாய் நீ தப்பிதம் செய்திருந்தாலும் சரி, அதைச் சரி செய்வதற்கு நீயே முந்திக்கொள்ளவேண்டும். இதுவே கிறிஸ்தவர் கடமை.

நான் மன்னிக்கமுடியாதென நீ சொல்வாயானல் உனக்கும் ஒருகாலும் மன்னிப்புக் கிடையாது. இதை மிகவும் கண்டிப்பாய்ச் சொல்லுகிறேன். "மனிதர் உங்களுக்குச் செய்த தப்பிதங்களை நீங்கள் மன்னியாவிட்டால் உங்கள் பரமபிதாவும் உங்கள் தப்பிதங்களை உங்களுக்கு மன்னிக்கமாட்டார். கர்த்தருடைய ஜெபத்திலே "எங்கள் கடனாளிகளுக்கு நாங்கள் மன்னித்திருக்கிறதுபோல எங்கள் கடன்களை எங்களுக்கு மன்னியும்," என நாம் ஜெபிப்பது உங்களுக்கு ஞாபகமில்லையா? நீங்கள் மன்னியாவிட்டால் உங்களுக்கு மன்னிப்புக் கிடைக்கும்படியாகவும் ஜெபிக்கக்கூடாது. மற்றவர்களுக்கு நீ மன்னிப்புத் தராவிட்டால் நீயே மேல் நடந்து அப்பாற் செல்லவேண்டிய மன்னிப்பாகிய பாலத்தை உடைத்துவிட்டாயே.

நான் இந்த ஆஸ்ரமத்தில் அமர்ந்திருக்கும்போது எங்கள் ஜெபக்கூட்டத்தில் சேர்ந்த சர்க்கார் உத்தியோகஸ்தர் ஒருவருடைய ஞாபகம் எனக்கு வருகிறது. இவர் தனக்குக் கீழான உத்தியோகஸ்தர் ஒருவருக்கு விரோதமாய் ஏதோ தப்பிதம் செய்திருந்தார். தப்பிதம் செய்ததுண்மை. மிகுந்த மனவருத்தமுண்டானதுமுண்மை. ஆனாலும் தமக்குள்ள இவ்வெண்ணத்தைத் தமக்குத் தாழ்வான ஒருவரிடம் போய்க் கூறுவதென்றால் எளிதான காரியமல்ல. எனினும் கடைசியாக இவர் போய் மன்னிப்புக் கேட்டார். இவருடைய மனதிற்குப் பெரிய விடுதலை கிடைத்தது. இப்போது அவர் மிகுந்த சந்தோஷமுடையவராய்ப் பிறரையும் ஆவிக்குரிய ஜீவியத்துக்கு வழிநடத்துபவராய் விளங்குகின்றனர். நீங்களும் அப்படியே செய்யக்கூடும். கடவுளின் கிருபையினல் நீங்களும் அப்படியே செய்யலாம். செய்வீர்களா?

கிறிஸ்துவே, உமது அங்கமெல்லாம் பிராணவேதனை யுறும்படி சிலுவை மரத்திலே தொங்கிய சமயத்திலும் நீர் உமது விரோதிகளுக்காக ஜெபித்து, "பிதாவே, இவர்களுக்கு மன்னியும்" என மன்றாடினீரே, எனக்கு விரோதமாய்த் தப்பிதம் செய்தவர்கள் அத்தனை பெருந் தப்பிதம் செய்தவர்களல்ல எனினும் அவர்களுக்கு நான் மன்னிக்கும்படி எனக்கு உதவி செய்தருளும். உமது திருநாமத்திலே. ஆமென்.

இருபத்தேழாம் நாள்

நமது வாழ்க்கையின் கட்டை இன்னும் அவிழ்த்து விடுதல்

மத்தேயு 18: 23–25.

மனவருத்தங்களை நீக்குதல்என்பதைப்பற்றிநேற்றுப் பார்த்தோம். பின்னும் அதை முழுதுமாய் ஆராய வேண்டும்.

'நான் மன்னிப்பேன். ஆனாலும் நான் அதை மறந்து விடமுடியாது' என்று நீ ஒருவேளை சொல்வாய். நீ அப்படிச் சொன்னால் அது சரியாகாது. நாம் முன்னமே பார்த்த அந்த ஜெபத்தை நீ மறுபடியும் சொல்லி ஜெபித்துப்பார். 'பிதாவே, நான் மன்னித்திருக்கிறதுபோல நீரும் எனக்கு மன்னியும். நான் மற்றவர்களுக்கு மன்னித்தேன், எனினும் நான் அவன் தப்பிதத்தை மறப்பதில்லை. நீரும் அவ்விதமாகவே எனக்கு மன்னித்தருளும், என்னை மன்னியும், என் பாவங்களையோ மறவாதிரும். நான் இன்னும் ஏதேனும் தப்பிதஞ் செய்வேனாகில் மறுபடியும் எல்லாவற்றையும் என்மீது சுமத்தும்' என்று சொல்லி ஜெபிப்பாயோ? கடவுள் அப்படி மன்னிப்பவரல்ல. அவர் அப்படி மன்னிக்கவுமுடியாது. தமது ஞாபகக் குறிப்பிலிருந்து உனது பாவங்களனைத்தையும் அழித்துக் கலைத்துவிடுவார். நீயும் அப்படியே செய்ய வேண்டும். 'பொறுத்தல் இறப்பினையென்று மதனை மறத்தல் அதனினும் நன்று' எனத் திருவள்ளுவர் கூறியதும் கவனிக்கத்தக்கது.

பின்னும் நீ ஒருவேளை சொல்லலாம், சரி, நான் மன்னிக்கிறேன், எனினும் இனிமேல் அந்த மனிதனுக்கும் எனக்கும் யாதொரு சம்பந்தமுமில்லை. நான் அவனோடு சேர்ந்திருப்பதே இல்லை என்பாயோ? நீயும் அதே மாதிரியாக ஜெபித்துப்பார். ''பிதாவே, நான் மற்றவர்களுக்கு மன்னிப்பதுபோல நீரும் எனக்கு மன்னியும், நான் அவனுக்கு மன்னித்தேனெனினும் இனிமேல் நான் அவனோடு சேர்ந்திருப்பதேயில்லை. நீரும் எனக்கு அப்படியே செய்யும், எனக்கு மன்னித்தருளும், இனிமேல் என்னோடு உமக்கு எவ்விதத் தொடர்பும் வேண்டாம்.

உம்மையின்றியே நான் எப்படியோ காலங்கழிப்பேன்" என்று சொல்வாயோ? இப்படியும் ஜெபிப்பதென உண்டோ? இல்லவே இல்லை.

மறக்கப் பிரயாசப்படுவதென்றல்ல. அதை ஒருவாறு சாந்தப்படுத்திச் செய்வதெனவுமல்ல, அதை அப்படியே பிரக்ஞையற்ற மனதினுள் அடக்கிக்கொள்வதுமல்ல, அதை வெளியாக்கிக் களைந்துவிடவேண்டும். ஒரு கிராமத்திலே ஒரு பெண்ணுக்கு ஒரு புண் உண்டாகியிருந்தது. அவள் அவ்வூரிலிருந்த டாக்டரிடம் சென்று அப்புண்ணின்மேல் போட்டு ஆற்றப் பிளாஸ்திரி வேண்டுமெனக் கேட்டாள். அவரோ பிளாஸ்திரிகொடுக்க மறுத்து அது புண்ணை மேலே மாத்திரம் ஆற்றும், புண்ணோ உள்ளே இருந்து சலம் வைத்து இரத்தத்தைக் கெடுத்து விஷமாக்கிவிடும். இந்தப் புண்ணை அறுத்துச் சுகமாக்கவேண்டுமென்ருர். அவளோ, அறுக்கவேண்டாம், அது மிகவும் வேதனையாயிருக்கும், பிளாஸ்திரியே போதுமென்ருள். டாக்டர் அதைக் கொடுக்க மறுத்துவிடவே அவள் தான் வந்த வழியே திரும்பிப் போய்விட்டாள். சில நாட்களுக்குள் டாக்டர் சொன்னபடியே இரத்தம் கெட்டு விஷமாகி அவள் தேகமுழுதும் பரவினது, இறந்துபோனுள். நீங்களும் இந்தப் பிளாஸ்திரி போன்றதைக் கேட்க வேண்டாம். இது பூரணசுகம் கொடுப்பதல்ல. கோபமும் மனவருத்தமும் விஷமே. வைத்திய சாஸ்திரிகள் அப்படியே சொல்லுகிருர்கள். ஒரு நாள் மிகுந்த கோபத்தோடிருந்த தன் தாயினிடம் பால் குடித்துக் கொண்டிருந்த ஒரு பிள்ளை தாயின் கோபத்திஞலுண்டான விஷங்கலந்த பாலைக் குடித்ததினுல் தாயின் மடியிலேயே செத்துப்போயிற்று. மனவருத்தமென்பது உடலைமாத்திரமல்ல, மனதையும் ஆவியையும் கெடுக்கும் விஷமாம். அதை வெளியே எடுத்து அகற்றவேண்டும்.

உமது திருமுகத்தில் துப்பினவருக்கும் மன்னிப்பு அளித்தவரே, உமது மன்னிப்பினுல் நான் சுகம் பெறுமாறு நானும் என் இதயத்தைத் திறக்கும்படி எனக்கு உதவி புரிந்தருளும். நீர் எனக்கு மன்னித்த பிரகாரமே நானும் பிறருக்கு மன்னிக்கும்படி எனக்குத் துணைபுரிந்தருளும். ஆமென்.

இருபத்தெட்டாம் நாள்

வாழ்க்கையின் சட்டிலிருந்து பின்னும் நம்மை விடுவித்தல்

மத்தேயு 6: 17–28.

நமது பாவத்தைப் பகைத்தல் மாத்திரம் போது மானதல்ல. அது வேண்டாமென ஜெபிப்பதும் போதாது. அதை முற்றிலும் விட்டுவிடவேண்டும். 'பாவத்தை' என ஒருமையில் கூறுதற்குக் காரணமுண்டு. நாம் எளி தில் விட்டுவிடக்கூடிய அநேக பாவங்களிருக்கலாம். அவற்றையெல்லாம் விட்டுவிலகி, விசேஷமான ஒரே ஒரு பாவத்தை மாத்திரம் விட்டுவிட மனமற்றிருப்பதுண்டு. அப்படிப்பட்ட ஒரு பாவம் அநேகரிடம் காணப்படுவ துண்டு. அதையும் விட்டு விலகினாலன்றி விடுதலையில்லை.

ஏரோதின் காரியத்தை எடுத்துக்கொள்வோம். தான் உண்மையிலே புது ஜீவியம் செய்யவேண்டுமெனும் ஆசை அவனுக்கிருந்தது. நல்ல ஜீவியத்தின்மேல் ஆசையா யிருந்தான். யோவானோ அவனுடைய முக்கியமான ஒரே பாவத்தை எடுத்துக்காட்டி, 'நீர் அவளை வைத்துக் கொண்டிருப்பது நியாயமல்ல' வென்றான். ஏரோதின் முகம் வெளுத்தது. உள்ளான போராட்ட முண்டானது. முடிவென்ன? யோவான் சொன்னதையெல்லாம் அவன் 'விருப்பத்தோடே கேட்டு வந்தான்' எனினும் ஏரோதி யாளை விட்டுவிடுவது மாத்திரம் அவனுக்குக் கூடிய காரியமாயிருக்கவில்லை. இதை விடலாம், அதை விடலாம், அந்தக் காரியத்தை மறக்கலாம், இந்தக் காரியத்தை விட்டு விலகலாம். ஆனாலும் ஏரோதியாளையோ, தான் விரும்பிய அந்தப் பெண்ணையோ, விட்டுவிடமுடியாது. இந்த ஒரு பாவம், இதுவே, அவன் வாழ்க்கையின் குழப் பத்திற்குக் காரணம். அநேக காரியங்களை விட்டு விலக லாம். இதுவோ அப்படியல்ல, எனவே அவனுக்கு விடு தலையில்லை. அவன் வாழ்க்கையைக் கட்டியிருந்த கட்டு அவிழ்க்கப்படுவதில்லை.

ஒரு துரையின் சிறிய மகள் பங்களாவிலே விருந்தாளிகள் தங்கியிருக்கும் அறைக்குட் சென்று அங்கிருந்த மிட்டாய்களைத் திருடித் தின்று பொய் சொல்லிவிட்டது. அப்பிள்ளையின் தாயார் மிகவும் கிலேசமுற்று மகளை மடியிலே வைத்துக்கொண்டு அப்பிள்ளை செய்த தப்பிதத்தால் விளைவது இன்னதென எடுத்துக்காட்டினுள். சிறு பெண் அழுது துக்கப்படுவதுபோற் காட்டிற்று. அப்பொழுது தாயார் 'நீ மனஸ்தாபப்படுவது மிகவும் நல்ல காரியம். உன் வாயிலிருக்கிற மிட்டாய்த்துண்டை இப்பொழுதே துப்பி விடு, தப்பிதஞ் செய்ததற்காக நீ வருத்தப்பட்டால் அப்படியே செய்' என்முர். அச்சிறு பெண் அழுத கண்ணுேடு தாயாரைப் பார்த்துப் பல்லைக் கடித்துக்கொண்டு 'அது முடியாது' என்று சொல்லிவிட்டது. அச்சிறு பெண் பாவத்தை வெறுத்தது, அதற்காகத் துக்கப்பட்டது, அழுதது, மிட்டாயை விடுவதோ முடியவில்லை.

கிறிஸ்துவே, தப்பமுடியாதபடி என்னை மறித்துக்கொண்டீர், நான் தப்பிக்கொள்ள முயன்முலும் நீர் விடமாட்டீர். தப்பிக்கொள்ளத்தான் வேண்டுமென நானும் நினைக்கிறதில்லை. இதற்குத் தப்பினல் ஜீவனைப் பெறுதற்கும் தப்பிவிடுவேன் என்பது எனக்குத் தெரியும். நான் ஜீவிக்க விரும்புகிறேன். உயிர்வாழ விரும்புகிறேன். உம்மை விட்டுப் பூரண ஜீவனினின்றும் என்னைப் பிரிப்பனவாகிய இக்காரியங்களை என்னை விட்டகற்றும். ஆமென்.

இருபத்தொன்பதாம் நாள்

என்னை நான் சமர்ப்பித்து விடுதல்

மத்தேயு 13: 44–46. அப்போஸ்தலர் 2: 37–42.

வெற்றியுள்ள வாழ்வு என்பதை நான் தேடுகையில் இப்பொழுது ஒரு கட்டத்திற்கு வந்து சேர்ந்திருக்கிறேன். நான் பெரிதானதோர் தீர்மானத்தைச் செய்தாலல்லது இதற்குமேல் செல்வது கூடாத காரியமென விளங்குகிறது. எனக்கும் கடவுளுக்குமிடையேயுள்ள ஒவ்வொரு தடுப்பையும் நான் தகர்த்தெறியவேண்டும். அதினால் என்ன நேரிட்டாலும் கவனியாமல் அதைத் தகர்த்து விடவேவேண்டும். அதற்கப்பாலும் செல்லவேண்டுமென எனக்குத் தோன்றுகிறது. தகர்ப்புகளைப் பேர்த்தெறிவதோடு நின்றுவிடாமல் என்னையும் ஒப்புக்கொடுக்க வேண்டும். என்னை ஆட்கொண்டு நடத்தவல்ல ஒருவர் எனக்கு இருக்கவேண்டும்.

ஏதேனுமொன்று என்னை ஆட்கொள்ளுமென்பது எனக்குத் தெரியும். என் இதயமாகிய ஆலயத்தில் நான் ஏதேனுமொன்றுக்கு முன் முழங்காற்படியிட்டு அதைப் பணியவேண்டும். ஒன்றில் நான் என்னையே பணிந்து சுயநலப் பிரியனாகி என் இஷ்டத்திற்கே இடங்கொடுத்து என்னாலேயே ஆளப்படவேண்டும். அல்லது மாமிச இச்சை பொருளாசை முதலியவற்றால் ஆளப்பட வேண்டும். அன்றேல் ஜனசமூகத்திற்குப் பயந்து நடந்து அதுவே என்னை ஆட்கொள்ள இடங்கொடுக்கவேண்டும். அல்லது எல்லாவற்றிலும் சிறந்ததாகக் காணப்படுகிறபடி கிறிஸ்துவானவர் என்னை ஆட்கொண்டு நடத்தும்படி இடங்கொடுக்கவேண்டும். என் ஜீவியத்திலே என்னை ஆட்கொள்பவர் யார் எனத் தீர்மானிப்பது கடைசியாக என்னைச் சேர்ந்ததே. நான் தீர்க்க ஆலோசனை செய்து தீர்மானித்து கிறிஸ்துவே என்னை ஆட்கொள்வாராக என ஒப்புக்கொடுக்கிறேன். கணக்கிட்டு மதிப்பிட்டுப் பார்க்கக்கூடிய எதையும் கண்ணுற் காணக்கூடியதான எதையும் விலக்கிவைத்துக்கொள்ளாமல் என் இதயத்தை அவருடைய இதயத்திற்கும் என் சித்தத்தை அவருடைய

சித்தத்திற்கும் என்னுடைய ஜீவனை அவருடைய ஜீவனுக்கும் கையளித்து ஒப்புவிக்கிறேன். இது தீர்ந்தது.

டென்மார்க்கு தேசத்திலே கோப்பன்ஹேகன் பட்டணத்திலுள்ள பெரிய தெய்வாலயத்தில் தார்வால்ட்ஸன் எனும் சிற்பசாஸ்திர வல்லாரால் செய்யப்பட்டு நிறுத்தியிருக்கும் கிறிஸ்துவின் சிலையைப் பார்க்கும்படி அவ்வாலயத்தினுள் நான் நடந்து சென்றபோது அச்சிலையைக் காணவே நான் பிரமிப்பு அடைந்தேன். அச்சிலையின் மீது மங்கலான ஒளி வீசிக்கொண்டிருந்தது. அச்சிலையே அவ்வாலய முழுவதையும் ஆள்வதுபோல் காணப்பட்டது. நான் இன்னும் அதை நோக்கி நடந்துகொண்டிருக்கவே என்னோடு வந்த தானிய சிநேகிதர் "நீர் கிறிஸ்துவானவரின் பாதத்திலே முழங்காற்படியிட்டாலன்றி அவருடைய முகத்தைப் பார்க்கமுடியாது" என்று மிகவும் மெதுவாக என் காதுக்குள் சொன்னார். அது உண்மை தான். தமது இரு கரங்களையும் நீட்டிக் கீழே எதிரில் தமது பாதத்திலே முழங்காற்படியிடுவோரைப் பார்த்த வண்ணமாய் அச்சிலை செய்யப்பட்டிருந்தது. உடனே நான் சிலையின் பாதத்திலே முழங்காலில் நின்றேன். இதோ, அவர் முகம் என் முகத்தை நோக்கினது கண்டேன்.

நீ கிறிஸ்துவின் பாதத்தில் முழங்கால் மடக்கி உன்னை அவருக்கு ஒப்புக்கொடுக்கும்வரையும் உண்மையாகவே நீ அவரைக் காணமுடியாது. தூரத்திலே நின்று அவரை எட்டிப்பார்ப்பவர் ஒருகாலும் அவருடைய திருமுகத்தைக் காணமுடியாது. அவர் பாதத்தருகே முழந்தாள் மடக்கிப் பணிந்துகொள்ளுங்கள். அவரே உங்களை ஆட்கொள்வாராக.

கிறிஸ்துவே, நான் உரைக்கவேண்டியதின்னதென்பதைக் கடைசியாகக் கூறிவிட்டேன். என் சுயசித்தம் எனது கரத்திலேயே இருக்கிறது. நடுக்கத்தோடு அதைப் பிடித்திருக்கிறேன். என் சித்தமென்பது அதிகமல்ல, எனினும் என்னிடம் உள்ளதனைத்தும் அவ்வளவே. அதை இப்பொழுதே உமது வசமாக்கினேன். என் இதயம் மகிழ்கிறது. ஆமென்.

முப்பதாம் நாள்

குணப்படுதலாவதென்ன?

அப்போஸ்தலர் 2: 37, 38; 3: 19. ரோமர் 8: 1, 2. சங்கீதம் 86: 11.

ஒருவர் 'குணப்பட்டு' மாறிவிட்டார் எனச் சொன்னால் அதினாலே நமக்கு விளங்குவதென்ன? திருச்சபையானது குணப்படுதலை வேண்டிய அளவு வற்புறுத்தாமல் ஏனோ தானோவென்றிருந்த சமயத்தில் தற்கால மனோதர்ம சாஸ்திரிகள் அதை வற்புறுத்திக் கூறுதற்கு முன்வந்தார். திருச்சபை கூறுகிற பிரகாரம் இவர்கள் கூறுகிறதில்லை. திருச்சபைக்குக் கடவுள் பேரிலுள்ள அதே நம்பிக்கையோடும் அவர்கள் அதைக் கூறுவதில்லை. ஜாதி ஜனங்களுள் தொன்றுதொட்டு வந்திருக்கும் இயற்கையறிவு குணமானது ஜாக்கிரதையுடையதாய் மனிதருடைய அந்தக்கரண இதயத்துள் பதிந்திருக்கிறது எனக் கூறுகின்றனர். இவ்வியற்கை யறிவானது தன் அறிவின்படியே காரியங்களை நடத்தத் துணிவதல்லது தான் செய்வது நன்மையோ தீமையோவென அது ஆராய்வதில்லை. மானத சாட்சியமுடைய இதயத்திலோ 'உண்மைக்குரிய கோட்பாடு,' அதாவது தனக்குரிய பெருநோக்கு அல்லது மனச்சாட்சிக்குப் பொருந்திய ஜீவிய நோக்கம் என்பது ஊன்ற அமைந்திருக்கிறது என ப்ரோய்ட் எனும் சாஸ்திரியார் உரைக்கின்றனர். மானத சாட்சிய இதயத்திற்கும் இயல்புகுண ஸ்தானமாகிய அந்தக்கரண மனதிற்கும் போராட்டமுண்டாகிறது. வாழ்க்கையின் மத்திய ஸ்தானத்திலேயே இப்போராட்டமுண்டாவதினால் குழப்பமும் துக்கமும் பிறக்கின்றன.

இப்போராட்டமானது இரண்டிலொரு வகையில் முடிவுபெறும். ஒன்றில் மானத சாட்சியப் பெருநோக்கு

அழிந்து மறையவே ஜாக்கிரதை வயப்பட்ட இயல்பு குணம் பிரவர்த்திக்கும். இதனாற் பிறப்பது உடற் கண்ணதாய ஒற்றுமையே. அல்லவென்றால் இயல்பு குண ஒழுக்கங் குன்றவே ஜீவியப் பெருநோக்கம் சிறந்து விளங்குவதாம். இதனைப் பெருஞ் சிறப்புறுதல் என்பர். இது ஜீவிய ஒற்றுமையை, ஒருமைப்பாட்டை, விளக்கும்.

முதற்கூறிய முறையை நாம் அனுசரிக்கமுடியாது. அதன் வழி நடந்தால் இயல்பு குணமாகிய இயற்கையறிவினால் நாம் நடத்தப்பட்டு மிருக ஜீவியம் செய்பவராவோம். இஃதன்றியும் நமது ஜீவியப் பெருநோக்கை நாம் முற்றிலும் மறந்தகற்றுவதுமில்லை. போராட்டமும் நிகழ்ந்துகொண்டே வரும். இரண்டாவது வழியே நாம் அனுசரிக்கவேண்டிய முறை. இதனைத் 'திரும்பவும் பயில்தல்' என்பர் ப்ரோய்ட், "உண்மைக்கென்றே புதிதாய் மனந்திரும்புதல்" என்பர் ஆட்லர், 'திரும்ப நேர் சீராகுதல்' என்பர் ஜூங், 'திரும்பவும் ஒன்றுபடுதல்' என்பர் மக்டூகல். இயேசுவானவரோ நல்லொழுக்கம், ஆவிக்குரிய வாழ்வு முதலியவற்றையும் மனோதர்ம முறைகளையும் ஒருங்கே ஒரு பகுதியினுள் அடக்கி அதனை 'குணப்படுதல்' என்றனர். இவையனைத்தும் குறிப்பது ஒன்றே. மானிட தன்மையை ஒருமைப்படுத்தி வாழ்க்கையின் மத்தியில் ஒற்றுமையை விளைப்பதாம். நாம் மாறுதல் அடையவேண்டுமென்பதை நமது ஜீவியமனைத்தும் கூறுகிறது.

கிறிஸ்துவே, எங்களுக்கு அவசியமின்னதென்பதை நீர் திட்டமாய் அறிந்துரைத்தீர். நாங்கள் திரும்பிப் பிறக்கவேண்டும். மனமாறி வேறுவிதமாய்ப் பிறக்கவேண்டும். எங்களுடைய ஜீவிய அனுபவத்தில் நாங்கள் இதை அறிந்துகொள்ளுமாறு எங்களுக்குத் துணைபுரிந்தருளும், மன்றாடுகிறோம். ஆமென்.

முப்பத்தோராம் நாள்

குணப்படுதல் என்பதைத் திரும்பவும் ஆராய்வோம்

யோவான் 3: 1–11.

'ஒருவன் மறுபடியும் பிறவாவிட்டால் கடவுளின் ராஜ்யத்தைக் காணமுடியாது' என்று இயேசுவானவர் கூறினார். இதில் மறுபடியும் என்பது 'மேலிருந்து' எனவும் பொருள்படலாம். 'மேலிருந்து பிறவாவிட்டால்' என அவர் கூறியதன் கருத்தென்ன?

தற்கால மனோதத்துவ சாஸ்திரப்படி உயிர்வாழ்க்கையானது 'கீழிருந்து பிறக்கக்கூடும்.' மனிதனுடைய அந்தக்கரணத்திலிருக்கும் இயற்கையறிவும் அதன் ஜாக்கிரதையும் மானத சாட்சியமுடைய மனதை யடக்கியாளுமாயின் உயிர்வாழ்க்கையானது உண்மையாகவே 'கீழிருந்து பிறப்பதாகும்.' இந்த இயற்கையறிவானது செவ்வையாக்கித் திருத்தப்படக்கூடியதாய் இயல்பாகவே மானிட இதயத்தில் காணப்படும் பொருளென்பது மாத்திரமன்று. அது குற்றமுள்ள எண்ணத்தின் காரணமான பயம், ஒளிப்பு முதலியவற்றிற் கிடமான 'பாவச் சார்பு' முற்றிலும் கலந்துண்டானது. இதை மறக்கக் கூடாது. கீழிருந்து பிறப்பதென்றால், நல்லதாகவே பிறந்தாலும் ஏதோ ஒரு பிராணியாகத்தான் பிறத்தல்கூடும். இழிவானதாய்ப் பிறக்குமானால் கேவலமான மிருகமாய்க் குற்றம் நிறைந்ததாய்ப் பிறக்கலாம்.

இவற்றுக்குநேர் எதிராக நிற்பது தான்ஸ்லீ யாசிரியர் கூறுகிற 'நல்லொழுக்க ஜீவன்' என்பது. மனிதனைச் சுற்றியுள்ள உயர்வான காரியங்கள் அல்லது கடவுளின் ராஜ்யம் என்பதன் சார்பினாலே விளைவனவற்றின் ஆரம்பமே. இந்த நல்லொழுக்க ஜீவன் எனக் கிறிஸ்துவைச் சார்ந்தவன் கூறுவான். மேலான ராஜ்யம் தன்னை வற்

புறுத்தித் தூண்டிவிடுதலினுலே உயர்வான கொள்கைகளும் நல் ஏதுக்களுமுடைய நல்லொழுக்க ஜீவன் பிறக்கிறது.

உயிர்வாழ்க்கையோ தன்னைச் சுற்றியுள்ளனவற்றை ஒத்திருப்பது. தன்னைச் சுற்றியிருக்கும் எது? உயிர் வாழ்க்கையை நாம் எதற்கு ஒத்திருக்குமாறு செய்வோம். கீழிருந்து பிறப்பனவாய் நம்மைச் சுற்றியுள்ளனவற்றை ஒத்ததாகும்படி செய்வதோ? அங்ஙனமாயின் நல்லொழுக்க ஜீவன் என்பதைக் கொன்று களைந்து மிருக ஜீவனையுடையராவோம். அங்ஙனமின்றி உயர்வானதாய் நம்மைச் சுற்றியுள்ள மானிடவர்க்கத்தின் மேலான ஒழுங்கு அல்லது கடவுளின் ராஜ்யம் என்பதை ஒத்திருக்கச் செய்வோமோ? அங்ஙனமாயின் நாம் நமது பாவங்களையும் இயல்புணர்வுகளையும் கொன்று களைந்து புதிதான மனிதன் எனும் வாழ்வைப் பெறுவோம்.

தெரிந்துகொள்ளும் சுயாதீனம் உன்னையே சார்ந்தது; உயர்வானதையோ, தாழ்வானதையோ எதைத்தெரிந்து கொள்வதென நீ அமர்ந்திருந்து யோசித்துச் செய்ய வேண்டும். ஒருநாள் ஒரு மாணவனிடம் இதை நான் சொல்ல, அவன் 'என் மனதில் அமைதியில்லை' எனக் கூறினுன். உன் ஜீவன் மேலிருந்து பிறக்க வேண்டுமெனத் தீர்மானிக்கும் வரைக்கும் அவனுக்காகிலும் உனக்காகிலும் பூரணமும் ஆழ்ந்ததுமான மன அமைதியுண்டாவதில்லை.

கிறிஸ்துவே, எங்களை வற்புறுத்தும் பரமராஜ்ய கர்த்தனே, உமக்கும் உமது ராஜ்யத்திற்கும் எங்கள் இதயங்களைத் திறக்கிறோம். நாங்கள் பின்னே சென்று மிருகங்களாகமாட்டோம். முன்நோக்கி நடந்து புதிய மனுஷராவோம். ஆம், நாங்கள் அப்படியே புதிய மனிதராவோம். ஆமென்.

முப்பத்திரண்டாம் நாள்

குணப்படுதல் என்பது ஒரே விதமானதோ?

1 கொரிந்தியர் 12: 4–11. மத்தேயு 18: 3.

இக்காரியம் அநேகருக்குள் இடறலுக்கேதுவா யிருக்கிறது. குணப்படுதல் ஒருவகையாய் உண்டானது கண்டு அவர்கள் இதயத்திலும் அசைவு தோன்றியதுண்டு. பிற விடங்களிலும் அவ்வகையாகவே குணப்படுதல் உண்டாவதை அவர்கள் காணுதற்கிடமில்லையாயின் வேறு வகையாய் வெளிப்படும் குணப்படுதல் அவர்களுக்குத் திருப்தியீனத்தை விளைக்கிறது. இது தப்பிதம். குணப்படுதலானது இருவரிடத்தில் ஒன்றுபோற் காணப்படுவதில்லை. எல்லா விஷயங்களிலும் ஒன்றுபோலிருக்கும் இருவரைக் காணமுடியாது. இருவருடைய ஜீவியத்தில் ஒரேவிதமான சம்பவங்கள் நேரிடுவதென்பதுமில்லை. ஏதோ சிற்சில அற்ப சொற்ப பேதங்களாயினும் இருத்தல்கூடும். கடவுள் மனிதனைப் படைத்தபின் ஒத்த சாயல் என்பதை ஒழித்துவிட்டார். உன்னைப்போல் வேறொருவருமில்லை. குணப்படுதலும் உனக்குண்டாவதுபோல் மற்றெவருக்கு முண்டாவதில்லை.

எனினும் குணப்படு முறையை இருவகையாகப் பிரிக்கலாம். ஒன்று திடீரென உண்டாகும் குணப்படுதல். மற்றொன்று காலக்கிரமத்தில் வளர்ந்துண்டாவது. இந்த இரண்டுக்கும் இடைப்பட்ட விதங்களுமுண்டு. பற்பல பாகங்களில் ஊழியஞ்செய்யும் கிறிஸ்தவ ஊழியரை வினவி அறிந்ததினின்று நூற்றுக்கு அறுபதுபேர் சிறிது சிறிதாக குணப்படுதல் பெற்றவர் எனவும் நூற்றுக்கு நாற்பதுபேர் திடீரென குணப்பட்டவர்கள் எனவும் கண்டேன்.

சிறு பருவத்திலிருந்தே கிறிஸ்தவ வளர்ப்பில் வளர்ந்து கிறிஸ்துவை அறியவும் அவரை நேசிக்கவும் கற்பிக்கப்பட்டவர்கள் சிறிது சிறிதாகத் தேறி குணப்படுகிறார்கள். தாங்கள் குணப்பட்டது இக்காலந்தா

னென அவர்கள் திட்டமாய்க் கூறுவது கூடிய காரிய மல்ல. பழைய ஜீவியத்தையும் புதிய ஜீவியத்தையும் பிரிக்கும் திட்டமான ஒரு வரையறை அவர்களுக்கில்லை. இது பெரும்பாலும் அப்படியே. சூரியனைக் கண்ட மலர் சிறிது சிறிதாக மலர்ந்து விரிவதுபோல விரிந்தவர்கள். தாங்கள் கிறிஸ்துவுக்கே யுரியவர்கள் என்பது அவர்களுக் குத் தெரியும். எது முதல், என்று முதல் என்பதையோ அவர்கள் திட்டமாயறியார். அவர்கள் ஜீவியம் அவர் களைச் சுற்றியிருப்போரின் ஜீவியத்திற்கு மாறுபட்டது. இவர்கள் குணப்பட்டவர்களின் கூட்டத்தைச் சேர்ந் தவர்கள்.

மற்றும் பலபேருண்டு. இவர்களுக்கோ குணப்படு தல் திடீரென வந்தது. நான் இவர்கள் கூட்டத்தில் சேர்ந்தவன். நான் ஒரு கிறிஸ்தவ சிறியனுகவே வளர்ந்து ஆலயத்திற்கும் ஓய்வுநாட் பள்ளிக்கூடத்திற்கும் ஒழுங் காய்ப் போவதுண்டு. எனினும் அது எனக்குள் பலிதப் படவில்லை. வைசூரி குத்துவது சிலருக்கு உண்டாகாமற் போவதுபோல் கிறிஸ்தவ ஜீவிய அடையாளமும் என் னிடம் காணப்படாமற் போயிற்று. பிற்பாடு திடீரென எனக்குள் பெரிய மாறுதல் உண்டானது. குணப்பட்ட பின் முற்றிலும் மாறியவனுனேன். என்பேரொன்று மாறவில்லையேயொழிய மற்றெல்லா விஷயங்களிலும் மாறியவனுனேன். அங்கு மிங்கும் சுற்றியலைந்த நான் அன்பினுல் கவரப்பட்டு ஒருவழியில் நடப்பவனுனேன்.

இவ்விரு வழிகளில் எது சரியான வழி? இரண்டும் சரியே. குணப்பட்டது எப்படி என்பது விசேஷமான தல்ல. குணப்பட்ட காரியமும் குணப்பட்டதால் காணப் படும் நற்குணங்களுமே முக்கியமானவை.

கிறிஸ்துவே, பாவமறியாச் சிறு குழந்தையையும் பாவச் சேற்றி லுழலும் வயோதிகரையும் உம்மண்டை அழைக்கிறீர். இருவரும் உமதண்டை கிட்டிச் சேருகிருேம். நாங்கள் வேறு யாரிடம் செல் வோம்? 'உமதண்டையில் அல்லவோ நித்திய ஜீவ வசனங்கள் இருக் கின்றன.' ஆகவே உம்மிடம் வருகிருேம். நீரே எங்களைத் திருப்தி யாக்குகிறீர். இரட்சிக்கிறீர். ஆமென்.

முப்பத்துமூன்றும் நாள்

குணப்படுதலில் முக்கிய காரியம்

யோவான் 13: 13, 14; ரோமர் 14: 4;
மத்தேயு 23: 10; 11: 29, 30

ஒவ்வொருவனுடைய மனதிலும் உயிர்வாழ்க்கை முழுவதையும் ஆண்டு நடத்தும் ஒரு முக்கியமான விருப்பம் உண்டு என்று மனோதத்துவ சாஸ்திரம் கூறுகிறது. அவ்விருப்பம் தன்னயம், காமம், சமுதாயம் என்ற மூல ஆசைகளில் ஒன்றுடன் சம்பந்தப்பட்டிருக்கலாம். ஆளும் விருப்பம் தன்மேலே வைக்கப்பட்டதானல் வாழ்க்கை தன்னயமும் அகங்காரமுமுள்ளதாகும். அது காமசக்தியோடு சேர்ந்தாலோ வாழ்க்கை முழுவதும் காமத்தினல் நிறைவுறும். சமுதாயத்தோடு சேர்ந்தாலோ பிறர் என்ன செய்வார்களோ சொல்வார்களோ என்ற பயத்தினல் வாழ்க்கை நிறைவுறும். மூன்று ஆசைகளும் கலந்திருக்கலாம். எனினும் ஆளும் விருப்பமே தீர்மானம் செய்து நடத்தும். ஒருவனுடைய மனதினுள் ஏற்படும் போராட்டம், குழப்பம் இவற்றை நீக்கவேண்டுமானல் தன்னையே பற்றும் அவனுடைய விருப்பம் தன்னைவிட்டு வெளியேயுள்ள வேறேதேனு மொன்றன்மேல் வைக்கப் படவேண்டும் என மனோதத்துவ சாஸ்திரிகள் கூறுகின்றனர். இம்முறையை விருப்ப மாறுதல் எனக் கூறுவர். பிறிதொன்றின்மேற் பற்றுண்டாகவே இது மற்றவைகளை விலக்குகிறது. அவன் தன்னிலிருக்கும் புதிய விருப்பங்களினின்று விடுபடுகிறான்.

குணப்படுதலிலே முக்கிய காரியம் அந்த மாறுதலே. குணப்படுதலென்பது பாவத்திலிருந்து விடுபட்டுப் பாவ வழக்கங்களையும் சம்பந்தங்களையும் பாவ மனேநிலையையும் விட்டுவிடுவதே யெனினும் இவையெல்லாம் விலக்கப்பட வேண்டியனவாம். செய்யவேண்டி

யதும் அனுசரிக்கவேண்டியதுமான காரியமு மொன் றுண்டு. அதாவது எல்லாவற்றினும் மேலாகத் தன்னை அடக்கியாளும் விருப்பத்தைத் தன்மீதிலிருந்து கிறிஸ்து வின்மீதிலே மாற்றி விடுதலேயாம். தன்னை யாளும் விருப்பம் மாறுதலே குணப்படுதலாம். அங்ஙனமாயின் வாழ்க்கை தன்னையோ காமத்தையோ ஜனசமூகத் தையோ அல்ல கிறிஸ்துவையே சார்ந்ததாயிருக்கும். நம்மை ஆளும் விருப்பத்திற்கு அவரே தலைவர்.

இயேசுவானவர் வெகு காலங்களின்முன் இரண்டே வார்த்தைகளை ஜனங்களுக்கு உரைத்தார். "என்னைப் பின்பற்றுங்கள்" என்றார். ஏதோ கோட்பாடுகளையல்ல, அவை உண்மையானவைகளா யிருப்பினும் அவைகளை யல்ல, ஆசாரம் சடங்கு முதலியவற்றையல்ல, அவை பிரயோசனமுள்ளவைகளா யிருப்பினும் அவைகளையல்ல, ஏதோ கூட்டத்தையல்ல, அது அனுகூலமாயிருந்தாலும் அதையல்ல. "என்னையே பின்பற்றுங்கள்" எனக் கூறி னார். அவர்கள் அப்படியே செய்தார்கள். மனதை ஒன்றின்மீதிருந்து மற்றொன்றின்மீது மாற்றினார்கள். 'இரட்சகர்' எனும் புதியதோர் பதத்தைத் தங்கள் வாயி னால் கூற ஆரம்பித்தனர். அவர் அவர்களை அவர்களு டைய பாவம், கஷ்டம், துக்கம், உதவியற்ற நிலைமை இவற்றினின்றும் விசேஷமாக அவர்களுடைய சுயநலப் பிரியத்தினின்றும் ரட்சித்தார். குணப்படுதலென்பது உண்மையாயிற்று. தங்களை ஆளும் விருப்பம் மாற்றப் பட்டுய்ந்தார்கள்.

கிறிஸ்துவே, எங்களை அடக்கியாளும் இயல்பு குணத்தை உமது வசம் அளித்துவிட்டோம். அவற்றோடு எங்களையும் உமது வசம் ஒப்புக்கொடுத்தோம். எங்கள் அன்பைத் தெய்வத்தின் மீதன்றிப் பிறிதொன்றின்மேற் செலுத்தோம். அதையும் எங்களையும் ஏற்றுக் கொள்ளும். ஆமேன்.

முப்பத்துநான்காம் நாள்

நம்பிக்கையுண்டாவதற்கு ஆதாரமென்ன?

1 தெசலோனிக்கேயர் 1: 5; மத்தேயு 24: 35;
ரோமர் 10: 17; 1 யோவான் 2: 14

கடவுள் உன்னை அங்கிகரித்தார் என நீ அறிந்து நம்புவதற்கு ஆதாரமென்னவென நீ கேட்கலாம். கடவுள் பற்பல வழிகளாய் நமக்கு உறுதி கூறுகிறார். ஒரே விதமாய் ஒரு வழியாய்க் காட்டுவதிலும் இது மிகவும் பலமான ஆதாரமாகும்.

முதலாவது, அவர் தமது திருவாக்கின் மூலமாய் உறுதி கூறுகிறார். கிறிஸ்துவானவர் பாவிகளை ஏற்றுக் கொண்டார் என்பதிலும் அதிகத் தெளிவாய்க் கூறக் கூடியது வேறொன்றுமில்லை. தாங்கள் முழுவதுமாய் நல்லவர்களானபின்பே அவரைச் சேரவேண்டுமென மனிதர் காத்திருக்கவில்லை. தாங்கள் இருந்த பிரகாரமே அவரிடம் வந்தார்கள். வந்ததினாலேயே நல்லவர்களாக் கப்பட்டார்கள். இது ஏதோ அதி சாதாரண காரியமாக நமக்குத் தோற்றுகிறது. பக்தி வழியில் நடப்பவர்களாகத் தங்களை மதித்துவந்தவர்கள் இம்முறையை இழிவாக நினைத்தார்கள். தற்காலத்திலும் அப்படியே நினைப்பவர்கள் உண்டு. யூதமார்க்க அறிவாளியொருவர் இதைப்பற்றி இயேசுவானவர் முறையைக் குறைகூறி "இயேசுவானவர் கடவுளோடு அதிகப் பழக்கமுடையராயிருந்தார், பாவிகளோடும் அவருக்கு அதிகப் பழக்கமே" எனக் கூறினார். இரண்டாம் நூற்றாண்டிலே செல்சஸ் என்பவர் ஆரிஜன் என்பவரோடு தர்க்கம் செய்யும்போது "பக்தி விஷயமான காரியங்களுக்கென ஜனங்களை அழைப்பவர் விளம்பரஞ் செய்து 'சுத்தமான கைகளும் ஞானமுள்ள பேச்சுமுடையோர் கிட்டிவருக, மாசு மருவின்றித் தூயராயிருப்போரும் மனதறியக் குற்றமிலாதிருப்

பவரும் நியாயமான மேலான ஜீவியஞ் செய்வோரும் கிட்டிவருக' எனக் கூறியறிவிக்கின்றனர். இந்தக் கிறிஸ் தவர்களோ யாரை அழைக்கின்றனர். 'பாவியாயிருப் பவன் எவனும் அறிவிலியும் பேதையும் குறையுடையான் எவனும் கடவுளின் ராஜ்யத்தில் ஏற்றுக்கொள்ளப்படு வான்' என்று சொல்லுகிறுர்கள். பாவிகள் என்பதினுலே அநீதன், திருடன், கன்னமிடுவோன், தீயொழுக்கமுடை யோன், நஞ்சிடுவோன், கல்லறைத் திருடன் முதலிய யாவரையும் அழைக்கின்றனர். கள்ளர் கூட்டத்தை அழைக்கவேண்டுமென்ருல் இப்படிப்பட்டவர்களேயே அழைத்தால் போதுமே" என்று பேசினுர். ஆரிஜனே அவருக்கு மிகத் தெளிவாகப் பதிலுரைத்து, "கள்வர் தலைவன் அழைக்கக்கூடியவர்களேயே நாங்களும் அழைக் கிறேமென்பது உண்மையையெனினும் நாங்கள் அவர் களை அழைக்கும் நோக்கமோ வேருகும். எங்களுடைய நற்கோட்பாடுகளின் மூலமாய் அவர்கள் தங்கள் காயங் களைக் கட்டவேண்டுமென அழைக்கிறேம். இரணமா யிருக்கும் அவர்களுடைய ஆன்மப் புண்களுக்கு விசுவாச மாகிய நல் மருந்தைப் பூசிக் குணமாக்கும்படி அவர்களை அழைக்கிறேம். அன்றியும் கடவுள் பாவிகளை மாத்திரமே அழைக்கிறுர் என நாங்கள் கூறியதில்லை" என்றனர். நமக்கு வெட்கமான காரியம் எனச் செல்சஸ் கூறிய வற்றிலேயே நாங்கள் பெருமை பாராட்டுகிறேம். கிறிஸ்து மார்க்க போதனையின் மூலமாய் முதல் முதல் பரதீசில் பிரவேசித்தவன் பேதுருவல்ல, யாக்கோபுமல்ல, கள்ள னெருவனே. கோணலாய் ஜீவித்து நேர்வழி யடைந்தா னெருவனே முதல் முதல் பரதீசுக்குள் பிரவேசித்தான்.

கிறிஸ்துவே, நீர் அக்காலத்தில் பாவிகளை ஏற்றுக்கொண்டீர், இப்போதும் நீர் என்னை விலக்குபவரல்ல. நான் நரகவழியில் என் ஆத்துமாவை இழுத்துவந்திருப்பினும் நீர் அதைக் கழுவுவீர். இப் போதும் கழுவுகிறீர். உமக்கு நன்றிபாராட்டுகிறேன். ஆமேன்.

முப்பத்தைந்தாம் நாள்

திருவாக்கின் மூலமாய் விளைந்த உறுதி

1 யோவான் 3: 19-24; 5: 11, 12; 1 பேதுரு 1: 23-25

நாம் அங்கீகாரம் பெற்றோம் என்பதற்குத் திருவார்த்தையே உறுதி கூறுகிறது என்பதை நேற்று நோக்கினோம். ஒரு சிறிதும் சந்தேகமில்லாத மிகத் தெளிவான வாக்குத் தத்தங்களின் மூலமாய் நாம் உறுதி பெறுகிறோம். "என்னிடம் வாருங்கள். உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்." "நமது பாவங்களை நாம் அறிக்கையிடுவதுண்டானால் நமது பாவங்களை மன்னிப்பதற்கு அவர் உண்மையும் நீதியும் உள்ளவர்" என்பனவாய பல வாக்குறுதிகள் நமக்குண்டு. நமது தற்காலக் குறைகளைதற்கு வேதாகமக் கூற்றுகளை எடுத்துக் காட்டுதல் இக்காலத்திலே செல்லாது என்பீர்களோ? சிலர் விஷயத்தில் அது அப்படியும் காணப்படலாம். எனினும் மனிதரின் அவசியமின்னதெனப் பல்லாண்டுகளாய் ஆராய்ந்துவந்த எங்களுக்கோ அது அவ்வாறு காணப்படுகிறதில்லை. தாங்கள் கடவுளோடு ஒப்புரவானார்கள் எனும் உறுதி கிடைத்துவிட்டால் அதனினும் மேலாக மனிதர் வேறொன்றை விரும்புவதில்லை என்பதே நாங்கள் அறிந்த காரியம். கடவுளோடு ஒப்புரவாகாதவிடத்து மனிதன் மரணகாயம் பட்டவன்போல் மயங்கியிருப்பான். கடவுளின் திருவருட் பிரசாதம் கிறிஸ்துவின் மூலமாய்த் தங்கள் பிரிவை யகற்றித் தங்களைக் கடவுளோடிணைத்து இசைத்துவிட்டது என்னும் உறுதியே குற்றமுள்ள நெஞ்சினர்க்குக் குணமளிக்கும் அரும்பொருளாம்.

கிறிஸ்துபெருமான் சிலுவையின்மீது எங்ஙனம் பிராணத்தியாகம் செய்தனர் என்பதைப் பிரசங்கித்து நின்ற ஐரோப்பிய கிறிஸ்துமத பிரசாரக ரொருவரிடம் ஒரு சாது வந்து, "ஐயனே, தாம் இன்றே எங்கள் நாட்டை விட்டகல்வது நன்றும். எங்கள் வேத நூல்களில் இத்தகைய கதைகளில்லை. இந்தியர் மனதோ

இரக்கமுடையது. அவர்கள் இக்கதையைக் கேட்பாரா யின் அவர்கள் அனைவரும் எங்களுடைய இந்து ஆலயங் களை விட்டு இவரைச் சார்ந்துவிடுதல் திண்ணம்" என் றுரைத்தனர். கூறுவோர் யாது கூறினும் கிறிஸ்து மத போதகர்களாகிய நாங்கள் இந்தியாவை விட்டகல்வ தில்லை. கிறிஸ்துவை இந்தியர்க்கு அறிவியாமலிருப்பது மில்லை. இந்தியருக்கும் பிறநாட்டவருக்கும் உங்களுக்கும் எனக்கும் இன்றியமையாததாயிருப்பது உண்மை யாகவே நமக்கு வாய்த்த தெய்வத் திருவருளே.

இத்திருவருளுக்கு அருகராகி உய்ந்தார் சிலரின் விவ ரத்தைக் காட்டியும் நமக்கு வாக்குறுதி கூறுகின்றனர். விபசாரவழி யொழுகிய பேதை யொருத்தியிடம் "நானும் உன்னைக் குற்றப்படுத்துவதில்லை, போ, இனி மேல் பாவஞ் செய்யாதே" என்றனர். கல்லினும் வன் னெஞ்சு படைத்து வட்டிவாங்கித் தனவந்தனான ஒருவ னிடம் "இன்றே உன் வீட்டுக்கு மீட்பு வந்தது" எனக் கூறினர். தன் ஜீவியத்தில் பல்வேறு பாவங்களுக்கு ஆட் பட்டு இறுதியில் பக்கவாத முண்டாகிப் படுக்கையி லிருந்தா னொருவனிடம் "உன் பாவங்கள் மன்னிக்கப் பட்டன" என்றனர். நித்தியமாய் விளங்கும் திரு வார்த்தை செயல்புரிந்து விளங்கியவாறு இதுவேயாகும். அகண்டாகாரமாகிய திருவருள் சிற்றுயிர்கட்குக் கை வந்தவா றிதுவேயாம். அங்ஙனமாயின் நாம் மறவாமே கைக்கொள்ளவேண்டிய தொன்றுண்டு. மேற்கூறிய திருச்செயல்களின் மூலமாய் விளங்கி வெளிப்பட்ட தெய்வ அன்பு என்னிடம் மாத்திரம் பொய்யாகாது. எனக்கும் அது லபிக்கும். பற்பலருக்கு மன்னிப்பளித்து வாழ் வளித்த எம்பிரான் என்னையும் மன்னிப்பார். எனக் கும் வாழ்வளிப்பார்.

பலரைக்குணப்படுத்தி உம்மை வெளிப்படுத்தியவரே, காலம் இட முதலியவற்றால் கட்டுப்படா உண்மையானது காலந்தோறும் செயல் புரிந்து விளங்குமாறு செய்தவரே, உன் பாவங்கள் மன்னிக்கப்பட்டன வென எனக்கும் உரையீரோ? நீர் எனக்கு அதை உரைக்கிறீர் எனக் காண்கிறேன். நீர் உரைத்தவற்றின் மூலமாய் உமது தன்மையை உணர்ந்தேன். நீர் என்றும் மாறாதவர். ஆமேன்.

முப்பத்தாறும் நாள்

கிறிஸ்தவ ஜனசமூகம் கூறிய சாட்சியத்தின் மூலமாய் விளைந்த உறுதி

எபி. 12: 1; அப் 2: 32, 33; 5: 32; 1: 8

கடவுள் தமது வார்த்தையின் மூலமாய் உறுதியளிக்கிருர். திருவார்த்தையோ புதிய ஏற்பாட்டிலே சொல்லாலும் செயலாலும் தனித்தனிச் சம்பவங்கள் வழியாகவும் பூரணமாகவும் உரைத்துவந்தது. இன்னும் இவ்வாறே உரைத்துக்கொண்டுவருகிறது. அப்போஸ்தலரின் நடபடிகள் அன்ருேடு முற்றுப்பெற்றனவல்ல. இன்றளவும் தொடர்ந்து நடப்பன.

எனக்குச் சமையல் செய்துகொடுத்துவந்த சீன சமையற்காரன், நான் இந்தியாவிற்குக் கப்பலேறிய இருபத்தைந்தாம் ஆண்டு அன்ருேடு நிறைவாகிறதென ஒரு நாள் அறிந்தவனுய் ஒரு கேக்கிலே 'யுகங்கள்தோறும் வார்த்தை யொன்றே' எனும் வார்த்தையை எழுதிப் பொரித்துக்கொணர்ந்து வைத்தான். அத்தொடர் கன்பூஷியஸ் ஞானியின் வாசகம்; அந்த இருபத்தைந்து வருஷகாலமாய் நான் ஒரே வார்த்தையாகிய கிறிஸ்துவை உரைத்துவந்தது அதிஞல் அறியக்கிடந்தது, 'அந்த இருபத்தையாண்டுகளாய் என் வாயில் திகழ்ந்தது அந்த ஒரே திருவார்த்தையாம் கிறிஸ்து' என்பதே. காலம் இகந்த அத்திருவார்த்தை யுகங்கள்தோறும் செல்வது. எக்காலத்திற்குமுரிய வார்த்தையாய் விளங்குகிறது. கூட்டங்கூட்டமான கிறிஸ்தவ சாட்சிகளின் மூலமாய் அத்திருவார்த்தை இன்னும் நம்மோடு பேசுகிறது.

நான் கடவுளுக்கு அர்ப்பணமாகவேண்டுமென முழந்தாளூன்றி ஜெபித்து நிற்கையில் என்னருகே மற்றுமொருவர் முழங்காற்படியிட்டு நின்று 'ஸ்டான்லி ஜோன்ஸ் கடவுளின் ஒரே பேறுனவர்பேரில் விசுவாசம் வைத்ததால் அவர் கெட்டழிந்துபோகாமல் நித்தியஜீவனைப்பெறுதற்

கெனக் கடவுள் தமது ஏக குமாரனை ஒப்புக்கொடுத்து இவ்வளவாய் ஸ்டான்லி ஜோன்ஸில் அன்புகூர்ந்தார்' என ஜெபித்தார். இவ்விதமாக அந்தக் கிறிஸ்தவ நண்பர் எனக்கு உறுதி கூறுவதற்கு அவருக்கு ஏதேனும் பாத்தியதையுண்டோ? உண்டு. ஒரு காலத்தில் அவர் தமது பேரையே அவ்விடங்களில் கூறி ஜெபித்து வரவே அவ் உறுதியைப்பெற்றார். இவர் இங்ஙனம் ஜெபித்தது திருச்சபையே ஒரு கூட்டமாக என் காதில் சாட்சி பகர்ந்ததாம்.

சிற்சில இடங்களிலே, சபைகளை நடத்தும் குருக்கள் தாமே பாவமன்னிப்பைக் கூறிக் கூட்டசாட்சிய உறுதியை யளிக்கின்றனர். இவ்வாறு உறுதி பெறுவது தக்க முறையன்றென நான் துணிந்துரைப்பதில்லையெனினும் கடவுளின் திருவருட் பிரசாதத்தை இவ்வாறாகப் பணி தீர்ந்த பொருள்போல் எடுத்து எடுத்துக்கொடுப்பதென்பது என் மனதிற்கு அத்தனை பொருத்தமான தன்றென்பதை மாத்திரம் உரைப்பேன். எனினும் பக்தி முதிர்ந்த ஞானிகள்முதல் இன்றுதான் குணப்பட்ட பாவிவரையும் அறிவாளிகளும் பேதையருமானவர் ஆண்கள் பெண்களும் சிறியவர் பெரியருமாய் பற்பல ஜாதியார்பாஷைக்காரர் ஒருங்குசேர்ந்து சாட்சி பகர்ந்து கடவுளைத் தேடுவோரின் காதுக்குள் 'சகோதரனே, நீ செய்வது சரியே, இப்படியே செய். நாங்கள் அனைவரும் சேர்ந்து உனக்கு உறுதி கூறுகிறோம். நாங்கள் இப்படியே முயன்று சித்தி பெற்றோம்' எனக் கூறுவது சாட்சி கூறும் முறைகளிலே ஒரு முறையாகவிருக்கலாம் என எண்ணுகிறேன்.

கிறிஸ்துவே, தற்காலத்தவர்க்கு முரியவரே, நீர் தொட்டதால் ஒளிபெற்று விளங்கியவர் பற்பல்லாயிரவர். அவர்கள் அனைவரும் நன்றியறிந்தவர்களாய் உமது பாதத்திலே நன்றிகூறி எங்களுக்கு அறிவிக்கின்றனர். அவர்கள்பொருட்டு நாங்கள் உமக்கு நன்றி பாராட்டுகிறோம். நாங்களும் அகமகிழ்ச்சியோடு அவர்களோடு சேர்ந்து கொண்டோம். ஆமேன்.

முப்பத்தேழாம் நாள்

நல்லொழுக்கத்தின் வல்லமையால் விளையும் உறுதி

1 யோ. 5: 4, 5; 3: 9, 13, 14; ரோ. 8: 1. 9, 10; சங். 32: 1, 2

இருமுறைகளின் மூலமாய் விளையும் உறுதியை நோக்கினோம். திருவார்த்தையின் மூலமாய் உண்டாகும் உறுதியொன்று, பலர் கூடியுரைக்கும் சாட்சிய வழியே உண்டாகும் உறுதி மற்றொன்று. இவையேயன்றிப் பாவத்தை விட்டு விலகி ஜீவிக்க வலிமைதரும் நல்லொழுக்கத் தீர்மான வன்மையாலும் மனந்திரும்பினோம் எனும் உறுதி நமக்கு உண்டாகும். அசையாது நிலைபெற்ற உனது நல்லொழுக்கத்தின் மூலமாய்க் கடவுள் உனக்குள் இருக்கிறார் என்பதைக் காட்டுகிறார்.

ஒரு நாள் ஒருவர் என்னிடம்வந்து 'நேற்றிரவுகூட்டம் முடிந்துபோகும்போது நீங்கள் பிரசங்கித்துச் சொன்ன மாதிரியே செய்வேன் எனும் தீர்மானத்தோடு சென்றேன். கிறிஸ்துவை எனது ஜீவியத்தில் ஏற்றுக்கொள்ள வேண்டுமெனத் தீர்மானித்தேன். நீங்கள் கூறிய பிரகாரம் விசுவாசத்தின் மூலமாகவே அவரை ஏற்றுக்கொண்டேன். அச்சமயத்திலே உடனேயே என்னிடம் ஏதேனும் மாறுதல் விளைந்ததாக எனக்குத் தோற்றவில்லை. அடுத்த நாட்காலையிலே நான் வழக்கம்போற் செல்லுமிடங்களுக்கு அக்கம்பக்கம் பழகிய இடங்களுக்குச் சென்றபோதோ, கெட்ட காரியங்களில் எனக்கு இதற்குமுன்னிருந்த விருப்பம் முற்றிலும் ஒழிந்துவிட்டது கண்டு ஆச்சரியமுற்றேன். அவற்றின்மீது எனக்கு அற்பமும் விருப்பமில்லாமற்போயிற்று. அப்பொழுதே எனது ஜீவியத்தில் புதியதோர் வல்லமை உண்டாகியிருக்கிறது எனும் உண்மையைக் கண்டுகொண்டேன். வல்லமையாக என்னில் விளங்கியவர் கிறிஸ்துவே' எனக் கூறினார். கிறிஸ்துவே நம்மில் விளங்குகிறார். புதிய வல்லமையானது கிறிஸ்து நமக்குள்ளிருக்கிறார் எனும் உண்மையைக் காட்டுவதாம்.

மற்றொருவரும் அவ்விதமே செய்தார். நான் சொன்ன பிரகாரமே விசுவாசத்தின் மூலமாய்க் கிறிஸ்துவை அங்கீ

கரித்தார். மாறுதல் உடனே உண்டானதாக அவருக்குக் காணப்படவில்லை. பிற்பாடு அவர் என்னிடம் வந்து 'இயல்பாக நான் மிகுந்த கோபகுணமுடையவன், யாராவது என்னுடைய சொல்லுக்கு விரோதமாய்ப் பேசினாலும் நடந்தாலும் எனக்கு மிகவும் அதிகமாய்க் கோபம் வந்துவிடும். அடுத்த நாள் ஒருவன் நான் சொன்னதைக் கவனியாமல் என் சொல் மீறித் தப்பிதம் செய்தான். எனக்கோ கோபமுண்டாகவில்லை. அவனுக்காகப் பரிதாபங்கொண்டேன். இதைக் கண்டு என்னைப்பற்றியே எனக்கு மிகுந்த ஆச்சரியமுண்டாயிற்று. நான் புதிய மனிதனாகிவிட்டேனெனக் கண்டுகொண்டேன். கிறிஸ்துவானவரே என்னில் குடிகொண்டார் என்பதை யறிந்தேன்' என்று சொன்னார். ஆம்; கிறிஸ்துவானவர் அவரில் குடிகொண்டார்.

ஆவியின் கனிகளாகிய 'அன்பு, சந்தோஷம், சமாதானம், பொறுமை, பட்சம், நல் விருப்பம், நல் நம்பிக்கை, சாந்தம், இச்சையடக்கம்' முதலியன நம்மில் காணப்படும்போது நமது வேர் கிறிஸ்துவில் ஊன்றிவிட்டதென்பதைக் காண்கிறோம். நமக்குள் புதிய ஜீவியம் ஆரம்பித்துவிட்டது. இத்தன்மைகளெல்லாம் உடனே நம்மில் பூரணப்பட்டு விளங்குமென நான் கூறுவதில்லை. இவையெல்லாம் நம்மில் தோன்றி வளர ஆரம்பித்துவிட்டன என்பதை நாம் அறியலாம். இந்த உண்மையே நமது மனந்திரும்புதலின் உறுதியைக் கொடுக்கும். அரும்பு தோன்றிய மாத்திரமே மலர் உண்டாகுமென நம்பலாம்.

கிறிஸ்துவே, புதிய ஜீவியக் கிளர்ச்சி எனக்குள் இப்பொழுதே உண்டாகியிருப்பதை யுணர்ந்து உமக்கு நன்றி செலுத்துகிறேன். முதலில் தட்டித்தடுமாறி நடக்கிறேனெனினும் நடக்க ஆரம்பித்துவிட்டேன். உம்மையே துணைக்கொண்டு நடக்க ஆரம்பிக்கிறேன். வருஷங்களாய் யுகாயுகங்களாய் எனக்குத் துணையாய் வருபவர் நீரே. இப்பொழுது ஆரம்பத்திலோ தள்ளாடு நடை நடக்க நடக்க என் கால்கள் பலப்படும். இப்போதென்னில் முளைத்தெழும்பும் நல்லொழுக்க வல்லமை வளர்ந்து பூரணபலமடையும். உமக்கு நன்றி செலுத்துகிறேன். ஆமேன்.

முப்பத்தெட்டாம் நாள்

பிறர்க்கு உயிர் உண்டாக்கத்தக்க மனத் தூண்டுதலின் வழியால் உண்டான உறுதி

அப். 13: 1-3; 8: 4; 5: 20; சங். 51: 13

நமக்குள் புதிய உயிர் எழும்பிவிட்டதென்பது மற்றொருவிதமாக உறுதியாகும். நமக்குக் கிடைத்த நன்மையை, நாம் அனுபவிக்கும் கிறிஸ்துவை, பிறரும் நம்மோடு சேர்ந்து அனுபவிக்கவேண்டுமெனும் ஆசை நம்மில் உண்டாகும்.

நமக்குக் கிடைத்த உன்னத ஜீவனானது நமக்குள் மாத்திரம் மேன்மேலும் வளர்ந்து அதிகரிக்கவேண்டுமென விரும்புவதோடு அமையாமே பிறருக்கும் அவ்வாறே அதிகமான நல்வாழ்க்கைவாய்க்கவேண்டுமெனவும் விரும்புகிறது. நல்லுயிர் வாழ்க்கை விருப்பே மதமாகும். அதைத் தனக்காக மாத்திரமல்ல, பிறர் பொருட்டும் விரும்புவதாம். கடவுளிடத்தும் மனிதரிடத்தும் அன்புடையராதல் வேண்டுமென்பதே மதபோதனையாம். கடவுளோடு ஐக்கியம் வாய்த்த உடனேயே மனிதரோடும் ஐக்கியம் பெறவேண்டுமெனும் ஆசையும் பிறக்கிறது. புதிதாக மனந்திரும்பிய சீன சாஸ்திரியொருவர் 'மேலும் இதைப்பற்றி என் மனையாளோடு பேசிக்கொண்டிருந்தேன். என் மனையாள் தானும் இதைப்பெறவேண்டுமென ஆசிப்பதாகக் கூறினாள்' என கூறியதொன்றே அந்தச் சாஸ்திரியின் மனதில் இந்தப் புதிய ஜீவன் உதயமாயிற்று என்பதை எனக்கு உறுதிப்படுத்திற்று. இந்தச் சீனரின் மனையாள் ஒரு போலிக்கிறிஸ்தவர். அவரோ கன்பூஷியஸ் மதஸ்தர். அவருக்குப் புதிய ஜீவன் கிடைத்த மாத்திரமே அதைத் தன் மனையாளும் தன்னோடு பெற்றுக்கொள்ள வேண்டுமென ஆசித்தார். கன்பூஷியஸ் மதம், கிறிஸ்து மதம் என்பதை அவர் நோக்கவில்லை. மனையாளும் தன்னைப்போலவே புதிய ஜீவன் பெறவேண்டும்; அதுவே அவர் ஆசை.

நான் முழந்தாளில் நின்று ஜெபித்து என்னைக் கிறிஸ்துவுக்கு ஒப்புக்கொடுத்து எழுந்த உடனே எனக்குக் கிடைத்த இந்தச் சிலாக்கியத்தை உலகனைத்துக்கும் நான் கொடுக்கவேண்டுமெனும் ஆசையும் உண்டாயிற்று. இவ்வுண்மையை உலகுக்கறிவிக்கவேண்டுமெனும் அடக்கொணு ஆத்திரம் பிறந்தது. ஒவ்வொருவரும் அதை அறிந்து அனுபவிக்கவேண்டுமென உணர்ந்தேன். இப்பொழுதும் அப்படியே உணருகிறேன். ஒருவேளை அப்படிப்பட்ட ஆத்திரம் உனக்கு இல்லாதிருக்கலாம். ஒருவேளை சிறிதளவு ஆத்திரமேயிருக்கலாம். இப்பொழுது தான் அரும்பு சிறிதாகத் தோன்றி வெளிப்பட்டும் வெளிப்படாதுமிருக்கலாம். எனினும் இது சிறிதளவாயினும் தோன்றியிருப்பது உண்மை. அந்த ஆத்திரத்தின் வழியே ஊழியஞ்செய்வதற்கு இன்றே ஆரம்பியுங்கள். நீங்கள் ஆரம்பிக்கும்போது சிலர் உங்களைப் பார்த்துப் பரிகசித்துக் கோபிக்கலாம். என்னையும் அப்படியே கோபித்தார்கள். நான் மனந்திரும்பிய அடுத்த நாள் எனக்கு நேர்ந்த மாறுதலைப்பற்றி என்னுடைய சிநேகிதர் ஒருவரிடம் பேசிக்கொண்டிருந்தபோது அவர் 'என்னிடம் என்ன சொன்னீர்! இன்னும் இரண்டுவாரங்களுக்குள் இவ்வுணர்ச்சியை உமது மனதிலிருந்து அகற்றிவிடமாட்டேனு' என்ருர். அவர் அகற்றிவிடவில்லை. அதை அதிகமாய் என் மனதினுள் அழுத்திவிட்டார். உனக்குக் கிடைத்த நல்வாழ்வை நீ பிறருக்கும் கொடுக்கவேண்டுமென்று ஆசிக்கும்போது உனக்குள் கடவுளின் ஜீவன் பிரவேசித்துவிட்டதென்பது உண்மை. நீ மனந்திரும்பினுய் என்பதற்கு அதுவே உறுதியாகும்.

கிறிஸ்துவே, உமது அன்பு என்னை மேற்கொள்ளுகிறது. நான் உமக்காகப் பிறரை மேற்கொள்ளுவேன். என்னில் உதித்த இந்த அன்பு பெரு நெருப்பேபோல் பற்றிப்பிடித்து என் சகோதரரை உம் மண்டையில் வழிநடத்திக்கொண்டு வருதற்கேதுவாக என்னில் விளங்குவதாக. ஆமேன்.

முப்பத்தொன்பதாம் நாள்

ஆவியானவர் கூறும் உறுதி

2 கொரி. 1: 21, 22; ரோ. 8: 16; 1 யோ. 3: 24; 5: 11, 12

இவ்வாறு உறுதியளிப்பனவெல்லாம் மிகவும் நல்லனவே, அருமையானவைகளே, எனினும் நானே அவரை முகமுகமாய்ப் பார்த்து உறுதிகொள்ள முடியாதோ என்பாய். நீயும் பார்ப்பாய்.

கடவுள் தமது நல் ஈவுகளை மாத்திரம் கொடுத்துத் தமது பிரசன்னத்தை விளங்கக் காட்டிவிட்டுத் தம்மையோ மறைத்துக்கொள்வார் என நான் நினைக்கிறதில்லை. நீ தகப்பனாகவோ, தாயாகவோ, உன் பிள்ளையின் விஷயத்தில் அப்படி நடந்து கொள்வாயா? "நீங்கள் பொல்லாதவர்களாயிருந்தும் உங்கள் பிள்ளைகளுக்கு நல்ல ஈவுகளைக் கொடுக்க அறிந்திருக்கும்போது உங்கள் பரமபிதா தம்மிடம் கேட்பவர்களுக்குப் பரிசுத்தஆவியைக் கொடுப்பது எவ்வளவு நிச்சயம்." அவர் தாமே அன்பாயிருக்கிறபடியினால், நமது பிள்ளைகளுக்கு நம்மை மறைத்துக்கொள்வது நமக்கு எவ்வளவு வருத்தத்தைக் கொடுக்குமோ, அவ்வளவு வருத்தம் அவருக்கும் உண்டாகும்.

இதோ, இவ்வார்த்தைகளைக் கவனித்துக் கேளுங்கள். "நாம் கடவுளின் பிள்ளைகளென்று ஆவியானவர் தாமே நமது ஆவியோடுகூடச் சாட்சிகொடுக்கிறார்." ஆவியானவர்—நமது ஆவி, இருவரும் ஐக்கியமாகின்றனர். இவ்விருவரையும் இடைநின்று பிரிப்பது ஒன்றுமில்லை. அமர்ந்து கேளுங்கள், அவர் நம்மோடு நெருங்கி ஐக்கியப்பட்டவராகச் சாந்தமாய் அமைதியாய்ப் பேசுகிறார். "என் பிள்ளையே, நான் உன்னைக் கண்டுபிடிக்கும்படி எவ்வளவு தூரம் வந்திருக்கிறேனென்பதை நீ ஒருகாலும் அறிந்துகொள்ளமுடியாது. நான் உன்னைத் தேடுவதில் மிகுந்த துன்பத்துக்குள்ளானேன். இப்பொழுது

அது முடிந்தது, உன்னைக் கண்டுகொண்டேன். நீ தடைப்புகளைத் தகர்த்தெறிந்தாய். நீ அப்படிச் செய்யவேண்டுமென நானும் காத்திருந்தேன். இன்னும் உன் மனதிலிருக்கும் அற்பசொற்ப சந்தேகத்தையும் பயத்தையும் விட்டுவிடு. நான்தான், பயப்படாதே. உன் பயமெல்லாம் தீரவே நீயும் நானும் பேசுவோம். உன்னிடமிருப்பதெல்லாம் என்னுடையதே—நீயும் அப்படியே சொன்னாய். இப்பொழுதோ என்னிடமிருப்பதெல்லாம் உன்னதேயென நானும் சொல்லுகிறேன். உனக்குத் தேவையானவற்றையெல்லாம் என்னிடமிருந்து பெற்றுக்கொள். என்னிடத்தில் போதுமானவைகளுண்டு. எடுப்பதினால் அவை குறைந்துபோவதில்லை. உனக்குண்டான கஷ்டங்களையெல்லாம், சிறிதோ பெரிதோ எல்லாவற்றையும், என்னிடம் சொல், என்னுடைய வருத்தங்களிற் சிலவற்றையும் உன்னிடம் சொல்லுவேன். நான் கடவுள்தான் என்றாலும் எனக்கும் துன்பமுண்டு. நான் உன்னுடைய வருத்தத்தைச் சகிப்பேன். இப்படிச்செய்யவே, என் மகனே, நீ கொஞ்சநாளிலே என்னுடைய திருக்குமாரனோடு பிரியமாயிருக்க விரும்புகிறேன். இதைப் பார்க்கிலும் உனக்கு நன்மை விளைக்கக்கூடிய வேறொன்றை நான் நினைக்கமுடியாது. ஆகையினால் நான் விரும்புவது இதைத் தவிர வேறொன்றுமில்லை. நான் வந்ததினாலே உன் பாவங்களெல்லாம் மன்னிக்கப்பட்டனவென உனக்குத் தெரியும். என் ஞாபகப் புத்தகத்திலிருந்து அவைகள் அனைத்தையும் முற்றிலுமாகக் கலைத்துப்போட்டேன். இனி நான் அவைகளை நினைப்பதில்லை. நீயும் அவற்றை நினைக்கவேண்டாம்.

கடவுளே, என் பிதாவே, நாவெடுத்துப் பேசத்துணியாமல் உம் முன் பணிகிறேன். நானோ ஒரு காலத்தில் துன்மார்க்கனாயிருந்தேன், இப்பொழுதோ அங்கீகரிக்கப்பெற்றேன். இதோ, அதி ஆச்சரியப் பேரருள்! இதோ, நான் உமது பாதத்தில் பணிந்து முத்தமிடுகிறேன். நான் வணங்கும்போதோ உமது பேரன்பு என்னை உமது இருதயத்தோடு சேர்த்து அணைத்துக்கொள்ளுகிறதென்பதை உணருகிறேன். உமக்கு நன்றி செலுத்துகிறேன். ஆமேன்.

நாற்பதாம் நாள்

அடிபெயர்தல்

அப். 9: 17–22; கலா. 5: 7; மத். 17: 20; பிலி. 1: 6

தனது ஜீவியம் மாறிப் புதியவிதமாய் ஜீவிக்கத் தீர்மானம் செய்தபின் முதலிலே சிற்சில தினங்கள் அதிகக் கஷ்டமாயிருக்கும். இந்தியாவில் சிசு மரணம் மிகவும் அதிகமென்பர். பரமராஜ்ய சிசு மரணமும் அப்படியே. இந்தியாவிலே சிசு மரணம் அதிகமாகாமல் தடுக்கமுடியும். அப்படியே புதிய ஜீவியத்தின் ஆரம்பத்திலே பற்பலர் தவறி விழுந்து கெட்டுப்போகாதபடி தடுக்க முடியும்.

எனினும் ஆரம்பத்திலே சிலநாட்கள், வாரங்கள் வரையும் மிகவும் கஷ்டமான காலமே என்பதை நாம் மறுக்கமுடியாது. ஆகாயக் கப்பலை முதலாவது தரையிலோ கடலிலோ இருந்து மேலெழும்பச் செய்வதற்கு அது சாதாரணமாய் ஆகாயத்தில் பறப்பதற்குச் செல்லும் சக்தியைப் பார்க்கிலும் இரட்டிப்பு அளவு அதிக சக்தி வேண்டும் என ஆகாயக்கப்பலோட்டுவதில் கைதேர்ந்தவர் ஒருவர் கூறினர். தரையும் கடலும் கப்பலைத் தங்களிடம் பலமாய்ப் பிடித்து வைத்துக்கொண்டு மேலெழும்பவிடாமல் தடுப்பதுபோல் காணப்படும். இவ்வாறே ஒருவன் மனந்திரும்பிப் புதிய பழக்கவழக்கங்களை அனுசரித்துப் புதிய ஜீவியம் செய்வதற்கு வேண்டிய மனோபலத்திலும் இரட்டிப்பான மனோபலம் பழைய பழக்கங்களை விட்டு விலகுதற்குவேண்டும்.

இதைப் பார்த்து நாம் திகிலடைந்து தளர்ச்சியுறலாகாது. இன்று காலையில் நான் வேதம் வாசித்துக் கொண்டிருக்கையில் "இந்தக் கல்லைப் புரட்டுவோர் யார்?"... "இதோ, கல்புரட்டப்பட்டிருக்கிறது" எனும் வாசகங்களை வாசித்தேன். அந்தக் கஷ்டங்கள் நமக்கு

எதிரே பெரிய கற்களைப்போற் காணப்படுவதுண்டு. எனினும் நாம் சமீபத்திற் செல்லச்செல்ல அவையனைத்தும் ஒவ்வொன்றுய்ப் புரட்டித் தள்ளப்பட்டிருப்பது காண்கிறோம். நாம் அறியாமலே நம்மோடு சேர்ந்து உழைப்பவர் மிகப் பெரிய கற்களையும் புரட்டித் தள்ளி அனுபவமடைந்தவர்.

மனுஷீக வாழ்க்கையில் நாம் காத்து நடக்கவேண்டிய சட்டங்களும் முறைகளும் இருப்பதுபோலவே ஆவிக்குரிய ஜீவியத்திலும் நாம் அனுசரித்து நடக்கவேண்டிய சட்டங்களும் முறைகளுமுண்டு என்பதை நாம் எப்போதும் ஞாபகத்தில் வைத்துக்கொள்ளவேண்டும். இப்படிச் சொல்வதினாலே நீ கீழ்ப்படியவேண்டிய திட்டவட்டமான ஏதோ சில சட்டங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றனவென்பதல்ல. கிறிஸ்தவ ஜீவியம் இப்படிப்பட்ட சட்டங்களாலாவதல்ல. மனஞ் சம்மதித்தோ சம்மதியாமலோ சிறிதும் விலகாமல் காத்து நடக்கவேண்டிய சட்டங்கள் என்பதல்ல. கிறிஸ்தவ ஜீவியம் முழுவதும் அன்பினால் இயல்வது. அன்புடையாராய் அன்பின் வழியொழுகுவோர் சட்டங்களைப் படித்து இப்போது இன்னது செய்யவேண்டும் இதன்பின் இன்னது செய்யவேண்டுமென யோசித்து ஆராய்ந்து செய்வதில்லை. எனினும் இங்கும் ஏதோ ஒருவிதமான சிநேக சம்பந்த ஒழுக்கங்களும் முறைகளுமுண்டு. இவ்வொழுக்கங்களை மீறி நடக்கத் தலைப்பட்டால் சிநேகம் முறிந்துபோம். தற்செயலாகத் தாமாகவே காரியங்கள் நடக்கும்படி விட்டுவிடுவதினாலேதான் மிகப்பலர் துவக்கத்திலேயே விழுந்துபோவதற்கிடமாகிறது. இப்படித் தற்செயலாய் நடக்கிறபடி நடக்கட்டுமென விட்டுவிட்டால் நாம் சந்தோஷமாயிருக்கமுடியாது.

கிறிஸ்துவே, சித்தத்தை ஒரு வழிப்படுத்தி ஜீவித்துக் காட்டியவரே, நீர் காட்டிய வழியிலேயே நான் நடந்து ஜீவிக்கும்படி எனக்குப் போதித்தருளும். நான் தட்டித்தடுமாறி வருகிறேன், வந்து சேருகிறேன். நான் காத்து நடக்கவேண்டியனவுமுண்டு. எனக்குப் போதித்தருளும். ஆமேன்.

நாற்பத்தோராம் நாள்
உன்னை ஒப்புவித்தல்
லூக். 19: 1–10; 1 ராஜா 18: 21; யோ. 9: 25

ஒப்புவித்தலே நாம் முதல் முதல் செய்யவேண்டிய காரியங்களிலொன்றும். சாதாரண மனிதனுக்கும் மிருகத்திற்கும் எவ்வளவு பேதமுண்டோ அவ்வளவு தூரம் சாதாரண மனித ஜீவியத்தோடு பேதமுடைய ஒருவகை ஜீவியத்தை ஆரம்பிப்பதே கிறிஸ்தவ ஜீவியமாம். நீ வித்தியாசப்படுவதினாலே நீ நடந்துகொள்ளும் ஒழுக்கமும் வித்தியாசமாகும். இப்படி நடப்பதோ அப்படி நடப்பதோ, இதுவரை பழகிவந்தவைகளை மாற்றுவதோ எனும் போராட்டம் உன் மனதிலேயுண்டாகி, சுற்றியிருப்பவரோடு வித்தியாசமாகக் காணப்படாதபடி நடந்துகொண்டால் எப்படியோ உள்ளான ஜீவியமானது ஒருவிதமாய்ச் சரியாகித் தானாகவே புலப்பட்டுவிடுமென நினைத்துக்கொண்டால் அது நடவாது. திட்டமாகவே உள்ளான ஜீவியம் காணப்பட வேண்டுமென நீ தீர்மானிக்க வேண்டும்.

மனோதத்துவ சாஸ்திரப் பேராசிரியருள் ஒருவராகிய ஜேம்ஸ் என்பவர் மனதில் செய்யும் தீர்மானம் என்பதைப்பற்றிக் கூறுமிடத்து "ஒரு காரியம் ஒப்போ தப்போ என்பதை ஒருவன் கண்டறிந்தவுடனேயே அவன் அதை உறுதியாக மாற்றமுடியாதபடி தீர்மானித்துவிடவேண்டும். தீர்மானித்த பிரகாரமே நடந்து தீரவேண்டும். அதை விட்டு விலகக்கூடாது. அவ்வழியிலேயே தான் அதிகமதிகமாய் முயலவேண்டுமெனத் தன்னை வற்புறுத்தும் ஒரு நிலைமைக்குத் தன்னைக் கொண்டுவரவேண்டும். கூடுமானால் தான் அப்படியே செய்யத் தீர்மானித்திருப்பதாக நிர்ணய வாக்குறுதி கூறுவதும் நன்றும்" என எழுதுகிறார். மனோதர்ம சாஸ்திரச் சிறந்த முறை இதுவே. ஆகவே இது சிறந்த கிறிஸ்தவ முறையாம். விட்டுவிலகக்கூடா 'நிர்ணய வாக்குறுதி' என்பது கவனிக்கத்தக்கது. நழுவிவழுவிப் போவதற்கு அங்கே இடமில்லை. ஏதோ ஒரு சமயம் சங்கடம்போற் காணப்பட்டால் தப்பிக்கொள்வதற்கு

அங்கே இடமில்லை. அவசியமான விடத்துத் தப்பிக் கொள்ளலாம், விட்டுவிடலாம் என்பதற்கு ஒரு வழியு மிருக்கக்கூடாது.

பெரிய வியாபாரியொருவர், தான் தீர்மானஞ்செய்த மறுநாளிலே, தன்னிடம் வேலை பார்க்கும் அனைவரையும் கூப்பிட்டுத் தன் மனதில் உண்டாயிருந்த மாறுதலைப் பற்றி எல்லாருக்குமுன்பாகவும் வெளிப்படையாகக் கூறினார். அவரிடம் வேலை பார்த்தவரில் எவரும் அதற்காக அவரைச் சிறிதளவும் அகௌரவமாக நினைக்கவில்லை.

ஒருநாள் இரவு ஒரு வேலைக்காரன் என்னிடம் வந்து யாரோ ஒருவர் என்னைப் பார்ப்பதற்காகத் தோட்டத்திலே வந்திருக்கிறார் என்று சொன்னான். இருள் வேளையில் அந்த ஆளைப் பார்க்க வெளியே போனேன். தோட்டத்திலே அந்த ஆளின் உருவம் எனக்குத் தெரிந்தது. எனினும் சாங்கோபாங்கமாக அந்த ஆளோடு கலந்து பேசச் சற்று தாமதித்தேன். அந்த ஆள் ஒரு கைக்குட்டையினால் தனது முகத்தை மூடிக் கட்டியிருக்கவும், கைகளைச் சட்டை ஜேப்பிலே வைத்துக்கொண்டிருக்கவும் பார்த்து பயந்தேன். தனது கேவலமான வழக்க பழக்கங்களை விட்டு விலகிப் புதிய ஜீவியம் செய்யவேண்டுமெனும் ஆத்திரம் அந்த ஆளுக்கிருந்தது. நானும் என்னாற் கூடியதெல்லாம் செய்து பார்த்தேன். இறுதியில் அந்த ஆளுக்கு விமோசனமில்லையென எண்ணித் திரும்பினேன். நானாகிலும்வேறு யாராகிலும் தன்னை இன்னாரென அறிந்துகொள்ளக்கூடாதென அந்த ஆள் நினைத்தான்.

நாம் கைக்குட்டையால் முகத்தை மூடிக்கொள்ள வேண்டாம். இரவு நேரத்தில் தோட்டத்தில் செடி மறைவிலேபோய் நிற்கவேண்டாம். நாணத்தைவிட்டுத் தீர்மானமுடைய மனதோடு எல்லாருமறிய வெளியே வரவேண்டும். பாவம் ஒன்றைப்பற்றியே யல்லது வேறொன்றுக்காகவும் நாம் வெட்கமடையவேண்டாம். இன்றே தீர்மானித்து உடன்படவேண்டும்.

கிறிஸ்துவே, எனது தீர்மானங்களை உமது முன் படைக்கிறேன். துணிந்து நான் தீர்மானிக்க ஆரம்பிக்கலாமோ? அவ்வாறு செய்தற்கு இன்றே எனக்குத் துணைநின்றருளும். ஆமேன்.

நாற்பத்திரண்டாம் நாள்

உன்னைப் பயிற்றிக்கொள்ளுதல்

1 தீமோ. 4: 7, 8, 16; 2 தீமோ. 1: 7; 1 கொரி. 9: 27; மார். 9: 49

பயிற்சி செய்யப்படுதல், சிக்ஷை பெறுதல் என்பதற்கும் சிஷ்யன் என்பதற்கும் நெருங்கிய சம்பந்தம் உண்டு. இரண்டும் ஒன்றேயெனக் கூறலாம். சிக்ஷையில்லையாயின் சிஷ்யனுமில்லை.

தற்கால வாழ்க்கையில் சிக்ஷையைப் பெறவேண்டியது மிகவும் அவசியமாகிவிட்டது. நம்மைக் கட்டுப்படுத்தும் தேச சட்டங்களுக்கும் நமக்கு விலக்கப்பட்டவற்றுக்கும் விரோதமாகப் பலகாலம் வாதாடிச் சண்டையிட்டு மேற்கொண்டு ஒருவாறு கட்டுக்கடங்காதவர்களாய் நடக்கத் தலைப்பட்டோம். இதுவே உண்மைச் சுயாதீனமென்றும் பேசிக்கொள்ளுகிறோம். இவ்வாறு நாம் கொண்டதோ தவறென்பதை இப்போது கண்டறிந்தோம். பிள்ளைகள் தாங்களாகவே தங்களுக்கு நலமானதின்னவென அறிந்துகொள்ளும்படி அவர்களை விட்டுவிடவேண்டுமெனப் போதனாசிரியர் கூறுவாராயினர். ஆனவே பிள்ளைகளைச் சிட்சித்து நல்வழிப்படுத்த முயல்வது அத்தனை அவசியமின்றென விட்டுவிட்டது போற் காணப்படுகிறது. இளம்பருவத்தின் இயல்புக்கு இசைந்து நின்று அதையே நியாயமெனக் கருதினர். இப்பொழுதோ பிள்ளைகளும் போதனாசிரியரும் சிக்ஷை பெறுவது அவசியமெனத் தோன்றுகிறது. அன்றேல் என்றி பிரடெரிக் அமீல் என்பவர் ஒருசமயம் கூறிய பிரகாரமாகவே முடியும். அவர் தமது மனோநிலையைப் பகுதிபகுதியாக ஆராய்ந்து தனது மன இயல்புகளைத் திருத்திக்கொண்டவராய் "நான் ஒரு விபரீத பிராணி. வேறொருவருக்குக் கற்பிக்கவேண்டியதென்றால் எங்கெங்கே நலமானவைகள் காணப்படுகின்றனவோ அவற்றையெல்லாம் தேடிப்பிடித்து வழங்குகிறேன். என்

சொந்த விஷயத்திலோ என்னைக் கண்டிக்கவும் என்னை நல் வழிப்படுத்தவும் எனக்கு மனதில்லாமலே போகின்றது. நான் என்னை ஆராய்ந்து எனக்குப் பிரியமானதின்ன தென்பதைக் கூறுகிறேன். நல்லொழுக்கத்திற்குப் பதிலாக மனோதத்துவ சாஸ்திரம் எனக்கு விசேஷம். நற்காரியங்களைத் துணிந்து செய்வதும் செய்யவேண்டியன வற்றைச் செய்வதும் நல்நோக்கத்தோடு வேலைசெய்வதுமாகிய இவற்றைவிட்டு மனம்போன வழியே சாய்ந்து நடக்கிறவனானேன். தைரியம் என்பது பேரளவில் தெரிந்த காரியமே. நம்பிக்கை என்பது ஏதோ நாம் கேள்விப்பட்ட ஒரு காரியமாக மாத்திரமிருக்கிறது" என்றனர். சுயாதீனத்தை நாடியதால் வேரற்றுக் கீழ் வீழ்ந்தார்.

மனமிசையாத ஏதோ பயிற்சி அல்லது கட்டுப்பாட்டுக்கு உன்னை ஆட்படுத்தவேண்டுமென்பதன்று. கடவுளால் நடத்தப்பட்டு நீங்களே தெரிந்து வரைந்துகொண்ட சிக்ஷைக்கு உங்களை மனதார உட்படுத்தவேண்டும். அப்படியானால் அது கடவுளாலானதும் உங்களால் தெரிந்துகொள்ளப்பட்டதுமான சிக்ஷையாம். எங்கள் ஆஸ்ரமத்திலே நாங்கள் எல்லாரும் கூடியிருந்து ஜெபித்து ஆலோசித்து நாங்கள் அடங்கி நடந்து கைக்கொள்ளவேண்டிய கட்டுப்பாடுகளை ஏற்படுத்திக்கொள்ளுகிறோம். நாங்கள் அடங்கி நடக்கும் கட்டுப்பாடுகள் எங்கள்மேற் சுமத்தப்பட்டனவல்ல. அவை நாங்களாகவே எங்களுக்கென அமைத்துக்கொண்டவைகள். ஆவிக்குரிய கட்டுப்பாடாகிய சிக்ஷையை நீங்கள் வரையறுத்துக்கொள்ளுமுன் நீங்கள் மேலிருந்து நடத்தப்படும்படியாக அமர்ந்திருந்து ஆலோசித்து ஜெபியுங்கள். இவ்வாறான சிக்ஷையை ஒப்புக்கொள்வதினால் நீ சிட்சைக்குட்பட்ட சிஷ்யனாவாய்.

கிறிஸ்துவே, உமது நுகத்தடியை நான் கண்டுபிடித்து அதை ஏற்றுக்கொண்டு நடக்க எனக்கு உதவிபுரிந்தருளும். உமது சிட்சைக்குட்படுவதே என் ஆவல். ஆமேன்.

நாற்பத்துமூன்றும் நாள்

நீ பிரார்த்தனை செய்யப் பழகு

அப். 3: 1; எபே. 6: 18; லூக். 11: 1–13; கொலோ. 4: 2; சங். 5: 3

ஆவிக்குரிய பயிற்சிக்கு உன்னை உட்படுத்தவேண்டுமென்பதை நேற்று ஆராயந்தோம். பயிற்சி பெறவேண்டுமென்பதற்காக மாத்திரமல்ல, சிறந்த ஜீவியம் செய்தற்கு ஏதுவாக மனதை ஒருமுகப்படுத்தற்கு பயிற்சி அனுகூலமாயிருப்பதுபற்றியும் பயிற்சி பெறுவது அவசியமெனக் கூறப்பட்டது.

பிரார்த்தனை செய்யும் வழக்கத்தை ஏற்படுத்திக் கொள்வதே முதற்கண் ஆட்படக்கூடிய நல்ல சாதனமாம். நான் கலாசாலையில் படித்துக்கொண்டிருக்கும்போதே ஒவ்வொருநாளும் எவ்வளவுநேரம் பிரார்த்தனை செய்வதில் பின்னிடுவது என ஒழுங்கு செய்தேன். அக்காலம் ஏற்பட்ட பிரார்த்தனை வழக்கம் இன்றளவும் என்னை விட்டகலவில்லை. ஏதேனும் காரணம்பற்றி ஓரோ சமயம் என் ஜெபத்திற்கு இடையூறு நேர்ந்தால் என் மனதில் ஏதோ ஒன்று விட்டுப்போனதுபோல் தோன்றும். ஜெபம் செய்ய நேரமில்லையெனில் மிகவும் அதிகாலையிலாயினும் எழுந்து ஜெபஞ்செய்யப் பழகவேண்டும். ஒருநாள் நான் வழக்கமாய் எழும் நேரத்திற்கு முன்னமே எழுந்துவிட்டேன். எழுந்ததும் சிறிதுநேரம் ஆகாயத்தை நோக்கிக்கொண்டிருந்தேன். எனக்கு எதிரே சப்தரிஷி நக்ஷத்திரக் கூட்டம் பிரகாசித்துக் கொண்டிருந்தது. மிகவும் அமைதியான அந்த நேரத்தில் வானஜோதிகள் மிகவும் அலங்காரமாய் எனக்குக் காணப்பட்டன. அன்று அவ்வளவு காலையில் நான் எழுந்திராவிட்டால் இந்த அழகிய காட்சியை நான் கண்டு அனுபவித்திருக்கமுடியாது. அதிகாலையிலே எழுந்து கடவுள் படைத்த வானஜோதிகளின் அதி ஆச்சரியப் பேரழகைக்கண்டு மகிழுங்கள். அவ்வழகுக்கோர் அளவில்லை.

இங்கிலாந்து தேசத்திலே பக்தியிற் சிறந்த ஒரு கிறிஸ்தவரிருந்தார். வாலிப காலத்தில் நித்திரைப் பிரிய ராயிருந்தவர். எவ்வளவுதான் தீர்மானித்துக்கொண்டா லும் அதிகாலையில் ஜெபஞ்செய்யக் குறித்த நேரத்திற்கு இவர் எழுந்திருப்பதில்லை. எவ்வளவு கண்டிப்பான ஏற்பாடுகள் செய்தும் தூக்கம் அவரை விடவில்லை. இறுதியில் ஒரு தீர்மானம் செய்தார். தான் ஜெபநேரத் திற்கு எழுந்து ஜெபஞ்செய்யத் தவறுவாராயின் அப் படித் தவறிய நாட்களில் ஒவ்வொருநாளும் ஒவ்வொரு சாவரனை (ரூபாய் பதினைந்து பெறுமான தங்க நாண யத்தை) ஆற்றில் விட்டெறிந்துவிடுவதெனத் தீர்மா னித்துக்கொண்டார். இத்தீர்மானத்தின்படியே பல தினங்களாக நாடோறும் ஒரு சாவரனை ஆற்றிலெறிந்து வர நேர்ந்தது. இவரோ ஏழை, கொடுக்கும் அபராத மோ மிகவும் பெரிது. கடைசியாகக் காலையில் எழுந் திருக்கப் பழகினர். ஜெபவழக்கம் ஏற்பட்டது. பிற் காலத்தில் அவரே சிறந்த பக்திமானாக விளங்கினர்.

கடவுளை எந்த நேரத்திலும் எந்த இடத்திலும் காண முடியுமே, ஒரு நேரத்தையும் ஒரு இடத்தையும் குறிப் பிட்டு அந்நேரத்தில் அவ்விடத்திலேயே இருந்து ஜெபஞ் செய்யவேண்டுமென்பது அவசியமில்லையே என எவரும் வீணே நினைத்துக்கொள்ளவேண்டாம். நீ எந்நேரமும் கடவுளைக் காணலாமெனில் அவருக்கென ஒரு நேரத்தை யும் எவ்விடத்திலும் அவரைக் காணலாமெனில் அவருக் கென ஒரு இடத்தையும் நீ குறித்து வைக்கவேண்டும். நீ குறித்த அந்த வேளையும் அந்த இடமும் விசேஷ ஜெப வேளையாகவும் ஜெப வீடாகவுமிருக்கும். அவற்றைக் குறித்துக்கொள். அப்படியானல் ஜெயத்துக்கு வழி நடத்தும் பாதையில் நீ காலூன்றி நிற்பவனுவாய். ஆவிக்குரிய ஜெபமும் ஆவிக்குரிய போஜனமும் ஒன்றே.

கிறிஸ்துவே, அமைதியான நள்ளிருள் வேளையிலும் தனித்திருப்ப வரே, ஜெயம் பெறும் வழக்கம் எனக்கு உண்டாவதற்கு அனுகூல மாக ஜெப வழக்கத்தில் நான் பழகுமாறு எனக்குப் போதித்தருளும். இன்றே நான் அமர்ந்திருந்து உம்மோடு பேச ஆரம்பிக்குமாறு உதவி செய்தருளும். ஆமேன்.

நாற்பத்துநான்காம் நாள்

ஜீவவார்த்தையை உட்கொண்டிரு

லூக். 4: 16; சங். 119: 11; மத். 4: 4; ஏசா. 55: 2; யோ. 6: 27

நீங்கள் ஜெபஞ் செய்யப்போகையில் புதிய ஏற்பாட்டுப் புஸ்தகமும் பென்சலும் கையில் வைத்துக்கொள்ளுங்கள். என் வழக்கம் அதுதான். இத்தனை ஆண்டுகளும் நான் தனித் தியானஞ் செய்கையில் எனக்கு வெளிப்பட்ட நினைவுகளை அப்போதைக்கப்போதே நான் குறித்துவைத்திருக்கவில்லையானால் நான் தப்பிதம் செய்ததாகவே முடியும். அக்குறிப்புகளை நான் பார்க்கும்போதெல்லாம் வேறொருவர் என்னோடிருந்து எழுதியதுபோற் காணப்படுகின்றன. அவை புதியனவாய் இப்போதுதான் எழுதப்பட்டனபோற் காணப்படுகின்றன.

இங்கே சர்க்கார் உத்தியோகம் பார்க்கும் ஒரு ஐரோப்பியரோடு நான் பேசிக்கொண்டிருந்தபோது அவர் தாம் இந்தியாவிற்கு வந்த காலத்தில் தமது ஜீவியத்திற்கு ஆதாரமாக எதையும் குறித்துக்கொள்ளாமலே வந்ததாகச் சொன்னார். அவர் புறப்படுகிற சமயத்தில் அவருடைய தாயார் அவருக்குப் புதிய ஏற்பாட்டுப் புஸ்தகம் ஒன்று கொடுத்தாராம். இவர் அதை வாங்கித் தமது பெட்டியின் அடியிலே போட்டுவைத்தார். இந்தியாவுக்கு வந்து வேலைபார்க்கையில் ஒரு நாள் அவர் சுற்றுக் கிராமங்களுக்குப் போயிருந்தபோது அங்கே சுகவீனமாகித் தளர்ச்சியுற்றிருக்கும்போது தமது தாயார் தமக்குக் கொடுத்த புதிய ஏற்பாட்டின் ஞாபகம் வரவே பெட்டியின் அடியிற்கிடந்த அந்தப் புத்தகத்தைத் தேடி எடுத்தார். அதைத் திறக்கவே 'மீட்கப்பட்டேன்' எனும் வார்த்தை அவர் கண்ணிற்பட்டது. அந்த ஒரே வார்த்தை அவருடைய ஜெப ஜீவியத்திற்குக் காரணமாயிற்று. தோல்வியும் சோர்வும் அகன்றன. ஜெயமும் புதிய ஜீவியமும் தோன்றின. இது ஆச்சரியமல்ல. "மீட்பு" எவ்வளவு சிறந்த பதம்!

அப்படிப்பட்ட வார்த்தைகள் மிகப் பல வேதாகமத்திலே யுண்டு. உங்கள் கஷ்டங்களில் உங்களுக்கு ஏதேது தேவையோ அவ்வத் தேவைகளை நிவிர்த்திசெய்தற்கு அவை அங்கங்கே பயன்படுவனவாம். இங்கு ஜீவனே

ஜீவனோடு பேசுகிறது. இத்திருவார்த்தைகளுள் மறைந்திருப்பவர் கடவுளே. அவர் அவற்றுள் நின்று வெளிப்பட்டு அவ்விடங்களில் உங்களைச் சந்திக்கிறார். எனது கிறிஸ்தவ ஜீவிய ஆரம்பத்தில் நான் அளவுகடந்த பரவசவயத்தனாகிச் சிற்சில வேளைகளில் அவ்வசனங்களை முத்தமிடுவதுண்டு. அவை எனக்கு அவ்வளவு அருமையாகவும் ஜீவனும் இரட்சிப்பும் அளிப்பனவாகவுமிருந்தன. முத்தமிட்டாலென்ன? அத்திருவசனங்களிலே கடவுளின் திருமுகப் பிரகாசத்தை நான் காண்பதில்லையோ? அங்ஙனமாயின் அவ்வசனங்களை முத்தமிடுவதால் அவரது திருக்கன்னங்களிலேயே முத்தமிட்டதாகுமே. இப்படி முத்தமிடுவதால் வார்த்தைகளின் மூலமாக மாத்திரமேயன்றிச் செய்கையின் மூலமாகவும் நமது நன்றியை அவருக்குக் காட்டுவதாகும்.

சிற்சில வேளைகளில் இத்திருவசனங்கள் நமக்கெனவே, நமது பேரைச் சுட்டிக்காட்டி நமக்கென்றே எழுதப்பட்டனபோற் காணப்படும். அமெரிக்காவிலிருந்த சீன தேசத்தாராகிய என் சிநேகிதரொருவர் தன் சுயநாட்டு வேட்கை மிஞ்சியவராய் அமெரிக்காவிலிருக்க மனமற்றுக் கவலையும் கஷ்டமுமாயிருந்த சமயத்தில் தாம் ஆறுதலடையும்படி தமது புதிய ஏற்பாட்டைத் திறந்து வாசிக்கப்போகையில் "இதோ, நான் எப்போதும் உன்னோடிருக்கிறேன்" எனும் திருவசனம் அவருடைய கண்முன் காணப்பட்டது. இவ்விதமாகவே அடிக்கடி வேதவாக்கியங்கள் நமக்கெனவே எழுதப்பட்டனபோற் காணப்படும்.

டென்மார்க்கு தேசத்திலே பிள்ளைகள் சாப்பிட்டு எழுந்தவுடன் தங்கள் தாய் தந்தையரோடு கைகுலுக்கி எங்களுக்குக் கிடைத்த போஜனத்திற்காக உங்களுக்கு நன்றி செலுத்துகிறோம் என்று சொல்லுகிற வழக்கமுண்டு. உங்கள் ஜெபவேளை முடிந்த உடனே நீங்களும் ஒவ்வொரு நாளும் அதே பிரகாரமாக உங்கள் பரமபிதாவுக்கு நன்றிசெலுத்தவேண்டும்.

கிறிஸ்துவே, உமது திருவசனத்திலே உமது ஜீவ அப்பத்தைக் கண்டு அதைப் புசித்துத் திருப்தியாகிறோம். இந்தப் போஜனத்திற்காக நன்றிசெலுத்துகிறோம். ஆமேன்.

நாற்பத்தைந்தாம் நாள்

பிறருக்குப் பகிர்ந்தளிக்கும் வழக்கம்

மார். 10: 1; மத். 10: 8; மார். 5: 18–20; 2 ராஜா. 5: 3; 1 யோ. 1: 3

ஜெபசிந்தை, கடவுளின் வார்த்தை நமது ஜீவியத்தில் உட்கொள்ளுதல் என்பவற்றைப் பார்த்தோம். இவ்விரண்டினாலும் விளைவதாகிய மற்றொன்றுண்டு. அதாவது பிறருக்கும் பகிர்ந்தளிக்கும் தன்மை. முதலிரண்டும் நமக்குட் பிரவேசிப்பன. மூன்றாவதாகிய இதுவோ நம்மினின்று வெளிப்படுவது. உள்வருவன இல்லையாயின் வெளிப்படுதற்கும் யாதொன்றுமில்லாதேபோம். அங்ஙனமே வெளியே போய்க்கொண்டிருப்பது நின்றுவிட்டால் உள்வருவதும் நின்றுபோம்.

இதனையே பகிர்ந்துகொள்ளும் சாதனமெனலாம். ஜெபிக்கவும் திருவசனத்தை வாசிக்கவும் சிக்ஷைக்குட்பட்டு எவ்வளவுதூரம் பழகிக்கொண்டோமோ நமது செய்கை போதனை முதலியவற்றின் மூலமாய் நாம் கண்டு அனுபவிப்பவைகளைப் பிறர்க்குக் கொடுத்துப் பகிர்ந்து கொள்ளவும் அவ்வளவுதூரம் பழகவேண்டும். பலர் இப்படிச் செய்வதில்லை. அவர்கள் ஒழுங்காக உண்மையில் தனித்து ஜெபஞ் செய்கின்றனர். எனினும் தாம் அனுபவிக்கும் தெய்வீக நன்மைகளைப் பிறர்க்கு அளிக்க முன்வருவதில்லை. ஏதோ தற்செயலாய் விளையும் சம்பவம், சம்பாஷணை இவற்றில் தங்கள் அனுபவத்தைப் பிறர்க்குக் கூறித் தாம் அனுபவிக்கும் நன்மையைப் பிறரும் அனுபவிக்கத் தூண்டுகிறார்கள். அவ்வளவும் நல்லதே. எனினும் இது தற்செயலாய்ப் பகிர்ந்தளிக்க நேரிட்டதே யல்லாது பகிர்ந்தளிக்க வேண்டுமென்னும் தீர்மானத்தாலுண்டானதல்ல. கடவுளோடு நமக்குள்ள அந்நியோந்நியம் முதிர்வதினாலே பகிர்ந்தளிக்கும் தன்மையும் நம்மில் வளரவேண்டும். வழியிலே

காலொடிந்து கிடந்த நாயொன்றை ஒரு டாக்டர் கண்டு அதைத் தமது வீட்டிற்குக் கொண்டுபோய் அதன் காலைக் கட்டி அது நன்ருய்ச் சுகமாகும்பரியந்தம் அதைத் தம்மிடம் வைத்திருந்தார். அது அவர் வீட்டிலே அங்குமிங்கும் ஓடித் திரிந்துகொண்டிருந்தது. பிற்பாடு ஒருநாள் காணுமற்போயிற்று. நாய் நன்றிகெட்டுத் தன்னைவிட்டோடி விட்டதென டாக்டர் நினைத்தார். அடுத்தநாள் அவருடைய அறைக் கதவை யாரோ பரண்டுவதுபோற் கேட்டது. அவர் திறந்து பார்க்கவே சுகமான நாய் வந்துவிட்டது. அது மற்ருெரு சிறிய நாயையும் தன்னேடு கூட்டிவந்திருந்தது. அந்தச் சிறிய நாய் காலொடிந்து நொண்டியாயிருந்தது. அந்த நாய்க்கிருந்த அறிவு இயற்கையறிவு, அதுவே சரியான அறிவு. கிறிஸ்துவானவர் உன்னைக் குணமாக்கவில்லையா? அப்படியானுல் சுகவீனமாயிருக்கும் பிறரும் உன்னைப் போலவே குணமாகவேண்டுமென நீ அப்படிப்பட்டவர்களைத் தேடி அவரிடம் கொண்டுவரவேண்டியதே சரியானதும் இயல்பானதுமான முறையாம்.

"கிறிஸ்துவை உனக்கு அறிமுகமாக்கி அவரை உனக்குத் தெரிவிக்கிறேன்" எனத் தன் செயலாலும் வாக்காலும் கிறிஸ்துவை அறிவிப்பவரே கிறிஸ்தவர் என ஒருவர் கூறினுர். கிறிஸ்தவர் என்பதற்கு இதனினும் சிறந்த லக்ஷணிப்பு வேறில்லை. உனது கிறிஸ்தவ ஜீவியம் இவ்விதமாகவே எண்ணப்படும்படி செய்வாயா? அப்படியானுல் நீ அனுபவிக்கும் நன்மையைப் பிறரோடு பகிர்ந்து அனுபவிக்கவேண்டும் எனும் பழக்கத்தை உன் மனதில் ஆழமாய்ப் பதித்துக்கொள்ளவேண்டும்.

கிறிஸ்துவே, எங்கள் இதயம் உம்மால் குணமானது. நீர் குணப்படுத்தி எங்களுக்கு அளித்த நன்மையை நாங்கள் மற்றவர்களுக்கும் காட்டும்படி எங்களுக்கு உதவிபுரியும். நொண்டியும் முடமுமாய்த் தொய்ந்திருக்கும் ஆன்மாக்களை உம்மிடம் நடத்திக்கொண்டு வரும்படி இன்றே எங்களைத் தூண்டியருளும். ஆமேன்.

நாற்பத்தாறும் நாள்

புதிய வாழ்க்கையும் பொழுதுபோக்கு விளையாட்டுகளும்

மார். 6: 31; 2 தீமோ. 2: 15; 1 கொரி. 9: 24–27; 10: 31

இப்பொழுது உனது புதிய ஜீவியத்தை உனது பொழுதுபோக்கு வேலைகளுக்கிசையுமாறு சம்பந்தப் படுத்திக்கொள்ளவேண்டும். மற்றொருவிதமாய்க் கூறி ஞல் உனது அப்பியாசங்களை உன் புதிய ஜீவியத்திற்கு இசையுமாறு செய்துகொள்ளவேண்டும். உனது பொழுது போக்கு அப்பியாசங்களையே முக்கியமாகக்கொண்டு எப் போதும் புதிய ஜீவியத்தையே அதற்கு இசைந்திருக்கும் படி செய்துகொள்ளக்கூடாது. அப்படிச் செய்தால் உனது புதிய ஜீவியம் மாண்டு மடியும். உனது தேக மனே அப்பியாசப் பழக்கங்களை ஆராய்ந்து அவை புதிய ஜீவியத்தை வளர்ப்பதற்கோ தளரச் செய்வதற்கோ எதற்கு ஏதுவாகின்றனவென்பதைக் கவனிக்கவேண்டும். பொதுவாக நீ எப்பொழுதும் சுகமும் பலமுமாயிருப்ப தற்கு ஏதுவாயிராதவிடத்து அப்பழக்கங்களை விட்டுவிட வேண்டும்.

சில அப்பியாசங்கள் உயிரை விருத்தியாக்காமல் அதிசீக்கிரம் களைப்பை யுண்டுபண்ணுவன. ஆத்துமாவும் சரீரமும் தடித்துக் கவைக்குதவாமற் கனத்துப் போவ தற்கு அவை ஏதுவாம். அவற்றை விட்டுவிடவேண்டும் அல்லது ஆவிக்குரிய சரீர நல்வளர்ச்சிக்கேதுவாக அவற்றை மாற்றவேண்டும். சினிமா படங்களிற் சிற்சில நல்ல உற்சாகம், மேலான ஜீவிய எண்ணம் முதலிய வற்றை நம்மில் எழுப்புகின்றன. ஆனல் அப்படங்களுள் சில நம்மை உள்ளாகப் பாழ்படுத்தக்கூடியன. ஜீவியத் தில் வெளியே பரப்பிக்காட்டவும் கூறவும் தகாத மர்மங் களை அலட்சியமாகப் பிரசித்தப்படுத்தி ஜீவியத்தின் அரும் சிறப்புக்களை அலங்கோலமாக்கி விடுகின்றன. அவற்றைப் பார்ப்பதால் நமது மனம் உற்சாகமடைவ

தில்லை. ஜீவியப் பெருநோக்கை மதிப்பார் எவரும் அத்தகைய படக்காட்சிகளைப் பார்த்தலாகாது. அங்ஙனம் பார்ப்பதானது அலங்காரமாயமைந்த அறையினுள் பன்றியைப் படுக்கவைப்பது போலாம்.

பற்பல புஸ்தகங்களைப்பற்றியும் அப்படியே கூறக் கூடியதாயிருக்கிறது. சில புத்தகங்களை வாசித்து முடித்தவுடன் நமக்குப் பலவீனமும் களைப்பும் துர் எண்ணங்களும் விளைவதுண்டு. இவை ஆவிக்குரிய நல் வளர்ச்சிக்கேதுவாயினவல்ல. உலக ஜீவியத்தை நன் குணர வேண்டுமானால் கைக்கு வரும் புத்தகங்களையெல்லாம் வாசித்தறிய வேண்டுமென நினைப்பது தவறு. குடல் ஜுரம் இன்னதென அறிய விரும்பும் டாக்டர் அவ் வியாதியை உண்டுபண்ணும் சிறிய பூச்சிகளைத் தாமே உட்கொண்டு அறியவேண்டுமோ? அழுக்கு இன்னதென அறிய விரும்புமொருவன் தான் சேற்றிலும் சக்தியிலும் புரண்டுருள வேண்டுமோ? அழுக்கிலே பழகிவிட்டால் சுத்தத்தின் மேன்மை தெரியாது. சுத்தமாயிருக்கப் பழகினால் அழுக்கின் இழிவு நன்றாய் விளங்கும்.

ஓய்வும் ஒழிவுமின்றிச் சீட்டாடுவதிலேயே நேரத்தைப் போக்கினால் சீட்டு விளையாடும்போதுண்டாகும் யோசனைகளும் எண்ணங்களும் ஆவிக்குரிய விஷயமாய் நம்மைப் பலவீனப்படுத்தற் கேதுவாம். சீட்டு விளையாட்டு உனது ஜீவியத்தை உயர்வாக்கவோ தாழ்த்திப் பலவீனமாக்கவோ எதற்கு சாதகமாயிருக்கிற தென்பதை யோசித்துப்பார்க்கவேண்டும்.

உன் ஜீவிய முழுவதையும் ஆராய்ந்து நீ காலப்போக்காகவும் சுக வாழ்வுக்காகவும் அப்பியசிக்கும் விளையாட்டுப் பழக்கங்கள் உண்மையாகவே உனக்கு நன்மையாயிருக்கின்றனவாவென யோசிக்கவேண்டும்.

கிறிஸ்துவே, ஆவியிலும் சரீரத்திலும் எக்காலமும் பூரணமாய் விளங்கியவரே, நான் முழுவதுமாகச் சரியானவனாகும்படி என்னுடைய விளையாட்டுகள் அப்பியாசங்கள் முதலியன எனக்கு அனுகூலமாயிருப்பதற்கு நீரே துணைபுரிந்தருளும். ஆமேன்.

நாற்பத்தேழாம் நாள்

சமூக ஐக்கியம்

எபி. 10: 25; அப். 2: 43-47; சங். 133: 1

அப்போதுதான் புதிய ஜீவியத்திற்குட்பட்ட ஒரு அம்மாள் என்னிடம் வந்து "நான் ஏதாவது சபையில் சேர்ந்திருக்க வேண்டுமென நீங்கள் நினைக்கிறதில்லையா" எனக் கேட்டார். பலர் கூடிய ஒரு சபையில் தானும் சேர்ந்து ஐக்கியமாயிருக்க வேண்டுமெனும் இயல்பான அறிவு அந்த அம்மாளுக்கு உண்டானது சரிதானே? ஆம், அது சரியே.

ஆவிக்குரிய வாழ்வானது தனியே இருந்து வாழுவ தன்று. அந்த வாழ்வு அதிகமதிகமாய்த் தன்னையே சார்ந்திருப்பதெனினும் அதே சமயத்தில் அது பலரோடு ஐக்கியப்பட்டு வாழ்வதுமாம். இக்குணங்களைப் பிரித்து விட முடியாது. சபையென ஒன்றில்லாதபடி இன்று அழித்துவிட்டால் நாளையதினம் அதற்குப் பதிலாக வேறொன்றைக் கூட்டிச் சேர்க்கவேண்டும். ஆவிக்குரிய வாழ்வானது தனித்தனியாக ஒவ்வொருவரிடத்திலும், கூட்டமாக ஒரு சபையினிடத்திலும் ஏககாலத்தே விளங் குவதாம். ஜனசமூகத்தோடுகூடிக் கலப்பதில்லை, தன்னந்தனியே வாழ்வோம் என்பது தவறும். சமூக வாழ்க் கையோடு தனது வாழ்க்கை சம்பந்தமுடையது. ஒவ்வொ ருவருக்கும் ஜனசமூகத்தோடு மிகுந்த தொடர்புண்டு.

சபையை நான் ஆதரிக்கவேண்டியது கடமை என உண்டாகும் அபிப்பிராயம் ஒருவாறு தவறே யாகும். வெளியே உள்ளவரால் உனக்கென ஏற்படுத்தப்பட்ட ஒரு கடமையை நீ நிறைவேற்றுவதினால் சபையென ஒன்று உண்டாகி நிலைப்பதில்லை. ஒவ்வொருவர் இதயத்திலு முள்ள உள்ளான கோட்பாடே சபைக்கு ஆதாரமாகும். ஒரு சபையாகச் சேர்ந்திருக்க வேண்டுமெனும் உணர்வு இயல்பாகவே உண்டாவது. மூடி பிரசங்கியாரிடம் ஒருவர் சென்று தனக்குச் சபையென ஒன்று இருக்க வேண்டியது அவசியமான காரியமன்றெனக் கூறப் பிர சங்கியார் வாயினால் யாதும் பதிலுரையாமல் அப்போது தமக்கு முன் எரிந்துகொண்டிருந்த அடுப்பிலிருந்து

ஒரு பெரிய நெருப்புத்தழலை யெடுத்து வெளியே வைத்தார். சிறிது நேரத்திற்கெல்லாம் அந்தத் தழல் அவிந்து குளிர்ந்தது. பிரசங்கியாரும் அவரிடம் கேட்கவந்தவரும் அதைக் கவனித்துக்கொண்டிருந்தனர். இதுவே அவர் கொடுத்த சரியான பதில். நெருங்கிக்கிடந்த தழல்களினின்று ஒரு தழலைப் பிரித்துத் தனியே வைக்கவே அது குளிர்ந்துபோயிற்று.

எனது வாலிபப் பிராயத்தில் நான் கிறிஸ்தவனான போது ஓர் சபையைச் சேர்ந்த அங்கத்தவனாகி அச் சபையால் நடத்தப்பட்டிராவிட்டால் எனது கிறிஸ்தவ ஜீவியம் அக்காலத்தே அழிந்து போயிருக்குமென்று திட்டமாய்ச் சொல்லுவேன். நான் மகிழும்போது அவர்கள் என்னோடு சேர்ந்து மகிழ்ந்தார்கள். நான் தளர்வுற்ற காலையில் அவர்கள் என்னைப் பலப்படுத்தி உற்சாகப்படுத்தி வந்தார்கள். ஒரு முறை தவறி விழுந்தேன், படுகுழியில் தவறிவிட்டேன், எல்லோரும் என்னில் அன்புடையராய் என்னைக் கண்டியாமலும் குறை கூறாமலும் எனக்காக ஜெபித்து அக்குழியினின்று வெளியே தூக்கிவிட்டனர். அவர்கள் உதவியினால் நான் மறுபடியும் கிறிஸ்துவின் பாதையில் நடக்கத் தலைப்பட்டேன்.

சபையிலே அறிவீனக் கோட்பாடுகளும் தாறுமாறான கொள்கைகளும் சடங்குகளும் முறைகளும் உண்டென்பது உண்மையே யெனினும் திருச்சபையே என் ஆவிக்குரிய தாயாகும். தாய் தளர்ச்சியுற்றுக் கூனிக் குனிந்தாள், முகஞ் சுருக்கு விழுந்து அழகிழந்தாள் என்பதினால் தாயின்மீதுள்ள அன்பு குறையுமோ? நீங்கள் இந்தப் புதிய ஜீவியத்தை ஆரம்பிக்கும்போது பெரிய சபையாகிய குடும்பத்திலே ஒரு அங்கமாய் ஆரம்பிக்கிறீர்கள் என்பதை நான் உங்களுக்கு மறுபடியும் சொல்லுகிறேன்.

கிறிஸ்துவே, எங்களுக்கு மிகவும் அவசியமானது இன்னதெனக் கண்டறிந்தவரே, கடவுளே பிதாவாகவும் நீரே மூத்த சகோதரனாகவும் விளங்கும் சபையாகிய பெருங் குடும்பத்தோடு எங்களை இணைத்தவரே, இந்தத் திருக்குடும்பத்தில் நாங்களும் சேர்ந்திருப்பதற்கென எங்களை அழைத்ததற்காக உமக்கு நன்றி செலுத்துகிறோம்: ஆம், நன்றி செலுத்துகிறோம். ஆமேன்.

நாற்பத்தெட்டாம் நாள்

கிறிஸ்தவ ஜனசமுதாயம் வெற்றியடையத்தக்கதாய் நடக்கிறதா?

அப். 19: 12; 6: 20; 1 கொரி. 3: 1-4

இதுவரை கூறிவந்ததிலிருந்து, நாம் நமது புதிய ஜீவியத்தை ஆரம்பித்த உடனேயே தற்கால ஜனசமூக ஒழுங்குகளுக்கு இசைந்து அதற்கும் நமக்குமுள்ள சம்பந்தத்தைப்பற்றிக் கவனிக்கவேண்டியதாகுமோ என நினைக்கலாம். அப்படி நினைப்பது தவரும். காரியங்களை இன்னும் சற்று நோக்குவோம்.

அப்படி இசைந்து நோக்குவதானது கிறிஸ்தவர்களிடையே காணப்படும் வெற்றியுள்ள வாழ்வின் கஷ்டங்களைக் கவனியாமலே விட்டுவிட்டதாகும். கிறிஸ்தவ ஜனசமூகம் பலதரப்பட்டவர்களாலானது. குணப்பட்டோர், அரைகுறையாய்க் குணப்பட்டோர், குணப்படாதோர் ஆகிய மூவகையாரும் தற்காலம் கிறிஸ்து சபை யெனக் கூறப்படுவதில் இருக்கின்றனர். கிறிஸ்து சபைகளில் உள்ளவர் அனைவரும் வெற்றியுள்ள வாழ்வே வாழ்கின்றனர் என அச்சபைகளின்மீது மிகுந்த அபிமானமுடையவரும் சொல்லத் துணியார். இங்குமங்கும் சிறிது காணப்படலாம். ஆனால் கிறிஸ்தவ ராஜ்யங்களை முழுமையுமாக நோக்கும்போதோ ஆவிக்குரிய வெற்றியுள்ள வாழ்வு அங்கே இல்லையென்றே கூறவேண்டும். பரிதாபத்தோடும் பச்சாதாபத்தோடும் அதை நோக்கவேண்டியதாகிறது. இப்படி இருப்பதற்குக் காரணமென்ன?

இந்நாட்டில் ஒரு சபையிலே நான் பிரசங்கித்துக் கொண்டிருந்த சமயத்தில் புதிய ஜீவியத்தின் மீதுள்ள இந்த ஆசையை வெளியிடும்படி கேட்டேன். அநேக சபையார் அப்படி வெளியிட்டதுண்டு. நான் ஜெபித்தேன்.. சபை குரு என் ஜெபத்தை மொழிபெயர்த்துக் கொண்டு வந்தார். "கடவுளே, இந்த ஜனங்களுக்கு

இன்னது தேவை என்பதை நாங்கள் அறியமாட்டோம், நீரே அதை அறிவீர்'' என்று நான் இங்கிலீஷ் பாஷையில் சொல்ல, மொழிபெயர்த்து வந்த சபை குரு "கடவுளே, இந்த ஜனங்களுக்கு இன்னது தேவை என்பதை நீர் அறிவீர், நாங்களும் அறிவோம்'' என்று மொழிபெயர்த்தனர். அந்த குருவானவர் அதை விட்டுவிட முடியாது. அநேக குருமார் தாங்கள் தனித்திருந்து ஜெபிக்கையில் தங்கள் இருதயத்திலே "கடவுளே, எனக்கு இன்னது தேவை என்பதை நீர் அறிவீர், எனக்கும் தெரியும்'' என்று சொல்லவேண்டும். இதுவே வெற்றியுள்ள வாழ்வு.

ஆவிக்குரிய விஷயமாய் நாம் நரைவிழுந்த வயோதிகராய் விட்டதுபோல் தோற்றுகிறது. கிறிஸ்தவர் என்போரிடை காணப்படவேண்டிய உற்சாகம், சந்தோஷம், ஜெபவாஞ்சை, சுறுசுறுப்பு, மகிழ்ச்சி முதலியன பலரிடை மங்கிக் குன்றிக் குறைந்து போனதுபோற் காணப்படுகிறது. நல்லொழுக்கத்திற்குத் தூண்டும் வல்லமை நம்மில் குறையவே திமிர்வாதம் கொண்டவர்போல் தீயொழுக்கங்களுக்கு எதிர்த்து நிற்க வலியற்றுக் கிந்திக் கிந்திக் குந்தி நடக்கிறோம். அதை மாற்றுவதற்கோ வலிமையற்றோம்.

வெற்றியுள்ள வாழ்வின் அந்தரங்கம் இன்னதென்பதைக் கண்டுகொள்ளாதிருப்பதே கிறிஸ்தவர்களிடை இன்றளவிற் காணப்படும் பெருங் குறைவாம். இதைக் கண்டு பிடிக்கவேண்டியதே பேர் அவசியம். இதைக் கண்டுபிடித்துவிட்டால் சகல நற்காரியங்களுக்கும் இடமுண்டு. கண்டுபிடியாவிட்டால் கிறிஸ்தவ ஜீவியத்திலே வரட்சி, பிரீதியின்மை, பலன்தராமை முதலியன உண்டாகும்.

கிறிஸ்துவே, எங்களுக்கு அவசியமானது இன்னதென்பதை நீர் தூண்டிக் காட்டுகிறீரோ? அப்படியானால் நாங்கள் அந்த அந்தரங்கத்தைக் கண்டுபிடித்து எங்கள் ஜீவியத்திற் கனுகூலமாக அதை உபயோகித்துக்கொள்ளும் வரைக்கும் அதை இடைவிடாமல் தேடும்படி எங்களுக்குத் துணைபுரிந்தருளும். ஆமேன்.

நாற்பத்தொன்பதாம் நாள்

வெற்றியுள்ள வாழ்வு எப்படிப்பட்டது?

1 தெச. 5: 23, 24; எபே. 4: 11-13

வெற்றியுள்ள வாழ்வு இன்னதென்பதை இப்பொழுது பார்ப்போம். நமது உயிர்வாழ்க்கையின் ஒவ்வொரு சிறு செயலிலும் பிறரோடு நமக்குள்ள சம்பந்தங்கள், தொடர்புகள் அனைத்திலும் கிறிஸ்துவின் ஜீவியம் நம்மை ஆட்கொண்டு நடத்துவதே வெற்றியுள்ள வாழ்வாகும்.

முதலாவது நமது இயற்கையின் ஒவ்வொரு பாகத்திலும் கிறிஸ்துவின் ஜீவன் காணப்படுவது. தங்கள் வாழ்க்கையில் சிற்சில விஷயங்களிலே கிறிஸ்துவானவர் ஒருவாறு ஆளுகைசெய்யச் சம்மதித்திருக்கும் கிறிஸ்தவர் பலருண்டு. கிறிஸ்துவானவர் அற்பசொற்பமாய் ஆளுகை செய்வதற்கு அவர்கள் இடங்கொடுப்பார்கள். மற்றும் பல விஷயங்களிலோ கிறிஸ்துவின் ஆளுகைக்கு இடமில்லை. இவைகள் அவர்கள் சுயாதீனத்திலிருப்பன. இவைகள் அவருக்கு விலக்கப்பட்டன. நமக்கெனப் பிரத்தியேகமாய் வைத்துக்கொண்ட காரியங்கள் விஷயமான தீர்மானங்கள் அனைத்தும் நம்முடையவைகள். இவ்விதமாகவே, ஜீவியத்தில் இருவித ஆட்சி என்பது ஏற்படுகிறது. பிரிட்டிஷ் அரசாங்கத்தார் சிற்சில இலாக்கா அதிகாரத்தை தங்கள் கையில் வைத்துக்கொண்டு வேறு சில இலாக்காக்களின் அதிகாரத்தை இந்தியருக்களித்த போது இதை "இரட்டையாட்சி" என்றனர். இம்முறை கடைசிவரை உருப்பெற்றுச் சித்தியடையவில்லை. ஆவிக்குரிய விஷயமாய் மனிதனுடைய ஆன்மாவில் இரட்டையாட்சி ஏற்படுமானால் அதுவும் சித்தியாவதில்லை. இது தெரிந்தும் எண்ணிறந்த கிறிஸ்தவர் இரட்டையாட்சி முறையைக் கையாடுகின்றனர். ஆவிக்குரிய தங்கள் வாழ்வு திருப்திகரமாயிருக்கவில்லை என ஆச்சரியப்படு

கின்றனர். அந்த வாழ்வு வேறுவிதமாயிருக்க முடியாது. திருப்தியற்ற வாழ்வாகவே முடியும். உள்ளே பிரிவினை ஏற்பட்டால் வாழ்வு பலிதப்படாது, சந்தோஷமா யிராது. அது ஒரே ஆட்சிக்குட்படவேண்டும். இதைத் தெரிந்துகொள்ளவேண்டியது உன் கடமை. ஒன்றில், நீ கிறிஸ்துவை உனது வாழ்விலிருந்து முழுவதுமாய் விலக்கி அவரை முற்றிலும் மறந்துவிட்டு முழு ஆளுகை யையும் நீயே நடத்தவேண்டும். அங்ஙனமாயின் பிரிவினை யின்றி முற்றிலும் தன்னய அரசாட்சியாய் முடியும். அன் றேல் சகல காரியங்களையும் முற்றிலுமாகக் கிறிஸ்துவின் ஆளுகைக்கு விட்டுவிடவேண்டும். அப்படியானால் அது ஒருமுகப்பட்டதாய் முழுவதும் கிறிஸ்துவில் ஆட்கொள் ளப்பட்டதாய் விளங்கும்.

வேறே வழியில்லை. எனினும் எண்ணிறந்தோர் வேறு வழியொன்று தேடிக் கலப்பு ஆளுகைக்கென முயல்கின்றனர். அது முடியாது, நடவாது. கிறிஸ்துவின் மேல் நமக்கு இன்னும் சிறிதளவாயினும் அன்புண்டு. அந் நிலைமையில் இரட்டையாட்சிக்குட்பட்ட நமது வாழ்வு சந்தோஷமிழந்து நையும். வாழ்விலே இருபிரிவான ஆட்சிக்கும் போராட்டம். அதைக் கிறிஸ்தவ ஜீவியப் போராட்டமென்கிறோம். சிறிதளவும் கிறிஸ்துவை அறியாதவர்களாகிவிட்டால் இந்தப் போராட்டத்திற்கு இடமில்லை. வாழ்வு சந்தோஷமாயிருக்கலாம். இருக்க லாம் என்பதேயன்றி இருக்கும் என்பதல்ல. இரட்டை யாட்சி சித்திபெறவில்லை என்பதை மறக்கக்கூடாது. நாம் இரட்டையாட்சிக்குட்பட்டால் நம்மைக் கிறிஸ்த வர்களெனச் சொல்லிக்கொள்ளமுடியாது.

கிறிஸ்துவே, எங்கள் ஜீவியத்தில் ஒரு பாதிக்கு உம்மை அரசராக்கி மற்றொரு பாதியை வேறு ஆளுகைக்கு உட்படுத்த எண்ணினோம். எங்களை மன்னித்தருளும். இரு தெய்வங்களை எங்ஙனம் வணங்குவது, எங்களை மன்னித்தருளும். ஆமேன்.

ஐம்பதாம் நாள்

வெற்றியுள்ள வாழ்வு

ஆமோஸ் 5: 21–24; 8: 4–6; மத். 6: 24

நமது வாழ்வில் நமது ஒவ்வொரு செயலிலும் கிறிஸ்துவே வெற்றி சிறந்து ஆளுகை செய்யவேண்டுமென்பதை முந்தின நாள் பார்த்தோம். இன்று, பிறரோடு நமக்குள்ள சம்பந்தம் தொடர்பு அனைத்திலும் கிறிஸ்துவே நம்மை ஆளவேண்டுமென்பதை ஆராய்வோம்.

நமது ஆன்மாவில் இருவர் ஆட்சிக்கு இடங்கொடுத்தால் விளைவது மோசமே. மற்றொருவிதமான இரட்டையாட்சியுமுண்டு. அதுவும் மோசகரமானதே. அதாவது, நாமே நம்மை ஆள்வதோ, சுற்றியிருக்கும் ஜனசமூகம் நம்மை ஆள்வதற்கிடங்கொடுப்பதோ என்பது. இவ்வகையான இரட்டையாட்சியும் சித்தியடையாது. சகல ஜனசமூகத்தோடுமுள்ள நமது தொடர்பையும் ஆண்டு நடத்தவேண்டியவர் கிறிஸ்துவே.

மிகப் பலர் இவ்விஷயத்தைச் சரியாய்க் கவனிப்பதில்லை. தாங்கள் சம்பந்தப்பட்ட அளவில் தாங்களாகச் செய்யும் காரியங்களில் முழுவதும் கிறிஸ்துவின் ஆளுகைக்குட்படுவார். ஆனால் ஜனசமூக சம்பந்தம், பொது ஜன செல்வவிர்த்தி முதலிய காரியங்களிலோ கிறிஸ்துவின் ஆளுகைக்கு இடமில்லை. இவ்விஷயங்களில் வேறு அபிப்பிராயங்களும் கோட்பாடுகளும் தங்களை ஆண்டுகொள்ள இடங்கொடுக்கின்றனர்.

இவ்விருவகை இரட்டையாட்சிகளுள் மிகக் கேடானதெதுவெனக் கூற வகையில்லை. ஒருவேளை பிந்தினதே மிகக் கேடுள்ளதாகலாம். உட்பிரிவினையாலுண்டாகும் துக்கமும் சஞ்சலமும் இவ்வளவு எனச் சொல்லமுடியாதபடி பெருகும். ஆனாலோ உள்ளான காரியங்களில் கிறிஸ்துவின் ஆளுகைக்கும் புறத்தேயுள்ள காரியங்களில்

பிசாசின் ஆளுகைக்கும் உட்பட்டு இருவித ஆளுகைக்கு இடங்கொடுப்பதால் விளையும் துக்கமும் சஞ்சலமும் முன்னினும் அதிகமாம். தற்கால நாகரிகமானது இவ்விஷயத்தில் தனக்குள்தானே பிரிவினையுடையதா யிருப்பதால் அந்த நாகரிகம் நிலைநிற்பது கூடாதகாரியமாம். நமது இதயத்தில் இந்த இரட்டையாட்சி ஏற்பட்டிருப்பதால் நமது தற்கால ஜீவியம் சந்தோஷத்தை இழந்து திமிர் வாதநோய்கொண்டது.

மனுதர்ம சாஸ்திர ரீதியாய்த் தனிவாழ்வும் சமூக வாழ்வுமெனப் பிரித்தோமெனினும் அதுவும் அத்தனை பொருத்தமுடையதன்று. திட்டவட்டமாய் ஆராய்ந்தால் இவ்வாறு பிரிப்பது அத்தனை சரியன்றென விளங்கும். புறத்தேயுள்ள சம்பந்தமென ஒன்றில்லை. எல்லாம் உள்ளான ஜீவியமென்றே முடியும். எனக்குப் பிறரோடு வெளியே ஏற்படும் சம்பந்தமானது தனி வாழ்வென நான் பிரித்துப் பாகுபாடு செய்ததனோடு மிகவும் மாறுபட்டு நிற்பதன்று. நமது உள்ளான ஜீவியமானது எவ்வளவுதூரம் வெளியேயுள்ள சம்பந்தத்தால் விளைவது எவ்வளவுதூரம் உள்ளாகவே யுள்ளவற்றோடுள்ளது என ஆராய்ந்தால் எல்லாம் ஒருவாறு உள்ளான ஜீவியமெனவே முடியும். வாழ்வனைத்தும் உள்ளான வாழ்வே.

கிறிஸ்துவே, என் முழு ஜீவியமும் முற்றிலும் உமக்கே ஆட்பட வேண்டுமென நீர் கேட்பதற்காக உமக்கு நன்றி செலுத்துகிறேன். எங்கள் ஜீவியத்தை இரட்டை ஆளுகைக்குட்படுத்தி எங்களைப் பாழ்படுத்திக்கொள்ள விடாதேயும். நாங்கள் எங்களை முழுதுமாய் உமது ஆளுகைக்குட்படுத்தி இருவித ஆளுகையினின்று விடுபடத் துணை புரிந்தருளும். ஆமேன்.

ஐம்பத்தோராம் நாள்

குணப்படுதல் நமக்கு வெற்றியுள்ள வாழ்வு அளிக்கிறதா?

கலா. 5: 16–26

குணப்படுதலாவதென்னவென முன்னமே பார்த்தோம். மறுபடியும் அதைச் சிறிது நோக்குவோம். நாம் குணப்படுதல் எனக் கூறும் அதினாலே வெற்றியுள்ள வாழ்வு உண்டாகிறதா? அல்லது கிறிஸ்துவின் ஜீவியத்தினால் முழுதுமாய் ஆளப்படும் நிலைமைக்கு வருமுன் குணப்படுதலைப்போலொத்த இன்னும் ஒன்றோ பலவோ மாறுதல்கள் நமது இதயத்தில் ஏற்படவேண்டுமா?

குணப்படுதலே வெற்றியுள்ள வாழ்வுக்கு ஆரம்பம். மனந்திரும்புவதினால் ஜீவியமானது எப்போதும் நிலைக்கக் கூடிய உயர்வான நிலைமையையடைந்து விடுகிறது. நமது காரியங்கள் மாறிவிடுகின்றன. ஒரு இந்து வாலிபன் பரபரப்புடன் என்னிடம் வந்து, "என்னை உங்களுக்குத் தெரியுமா? நீங்கள் என்னை அறியமாட்டீர்கள் என்றே நினைக்கிறேன். நேற்று உங்களைப்பார்த்த அதே மனிதனல்ல நான். நேற்று மாலையில் நான் மலையுச்சியினருகேயமர்ந்து சூரியாஸ்தமனக் காட்சியை நோக்கிக்கொண்டிருக்கும்போதே கிறிஸ்துவானவர் எனது ஜீவியத்தினுட் பிரவேசித்தார். நான் முற்றிலும் விபரீதமாகி மாறிப் போனேன்" என்று சொன்னான். ஆம். அது அப்படியே தான். புதிய ஜீவியமானது நமக்குள் பிரவேசித்த உடனே நாம் அனைவரும் மாறிவிடுகிறோம். இவ்வாலிபனும் அப்படியே மாறிவிட்டான். ஜீவியம் நிலைவரமான மாறுதலையடைகிறது. எனினும் முற்றிலும் மாறிவிடுகிறதில்லை.

குணப்படுதலின் மூலமாய்த் திடீரென மிகவும் மேலான ஒரு உயரத்திற்கு ஏறிவிட்டதை நாம் அனைவரும் அனுபவ சாட்சியாக அறிந்துணருகிறோம். அவ்வுயரத்திற்கு ஏறியபின்போ வெற்றியும் தோல்வியுமாய்

அதற்குமேல் ஏருமல் சமவெளியிலே சுற்றித்திரிகிறேம், மேலே ஏறுகிறேம், கீழே இறங்குகிறேம். நான் இதற்கு முன் எழுதிய ஒரு புஸ்தகத்தில், நாங்கள் கூடிப்பேசும் கூட்டத்திலே மார்க்கானுபவம் என்பது ஒருவருக்கு மூன்றே காரியங்களைக் குறிக்கும் எனப் பேசிய விவரத்தைக் காட்டியிருக்கிறேன். அம்மூன்று காரியங்களாவன: ஜெயம், ஜெயம், ஜெயம். ஆம், அப்படியே. எனினும் நம்மிற் பலருக்கோ அது அப்படியன்று. அடிவாரத்தில் அபஜெயம், அபஜெயம், அபஜெயம். சற்று மேலே போனுல் அபஜெயம், ஜெயம், அபஜெயம் அல்லது ஜெயம், அபஜெயம், ஜெயம். முற்றிலும் ஜெயம், ஜெயம், ஜெயம் என விருப்பதில்லை. மனந்திரும்பிய நமது ஜீவியமோ ஜெயம், ஜெயம், ஜெயமெனவே இருக்கவேண்டும். அப்படியில்லாத விடத்துத் தளர்ச்சியுற்றுத் துக்கிக்கிறேம். எதிர்பார்ப்பது அதிகம். லபிப்பதோ அவ்வளவல்ல.

குணப்படுதல் புதிய ஜீவனைக் கொடுத்ததேயன்றிப் பூரண ஜீவனை யளிக்கவில்லை. முதல்முதல் நம்மை மேற்கொண்ட புதிய ஜீவியப் பேரலைகள் சற்றுத் தணியவே, முழுவதுமாய் மூழ்கி ஒழிந்தனவென நாம் எண்ணியிருந்த பழைய குணங்கள் சிற்சில ஒழியாமலிருப்பது காண்கிறேம். அவைகள் ஒழிந்துபோகவில்லை. மேலே தளிர்த்து அடர்ந்திருந்த இலைதளைகள் வெட்டப்பட்டனவேயன்றி அடிமரமும் வேரும் அப்படியே இருக்கின்றன. புதிய ஜீவியத்தோடு பழைய வேர்களும் வந்து சிக்குவதினுலே நாம் மனச்சலனமுற்று முற்றிலுமாக அவற்றினின்று விடுபடவேண்டுமெனக் கூவி நிற்கிறேம்.

கிறிஸ்துவே, எங்களில் புதிய ஜீவியத்தை ஆரம்பித்தவரே. அந்த ஜீவன் முற்றிலும் எங்களில் வளர்ந்தோங்கும்படி செய்தருளும். எங்களை மீட்குமாறு எங்களில் அன்புகூர்ந்தீர் என்பது எங்களுக்குத் தெரியும். இங்குமங்குமாக எங்களில் காணப்படும் தப்பிதங்களை எங்களுக்குத் தெரியக்காட்டி எங்கள் மனதில் அமைதியின்மை விளைப்பதினுலேயே நாங்கள் உமது மீட்பின் அன்புக்காளானேம் என்பதை அறிகிறேம். எங்கள் துன்பதுயரங்களை நீக்கி முற்றிலும் எங்களைக் குணப்படுத்தியருளும். ஆமேன்.

ஐம்பத்திரண்டாம் நாள்

உள்ளத்தின் போராட்டம்

ரோ. 7: 14–22

நான் குணப்பட்டபின் என் மனதிலே விபரீதமான போராட்டம் விளைந்தது கண்டேன். போராட்டமென ஒன்றிராதெனப் பல வாரங்களாக நினைத்திருந்தேன். வாழ்நாளெல்லாம் ஒரேவிதமாய் இடைவிடா மகிழ்ச்சியே யென நினைத்தேன். காரியமோ அப்படியிருக்கவில்லை. கோபகுணம் என்னை மேற்கொண்டது. எரிந்த முகத்தோடு காணப்பட்டேன். இயற்கையில் நான் அப்படி யிருப்பவனல்ல. ஒருவாறு எப்போதும் சந்தோஷமுகமாகவே இருப்பேன். இப்போதோ போராட்டத்திற் கேதுவாக இடையிடையே கோபகுணம் என்னிற் புகுந்தது. இது கண்டு நான் ஆச்சரியமுற்றேன். இதன் காரணமோ எனக்கு விளங்கவில்லை. குணப்படவேண்டுமெனும் ஆத்திரம் என்னிற் குடிகொண்டிருந்தது. கிறிஸ்துவையே எல்லாவற்றினும் மேலாக மதித்துவந்தேன். இப்படியிருந்தும் என்னிற் காணப்பட்ட கோபகுணம் எனக்கே ஆச்சரியமாயிருந்தது. அச்சமயம் நேரிட்டதின்னதென்பதை இப்போதுதான் காண்கிறேன்.

இதைப்பற்றி மனோதர்ம சாஸ்திரிகள் கூறுவதாவது, அந்தக்கரண இதயத்திலே இயற்கை ஆசைகள் நமக்குள் பதிந்திருக்கின்றன. இவ்வியற்கை ஆசைகள் தொன்றுதொட்டுவந்த பழக்க வழக்கங்களை யனுசரிப்பது. மிகப் பல காலங்களாகப் பற்பல தலைமுறைகளாய் அனுபவத்திலிருந்த குணகுணங்கள் ஒன்றுசேர்ந்து மனதிடை குடிகொள்ளும். இவ்வாசைகளின் இயல்பும் அவற்றின் இயற்கை அபிமானமும் தீமையையே சார்வன. அவை கட்டு உட்பட்டனவல்ல. இதை யோசித்துக்கொண்டே போனால் மனிதன் ஆதியில் பாவகுணமுடையனாகவே படைக்கப்பட்டானோவென எண்ண நேரலாம். அது அப்படியன்றெனினும் நமது இயற்கை ஆசைகள் தீமையைச் சார்ந்தே நடக்கிறது. "இதோ, நான் அக்கிரமத்தில் ஜநித்

தேன். என் தாய் என்னைப் பாவத்தில் கர்ப்பந்தரித்தாள்'' எனச் சங்கீதக்காரன் கூறியது உண்மையே. இந்த இயற்கை ஆசைகளே பெரும்பாலும் நமது மனதை ஆண்டு நடத்துகின்றன. மனதும் இடையிடையே மேலான நல்ல கோட்பாடுகளைத் தழுவி இயற்கையான இத்தீய ஆசைகளைத் தடுக்க முயல்கின்றது.

குணப்படுவதினாலே, கிறிஸ்துவின் அன்புக்கு மாறுபட்டனவாகிய யாவும் நமது மனதிலிருந்து வெளியே அகற்றப்படுகின்றன. கிறிஸ்துவின் ஆளுகை மனதிலே நிலைநாட்டப்படுகிறது. குணப்பட்ட சில வாரங்களாகப் போராட்டம் ஏற்படுவதில்லை. புதிய ஜீவனே ஆளுகை செய்கிறது. அந்தக்காரணத்தில் ஆழ்ந்துகிடந்த இயற்கை குணங்கள் அடக்கப்படுகின்றன. அவை மாற்றப்படுகிறதில்லை. காலம் செல்லச்செல்ல அவையும் இடையே புகுந்து தங்களின் இயல்பை வெளியே காட்டுகின்றன. மனச்சாட்சியின் கதவைத் தட்டி நிற்பதுபோல் காணப்படுகின்றன. மனதினுள் இவை கிளம்பவே நாம் திடுக்கிட்டு பிரமிக்கிறோம். கப்பலானது துறைமுகத்தில் நிற்கும்போது கப்பலின் அடித்தளத்திலே சென்று ஒளித்திருந்துகொண்டு கப்பல் புறப்பட்டு நடுக்கடலிற் சென்றவுடன் தமது ஒளிப்பிடங்களிலிருந்து வெளியேறிக் கப்பல் அதிகாரிகளை மேற்கொண்டு கப்பலைக் கொள்ளையிடும் சீனக் கடற் கொள்ளைக்காரரைப்போல் நமது இயல்பு ஆசைகள் நம்மைக் கொள்ளையிடத் தொடங்குகின்றன.

குணப்படுதலின் மூலமாய் என்னில் புதிய ஜீவன் நுழையவே இயற்கையாயிருந்த பழைய ஜீவனுக்கும் இப்போதுதான் புகுந்த புதிய ஜீவனுக்கும் எனக்குள் போராட்டமுண்டாகிறது. உண்டாகவே எனக்குள் பிரிவினை ஏற்படுகிறது.

கிறிஸ்துவே, மனிதனிலிருப்பதின்னதென்பதை நீர் அறிவீர். நான் ஒன்றையும் ஒழித்துக்கொள்ளாமல் உமக்கு முன் வைக்கிறேன். என் இதயத்தின் ஆழங்களையெல்லாம், மறைந்திருக்கும் இடங்களையெல்லாம் சுத்திகரித்தருளும். நான் ஒரே சிந்தையையுடையனுவேன். ஆமேன்.

ஐம்பத்துமூன்ரும் நாள்

வெளிப்படாத மனம் மாறமுடியுமா?

2 கொரி. 7: 1; ரோ. 7: 24, 25; 8: 1, 2

'கிறிஸ்தவ ஜீவியம் பூரணத்துவம்' எனும் அரிய நூலை வெளியிட்ட பிளுர் சாஸ்திரியார் "வெளிப்படாத மனதிற்கு இரட்சிப்புண்டா? நமது காலத்தில் பரிசுத்த ஜீவியத்தைத் தேடியாராய்பவர்க்கு இது முக்கிய கேள்வி" எனத் தமது நூலின் இறுதியில் கூறுகின்றனர். அவர் கேட்டிருக்கும் கேள்வி மகா முக்கியமானது.

இயற்கை ஆசைகள் களைந்து நீக்கமுடியாதன. "எந்த வகையாய் முயன்ருலும் இயற்கை ஆசைகள் என்பன நீக்கப்படக்கூடியனவல்ல. அது விஷயமாய் ஏனோதானோவென விருப்பதும் இயற்கை ஆசைகளென இல்லாததுபோற் பாசாங்கு செய்வதும் இயற்கை ஆசைகள் நமது ஆத்துமாவின் ஆழத்திலே புதைந்து கிடக்கின்றனவென்பதையும் அவற்றைக் கட்டுப்படுத்த முடியாதென்பதையுமே காட்டும்" என வெதர்ஹெட் ஆசிரியர் தாம் எழுதியுள்ள 'மனோதத்துவ சாஸ்திரமும் மானிட ஜீவியமும்' எனும் நூலில் கூறுகின்றனர். இந்தியாவில், இந்த இயற்கை ஆசைகளை முற்றிலும் அகற்றிவிட முயன்றதுண்டு, இன்னும் முயல்கின்றனர். இந்திய சந்நியாசிகள் பற்பல விதமாய்த் தங்களை ஒடுக்கிக் கஷ்டமனுபவித்து அதை முற்றிலுமாக வேரறக் களையவேண்டுமெனப் பிரயாசப்படுகின்றனர். எத்தனை முயன்றும் அது கூடிய காரியமன்று. கதவைத் திறந்து வெளியே துரத்திஞல் ஜன்னலின் வழியே உட்புகுந்துவிடும். தங்களையும் உலகையும் முற்றிலும் வெறுத்து ஆடையின்றி அலையும் சந்நியாசிகளும், கங்காதீர ஸ்நானக் கட்டங்களில் பற்பலர் ஸ்நானத்திற்கு இறங்குகையில் தாங்கள் முதல்முதல்செல்லுதற்குப் பிறர் இடந்தரவேண்டுமெனத் தங்கள் கௌரவத்தைப் பாராட்டி நிற்பதை நான் கண்டிருக்கிறேன். இயல்புகுணம் இறந்துவிடவில்லை: அது

எப்படியோ வெளித்தோன்றி விடுகிறது. அவற்றை அகற்றிவிடுதல் என்பது கூடாத காரியம்.

அவற்றை அடக்கிக்கொள்வதும் கூடாத காரியமே. அவற்றை அடக்கினுல் அவை உள்ளேயே அடங்கி யிருந்து வேறு குழப்பங்களைப் பிறப்பிக்கும். ஏதேனும் ஒரு கருத்தையே மேற்கொண்டு அதன் சார்பான பல கோட்பாடுகளைக் கைக்கொண்டு நடக்கச்செய்வதே இக் குழப்பமாம். நமது அந்தக்கரணத்திலே இவைகள் ஆருத ரணங்கள்போலிருக்கும்; இயல்பு குணங்களை உள் அடக்குதல் மோசமே.

இயல்பு குணங்களை அகற்றிவிட முடியாது, அவற்றை அடக்கவும் கூடாது, அவை ஆட்சி செய்ய எள்ளளவும் இடங்கொடுப்பதும் புதிய ஜீவியத்திற்கு இடையூரும். அங்ஙனமாயின் அதற்கு ஏதேனும் வேறு வழியுண்டோ? மனோதர்ம சாஸ்திரிகள் அவை மேலான குணங்களாகும் படி செய்யலாம் என்பர். உயர்வான மேரையாக அவை வெளிப்படுமாறு செய்யக்கூடுமென்பர். மதானுசார முறைபற்றிப் பேசினுல் அவற்றுக்கும் குணப்படுதல், மனந்திரும்புதல் இருக்கக்கூடும் என்பதாகும். அவற்றை அகற்றவும் அடக்கவும் கூடாதென்றுல் அவற்றை குணப்படச் செய்து நமது வாழ்வை அவை மேல் நடத்துமாறு விட்டுவிடலாம். அங்ஙனமாயின் இது வரை புதிய ஜீவியத்துக்கு விரோதமாய் நின்றன இப் போது நமக்குத் துணையாகிவிடும். காட்டுக் குதிரை களைப் பழக்கி வசக்கவே அவை ராஜ்ய வேலைக்கு உப யோகமாகும்.

இயல்பு குணங்களும் குணப்பட்டுப் பிரதிஷ்டை பெறலாம்.

கிறிஸ்துவே, உமது ஜீவியத்திலே, சகல சத்துவங்களும், அந்தக் கரணம், மனம் முதலியவெல்லாம், கடவுளின் ராஜ்ய பிரபல்லியத் திற்கென்றே பிரதிஷ்டிக்கப்பட்டிருப்பது கண்டு உமக்கு நன்றி செலுத்துகிறேம். எங்களுக்குள்ளும் அதே விதமான ஒருமைப்பாடு விளங்கும்படி துணை புரிந்தருளும். ஆமேன்.

ஐம்பத்துநான்காம் நாள்

ஏககாலத்திலே புதியனவும் பழையனவும்

லூக். 9: 18–25

ஒன்றுக்கொன்று இசைவில்லாப் புதிய குணங்களும் பழைய குணங்களும் ஏககாலத்தில் வழங்கியதைச் சீஷரின் விஷயத்தில் பார்க்கலாம். லூக். 9: 18–25 வரை கவனமாய் வாசித்தால் அதை நாமே நன்ருய் அறிந்துகொள்ளலாம்.

இயேசுவானவர் சீஷர்களைச் செசரியா பிலிப்பி எனும் ஊருக்குக் கூட்டிக்கொண்டு போயிருந்தார். அவ்விடத்தில் ஒரு வெண்பாறைக் குன்றிலிருந்த குகையிலே ரோம சக்கரவர்த்தியாகிய இராயரின் சிலையை வைத்துத் தெய்வத்தின் அவதாரமாக வணங்கி வந்தனர். சீஷரிடம் தாம் ஓர் விசேஷமான கேள்வியைக் கேட்கும் பொருட்டு அவர்களை அங்கே கூட்டிச் சென்றிருந்தார் போலும். "நான் யார்" எனும் கேள்வியைத் தம்மைப் பற்றி அவர்களிடம் கேட்க விரும்பினுர். இக்கேள்வியைக் கேட்பதற்குச் செசரியா பிலிப்பி மிகவும் இசைவான இடம். ரோம இராயன் கடவுளே மனிதனுய்ப் பிறந்த திரு அவதாரமா? புஜபலமே யாவற்றையும் தீர்மானிப்பதா? இயேசுவானவர் கடவுளே மனிதனுய்ப் பிறந்த திரு அவதாரமா? அன்பே யாவற்றையும் தீர்மானிப்பதா?

இயேசுவானவர் இந்தக் கேள்வியைக் கேட்கவே பேதுருவின் வாயில் மறுமொழி பிறக்கிறது. "நீர் ஜீவனுள்ள கடவுளின் குமாரனுகிய கிறிஸ்து" என்று பேதுரு அப்போஸ்தலன் பதிலுரைத்தார். உண்மையான காரியம் இன்னதென்பது வெளிப்படையாயிற்று. தெளிவு பிறந்தது. அது மிகவும் பெரிய சம்பவம். இந்த நிமிஷமுதல் சீஷருடைய வாழ்வானது இந்த உண்மையைக் கண்டறிந்த விதமாய் அதனேடு சம்பந்தப்

பட்டு, அவர்களுடைய ஆவிக்குரிய வாழ்வு அதனேடு இசைந்து அதின் சார்பிலே வலிமைபெற்று விளங்குமென எதிர்பார்க்கலாம். அந்த அத்தியாய முழுவதிலுமோ அவ்விதமாக நாம் எதிர்பார்க்கக்கூடிய விவரம் ஏதும் கூறப்படவில்லை. அங்கு கூறப்படும் விவரம் ஒன்றுக்கொன்று சம்பந்தமில்லாததாகவே காணப்படுகிறது. சீஷரிடம் காணப்பட்ட குற்றம் குறைகளைத் திருத்துவதற்கு இயேசுவானவர் ஏதோ சொன்னதைத் தவிர இது சம்பந்தமாய் வேறென்றும் செய்ததாகவாவது பேசியதாகவாவது அவ்வத்தியாயத்தில் கூறப்படவில்லை. அவர்களிடம் காணப்பட்ட குற்றம் குறைகளென்ன? ஜீவனுள்ள கடவுளின் குமாரனுகிய கிறிஸ்துவெனும் சிறந்த உண்மையை அவர்கள் கண்ணாரக் காணவில்லையோ? அவர்கள் கண்டதுண்மையே. மனதறிய அவ்வுண்மையை ஒப்புக்கொண்டார்கள். அவர்களுடைய அந்தக்கரண இயல்பு குணமோ அதை ஏற்றுக்கொள்ளவில்லை. அவர்கள் மனந்திரும்பியதுண்மை. அவர்களுடைய இயல்பு குணத்திலோ மாறுதலில்லை. தன்னயமாகிய இயல்பு குணம் மாறவில்லை. உண்மையிற் கிறிஸ்தவர்களாக நடந்துகொள்ள வேண்டுமேயானுல் அவர்கள் 'தான்' எனும் இயல்பு குணத்திற்கு மாறுகப் போராடி அதை மேற்கொள்ளவேண்டும். இயேசுவானவர் தாமே அவர்களை அதற்குத் தூண்டிவிடுபவராய் "ஒருவன் என்னைப் பின்பற்ற விரும்பினுல் அவன் தன்னைத்தான் வெறுக்க வேண்டும்" என்று சொல்லிக்கொடுக்கிறுர். தன்னயம் என்பதற்கு விரோதமாக அம்பைத் தொடுக்கிறுர்.

கிறிஸ்துவே, நாங்கள் உம்மிடம் வருகிறோம். எங்களுக்குக் கஷ்டமான தின்னதென்பதை நீர் அறிவீர். எங்கள் அந்தக்கரணத்திலிருக்கும் தன்னயமே எங்களைக் கெடுப்பது. அவ்வொரு விஷயத்தில் நாங்கள் குணமாகிவிட்டால் நாங்கள் பூரணமாகக் குணப்படுவது திண்ணம். அந்தக் குணப்படுதலை எங்களுக்குக் கட்டளையிட்டருளும். ஆமேன்.

ஐம்பத்தைந்தாம் நாள்

முக்கியமான இடையூறு வெளிப்பட்டது

லூக். 9: 28–45

பெந்தெகொஸ்து நாட்களின்முன் சீஷருக்கு மிகவும் கஷ்டமாயிருந்த காரியம் குணப்படாதிருக்கும் இயற்கை ஆசைகள் பற்றியதே என நேற்றைய தினம் பார்த்தோம். இவ்வாசைகளுள் முக்கியமானது அகங்காரம் என்னும் ஆசை. சீஷர் தாமாகவே அதைக் கண்டுகொள்ளும்படி செய்யவேண்டுமென இயேசுவானவர் தீர்மானித்தார். தம்மையே பலியிடும்படியாகத் தாம் சிலுவை மரத்தில் பாடுபடப்போவதாகவும் தம்மிலுள்ள 'தான்' என்பது மறுபடியும் உயிரோடெழுந்திருக்கும் என்பதையும் முதலாவது அவர்களுக்குக் காட்டினார். அவர்களும் அப்படியே செய்யவேண்டுமென்பதை அவர்களுக்குப் போதித்தார். தாம் சரீரத்தில் அனுபவிக்க விருக்கும் கஷ்டங்களை அவர்கள் ஆவியின் பிரகாரமாய் அனுபவிக்க வேண்டுமென்பதைக் காட்டினார். தான் என்பதாகிய தன்னையே இழப்பதே கடவுளின் பிள்ளைகளாயிருப்போரின் முக்கிய குணம். தங்களை இழப்பதனாலேயோ அவர்கள் தங்களைக் கண்டுகொள்ளக்கூடும்.

ஆவிக்குரிய இந்த மகா மேலான உபதேசம் அவர்களுக்கு விளங்கவில்லை. பாடசாலைகளில் சிறுவருக்குக் கிண்டர்கார்ட்டன் முறையாய்க் கற்பிப்பதுபோல அவர்களுக்கு விளக்கிக் காட்டும்படி அவர்களை மலைக்குக் கூட்டிக் கொண்டுபோனார். அவர் சிலுவையை நோக்கிப் பார்த்தவராய்த் தமது மரணத்தைப்பற்றி மோசே எலியா என்பவர்களோடு பேசிக்கொண்டிருக்கையிலேயே அவருடைய முகம் பிரகாசிக்கத் தொடங்கிற்று. அதினால் கற்பிக்கப்பட்டதென்ன? வாழ்வு சிலுவையை நோக்கினால் பிரகாசமடையும் என்கிற உண்மை இதனால் கற்பிக்கப்பட்டது. தான் எனும் சுயநல வாழ்வை

மேலான வாழ்வுக்கென ஒப்புக்கொடுக்கவே அது சிறந்து ஒளி பெற்றுப் பிரகாசிக்கும்.

சீஷரோ அதன் பொருளை அறிந்துகொள்ளவில்லை. மலையடிவாரத்திலே தடுமாறி நின்றனர். உள்ளாக இரு வித ஆட்சிக்குட்பட்டவராக வெளியான காரியங்களில் சித்திபெற வகை காணுதிருந்தனர். ஒரு வார்த்தையினுலே இயேசுவானவர் அசுத்த ஆவியைத் துரத்தினுர். "அவர்கள் கடவுளின் மகத்துவத்தைக் கண்டு பிரமித்தார்கள்." அவர்கள் அப்படியிருக்கும் தருணத்தில் இயேசுவானவர் அவர்களிடம் "நீங்கள் இந்த வார்த்தைகளைக் கவனித்துக் கேளுங்கள், மனுஷகுமாரன் மனுஷர் கைகளில் ஒப்புக்கொடுக்கப்படுவார்" என்றுர். அற்புதமாய்க் குணமாக்குவதிலே என் மகத்துவம் விளங்குகிறதென நீங்கள் நினைக்கிறீர்கள். நான் என்னையே இழப்பதிலேயே என் மகத்துவமிருக்கிறது. உங்களிலும் என்னிலும் நான் செய்து நிறைவேற்றும்படி வந்திருக்கிற முக்கிய காரியம் இதுவே. தன்னை இழப்பதே என்கிருர்.

"அவர் சொன்னதோ அவர்களுக்கு விளங்கவில்லை." இப்படியிருப்பது இன்னதென அவர்களுக்கு விளங்காதிருந்தபடியினுலே அவர் சொன்ன காரியமும் அவர்களுக்கு விளங்கவில்லை. நாம் நமது மனதின் வழியே அநேகமாய் யோசியாமல் மன உணர்ச்சிகளின் வழியே யோசிக்கிறும். இவ்வுணர்ச்சிகளோ தான் என்பதையே சார்ந்து நிற்பன. இன்னும் நாம் அவைகளை ஒப்புக்கொடுத்து விடவில்லை.

கிறிஸ்துவே, எங்கள் வழியைப் பிரகாசமாக்கினதற்காக உமக்கு நன்றி செலுத்துகிறும். ஆச்சரியமானவிதமாய் நீர் உம்மையே இழந்து உம்மைக் கண்டுகொண்டீர் என்பதை நாங்கள் கண்டறிகிறும். நாங்களும் உமது வழியிலேயே நடப்போம். ஆமேன்.

ஐம்பத்தாறும் நாள்

இந்நிலைமையிலிருப்பதால் விளைவதென்ன?

லூக். 9: 45–48; 1 கொரி. 3: 3

தான் எனும் இயற்கை ஆசை மாற்றப்படாதவிடத்து ஜன சமூக விஷயத்தில் நமக்குள்ள சம்பந்தங்களில் குழப்பம் உண்டாகும். போராட்டம் சச்சரவு விளையும். தங்களை ஒப்புக்கொடாத பலர் ஒன்று கூடும்போது ஜன சமூகத்திற்கு இசைந்திருக்கும் தன்மை அவர்களுக்கில்லாமையால் சண்டை சச்சரவுகளுக்கிடமுண்டாகிறது. தனக்குள்ளே 'தான்' என்பது ஆளுகை செய்யுமானால் வெளியேயும் அதுவே ஆளுகை செய்யும். அது வெகு தந்திரமாய் மேலான ஒழுக்கமுடையதுபோலும் மார்க்காபிமானமுடையதுபோலும் காட்டி இறுதியில் தன்னையே மேலாகச் செய்தற்கான வழிவகைகளை நாடும். அப்படி நாடவே சண்டையும் விவாதமும் பிறக்கும். "தங்களில் எவன் பெரியவன் என்கிற விவாதம் அவர்களுக்குள் உண்டாயிற்று."

கிறிஸ்தவ சிஷனும் கிறிஸ்தவ சிஷனும் வாதாடுகின்றனர். தங்கள் குருவினுடைய மனப்பான்மைக்கு விரோதமாக இருவரும் வாதாடுகின்றனர். அம்மட்டோடும் அமையாமே ஒவ்வொருவனும் உள்ளாகத் தனக்குள் தானே வாதாடுகிறான். மனச்சாட்சியுடைய இதயம் இதைக் கண்டு வெட்கமுறுமெனினும் தானென எழுந்த மாற்றப்படாத இயற்கை ஆசை தானே மேலாயிருக்க வேண்டுமென வாதாடுகிறது. ஏதோ நற்கோட்பாடுகளைத் தழுவி நடக்கவேண்டுமென்றே எல்லாரும் வாதாடுவதாகக் காட்டிக்கொள்வார்கள். தாம் கூறுவன மதக்கோட்பாட்டைத் தழுவியிருப்பதுபோற் காணப்படாவிடின் மதானுசார விதிவிலக்குகளைப் பாராட்டுவாரிடை அவை செல்லாவென்பதைத் 'தான்' எனும் சுயநலப் பிரியமுடையார் நன்கறிவார். ஆகவே பரலோக ராஜ்ய நன்மையின் பொருட்டே ஒவ்வொருவரும் தாம் தாமே முதல்வரா

யிருக்கவேண்டுமென வாதாடுவார். நானே வயதில் மூத்தவன். அவர் மேசியாவென்பதைக் கண்டறிவித்தவன் நானே. முதிர்ந்த அனுபவமும் காரியங்களை நுட்பமாயறிந்துகொள்ளும் சக்தியும் எனக்கேயுண்டு; பரலோக ராஜ்ய பிரபல்யத்திற்கு இவை யின்றியமையாதன" எனப் பேதுரு அப்போஸ்தலன் வாதாடுவார். அந்திரேயா அப்போஸ்தலனே அதை மறுத்து "உன்னை இங்கே கொண்டுவந்தது யார்? உனக்குமுன் இங்கு வந்தவன் நானே. முதல் வந்தவனே முதல் அதிகாரம் வகிக்க வேண்டும்" என்பார். யோவானே இவ்விருவரையும் ஆக்ஷேபித்து "நான் உயர்குடிப்பிறந்தவன். இங்குள்ள பெரிய மனுஷருக்குள் கடவுளின் ராஜ்யம் பரவவேண்டுமானல் அதைச் செய்யக்கூடியவன் நானே. பிரதான ஆசாரியன் முதலாய் எனக்கு அறிமுகமானவன்" எனச் சொல்வார். இவ்வாறு இவரெலாம் தத்தமக்குத் தோன்றியதைக் கூறி நிற்க யூதாஸ் எழுந்து "சகல காரியங்களும் பொருளைச் செலவிடும் சாமார்த்தியத்தினுல் விளைவது. வகை யறிந்து பொருட் செலவு செய்யும் சாமர்த்தியம் எனக்கே யுண்டு. நானே பொக்கிஷதாரி" என மற்றெல்லாரும் கூறியவற்றையெல்லாம் அடித்துப் பேசித் தன்னையே சிறந்தவனுகக் காட்டி நிற்பான். பேச்சளவில் எல்லாரும் கிறிஸ்துவின் ராஜ்யமென்றே கூறுவார்கள். உள்ளாகவோ தான் தானே பெரியவனுக வேண்டுமெனும் சுயநலப் பிரீதியே.

கிறிஸ்து சபையில் காணப்படும் குறைகளில் முக்கால்வாசிக்குமேல் கிறிஸ்தவ ஊழியருக்குள் காணப்படும் சச்சரவுகளினுலேயே உண்டாகின்றன. இச்சச்சரவுகளில் முக்கால்வாசிக்குமேல் மனந்திரும்பியும் குணப்படாதிருக்கும் சுயநல இயற்கையாசையால் உண்டாகின்றன.

கிறிஸ்துவே, சிறுபிள்ளையொன்றைக் காட்டிப் பரலோக ராஜ்யத்தின் தன்மையை விளக்கியவரே, என்னையும் சிறுபிள்ளை போலாகச் செய்தருளும். ஆழ்ந்த பக்தியுடையனுய் இம்முறை நான் மறுபடியும் பிறக்கவேண்டும். ஆமேன்.

ஐம்பத்தேழாம் நாள்

இந்நிலைமையிலிருப்பதினால் ஜனசமூகத்தில் விளைவதென்ன?

லூக். 9: 49, 50; 1 கொரி. 1: 10–13; எபே. 4: 1–3

முதல் போராட்டம் தனித்தனி ஆட்களிடையே நிகழ்வதென நேற்றுப் பார்த்தோம். இவ்வாறு ஆரம்பித்த போராட்டமானது ஜனசமூக சம்பந்தங்களில் நுழைந்து மாறிப் பிறவாச் சுயநல உணர்ச்சியினால் தூண்டப்பெற்று பரவிச்சென்று ஜனசமூகத்தாருள் ஒரு கூட்டத்தாருக்கும் மறுகூட்டத்தாருக்கும் சச்சரவு விளைப்பதாகி இறுதியில் உலகில் எப்பக்கங்களிலும் போராட்டமாகவே முடிகிறது.

இயேசுவானவர் இதைப்பற்றித் தமது சீஷருக்கு உபதேசித்துக்கொண்டிருக்கும்போதே யோவான் அப்போஸ்தலனின் இதயத்தில் அது சிறிது காரமாய்த் தைக்கவே அப்போஸ்தலன் மற்றொரு காரியத்தை நினைத்துக்கொண்டவர்போல் அவரிடம் "ஆண்டவரே, ஒருவன் உமது நாமத்தினாலே பேய்களைத் துரத்துகிறதைக் கண்டு அவன் எங்களோடு உம்மைப் பின்பற்றாதவனென்று அவனைத் தடுக்கப்பார்த்தோம்" என்றனர். இதிலே ஒரு கூட்டத்தாருக்கும் பிறிதொரு கூட்டத்தாருக்குமுண்டான சச்சரவைப் பார்க்கிறோம். ஒரு கூட்டத்தைச் சேர்ந்த ஒவ்வொருவனும் தனித்தனியே அக்கூட்டத்தாருள் தானே தலைமை வகிக்கவேண்டுமென எழும் தனது சுயநல இயல்புகுணம் காரணமாக மற்றவரோடு போராடுவதுண்டு. இப்படிப்பட்டவர்களும் தமது கூட்டத்தாருள் தனித்தனியே போராடுவதை மறந்துவிட்டு அனைவரும் ஒன்றாகக் கூடிக்கொண்டு பிறிதொரு கூட்டத்தாருக்கு விரோதமாய்ச் சண்டையிட ஆரம்பிக்கின்றனர். தான் சேர்ந்திருக்கும் கூட்டத்தாருக்கு விபத்து நேர்ந்த விடத்துத் தனக்கே, தனது சுயநலத்துக்கே, ஆபத்து நேருமென்பதை அவனிலுள்ள 'தான்' என்பது உணர்ந்துகொள்ளுகிறது. ஆகவே அது எழுந்து போராட ஆரம்பிக்கிறது. ஏதோ தாம் கொண்டுள்ள ஒரு கோட்-

பாட்டைக் காக்குமாறு போராடுவதாய்க் கூறிக்கொள்ளு கிறது. கடவுளின் ராஜ்யத்திற்கு இடையூறு நேரிடாமே போராடுவதாகச் சொல்லிக்கொள்ளுகிறது. "அதிகாரம் பெற்றுக்கொள்ளாமல் பிசாசுகளைத் துரத்தும் இம்மனிதர் யார்? அவர்களால் விளைவது மோசமே. அவர்கள் சரியான வழிவகைகளை அறியாதவர். நாம் உச்சரித்துச் சொல்லுகிற பிரகாரமே அவர்கள் அந்தந்த வார்த்தைகளை அந்தந்த முறையாய்ச் சொல்லுகிறார்களா? இவர்களைத் தடுத்து நிறுத்திவிடவேண்டும்."

மாறிப் பிறவாத 'தான்' எனும் இயல்பே மார்க்கப் பிரிவினைகளுக்கு ஏதுவாகிறது. வெவ்வேறு சங்கங்களாகப் பிரிந்திருக்கும் கிறிஸ்து சபைகள் இணைந்து ஒரே ஐக்கிய சபையாதற்கு இடையூறாயிருப்பதும் இதுவே.

ஒரு சபையிலே நேர்ந்த சண்டையைச் சமாதானம் செய்ய முயன்றேன். நாலாயிரம் ரூபா பெறுமான கோவிற் சொத்தைப்பற்றி வழக்குத்தொடுத்து இரு பிரிவாரும் நாற்பதினாயிரம் ரூபா வரை செலவிட்டனர். அச்சபையில் ஒரு பிரிவாருக்குத் தலைவராயிருந்த பெரிய குருவானவரிடம் நான் பேசியபோது அவர் "நாம் நமது கிறிஸ்துமார்க்க விசுவாசத்தை இடையூறின்றிக் காக்க வேண்டும்" என்றனர். அவர் உண்மையாகவே மதானுசாரப் பற்றுடையராய் இப்படிச் செய்தாரெனவே நினைக்கிறேன். நல்லுணர்வில்லாரின் இதயங்களில் தான், தனது எனும் பற்றுகள் விலகாமல் ஒளித்துக்கொண்டிருக்கின்றன. இவ்விஷயத்தில் மதாபிமானப் பற்று என்பதினால் அறியக் கிடந்ததென்ன? தான், தனது எனும் சுயாபிமானம் கூட்டத்தாரின் மேன்மைக்கென வல்லமையும் அதிகாரமும் பெறும்படி தன்னையே நிலைநாட்டி வற்புறுத்தி நிற்கிறது. மதாபிமான மென்பதோ மாண்டு மண் புகுந்தது.

கிறிஸ்துவே, எங்களுடைய அற்பத்தனம், குருட்டாட்டம் முதலியன உம்மை மாறி மாறிச் சிலுவையிலறைகின்றன. உமது இதயமோ கடவுளின் ராஜ்யமாகி அப்பாலும் செல்லுகிறது. எங்களையும் அப்படியே யாக்கியருளும். ஆமேன்.

ஐம்பத்தெட்டாம் நாள்

இந்நிலைமையிலிருப்பதினால் ஜாதி விஷயத்தில் விளைவதென்ன?

லூக். 9: 51-55; கலா. 3: 27, 28

மாற்றப் பெறுதிருக்கும் தான் எனும் இயற்கை யாசையினால் சபைகளில் விளைவதென்னவென நோக்கினோம். "ஆக்ஸ்போர்ட் ஐக்கியம்" முதலிய கூட்டத்தாருக்கு விரோதமான கிளர்ச்சிகள் அனைத்தும் பொறுமையினால் உண்டாயதென்பதே என் அபிப்பிராயம். பல காலமாக நீடித்திருக்கும் கிறிஸ்து சபைகள் யாதும் சாதிக்கச் சக்தியின்றி யிருக்கையில் நேற்று உண்டான இவ்வைக்கியமானது ஜனங்களின் இதயத்தினின்று அவர்கள் சோர்பையும் அந்தகாரத்தையும் நீக்கிவிடுகிறதே எனக் கொண்ட பொறுமையே காரணம் என நினைக்கிறேன். உங்கள் இதயத்தை ஆராய்ந்து பார்த்து அறிந்து கொள்ளுங்கள்.

நாமோ முன் செல்வோம். போராட்டமானது இக்கூட்டங்களோடு நிற்பதில்லை. இயேசுவானவர் தமது சீஷரைச் சமாரியாவுக்கு அனுப்பி அங்கே தமக்காக ஆயத்தப்படுத்தும்படி சொன்னார். இயேசுவானவர் எருசலேமுக்குப்போக நோக்கியவராயிருந்தபடியினால் சமாரியர் அவர்களை ஏற்றுக்கொள்ளவில்லை. யோவானுக்கோ கோபம் பிறந்துவிட்டது. எலியா செய்ததுபோல், "ஆண்டவரே, வானத்திலிருந்து அக்கினி இறங்கி இவர்களை அழிக்கும்படி நாங்கள் சொல்வது உமக்குச் சித்தமா?" என்று கேட்கிறார். தான் எனும் இயல்பு குணமானது ஒரு ஜாதிக்கு விரோதமாக மற்றொரு ஜாதியைத் தூண்டிவிட்டுத் தன்னையே மேம்பாடுறச்செய்தற்கு எப்போதும் ஆயத்தமாயிருக்கிறது. ஏதோ மதாபிமானங் காரணமாகச் செய்வதாய் "ஆண்டவரே....வானத்திலிருந்து...எலியா செய்ததுபோல்" எனச் சொல்லுகிறது. இந்த மதாபிமானமொருபுறமிருக்க, யூதன் எவனும் உள்ளாகச் சமாரியனைப் பகைப்பவனே என்பது

விளங்குகிறது. யூதரும் சமாரியரும் தங்கள் தங்களுக்கே மேன்மையும் வல்லமையும் கிடைக்கவேண்டுமெனச் சண்டையிட்டுக்கொண்டிருந்தனர். நமது வெறுப்புக்களை மதாபிமானப்போர்வையால் மூடி உள்ளிருக்கும் சுயநலமென்பதை மறைக்கிறோம்.

ஜாதித்துவேஷம் பிறவியிலேயே ஒட்டியதன்று. தாங்கள் சிறியரா யிருக்கும்போதே ஜனசமூக இயற்கையினால் உண்டாவது. உலகின் பற்பல பாகங்களில் ஊழியஞ்செய்யும் ஐரோப்பிய மிஷனெரிமாருக்கு ஆங்காங்கே பிறக்கும் பிள்ளைகள் தாங்கள் சிறுவராயிருக்கும்போதே அப்பாகங்களிலிருக்கும் மற்ற ஜாதி ஜனத்தாரின் பிள்ளைகளோடு பழகி ஜாதித் துவேஷத்தை யறியாதிருக்கின்றனர். ஐரோப்பியப் பிள்ளைகளுக்கும் பிற நாட்டுப் பிள்ளைகளுக்கும் நெடுநாள் நிலைக்கும் நெருங்கிய சிநேகம் உண்டாகிவிடுவதை நாம் கண்டிருக்கிறோம். பிற்காலத்திலே அவர்கள் ஜாதித் துவேஷமுடையராவரெனில் அது பிறவியிலுண்டானதன்று. சுற்றியிருப்பவரிடமிருந்து ஒட்டியதாகும். துவேஷம் என்பது நம்மனைவரின் அந்தக்கரண இதயத்திலும் தங்கி தான் எனும் இயற்கையாசையோடு கலந்து நிற்கிறது. மற்ற ஜாதியாரின் குறைகளைப் பேசுவதும் அவர்களுடைய குற்றங்களை எடுத்துப் பாராட்டுவதுமாயிருக்கிறோம். அவர்களுடைய பலவீனங்களைக் கண்டு சந்தோஷிக்கிறோம். காரணமென்ன? நமது அந்தக்கரண இதயமானது பிற ஜாதியார்மீதுள்ள துவேஷத்தை உள்ளடக்கியிருக்கிறது. நமது அந்தக்கரண இதயம் இன்னும் மாறிப் பிறக்கவில்லை. தான் என எழுந்த இயல்பு குணம் கடவுளின் ராஜ்யத்தை இன்னும் ஏற்றுக்கொள்ளவில்லை.

பிதாவே, சகல ஜாதியாரிலுமுள்ள யாவரையும் படைத்தவரே, நான் ஒவ்வொரு ஜாதியார்மீதும், எல்லாரிடத்தும் அன்புகூராததற்காக என்னை மன்னித்தருளும். எனக்குள் பதிந்திருக்கும் தான் எனும மமதைக் குணமானது தாழ்ந்து உமது நுகத்தடியை ஏற்றுக்கொள்ளாவிட்டால் நான் எல்லாரிடத்தும் அன்புகூர முடியாது. அவ்வாறு தாழ்ந்து உமது நுகத்தடியை நான் ஏற்றுக்கொள்ளத் துணைபுரிந்தருளும். ஆமேன்.

ஐம்பத்தொன்பதாம் நாள்

இருநிலைகளுக்குமுள்ள வேறுபாடு

கொலோ. 1: 17; எபே. 2: 14–18

நாமே நம்மோடும் பிறரோடும் ஒத்துப்போவதற்கு இடமின்றிப் பல இடையூறுகளை விளைப்பது மாறிப் பிறவாத 'தான்' எனும் இயல்பு குணமே என்பதைப் பார்த்தோம். "மேல் நிலைமைக்கு உயர்த்தப்படாமலிருக்கும் தன்னைப்பற்றும் ஆசை ஒருவன் தனது சொந்த ஜீவியத்திலும் சமூக வாழ்விலும் சந்தோஷமாய் நடந்து கொள்ளுதற்கு இடமில்லாமல் அவனைத் தடுக்கிறது" என ஆட்லர் ஆசிரியர் கூறியது உண்மையே.

இயேசுவானவருடனிருந்த சீஷர் மிகப் பல காரியங்களில் முற்றிலும் நன்மாறுதல் அடைந்தவர்கள் என்பதை நாம் மறக்கக்கூடாது. தாங்கள் மனதறியச்செய்தவற்றையெல்லாம் கிறிஸ்துவின் ஆளுகைக்குட்பட்டவர்களாகவே செய்தனர். எனினும் அவர்களுடைய அந்தக்கரண மனதோ இன்னும் கிறிஸ்துவின் ஆளுகைக்குட்படவில்லை.

அவர்களிடம் காணப்பட்ட ஒன்றுக்கொன்று மாறான நடத்தைகளை நோக்குவோம். லூக்கா 9 அதிகாரத்தில் அவர்கள் கிறிஸ்துவைக் கடவுளின் குமாரன் எனக் கண்டு கொண்டது ஆவிக்குரிய காரியங்களில் அவர்களுக்கு அதிகமாய்ப் பயன்படவில்லை. அவர்களுடைய உள்ளான மனதில் எவ்வித மாறுதலும் இன்னும் காணப்படவில்லை. உள்ளாகத் தங்கள் மனதிலேயே எழும் எண்ணங்களிலும் தனித்தனியாக ஒருவருக்கு மற்றவரோடுள்ள காரியங்களிலும் தாங்கள் ஒரு கூட்டமாகத் தங்களுக்கு வெளியேயுள்ள கூட்டத்தாரோடும், தாங்கள் யூத ஜாதியாராகப் புறஜாதியாரெனப்பட்ட சமாரியரோடும் உள்ள காரியங்களிலும் இசைந்துபோகும் குணம் இன்னும் அவர்களுக்கு வரவில்லை. ஆனாலும் இந்த நாலுவித குணங்களும் குறைகளும் பிற்காலத்தில் மிகவும் எளிதாய், அவை எந்த வகையாய் மாறின எனச் சொல்லக்கூடாதபடி அவ்வளவு எளிதாய், மிகவும் சிறப்பாய் மாறிவிட்டன. அப். 2: 46 பார்ப்போம். அவர்கள் "ஏக

மனதாய் மகிழ்ச்சியோடு போஜனம் பண்ணினார்கள்.'' இதற்குமுன் அவர்களிடம் காணப்பட்ட முதற்குறை நீங்கிவிட்டது. அவர்கள் தங்களுக்குள்ளாக மாறுபட்ட இதயமுள்ளவரா யிராமல் "ஏகமனதாய்" இருக்கிறார்கள். அவர்களிடம் இருமனதில்லை. அப். 2: 14. "பேதுரு பதினொருவரோடுங்கூட எழுந்து நின்று" அவர்களுக்குள் ஒருவரோடொருவர் ஐக்கியமின்றியிருந்த குறை நீங்கி விட்டது. நீ, நான் எனும் போராட்டமில்லை. எல்லா ரும் ஏகமாய் "ஒன்றாய் எழுந்திருந்து" பிரிந்து தனித் தனியேயல்ல. எல்லாரும் ஒன்றாய் ஒத்துழைத்தனர். அவர் களிலிருந்த இரண்டாவது குறை தீர்ந்தது. அப். 2: 44. "விசுவாசிகளனைவரும் ஒன்றாயிருந்து" விசுவாசிகளான பற்பல கூட்டத்தார் ஒன்றாயிசைந்து ஒரே சகோதர ஐக் கியமாகி ஒருவர் ஜெயத்தைக் கண்டு மற்றவர் மகிழ்ந்து காலங்கடத்தினார்கள். அவர்களிலிருந்த மூன்றாவது குறை இவ்வாறாக நீங்கிற்று. ஒரு கூட்டத்தார் அடுத்த கூட்டத்தாரைச்சந்தேகிக்காமல்அவர்களிடம்பொறாமை கொள்ளாமல் நடந்துகொண்டார்கள். அப். 8: 14–17. "இப்பொழுது (அப்போஸ்தலர்) அவர்கள்மேல் கைகளை வைக்கவே அவர்கள் (சமாரியர்) பரிசுத்த ஆவியைப் பெற்றார்கள்." முன் ஒரு தடவை வானத்திலிருந்து அக் கினி யிறங்கிச் சமாரியரை அழித்துவிடவேண்டுமெனக் கேட்ட அதே அப்போஸ்தலர் இப்பொழுது பக்ஷத்தோடு சமாரியர்மீது கைகளை வைத்து அவர்கள் பரிசுத்த ஆவி யைப் பெற்றுக்கொள்ளும்படி செய்கின்றனர். அவர்களி டம் காணப்பட்ட நாலாவது குறை, ஜாதிக்கு விரோத மாய் ஜாதி எனும் துர்க்குணம் அவர்களை விட்டு விலகிற்று.

அவர்களிடமிருந்தனவாக நாம் பார்த்த நாலு குறை களும் இப்படியாகத் தீர்ந்துவிட்டன. எப்படித் தீர்ந் தன? ஒரே வார்த்தையில் பதிலுரைத்தால், "பரிசுத்த ஆவி"யினால் தீர்ந்தது.

கடவுளே, எங்கள் பிதாவே எங்கள் அந்தக்கரண குணங்களும் மாற் றப்படும்படி வழிவகைகளைத் தேடிவைத்தவரே, உமக்கு ஸ்தோத்திரம். நாங்கள் உள்ளாகவும் குணப்படாதபடி எங்களை விட்டுவிடமாட்டீர். உமக்கு நன்றி செலுத்துகிறோம். ஆமேன்.

அறுபதாம் நாள்

இம்மாறுதலின் இரகசியம்

ரோ. 8: 13; 2 கோரி. 3: 17; கலா. 5: 25; எபே. 3: 16

அப்போஸ்தலர் பரிசுத்த ஆவியைப்பெற்ற உடனே அவர்கள் ஜீவியத்தில் அதற்குமுன் காணப்பட்ட நாலு குறைகளும் தீர்ந்துவிட்டனவென்பதை இதற்குமுன் பார்த்தோம். உலகத்திலே கிறிஸ்து சபையனைத்திலும் இப்படியே இருக்கிறது. இயேசுகிறிஸ்து கடவுளின் குமாரன் என்று தாங்கள் அனைவரும் அறிக்கையிட்டும் ஆவிக்குரிய காரியங்களிலே தங்கள் குறைகள் நீங்கா திருப்பது கண்டு ஆச்சரியப்படுகின்றனர். மிகப்பெரிய காரியங்களிலுண்டாகும் கஷ்டங்களிலே ஒன்றும் இன்னும் நிவிர்த்தியாகவில்லை. கிறிஸ்துவே கடவுளின் குமாரனென அறிக்கையிடுவது ஒருவாறு வெளியான காரியமேயாகும். அது புத்தி பூர்வமான மனதினால் ஒப்புக்கொள்ளும் காரிய மாத்திரமே. இதினாலே அந்தக்கரண குணங்கள் மாறிவிடுவதில்லை. இவற்றை மாற்றவேண்டியவர் பரிசுத்த ஆவியானவரே.

பரிசுத்த ஆவியானவர் நமது வெளிப்படாத மனதிலும் அதற்கு வெளியே புத்தி பூர்வமான மனதிலும் கிரியை நடப்பிக்கிறார். இது மிகவும் முக்கியமானது. ஏனெனில், மாற்றப்பெறவேண்டிய உள்ளான பான்மைக்கு இது சென்று அதை மாற்றுகிறது. வெளிப்படாத இயற்கைத்தன்மைகள் புத்திபூர்வ மனதோடு இசைந்தொழுகும்படி அதைச் சுத்திகரித்து மாற்றி அடக்கி ஆளவல்லவர் பரிசுத்த ஆவியானவரே. கிறிஸ்துவையே முன்மாதிரியாகக் கொண்டு அவரையே பின்பற்றுதல் என்பது இதற்குச் சரிப்படாது, இது ஒருவாறு வெளியேயுள்ள காரியமாகும். வேண்டிய காரியமோ ஆழ்ந்துகிடந்த உள்ளிடத்திலே மாறுதல், நிலையான மாறுதல் வேண்டும். பரிசுத்த ஆவியானவர் இடை

யிடையே வருவதும் போவதுமாய் ஜீவியத்தை ஆளு வதும் போதுமானதன்று. பரிசுத்த ஆவியானவர், ஜீவனுள்ளவராக நமது உள்ளிடங்களின் ஆழங்களிலே நீங்காமல் நிலையாய் வசித்து, முழு ஆளுகையையும் அவரே கைக்கொண்டு சுத்திகரித்துக் கடவுளின் ராஜ்யத்திற்குரிய நோக்கங்களுக்கிசைய நமது இயல்பு குணச்செயல்களை நடத்திப் பொருத்தி இவ்விதமாக அவரே முழுதுமாய் எப்போதும் ஆளவேண்டும். பெந்தெகொஸ்து நாளுக்கப்புறம் சீஷர் கிறிஸ்துவானவரின் முறையை அப்படியே பின்பற்றி அதே மாதிரியாக நடந்துவந்தார்களெனக் கூறமுடியாது. ஆனந்த பரவசராகி, உள்ளிருந்து பொங்கி எழுந்த புதிய ஜீவியம் செய்துவந்தனர். கிறிஸ்தவ ஜீவியமானது தானாகவே பொங்கி எழும் ஊற்றும், யந்திர மூலமாய் மேலெழும்பும் தண்ணீரன்று.

ஆகவே அவர்கள் தங்களின் முன்வைத்து மாதிரியாகக் காட்டப்பட்ட ஒன்றைப்பார்த்து அதே மாதிரி அப்படியே ஜீவித்தவர்களல்ல. தங்களின் உள்ளே உதித்த புதிய ஜீவியத்தை முற்றிலும் இசைந்த மனதோடு வெளிக்காட்டி ஜீவித்துவந்தனர். யாதொன்றையும் விட்டுவிடாமல் முற்றிலுமாக முழுவதையும் தெய்வீக ஆளுகைக்கு உட்படுத்தி ஜீவித்தனர். இப்போது அவர்கள் இருமனப்பட்டவர்கள் அல்ல. அந்தக்கரண இயற்கை ஆசையும் மனதும் இசைந்து ஜீவித்தவர்கள். ஒரே ஆளுகைக்குட்பட்டு ஒரே மனதாயிருந்தவர்கள். பரிசுத்த ஆவியால் நிரப்பப்பட்ட ஜீவியஞ்செய்தார்கள்.

கடவுளே, எங்கள் பிதாவே, நாங்கள் உள்ளாக ஒன்றை வைத்து வெளியே ஒன்றைக்காட்டி ஜீவிக்கவேண்டிய நிமித்தமில்லை என்பதற்காக உமக்கு நன்றி செலுத்துகிறோம். எல்லாவற்றையும் நீர் உமது ஆளுகைக்குட்படுத்த வல்லவர். இனிமேல் எங்களில் இருள்மூடிய இடமென ஒன்றிராது. ஆமேன்.

அறுபத்தோராம் நாள்

வெற்றியுள்ள வாழ்வினுல் விளைவதென்ன?

ரோ. 6: 6, 7; 12: 2, 3; 13: 14

உள்ளாக நம்மைக் கட்டியிருக்கும் சிற்சில காரியங்களை இதற்குமுன் பார்த்தோம். நமக்குள்ளே அதிமுக்கிய ஸ்தானத்திலே நமக்கு ஜெயம் கிடைக்குமாயின் அதினுல் நாம் அடையும் பலன் என்ன என்பதை இப்போது பார்ப்போம்.

முதலாவது நம்மிலிருந்தும் நம்மாலேயே நமக்கு உண்டாகும் பிரஸ்னைகளிலிருந்தும் விடுதலை பெறுவோம். அநேகர் தங்கள் பிரஸ்னை விடுபட்டு வெளியே நோக்க வகையின்றியிருக்கின்றனர். அவற்ருேடு எப்போதுமாகக் கட்டப்பட்டார்கள்போல் காணப்படுகின்றனர். அடுத்தவர்களுக்கு ஏதேனும் உதவிசெய்யவேண்டுமெனும் அவசியம் நேரிட்டால் உள்ளே கட்டுப்பட்டவர்கள்போல் வெளியேற வகையின்றி இருக்கின்றனர். மற்றவர்கள் சங்கதி இருக்கட்டும் உன் காரியமென்ன எனும் கேள்வி எழவே பிறருக்கு உதவியாக நிற்கும் யோசனைகள் எல்லாம் பறந்துவிடுகின்றன. இவ்வாருக நாம் நம்மினின்றும் நமது கஷ்ட காரியங்களினின்றும் விடுபடாதவர்களாகவே இருக்கிருேம்.

நான் இந்தியாவுக்குத் திரும்பி வந்தபோது பாரசீக மார்க்கமாய் வந்தேன். அங்குள்ள ரஸ்தாக்கள் மிகவும் கேவலமானவை. வழியிலே என் மோட்டார் வண்டி மிகவும் அதிகமாய் ஆடிக்குலுங்கிக் கடைசியில் இஞ்சின் கெட்டுப்போயிற்று. முப்பது மைல் நாற்பது மைல் ஓடும், பிற்பாடு நின்றுகொள்ளும், இன்ஜின் வேலை செய்வதில்லை. வண்டி நிற்கவே நாங்கள் அதைச் செப்பனிட ஆரம்பித்துச் சரிசெய்து மறுபடியும் ஓட்டுவோம். மறுபடியும் முப்பது நாற்பது மைல் ஓடும். அதற்குள்ளாகக் கெட்டுப்போம், நின்றுவிடும். இப்படிக் கஷ்டப் பிரயாணஞ் செய்து நான் அலுத்துப்போனேன். இப்படிப் பிரயாணஞ்செய்த ஒருநாள் இரவு நான் அங்கே ஒரு இடத்தில்

பேசவேண்டியதெனவும் ஒழுங்குசெய்திருந்தது. நானே பேசக்கூடிய நிலைமையிலில்லை. என் தலையில் மயக்க முண்டாகித் தலைசுற்றுவதுபோலிருந்தது. என் மோட்டார் இன்ஜின் சரியாயிருந்து ஓடியிருக்குமானால் எனக்கு இந்தக் கஷ்டம் நேரிட்டிருக்காது. இதற்குமுன் நான் பாரசீகத்தில் பிரயாணம் செய்தவனல்ல. வழியிலே புதிது புதிதான பல இயற்கை வனப்புகளைப் பார்த்துக் கொண்டு செல்லவேண்டுமெனும் ஆசையும் எனக்கிருந்தது. பகலெல்லாம் பிரயாணஞ்செய்து மாலை வேளைகளில் பிரசங்க வேலையும் நடத்தவேண்டுமென விரும்பினேன். ஆனாலும் ஒன்றுக்கும் வழியில்லாமற் போயிற்று. என் முழுக்கவனமும் கெட்டுப்போன இன்ஜினைச் சீர்செய்வதிலேயே சென்றது. இன்ஜின் சரியாயிருந்தால் நான் அதைப்பற்றி நினைக்கவாவது அதைக் கவனிக்கவாவது நிமித்தமிருந்திராது.

இப்படியே நம்மில் அநேகருடைய ஜீவியத்தில் நேரிடுகிறது. நமது உள் ஜீவியம் சரியாயிராதபடியினால் நாளெல்லாம் அதையே கவனித்துக்கொண்டிருக்கிறோம். நமது இதயங்களில் இளைப்பாறுதல் இல்லை. கடவுள் சிருஷ்டித்தவைகளின் அழகை அறிந்து அனுபவிப்பதற்கும் மற்றவர்களிடம் அனுதாபங் காட்டி அவர்களுக்கு உதவிசெய்வதற்கும் நமக்கு நேரமில்லை. இளைப்பாறிச் சும்மாயிருப்பதற்கு இடமில்லை. நாளின் முடிவிலே நாம் நமதுமீதே சலிப்படைந்து களைத்துப்போகிறோம். பிறருக்கு உதவிசெய்யக்கூடிய சமயங்கள் கிடைக்கும்போது உதவிசெய்ய வழியின்றித் தலைச்சுற்றும் மயக்கமுமாய்க் கஷ்டப்படுகிறோம்.

வெற்றியுள்ள வாழ்வோ நம்மினின்றும் நமது கஷ்டங்களினின்றும் நம்மை விடுவிக்கும்.

கிறிஸ்துவே, திரள் கூட்டமாய் உம்மைச் சுற்றியிருந்தவர்களுக்கு உதவிசெய்ய வகையில்லாமல் உமது கஷ்டங்கள் உம்மைத் தடுத்ததில்லை. உமக்கேயுரிய கஷ்டங்கள் கவலைகளாக உமக்கிருந்ததில்லை. எப்போதும் பூரண மனதோடு யாவருக்கும் உதவிசெய்பவராய் விளங்கினீர். நானும் உம்மைப்போலிருக்கும்படி செய்தருளும். ஆமேன்.

அறுபத்திரண்டாம் நாள்

அமரிக்கையுள்ள இருதயம்

அப். 14: 19, 20; மத். 6: 25, 34.

அநேகர் தங்களிலும் தங்கள் காரியங்களிலுமே முழுவதுமாய் ஈடுபட்டிருக்கின்றனர் என்பதை நேற்றுப் பார்த்தோம். அவர்களுக்கு அமரிக்கையுள்ள மனமில்லை. சிற்சிலர் விஷயமோ அப்படியல்ல. அவர்களுக்கு நேரமுண்டு, இயேசுவானவருக்கு நேரமிருந்தது. இயேசுவானவர் எப்போதும் சுறுசுறுப்பாகவே இருந்தார். ஓட்டமும் பரபரப்புமாய் இப்போதென்ன அப்போதென்னவெனத் தடுமாற்றமாய் அவர் இருக்கவில்லையெனினும் எப்பொழுதும் சுறுசுறுப்பாகவே இருந்தார். உட்கார்ந்து சாப்பிடுவதற்கும் அவருக்கு நேரமில்லாமற் போனதுண்டு. அப்படியிருந்தும் அவரிடம் வந்த எவரையும் அவர் தள்ளிவிட்டதில்லை. அடுத்தாற்போற் செய்ய வேண்டிய வேலையை அவர் நிறுத்திவைக்கவில்லை. நாள் முடிந்து இரவு வரும்போதும் அவர் சலித்துக் களைத்துப் போகாமல் காலையிலிருந்த மாதிரியாகவே மாலையிலுமிருந்தார். காரணமென்ன? உள்ளே கவலைகளும் கஷ்டங்களும் அவருக்கில்லையாதலினால் அவர் தளர்ச்சியடையாதிருந்தார். தெய்வசித்தம் இன்னதென உணர்ந்து தம்மை அதற்கு இசைந்தவராக்கி நடந்துகொண்டார். இவ்வாறு அவர் இசைந்ததே எல்லா விஷயத்திலும் போதுமானதாயிருந்தது.

அவரைப் பின்பற்றினவர்களிற் பலர் இவ்வந்தரங்க காரியத்தை அறிந்துகொண்டனர். இதைப்பற்றிய அநேக உதாரணங்கள் என் மனதிலெழுகின்றன. நான் படித்துக்கொண்டிருந்த காலத்தில் ஒரு வீட்டிலே தங்கியிருந்தேன். அந்த வீட்டு அம்மாள் பன்னிரண்டு பையன்களை மேல்பார்த்து நடத்தவேண்டியதிருந்தது. இவர்களில் இரண்டொருவர் தவிர மற்றவர்களெல்லாரும் அவர்களுடைய பிள்ளைகளே. அவர்களில் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு காரியம் ஆகவேண்டியதிருக்கும். வீட்டிற்கு வெளியேயும் பல பல வேலைகள் உண்டு. அப்படியிருந்தும் அந்த அம்மாளிடம் மற்றவர்கள்போய்த் தங்கள் கஷ்டங்களைச் சொல்லிக்கொண்டால் அவற்றைப்

பொறுமையோடு கேட்பதற்கும் அவற்றைச் சாந்திசெய்வதற்கும் அவர்களுக்கு நேரமுண்டு. காரணமென்ன? அந்த அம்மாள் கடவுளின் சித்தத்திற்கு உள்ளாகவே இசைந்து ஜீவித்தவர்கள். அதுவே அவர்களுக்கு மன அமைதி, சக்தி, பரபரப்பின்மை, அமர்ந்துசெய்யும் தன்மை முதலியவற்றை அளித்தது.

லிவிங்ஸ்டன் என்பவர் ஆப்பிரிக்காவில் பல வருடங்களாக உழைத்துப் பின் தமது சுயநாட்டுக்குத் திரும்பி வந்தபோது அவரிடம் ஒருவர் சென்று "ஐயா, தங்கள் ஆன்மகாரியம் எப்படி" என்று விசாரிக்க லிவிங்ஸ்டன் அவருக்குப் பதிலுரைத்து "என் ஆத்துமாவைப்பற்றியா கேட்டீர்கள். எனக்கு ஆத்துமாவென ஒன்று உண்டு என்பதையே நான் அநேகமாய் மறந்துவிட்டேன்" எனப் பதிலுரைத்தார். மற்றவர்களுடைய ஆத்துமாக்களுக்காகக் கவலைப்படுவதிலும் அவர்களைக் குணப்படுத்துவதிலுமே முழுவதும் கவலைகொண்டிருந்தனரேயன்றித் தனக்குமொரு ஆத்துமா உண்டென்பதை மறந்துவிட்டவர்போலிருந்தார். இதுவே மிகவும் சரியான ஜீவியம். தற்காலம் ஆவிக்குரிய ஜீவிய சம்பந்தமாய்ப் பிரசங்கிப்போர் கூறுகிறபடி எப்போதும் தனக்குள்ளேயே நோக்கவேண்டும், தன்னையே பார்த்துக்கொண்டிருக்கவேண்டுமென்பது அத்தனை சிறந்த முறையன்று. இம்முறை ஆவிக்குரிய சுக ஜீவியத்திற்கேதுவாகாது. நாம் இடையிடையே நம்மை நாமே பரிசோதிப்பதும் ஆராய்ச்சி செய்வதும் அவசியம். அப்படிச்செய்வதால் நம்மை முழுவதுமாகக் கடவுளுக்கு ஒப்புக்கொடுப்போம். நமது ஜீவியத்தை நேர்செய்துகொள்வோம். அப்படிச்செய்துகொண்டபின் அவ்வளவில் அதைவிட்டு வெளியே பிறருடைய காரியங்களில் ஈடுபடலாம். அதற்கு அமரிக்கையுள்ள மனம் நமக்கு எப்போதும் கிடைக்கும்.

கிறிஸ்துவே, காரிய நிகழ்ச்சிக்கு ஏற்றவாறு உமது சித்தத்தை நோக்கிக்கொண்டவர் நீர். நாங்களும் எங்களை அப்படியே நோக்கி இசைத்துப்பொருந்துமாறு செய்வதற்கு உதவிசெய்தருளும். நாங்களும் தலை நிமிர்ந்து போந்த இதயமும் சுறுசுறுப்பான கைகளுமுடையராய்ப் பதஷ்டமின்றி ஆவிக்குரிய எங்கள் வேலையைச் செய்வதற்கு உதவி புரிந்தருளும். ஆமேன்.

அறுபத்துமூன்றும் நாள்

கஷ்டங்களின் நடுவேயும் வாழ்ந்திருக்கும் வல்லமை

அப். 14: 21, 22; 26: 29; பிலி. 1: 12-14

வெற்றியுள்ள நல்வாழ்வில் நாம் அடையும் இரண்டாவது பலன் கஷ்டங்களின் நடுவேயும் வாழ்ந்திருக்கும் வல்லமையாம்.

கஷ்டமில்லாத நிலைமையில் வாழ்ந்திருக்கும் வல்லமையை நம்மிற்பலர் அறிவோம். கஷ்டங்களின் நடுவேயும் வாழ்ந்திருக்கும் வல்லமையையோ நாம் அறியோம். நம்மைச் சுற்றியிருப்பனவற்ருல் நமக்கு யாதொரு இடையூறும் நேரிடாதவிடத்து நமக்குரிய வாழ்வு எளிதாயிருக்கும். வாழ்வோ எப்போதும் அப்படியிருப்பதன்று. பல சமயங்களில் கஷ்டங்களும் இடையூறுகளும் நேரிடுவதுண்டு. அப்பொழுது நாம் சோதிக்கப்படுகிருேம். பலமான சோதனைகட்குட்படுகிருேம். ஆவிக்குரிய நமது வாழ்வு நம்மைச்சுற்றியிருப்பவற்றிலே சார்ந்திருக்குமாயின் சோதனைகளின் நடுவே அதிசீக்கிரம் வாடிச் சோர்ந்துபோம். அது உண்மையான உள் வாழ்வாயிருக்குமாயின் உள்ளான ஆழத்திலிருந்து அது பிரகாசிக்கும்.

வெற்றி வாழ்வைக் கண்டறியாமுன் சீஷர் தங்களைச் சுற்றிலுமிருந்த காரியங்களால் ஆளப்பட்டவர்களாய் ஜீவித்தார்கள். பிற்பாடோ தாங்களே தங்களை ஆண்டு கொள்ளும் சக்தி யடைந்தனர். வாழ்வு எப்படி மாற்றப்படும் என்றல்ல வாழ்வை எப்படி மாற்றிக்கொள்வதெனக் கண்டறிந்தனர். மூன்றுவித கிறிஸ்தவர்களுண்டு: தண்டு வலித்துச்செல்லும் மரக்கலம் போன்றவர், பாய் வலித்தோடும் மரக்கலம் போன்றவர், நீராவி வலித்துச் செல்லும் மரக்கலம் போன்றவர். தண்டுவலித்துச் செல்வோர் முழுவதும் தமது பலத்திலேயே சார்ந்தவர். தங்கள் சாமர்த்தியம், தங்களாலேயே செய்யக்கூடியது

இவற்றினுல் செல்லும் மானிட இயல்பினர். இவற்ருல் ஏதோ ஒரு அளவுக்குச் செல்லக்கூடுமேயல்லது அதற்கப்பால் செல்லமுடியாது. அவர்கள் செல்லும் தூரம் அதிகமன்று. பாய் வலித்தோடும் மரக்கலம் போன்றவர் காற்றின் துணைபெற்றுச் செல்பவர். சுற்றியிருக்கும் காரியங்களால் புடைக்கப்பட்டு, ஏவப்பட்டுச் செல்பவர். இவர் பிறவற்றின்மேற் சார்ந்து ஜீவிப்பவர். காற்று தங்களுக்கு இசைவாய் அடித்தால், தாங்கள் செய்வனவற்றைப் பார்த்துப் பிறர் சிலாக்கியமாய்ப் பேசினுல், அவர்கள் ஜீவிய மரக்கலம் செல்லும். இது நிற்கவே அவர்கள் மரக்கலமும் ஓடாமல் தடையுறும். இவர்கள் தங்களைச் சுற்றி நிகழ்வனவற்ருல் நடத்தப்படுபவர். முழுவதுமாய் இவர்களை நம்பிப் பிரயாணம் செய்யமுடியாது. நீராவியால் செலுத்தப்பட்டோடும் மரக்கலம் போன்றவர்க்கோ உள்ளேயே வல்லமை இருக்கிறது. காற்று சார்பாய் வீசினுலும் சரியே, எதிர்த்து அடித்தாலும் அவர்கள் கலங்குவதில்லை; தடைபடுவதில்லை. எதிர் காற்ருே, இசைந்த காற்ருே, இவர்கள் சென்றுகொண்டேயிருப்பார்கள். காற்று இசைவாய் வீசினுல் சற்று விரைவாய்ப் போவார்கள். எனினும் அவர்கள் செல்வதற்குக் காற்று எள்ளளவும் காரணமாகாது. இவர்களின் உள்ளிருக்கும் சக்தியே இவர்களுக்குப் போதுமானது. இவர்கள் தங்கள்மீதாவது அடுத்தவர்கள்மீதாவது சார்ந்தவர்களல்ல. கிறிஸ்துவின்மீது சார்ந்தவர்கள். நாம் இவர்களை நம்பி யாத்திரை செய்யலாம்.

நம்மைச் சுற்றியுள்ள காரியங்கள் நமக்கு விரோதமாயிருக்கும் காலத்திலும் நாம் முன் செல்லக்கூடிய வலிமையுடையராயிருப்பதே நமது ஜீவியத்திற்கு இன்றியமையாதது. ஜெய ஜீவியம், வெற்றி வாழ்வு என்பது இதைப் பெற்ற ஜீவியமே.

கிறிஸ்துவே, ஜீவிய அலைகள் கொந்தளித்துச் சிலுவைவரையும் உம்மை இழுத்துச் சென்றபோதும் மாருத, மனந்தடுமாருத ஜீவியஞ் செய்து காட்டியவரே, நாங்களும் அப்படியே செல்லக்கூடிய வல்லமை பெறுமாறு எங்களுக்குத் துணைபுரிந்தருளும். ஆமேன்.

அறுபத்துநான்காம் நாள்

சஞ்சலமின்றி வாழ்தல்

யோ. 14: 1; 19: 8–10; பிலி. 4: 7; கோலோ. 1: 11

வெற்றியுள்ள வாழ்வினால் நமக்குக் கிடைக்கும் மூன்றாவது பலன் நமது ஜீவியத்திலே தளர்ச்சியுண்டாக்கும் கஷ்டங்களை நீக்கி ஜீவிப்பதாம். அநேகர் மிகவும் வருந்தி வருந்திக் கஷ்டப்பட்டு ஆவிக்குரிய ஜீவியம் செய்கின்றனர். கையை இறுக்கிப் பல்லைக் கடித்துக்கொண்டு ஒரே தீர்மானமாய் நின்று, தங்களுக்கு இடையூறாய் வரும் காரியங்களுக்கு எதிர்த்துப்போராடி ஆவிக்குரிய ஜீவியம் செய்கின்றனர். இது ஊக்கமான ஜீவியமே எனினும் அத்தனை சிலாக்கியமாகக் காணப்படுவதொன்றன்று. இவ்வகையால் விளையும் பக்தி வருந்தியுழைத்ததினால் விளைந்த பக்தியாகும். இந்த பக்தி பிறரை வசப்படுத்தும் பக்தியன்று. இப்படி வருந்தி யுழைப்பதினால் களைப்பும் சோர்வும் பிறக்கும். நமது சக்தி வரவரக் குன்றிப்போகும். மிகவும் வருந்தி யுழைப்பதினால், முன்னரே தளர்ச்சியுற்றிருந்த சக்தி முழுவதும் திடீரென முறிந்து ஒழிந்து யாதும் செய்யச் சக்தியற்றவராகி விடுவதுமுண்டு.

தகரத்தகடு செய்யும் தொழிற்சாலையொன்றை ஒரு நாள் பார்க்கச் சென்றிருந்தேன். அங்கே இந்தத் தகடுகளை மிகவும் அதிகமான உஷ்ணத்தில் போட்டுச் சூடேற்றி அவை எப்படி வளைத்தாலும் முறிந்து போகாதிருக்கும்படி செய்யப்படுவதாக என்னிடம் சொன்னார்கள். இப்படி அதிகமான உஷ்ணத்தில் அவற்றைக் காய்ச்சுவதினால் தகட்டிலுள்ள அணுக்கள் எல்லாம் ஒன்றோடொன்று இசைந்து பொருந்தி எப்படி வளைத்தாலும் பிரியாமல் இணைந்துகொள்ளுகின்றன. இப்படிச் செய்யாவிட்டால் வளைத்தவுடன் தகடு முறிந்துபோம்.

நமது ஆத்துமாவிலும் அப்படிப்பட்ட விதமாய்ச் செய்யப்பட வேண்டுமென்பது அவசியமில்லையோ? நமது

ஆத்ம அணுக்களையும் அக்கினி ஸ்நானத்திற்குட்படுத்தி எப்படி வளைத்தாலும் அவை ஒடிந்து முறிந்து போகா திருக்கும்படி செய்யவேண்டியது அவசியம். அப்படிச் செய்தால் எத்தனை வருத்தம் நேரிட்டாலும் நாம் வளை வதேயன்றி முறிந்துபோவதில்லை.

கெத்சேமனே தோட்டத்தில் நமது ஆண்டவர் இதயத்தில் பெரும்பாரம் தாங்கியவராய் வளைந்தனர். அவர் முறிந்துபோகவில்லை. கடவுளுக்கு ஸ்தோத்திரம். காரணமென்ன? அவர் செய்த ஜெபம்: "எனது சித்த மல்ல, உமது சித்தமே நிறைவேறுவதாக" என்று ஜெபித் தனர். தமது ஆவியின் ஒவ்வொரு அணுவும் தமக்குள் ளிருந்த பிதாவின் ஆவியோடு தக்கவாறு இசைந்திருந் தது. அப்படியிருந்ததால் ஆத்மா வளையுமே யல்லது ஒடிந்துபோவதில்லை. உள்ளே அதைப்பற்றிய வருத்த மில்லை. தெய்வ சித்தத்தோடிணைந்த ஆத்துமாவுக்கு வருத்தம் தோன்றாது.

உயிர் வாழ்க்கை ஒடிந்து பாழ்படுவது நமக்கு வெளியேயுள்ள சம்பந்தங்களால் மாத்திரமல்ல. நமக்கு உள்ளே நிகழ்வனவே அடிக்கடி நம்மை, நமது ஜீவி யத்தை, ஒடித்துப் பாழ்படுத்தும். வெற்றியுள்ள வாழ் வோ உள்ளிருக்கும் கஷ்டங்களை நீக்கி நமது வாழ்வைக் கடவுளோடிசைந்த வாழ்வாக்கி, வெளியிலிருந்து என்ன நேரிட்டாலும் அதைத் தாங்கக்கூடியதாகும்படி செய் யும்.

கிறிஸ்துவே, நீர் ஒடிந்துபோகாமல் நிலைநின்றது கண்டு உமக்கு நன்றி செலுத்துகிறோம். நீர் முறிந்து வீழ்ந்திருந்தால் நாங்கள் நிமிர்ந்து நிற்பது கூடாத காரியம். வருத்தம் நேரிட்டவிடத்து நாங் கள் முறிந்து விழுந்துபோகாதபடி எங்களை அக்கினி ஸ்நானத்திற்கு உட்படுத்தும்; உமது ஆவியின் அக்கினியில் இறங்குதற்கு நாங்கள் சம்மதிக்கிறோம். அதின் மூலமாகவே எங்களுக்குச் சுயாதீனம் கிடைக்குமென்பதை நாங்கள் அறிவோம். ஆமேன்.

அறுபத்தைந்தாம் நாள்

எவ்வகைப் பாவத்தையும் மேற்கொள்ளுதல்

ரோ. 5: 20, 21; 6: 6, 7, 11, 12, 14

சுவிசேஷ பிரபல்யத்திற்கு இடையூறாய் நிற்பது, விசேஷமாகக் கீழ்நாடுகளில் இடையூறாயிருப்பது, ஒழுக்க விஷயத்திலும் விதி வலிது எனும் கோட்பாடே. "நான் மனிதன்தானே, வேறு என்ன செய்யமுடியும்." பாவமென்பது மானிடருக்குள் இயல்பாகவே இருக்கின்றது. நாம் மானிடரா யிருக்கும்வரையும் பாவத்தைவிட்டு ஜீவிக்கமுடியாது என்னும் கோட்பாடே வலியுறுத்தப் படுகின்றது. நாம் வெற்றியுள்ள வாழ்க்கை வாழ்வதுண்மையெனின் விதியென வற்புறுத்தப்படும் இக்கொள்கையை மேற்கொள்ளவேண்டும். நமது உள்ளான இதயத்தில், சாதாரண மனதில், நினைவில் என்பது மாத்திரமன்று, உள்ளே அந்தக்கரண உணர்விலும் பாவம் என்பது இயற்கைக்கு மாறானதென்றும் பாவம் வெளியேயிருந்து நமக்குள் புகுந்ததொன்றே என்றும் மானிடரின் இயற்கையான ஜீவியத்திற்குப் பாவம் அவசியமன்றென வும் அறிந்துகொள்ளவேண்டும். ஒருவன் பாவஞ் செய்வானானால் அவன் சரியான இயல்பான மனிதனல்ல. அவன் மானிடப்பிறவியே யெனினும், மானிடவர்க்கத்திற்குக் கீழானவன் அல்லது மானிட விரோதியென்றே கருதப்படத்தக்கவன். இயற்கைக்கு மாறாய் மனித ஜீவியத்திற் புகுந்தன மூன்றுண்டு: இயற்கைக்கு மாறாக ஆத்துமாவைக் கெடுப்பது. இது பாவமெனப்படும்; இயற்கைக்கு மாறாக மனதைக்கெடுப்பது, இது குற்றம், தவறு எனப்படும்; இயற்கைக்கு மாறாக உடலைக் கெடுப்பது, இது நோய் எனப்படும்.

இரட்சிப்பே குணப்படுதல் என இயேசுவானவர் கூறினார். இரட்சிக்கப்படுங்கள் என அவர் கூறியிருக்குமிடங்களிலெல்லாம் குணப்படுங்கள் எனத் திருத்தி

வாசித்தாலும் தவருகாது. ஆத்துமா குணமானுல் நற்குணமும், மனது குணமானுல் உண்மையும் உடல் குணமானுல் தேகாரோக்கியமும் உண்டாகும். குற்றமுள்ள மனது அஃதில்லா மனதிலும் பூரணமான மனதாமோ? தன்னிலே குற்றமுடையான் அஃதில்லானிலும் அதிகமாய் மனிதத்தன்மையுடையவனே? அல்ல. அவன் அற்ப மனது படைத்த தாழ்ந்தவன் என்றே பதிலுரைப்போம்.

அங்ஙனமாயின் எந்தப் பாவத்தையும் மேற்கொள்ளக்கூடும். அதை மனதில் அடக்கிக்கொள்ளவேண்டும். எந்தப் பாவமும் மீறி நடக்க இடம் பெறலாகாது. ஏதேனும் இரண்டொன்றுக்கு இடங்கொடுத்துவிட்டால் அது மற்றவைகளுக்கு வழி திறந்துவிட்டதுபோலாகும். "உங்களைக் கிறிஸ்துவின்மேல் போட்டுவிட்டு, மாமிசமானது அதன் இச்சைகளை நிறைவேற்றுவதற்கு எள்ளளவும் இடங்கொடாதிருங்கள்." இதனையே வேறுவிதமாய்ச் சொன்னுல், தோல்வி பெறுதற்கு இடங்கொடுக்க வேண்டாம், வெற்றி பெறுதற்கான வழியை நாடுங்கள், முழுவதையும் முற்றிலுமாகச் செய்யவேண்டும்.

இப்படி முற்றிலுமாகச் சாதிக்கத் துணியவேண்டுமெனில் இடையிடையே மாய்மாலம் வந்து நுழைந்துகொள்ளும். ஒருவன் ஜீவியத்தில் பாவம் செய்தற்கு இடம் ஏற்படுவதிலும் மாய்மாலம் காணப்படுவது அத்தனை அதிக மோசகரமானதன்று.

கிறிஸ்துவே, சகல பாவங்களிலும் நின்று முற்றிலும் விடுபடும் நிலைமையை எங்களுக்கு முழுவதுமாய் வாக்களித்தீர், அதையன்றி வேருென்றையும் நீர் மானிடர்க்குக் கூறவில்லை. இதற்காக உமக்கு நன்றி பாராட்டுகிறோம். நாங்கள் அந்த விடுதலையைப் பெற்றுய்யுமாறு எங்களுக்குத் துணைபுரிந்தருளும். ஆமேன்.

அறுபத்தாறும் நாள்

மனத்தெளிவும் நேர்மையும்

லூக். 10: 41, 42; அப். 4: 13; 2 கொரி. 11: 3; 1: 12

நான் ஒருநாள் பிரசங்கித்துக்கொண்டிருந்தபோது ஒரு ஹிந்து ஒரு துண்டுக் காகிதத்தில் "நீங்கள் நாடக அபிநயம்போல் கையாட்டிச் சாடைகள் காட்டிப் பிரசங்கிப்பது எனக்குப் பிடிக்கவில்லை, நீங்கள் கிறிஸ்துவைக் கண்டதுண்டானால் அதைச் சாதாரண பேச்சின் மூலமாய்த் தெளிவாயும் நேராயும் சொல்லிவிடுங்கள்" என்று எழுதியனுப்பினர். தலை, கை இவற்றை ஆட்டிப் பிரசங்கம் செய்வது எனக்கு வழக்கமாகிவிட்டது. நான் அறியாமலே அவை வந்துவிடுகின்றன. நான் அதி சாதாரணமாகப் பேசித் தெளிவோடு நேராகப் பேசவேண்டுமென அவர் கேட்டது மிகவும் நல்ல காரியம் என்பதைக் கண்டேன். அவர் கேட்டது சரியே; வெற்றியுள்ள வாழ்வானது நமது மனப்பான்மையை உள்ளான ஐக்கியமுடையதாகச் செய்யவேண்டும், அப்படியே செய்கிறது; ஆகையினால் வெளித்தோற்றத்தில் அது சாமானியமானதாகவும் நேரானதாகவு மிருக்கவேண்டும்.

பேச்சிலும் நடத்தையிலும் இரண்டு அர்த்தம் உண்டாகாதபடி நாம் பார்த்துக்கொள்ளவேண்டும். நமது பேச்சு ஒரே காரியத்தை உரைப்பதாகச் சுத்தமான பேச்சாய் விளங்கவேண்டும்.

பரிசுத்த ஆவி பேதுருவின் ஜீவியத்தில் பிரவேசித்தவுடனே பேதுரு அப்போஸ்தலரிடம் காணப்பட்ட மாறுதல் என்ன? அதைக் கவனிப்போம். "மனிதனே, நீ கூறுவது இன்னதென்று எனக்குத் தெரியாது" என இயேசுவை மறுதலித்தபோது கூறினர். இங்கே பேதுரு இருமனதும் நிதானமற்ற பேச்சுமுடையராய்க் காணப்படுகிறர். பரிசுத்தஆவியைப் பெற்றபின்போ அவர்

பேசியதெவ்வாறு? 'பேதுரு பரிசுத்த ஆவியினால் நிறைந் தவராய் அவர்களைப் பார்த்து "அதிகாரிகளே, மூப்பரே, பிணியாளிக்குச் செய்யப்பட்ட நன்மை விஷயமாய், இவன் எதினாலே குணமாக்கப்பட்டான் என்று இன்று எங்களை விசாரணை செய்கிறதானால், உங்களெல்லாருக்கும் இஸ்ரவேல் ஜனம் அனைத்துக்கும் இது தெரிந்திருக்கட் டும்:—உங்கள் முன்னிலையில் இவன் குணமாகி நிற்கிறது, நீங்கள் சிலுவையில் அறைந்தவரும் கடவுள் மரித்தோரி லிருந்து எழுப்பினவருமாகிய நசரேயன் இயேசுகிறிஸ்து வின் நாமத்தினாலேயே, வீடு கட்டுகிறவர்களாகிய நீங்கள் அற்பமாய் எண்ணின அவரே கோடிக்குத் தலைக்கல்லா னார். வேறொருவராலும் இரட்சிப்பில்லை; நாம் இரட் சிப்பைப் பெறுதற்கு வானத்தின்கீழ் மனுஷருக்குள் அரு ளப்பட்ட வேறொரு நாமமுமில்லை" என்று சொன்னார். இது நேரான பதில், தெளிந்த மொழி, நேரான உரை. உண்மையின் ஆவியாகிய பரிசுத்த ஆவியானவரே, தெளி வாயும் நேராயும் உரைக்க வல்ல ஆவியானவரே, பேதுரு அப்போஸ்தலரின் மனதில் இம்மாறுதலை உண்டாக்கினார். அம்மாறுதலை நமக்குள்ளும் அருளுவார். அற்பத்தனப் பேச்சும் நடத்தையும் நீங்கி, ஐக்கியப்பட்ட மனப்பான் மையினின்று புறப்படும் நேர்மையான தெளிந்த பேச்சு வெளிப்படும்.

கிறிஸ்துவே, சாமானியப்பேச்சும் நேரான தைரிய ஒழுக்கமுமாய் முன்மாதிரி காட்டியவரே, நாங்களும் இவ்விஷயத்தில் உம்மைப் போலிருக்கச் செய்தருளும். நாங்கள் உம்மைப்போலிருந்தால், இரு விதப் பொருள்படப் பேசமாட்டோம். உள்ளொன்று மறைத்து வெளி யொன்று காணப்படாமல் நடப்போம், பேசுவோம், தந்திரமான ஏமாற்றப்பேச்சு எங்களிலிராது. எங்களை இதற்கு நடத்தியருளும். ஆமேன்.

அறுபத்தேழாம் நாள்

புதியன படைக்கும் ஜீவன்

1 தெச. 1: 8; யோ. 15: 5; 7: 37–39

வெற்றியுள்ள வாழ்வினுல் விளையும் பலன்களுள் கடைசியாக இங்கே கூறப்படுவது ஜீவனானது ஆவியின் பிரகாரமாய்ப் புதிய ஜீவனைப் பிறப்பிக்கவல்லது எனும் உண்மையே. வெற்றியுள்ள வாழ்வானது அன்பே ஆதாரமாக உண்டாவது, அன்பு பிறப்பிக்கும் வல்லமையுடையதாதலின் ஜீவனும் அவ்வல்லமையுடையதாம்.

அன்பென ஒன்றிருக்குமாயின் அங்கே மற்றொன்றுக்கும் இடமுண்டு, அது தனியாயிருப்பதில்லை. போதுமானது மாத்திரமேயன்றி மீதியானதுமுண்டு. உலகில் சுவிசேஷ பிரபல்யஞ் செய்த பெரியோருள் ஒருவராக மதிக்கப்பட்ட ஒரு அம்மாள் தாம் சீனுவுக்கு மிஷனெரியாகப்போன முதல் தினத்தில் தூக்குநாற்காலியில் ஏறிக்கொண்டு சீனுவின் ஒரு முக்கிய பட்டணத்தின் தெருவழியே சென்றுர். அத்தெரு மிகவும் ஒடுக்கமானது, நெருக்கமானது, மிகவும் அழுக்கும் அசங்கியமுமாயிருந்தது. இந்த விபரீதத்தையும் அழுக்கையும் காணவே அவர் மனவெறுப்படைந்து "ஆ கடவுளே, என் இதயத்தில் அன்பில்லாவிடில் இந்த ஜனங்களின் நடுவே நான் எப்படி இருக்கமுடியும்?" என்று அழுதனர். உடனே அவருக்குப் பதில் கிடைத்தது. தெய்வீக அன்பே அவருடைய இதய முழுதையும் நிரப்பிற்று. அந்நிமிஷ முதல் அவர் விபரீதத்தையும் தெருக்களின் நெருக்கம் அழுக்கையும் மறந்தனர். ஜனங்களுக்காகவே பரிதாபங்கொண்டார். கிறிஸ்துவானவர் அவர்களுக்காக மரித்தார் என்பதை மனதிலே நினைத்து வந்தார். தனக்குள்தானே அடங்கியிருந்துகொள்ளும் நிலைமையை யொழித்துத் தாம் அன்புகொண்ட ஜனங்களில் புதிய ஜீவியம் தோன்றும்படியாகப் பிறருக்காகவே பாடுபட்டு உழைத்தனர்.

இப்பொழுது தம்மோடு பிறர் எனும் மற்றொன்றும் கூடி விட்டது.

வங்காள தேசத்தில், கலியாணச் சடங்குகளில் ஒன்று, பெண்ணின் கையிலே ஒரு குழந்தையைக் கொடுப்பது. தென்னிந்தியாவிலும் இதுபோலொத்த ஒரு வழக்க முண்டு. இதன் அர்த்தம் அந்தப் பெண் பெற்றுப்பெருகு வாளென்பதே. நமது ஆத்மாவானது தன்னை முழு வதுமாக ஒப்படைத்துக் கிறிஸ்துவோடு மணஞ்செய்து இசையும்போது நமது கையிலும் இத்தகைய பொறுப் பும் வேலையும் வேலை செய்யச் சமயமும் கொடுக்கப்படு கிறது. அன்பானது புதிய சிருஷ்டியை உண்டாக்கக் கூடும், உண்டாக்குகிறது.

வெற்றியுள்ள வாழ்வென்பது நம்மிலுள்ள சகல சக்தி களும் மேம்பாடுறுதலாம். நமது மனது முன்னிலும் அதிக நுட்பமாகிப் புதியன தோற்றுவிக்கும் சக்தியில் விர்த்தியாகிறது, நமது மனக்கிளர்ச்சி விசாலமடைந்து எளிதில் உணர்ந்துகொள்ளும் சக்தி பெறுகிறது, நமது சித்தம், அதாவது திடபுத்தி பரபரப்படைந்து உறுதி யடைகிறது. நமது முழு வாழ்வும் வெளிநாட்டமுடைய தாகிறது. பிற உயிர்கள் மாறுதலடைகின்றன, புதிய கிளர்ச்சிகள் ஆரம்பிக்கின்றன, ஜீவியத்தில் புதியன விளைக்கும் ஆசை உற்பத்தியாகிறது. மிகவும் அந்தஸ் துடைய ஒரு அம்மாள் என்னிடம் "இதுவரையும் நான் இன்னாரோடு சிநேகம் செய்யலாம் செய்யலாகாதெனத் தெரிந்துகொள்வதுண்டு. இப்பொழுதோ, இந்தப் பெரிய மாறுதல் என்னிடம் உண்டானபின் எல்லாரையும் என் மனதார நேசிக்கிறேன்" என்று சொன்னார். அன்பு புதிய ஜீவனைப் பிறப்பிக்கத் தொடங்கிவிட்டது.

கிறிஸ்துவே, எங்கள் இதயத்திலே புதியன பிறப்பிக்கும் ஆசை யை விளைக்கும் உமது அன்பு புகுந்திருப்பது கண்டு உமக்கு நன்றி செலுத்துகிறோம். எங்களைச் சுற்றியிருக்கும் மந்த ஜீவியம், உயிரற்ற ஜீவியம் இவற்றோடு நாங்கள் நெருங்கிப் புதிய நல்ஜீவனை இன்றே பிறப்பிக்கும்படி எங்களுக்குத் துணை நின்றருளும். ஆமேன்.

அறுபத்தெட்டாம் நாள்

கடைசியாக விட்டுவிடவேண்டியது யாது?

அப். 5: 1, 2; மத். 10: 37–39; 12: 47–50

கடைசியாக நாம் விட்டுவிடவேண்டியது நம்மையே. நமக்கெனச் சொந்தமாயிருக்கும் ஒரே காரியம் அது தான். கடைசியாக நம்மிடமிருக்கும் அவ்வொன்றையும் தம்மிடம் கொடுத்துவிடும்படி அதிகாரத்துடன் கேட்கிறார். சரியான போர் விளைவது இதிலிலேயே. இது வரை நடந்தனவெல்லாம் குட்டிச் சண்டைகளே.

இயேசுவானவர் இவ்விஷயமாகத் தீர்மானமாய் வெகு தெளிவாய்ப் பேசினார்:—"என்னிடம் வருகிற ஒருவன் தன் தகப்பனையும் தன் தாயையும் மனைவியையும் பிள்ளைகளையும் சகோதரரையும் சகோதரிகளையும் தன் சொந்த ஜீவனையும்கூட வெறுக்காவிட்டால் எனக்குச் சீஷனாயிருக்கமுடியாது" (லூக். 14: 26) என்று சொன்னார். நம்மையும் நமது குடும்பத்தையும் பலிபீடத்தின் மேல் படைக்கவேண்டும். இதினாலே நாம் கட்டாயமாய்க் குடும்பத்தை விட்டுவிட்டு ஓடிவிடவேண்டுமென்பதல்ல. இங்கே வெறுத்தல் என்பது மத். 19: 37 ல் காட்டியிருக்கிறபடி குறைவாக அன்புகூருவதைக் குறிக்கும். எரிந்துகொண்டிருக்கும் மெழுகுவர்த்தியை அதனினும் அதிகப் பிரகாசமான மின்சார ஒளியின் சமீபத்தில் கொண்டுபோனால் அதின் நிழல்படும். குறைவாகக் கொண்ட இந்த அன்பும் ஒளியே எனினும் எல்லாவற்றையும் பிரகாசிப்பிக்கும் பேரொளியின் முன் அது கொண்டு வரப்படவே அதின் நிழல் படும். அந்தப் பேரொளியின் முன் இது தன் ஒளி மழுங்கி இருண்டு தோன்றும். உலகில் நமக்குரியார்பாலுள்ள அன்பை ஒழித்துவிடவேண்டுமென்பதல்ல. அவற்றை நாம் அவருக்கு ஒப்புவிக்க வேண்டும். நீ உன்னைக் கடவுளுக்கு ஒப்புக்கொடுத்த பின்னும் உன்னோடேயே இருக்கிறாய். அப்படியே உன்

குடும்பத்தைக் கடவுளுக்கு ஒப்புக்கொடுத்த பின்னும் நீ அதனோடிருப்பாய்.

மேலே காட்டப்பட்ட வாக்கியத்தில் "ஜீவனையே" அதாவது தன் ஆத்மாவையே என்பது கவனிக்கத்தக்கது. 'தன் ஜீவனையும்கூட வெறுக்காவிட்டால்' இதைக் கடைசியிடத்தில் வைத்துக் கூறிய காரணமென்ன? நாம் கடைசியாக ஒப்புவிப்பது அதுவே யாதலின். வெளிநாடுகளுக்குப்போகும் ஐரோப்பிய மதபிரசாரகர் தங்கள் வீட்டையும் இனஜனத்தாரையும் விட்டுவிட்டு அந்நிய நாடுகளுக்கு வருகின்றனர். தன்னைத் தவிர யாவற்றையும் விட்டுவிட்டு வருகின்றனர். பதவி, ஸ்தானம், அதிகாரம் இவையெல்லாவற்றிலும் தானென்பதுவே மிகவும் உரிமையானதாகக் காணப்படுகின்றது. குரு ஊழியத்தைத் தெரிந்துகொள்வோர் அநேக காரியங்களை வெறுத்து அவ்வூழியத்தைத் தெரிந்துகொள்ளுகின்றனர். அங்கேயும் தனக்கு குருவின் பதவியென்பதை மறந்துவிட்டுவிடுகிறதில்லை. பெருமை, சுயமேன்மை இவற்றை மறவாதவராய்ப் பிரசங்க பீடத்தின்மீது ஏறிப் பிரசங்கிக்கின்றனர். சபையாருட் பலர் கிறிஸ்துவைப் பின்பற்றுதற்கெனப் பல காரியங்களை விட்டுவிடுகின்றனர். கிறிஸ்துவைப் பின்பற்றுகிற காரியத்திலேயோ தமக்கு மாறாக ஏதாவது பிறர் பேசினால் கோபித்துக்கொள்ளுகின்றனர். இருவரிடத்தும் தன்னயம் என்பது குடிகொண்டுள்ளது. அது அவர்களைவிட்டின்றும் அகலவில்லை. அதையும் ஒப்புவிக்கவேண்டும்.

கிறிஸ்துவே, இந்த முக்கியமான காரியத்தில் எனக்கு உதவி பெறும்படியாக நான் உம்மிடம் வந்து நிற்கிறேன். தான் என்னும் அந்த ஒன்றை விட்டுவிடுவது எனக்கு மிகவும் கஷ்டமான காரியமாயிருக்கிறது. எனினும் அதை விட்டுவிடுவதற்குச் சம்மதமாயிருக்கிறேன். ஆமேன்.

அறுபத்தொன்பதாம் நாள்

ஒப்புக்கொள்ளுதல்

யோ. 1: 16; மார். 3: 5; 11: 22; 9: 22, 23

நம்மை முழுவதுமாய் ஒப்புக்கொடுக்க ஆயத்தமாயிருக்கும் நிலைமைக்கு இப்பொழுது வந்திருக்கிறோம். விசுவாசத்தின் மூலமாய் அத்தீர்மானத்திற்கு வந்திருக்கிறோம். ஒப்புக்கொள்ளவும் ஆயத்தமாயிருக்கிறோம் எனும் உறுதியான நம்பிக்கையோடு இதைச்செய்கிறோம். கடவுள் நம்பிக்கைக்கு ஏற்றவர் என்பதையும் நம்புகிறோம். ஆகவே கடவுளின் தன்மையும் உலகின் நல்லொழுக்க நிர்ணயமும் நம்மை முழுவதுமாய் அவருக்கு ஒப்புக்கொடுக்கத் தூண்டுகின்றதென்பதை நம்புகிறோம். விலைமதியாத முத்தாகிய, உள்ளான சுயாதீனத்தைக் கிட்டி அதை வாங்கிக்கொள்வதும் மிகவும் துணிவுடைய காரியமாகத் தோற்றுகிறது. நாம் ஏன் அதை அபகரிக்கக்கூடாது. அதற்குரிய கிரயமாக நமக்குரிய யாவற்றையும் நாம் கொடுத்தபின் நாம் அதை வலிய எடுத்துக்கொள்ளுவதற்கு நமக்கு பாத்தியதை யுண்டு. இது பரஸ்பர நம்பிக்கையால் விளைவது. நாம் முழுதுமாக ஒப்புக்கொடுத்தோம். அவர் முழுதுமாக நம்மை அங்கீகரிப்பார்.

சிற்சிலர் முழுவதையும் கொடுத்தபின் முழுவதையும் எடுத்துக்கொள்ளுவதற்குக் கூசிநிற்கின்றனர். சென்னையில் சென்ட்ரல் ஸ்டேஷனில் ஒரு அணுவைப் போட்டுவிட்டு ஸ்டேஷன் உள்ளே போகும் டிக்கட்டைப் பெறுதற்கு ஒரு சிறு யந்திரத் தூண் நிற்கிறது. சிலர் ஒரு அணுவைப் போட்டுவிட்டு டிக்கட் தானாக வருமெனக் காத்திருப்பதுண்டு. அது அப்படி வராது. அங்குள்ள கைப்பிடியை இழுக்கவேண்டும். நம்பிக்கையோடு இழுக்கவேண்டும்.

இப்பொழுது நீங்கள் கிரய முழுமையையும் கொடுத்தாயிற்று. உங்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ள வாக்குத்தத்தங்களின்படி அதை ஏற்றுக்கொள்ளவேண்டும். ஏற்றுக்கொண்டால் அப்படியே அதன் வழியே சுயாதீனத்தினுட் பிரவேசிக்கலாம். தனது வாழ்நாள் கசந்துபோன ஒரு டாக்டர் இருந்தார். அவர் திடீரென இந்தச் சுயாதீனத்தைப் பெற்ருர். பெறுதற்குக் காரணமாயிருந்தது "நீங்கள் எவைகளைப் பிரார்த்தனையினுல் கேட்டுக்கொள்வீர்களோ அவைகளைப் பெற்றுக்கொண்டோமென்று நம்புங்கள். அப்பொழுது அவைகள் உங்களுக் கிடைக்குமென்று சொல்லுகிறேன்" என்ற திருவசனமே. 'பெற்றுக்கொண்டோம்' என்றிருக்கிறதேயன்றி, 'பெற்றுக்கொள்வோம்' என்றிருக்கவில்லை. முன்னரே கொடுத்தாயிற்று என்பது பொருள். நீங்கள் அவற்றை எடுத்துக்கொள்ள வேண்டும், நீங்கள் உங்களையும் உங்கள் பலத்தையும் நம்பமுடியாது. அவரையோ நம்பலாம். அவர் உங்களை ஏமாற்றுபவரல்ல.

இவ்வாறு ஏற்றுக்கொள்ளும்போது ஆயிரக்கணக்கானவர்களோடு நான் இருந்திருக்கிறேன். வெகு சாமானியமாய்ப் பூரண நம்பிக்கையோடு, கட்டாயம் பெற்றுக்கொள்வோமென நம்பி இந்நிலைமைக்குட்பட்டவர்களைக் கடவுள் ஒருக்காலும் கைவிட்டதில்லை. அவர் எவரையும் கைவிட்டதில்லை. உன்னையும் கைவிடார். நீயும் துணிந்து செய்துபார்.

கடவுளே, பிதாவே, எனக்கு உம்மீதுள்ள அன்பைப் பரிசோதிக்கும் நிலைமைக்கு வந்திருக்கிறேன். நான் உம்மில் அன்பாயிருப்பது உண்மையெனில், நான் முழுவதுமாக விடுபடும் இந்தச் சிலாக்கியத்தை நீர் அளிப்பீர் என நம்புவேன். இது எனக்குத் தெரியும். நான் உம்மில் அன்பாயிருக்கிறேன், நம்புகிறேன். ஆமேன்.

எழுபதாம் நாள்

அனுபவ சாட்சி

அப். 4: 20; லூக். 1: 2; அப். 1: 8

என் சொந்த அனுபவத்தைச் சிறிது கூறுதல் ஒருவாறு அனுகூலமாயிருக்கலாம். நான் கிறிஸ்தவனுகி இரண்டொரு வருடங்கள் செல்லா முன் ஒருநாள் ஒரு புஸ்தகசாலையிலே சென்று அங்கே ஒரு தட்டிலிருந்த புத்தகங்கள் இன்னின்னவெனப் பார்த்துக்கொண்டிருந்தேன். அப்போது "கிறிஸ்தவனின் சந்தோஷ ஜீவிய அந்தரங்கம்" எனும் பேருடைய ஒரு புஸ்தகம் இருக்கக் கண்டு அதை வாசிக்கவேண்டுமென எடுத்தேன்.

நான் அதை வாசித்துக்கொண்டே போகும்போது சுயாதீனமுள்ள இந்த பூரண ஜீவனைப் பெறவேண்டுமென என் இதயத்தில் பேராவல் உண்டாயிற்று. அப்புத்தகத்திலே நாற்பத்திரண்டாவது பக்கம் வரை வாசித்தேன். அவ்வளவில் எனக்குள்ளிருந்து "அந்த ஜீவனைப் பெறுதற்கு இதுவே சமயம்" எனத் திட்டமாய்க் கூறுவது கேட்டேன். எனக்குத் தேவையான தின்னதென எனக்கே இன்னும் நன்ருய் விளங்கவில்லை. ஆகவே 'இந்தப் புஸ்தகத்தை முடித்தபின் அதைத் தேடுவேன்' எனப் பதிலுரைத்தேன். எனக்குள்ளிருந்து பிறந்த கட்டளையோ மிகுந்த அதிகாரத்துடன் "அதைத் தேடுதற்கு இதுவே சமயம்" என மறுபடியும் வற்புறுத்துவது கேட்டேன். நானே அந்தப் புஸ்தகம் முழுவதையும் வாசித்து முடிக்கவேண்டுமென மறுபடியும் வாசிக்கத் தொடங்கினேன். வாசிக்க முடியவில்லை. அதின் எழுத்துக்கள் விளங்கவில்லை. கடவுளே என்னை வற்புறுத்துவதாகக் கண்டேன். அவர்க்கு விரோதமாய் வாதாட முடியாதென்பதையும் கண்டேன். உடனே நான் வாசித்துக்கொண்டிருந்த புஸ்தகத்தை அப்படியே மூடிவிட்டு முழங்காலில் நின்று ஜெபித்து "நான் என்ன செய்ய" எனக் கேட்டேன். எனக்குள்ளிருந்து பேசுபவர் "உன்னிடமிருப்பதையெல்லாம், உன்னையே முழுவதுமாக, எனக்குக் கொடுத்துவிடுவாயா" எனக் கேட்ட சத்தம் கேட்டேன். இரண்டொரு நிமிஷம் தாமதித்தேன். பின்னர் நான் வாய்திறந்து "நான் கொடுத்துவிடுவேன்"

எனப் பதிலுரைத்தேன். நான் இப்பதிலுரைத்து முடித்த மாத்திரமே "அங்ஙனமாயின் என்னிடமுள்ள தனைத்தையும் நீ பெற்றுக்கொள், நீ சுத்தமானாய்" என எனக்குள்ளிருந்து வாக்குப் பிறந்தது. அது வெகு திட்ட மாக உறுதியாக உரைத்தது. "நான் நம்புகிறேன்" எனக் கூறிவிட்டு முழந்தாளில் நின்று எழுந்தேன். எழுந்து அந்த அறையிலேயே சுற்றிச் சுற்றி நடந்தேன். எனக் குச் சிறிது சந்தேகம் தோன்றும்போது அச்சந்தேகத் தைத் தூரமாய்த் தள்ளுவதுபோல் என் கையினாலே தள்ளினேன். இப்படியே பத்து நிமிஷம்வரை செய்து கொண்டிருக்கவே, இதோ, எனக்குள் கொழுந்துவிட்டெரி யும் அனல் மூளுவது கண்டேன். அது என் ஒவ்வொரு அங்கத்தையும் சுத்திகரிப்பதுபோல் என் அங்கமெல்லாம் சுத்திகரிப்பின் அனலாய்ப் பரவியது. முழுவதும் அமைதியாயிருந்தது. நான் தன்னறிவோடேயே இருந் தேன். அத்தெய்வ அனல் உள்ளே என் இதய ஆழத்தி னின்று புறப்பட்டு வெளியே விரல்நுனிவரை பரவிச் செல்வதை யுணர்ந்தேன். நான் முழுவதுமாய் ஒன்றாய் இணைக்கப்பட்டேன். முழுவதிலும் பரிசுத்தம், பயபக்தி என்பன விளங்கின. எனக்குள் சொல்லொணாப் பேரானந் தம் பிறந்தது.

சிலர் இந்த அனுபவத்தை ஏதோ ஒருவித மனக் கிளர்ச்சியென்னலாம். அப்படியே இருக்கட்டும். என்னை அசைத்தது மனக்கிளர்ச்சி மாத்திரமன்று. என் ஜீவிய ஊற்றுக்களெல்லாம் சுத்தமாகிப் பரிசுத்த ஜீவன் என் பது என் வாழ்வு முழுவதையும் ஆட்கொண்டுவிட்ட தென்பதை அறிந்தேன். இப்போதும் அப்படியே எனக் குத் தோன்றுகிறது. என் மனக்கிளர்ச்சியேபோல் என் சுய சித்தமும் இம்மாறுதலுக்குக் காரணமாயிருந்தது. என் வாழ்வு முழுவதும் நிலையான உயர்நிலைமை பெற்றது என்பது உண்மை.

கடவுளே, நானும் உம்மை இவ்வாறு எளிதான முறையாகவே ஏற்றுக்கொள்ளுகிறேன். நீர் உட்புகுந்து சுத்திகரிக்க வேண்டுமென ஏதேனும் ஒரு இதயத்தைத் தேடிக்கொண்டிருப்பீராயின், இதோ, என் இதயத்தை உமக்கு முன் படைக்கிறேன்; முழுவதுமாக, என்றுமாகப் படைக்கிறேன். உமது ஈவைப் பெற்றுக்கொள்ளுகிறேன். ஆமேன்.

எழுபத்தோராம் நாள்

பின்னும் தெளிவாக்குதல்

ரோ. 5: 1–5; 1 பே. 1: 8, 9; 1 கொரி. 5: 7

நேற்று எழுதியிருக்கிற என் சொந்த அனுபவத்தை எழுதலாமோவெனும் சந்தேகம் எனக்கிருந்தது. சிற்சிலர் தாமும் அதேவிதமான அனுபவத்துக்குட்பட வேண்டும், அல்லவென்றால் தாம் ஐக்கியமாகி விடுபட்டு ஆவியினால் நிரம்பவில்லை எனக் கருதிக்கொள்வார்கள் என நினைத்தேன். இப்படி எவராகிலும் நினைப்பார்களேயாகில் அது தவறும். இங்ஙனமுண்டாகும் மனக்கிளர்ச்சி இருவர் விஷயத்தில் ஒன்றுபோலிருந்ததை இதுவரை நான் கண்டதில்லை. மிகவும் பேத முண்டு. எனினும் எல்லாருக்கும் ஒன்றுபோலவே விடுதலையும் எல்லாருக்குள்ளும் ஒரேவிதமான ஐக்கியமும் உண்டாவது மாத்திரமேயன்றிப் பிறரைப் புதிதாய் ஆவிக்குட்படுத்தும் வல்லமையும் எல்லாருக்கும் உண்டாகிறது. பிறருடைய அனுபவம் இன்னதென்பதை அறியப் பிரயாசப்படவேண்டாம். கிறிஸ்துவைத் தேடுங்கள், உங்களுக்கு இசைந்த அனுபவம் இன்னதென அவர் அறிவார். எவ்வகை அனுபவத்தினால் நீங்கள் மற்றவர்களுக்கு மிகவும் பிரயோசனமாயிருப்பீர்கள் என்பதையும் அவர் அறிவார்.

கடவுளுக்கு இசைந்து ஜீவிக்கும் என் சிநேகிதர் ஒரு அம்மாளுண்டு. கிறிஸ்துவானவர் அந்த அம்மாளிடம் "உன் மனதில் நான் கிளர்ச்சியுண்டாகச் செய்வதில்லை. எனது மன உணர்ச்சியை உனக்குள் அருளுவேன்" எனக் கூறினார். அப்படியே அருளினார். அவருடைய மனக்கிளர்ச்சி அந்த அம்மாளுக்குப் போந்ததாயிருந்தது. இக்கிளர்ச்சியே நலமானதாகவும் கடவுளின் நோக்கத்துக் குட்பட்டதாகவு மிருக்கிறது.

தற்காலத்திலே மனோற்சாகமாகிய இந்த மனக்கிளர்ச்சியை மதசம்பந்தமாய் அநேகர் ஒப்புக்கொள்வதில்லை. எனினும் நமது உயிரை நம்மிடமிருந்து கிறிஸ்துவினிடம் மாற்றுவதற்கு இப்படிப்பட்ட மனோற்சாகக் கிளர்ச்சி அவசியமாம். அது தனக்குத்தானே ஒருவித திருப்தியையும் சந்தோஷத்தையும் விளைப்பதுமாத்தி

ரமேயன்றி அது மீட்புக்கேதுவாகவும் விடுதலைக்கேது வாகவு மிருக்கிறது.

இப்படிப்பட்டதோர் பெரிய மாறுதல் எவ்வித மனக் கிளர்ச்சியும் வெளிப்பாடுமின்றி உண்டாகிவிடுமென எதிர் பார்ப்பது கூடாதகாரியம். மனதினுள் உண்டாகும் மாறுதல்களின் காரணமாக விளைவதே இந்த மனக் கிளர்ச்சி. நாமோ அதன்மீதே சார்ந்திருப்பதில்லை. நாம் சார்ந்திருப்பவர் கிறிஸ்துவே, நமது மனதிலே தோன் றும் மாறுதல், உற்சாகம் இவற்றினிடையே அவர் நம்மில் சாஸ்வதமாக நிலைத்திருக்கும்படி வந்துவிடுகிறார். அப் படி அவர் வந்து தன்னுள் தங்கிவிடுவதைக்கண்டு ஒருவர் ஆனந்த பரவசராகி மத்தளங்கொட்டி ஆடிப்பாட ஆரம் பிப்பாராயின் அதைக்கண்டு ஆச்சரியப்பட நிமித்த மில்லை. இத்தகைய பரவசம் ஏற்படாதிருப்பது ஆச்சரி யமேயன்றிப் பரவசம் உண்டாவது ஆச்சரியமாகாது. கடவுளே நமது இதயத்தினுள் தாமாக மகா சிறந்த ஈவுகளைக்கொடுத்து நம்முள் என்றுமாகத் தங்க வருவது கண்டு மனம் அடங்கி அமைதியாயிருக்குமோ. அமைதி யாயிருந்தால் அது ஆச்சரியமே. அது பரவசமடைந்து மகிழ்ந்து ஆடுவது ஆச்சரியமன்று.

ஆர்க்கிமிடீஸ் என்பவர் கணிதசாஸ்திர சம்பந்தமான ஒரு உண்மையை அறிந்துகொண்டமாத்திரமே தம்மை அடக்கிக்கொள்ள முடியாமல் தெருவழியே ஓடி "யூரீக் கா," "கண்டுகொண்டேன்" எனக் கதறிக்கொண்டோடி னர் எனும்போது, அவர் ஏன் அப்படிச்செய்தார் என் பது நமக்கு விளங்கும். தமது மன உணர்ச்சியை அவர் அடக்கிக்கொள்ள முடியாது. சாஸ்திர சம்பந்தமான ஒன்றைப்பற்றி ஒருவர்க்கு அத்தகைய உணர்ச்சி பிறக்கு மாயின் ஜீவிய சம்பந்தமாய் அத்தகைய உணர்ச்சியுண் டாவது கண்டு ஆச்சரியப்படுவானேன். அது இயற் கையே. ஜீவியம் கட்டுப்பட்டதன்று. ஜீவியவழியைக் கண்டுகொண்டோம்.

கடவுளே, பிதாவே, பூரண ஜெயத்துக்கான வழியிலே நான் காலெடுத்து வைத்ததற்காக உமக்கு நன்றி செலுத்துகிறேன். வெளியே யுள்ள வேறொன்றின்மீதும் நான் சாராமல் உம்மிலேயே சார்ந்திருக் கிறேன். ஆமேன்.

எழுபத்திரண்டாம் நாள்

வார்த்தையினுல் உண்டாகும் சுத்தம்

2 கோரி. 7: 1; யோ. 13: 10; அப். 20: 32; எபே. 5: 25–27

இயேசுவானவர் இந்த விசேஷித்த வார்த்தையைக் கூறினுர்: "நான் உங்களிடம் பேசியிருக்கிற வார்த்தையினுல் நீங்கள் இப்பொழுதே சுத்தமாயிருக்கிறீர்கள்." யோ. 15: 3. அவர்களுக்குச் சுத்தத்தைக்கொடுத்த இந்த "வார்த்தை" எது? 'வார்த்தைகள்' என்று சொல்லாமல் 'வார்த்தை' எனக் கூறியதன் கருத்தென்ன?

அவருடைய வார்த்தைகள் உண்மையும் உள்நோக்கும் சேர்க்கையும் ஒற்றுமையுமுள்ள ஒரே சரீரமாய்ச் சேர்ந்ததினுலே அவர் வார்த்தைகள் எனக் கூருமே "வார்த்தை" எனவே கூறினுர் என்று தோன்றுகிறது. 'வார்த்தைகள்' 'அவருடைய வார்த்தை' 'வார்த்தை' என முப்பிரிவினதாய்க் காணப்படுகிறது. எனினும் நம்மோடு சேர்ந்து மௌனமாயுமிருந்தார். அவருடைய மௌனமும் அவருடைய வார்த்தையிலேயேயுள்ளது.

கி. மு. ஏழாம் நூற்ருண்டிலிருந்த லேவோட்ஸென்பவர் "விளக்கிக்காட்டக்கூடிய வழி நித்தியவழியன்று; பேரிட்டு அழைக்கக்கூடிய பேர் நித்தியமான பேருமன்று" எனக் கூறினர். அவரோ கிறிஸ்துவைக் காணவில்லை. அவர் கிறிஸ்துவைக் கண்டிருந்தாராயின் காலங்களின் வழியிலே நடந்து நமது நாமங்களை யுரைக்கும் அவருடைய நித்திய வழியையும் நித்திய நாமத்தையும் கண்டிருப்பார். திருவார்த்தையே மாமிசமானது.

யாண்டும் பரந்திருந்தாயதைப் பார்த்திலம் பேருமிட்டோம்
வேண்டுந் திருநாமஞ்சூட்டியுன் மர்மத்தின் சீருணர்ந்தோம்
ஆண்டுகொண்டாயுனின் வாய்திறவாயி துன் கீதமெனின்
ஈண்டுமக் கீதமுழக்க மென்னுவிற் கருள்சுடரே.

என ஒருவர் ஒரு காலத்தில் பாடிச்சென்ருர்.

நாமோ கிறிஸ்துவெனும் பேரிட்டழைப்பதினலே நித்திய மர்ம அந்தரங்கத்தை நீக்கி விட்டோமென்பதில்லை. அதை ஒருவாறு மொழிபெயர்த்துக்கொண்டு அதன்மூலமாய்ச் சுத்தமடைகிறோம். நித்திய காலமாயிருக்கும் வெண்கற் பரிமள ஜாடியை உடைத்து அதின் மணம் நமது இதயத்தை நிரப்பி அதைச் சுத்திகரிக்கும்படி செய்யவேண்டும்.

எம்பிரான் தமது சிஷருடன் மூன்றுவருஷ காலம் நெருங்கியிருந்து செய்த சுத்திகரிப்பானது சிஷரைமாத்திரம் சுத்திகரித்ததாகாது. அவர்களின் மூலமாய், அவர்களைச் சுற்றியுள்ள உலகையும் சுத்திகரித்ததாகும். சிஷர் முதலிற்கண்ட உலகம் தாறுமாருய்த் தடுமாறி நின்ற உலகம். இயேசுவானவரோ அவர்களை விட்டுப்பிரியா முன் அவர்கள் சம்பந்தப்பட்ட தொடர்பு, மற்றுமுள்ளன விஷயமாய்ச் சுத்தமாக்கப்பட்ட உலகைக் காட்டிச் சென்ருர்.

கிறிஸ்துவே, உமது திருவார்த்தையானது எங்கள் ஜீவிய முழுவதிலும் எங்கள் தொடர்புகள் அனைத்திலும் சென்று அவைகளைச் சுத்திகரிக்குமாறு செய்யவும் நாங்களும் சுத்திகரிக்கப்படுதெற்கேதுவாய் அது விளங்கவும் துணைபுரிந்தருளும். ஆமேன்.

எழுபத்துமூன்றும் நாள்

அவர்களைச் சுற்றியுள்ள உலகைச் சுத்திகரித்தது

மத். 23: 9; 1 தீமோ. 2: 5; யோ. 14: 9; 1: 18

சீஷர் இயேசுவானவரிடம் வந்த சமயத்தில் அவர்களைச் சுற்றியிருந்த உலகம் மிகவும் தாறுமாறானதாயிருந்தது. சகுனம் பார்த்தல், மந்திரம், தப்பான கோட்பாடுகள், தீய பழக்கவழக்கங்கள் முதலியன நிறைந்த உலகம். அதற்குமுன் அவர்கள் நடுவே தீர்க்கதரிசிகள் பற்பலர் தோன்றி அவர்களைப் பலமாய் இடித்துரைத்து அங்கே காணப்பட்ட பல அசுத்த பழக்க வழக்கங்களை நீக்கிச் சுத்திகரித்திருந்தார். தீர்க்கதரிசிகள் செய்தது அத்தனை அதிகமன்றெனினும் மற்ற நாட்டவரோடு, விசேஷமாக இந்தியரோடு, அவர்களை ஒப்பிட்டு நோக்கினால் அதன் சிறப்பு விளங்கும். இந்துமதத்திலே இத்தகைய தீர்க்கதரிசிகள் தோன்றாமையினாலே அங்கே இன்னும் பற்பல தாறுமாறுகளும், நாட்பார்த்தல், நிமித்தம், அவநம்பிக்கை, தப்பிதக்கொள்கைகள் முதலியன காணப்படுகின்றன.

கடவுளைப்பற்றி நாம் கொண்டிருந்த தப்பிதமான எண்ணங்களை இயேசுவானவர் மாற்றி முதல்முதல் நம்மைச் சுத்திகரித்தார். கடவுளையே நமக்குச் சுத்திகரித்தார் எனக் கூறினும் தவறாகாது. தேவதைகளையும் தேவதைகளாக மாறினவைகளையும் ஜாதியாருக்குரிய தேவர்களையும் ஊருக்கொரு தேவதையாயிருந்ததையும் அகற்றிச் சுத்திகரித்துக் கருணையில்லாக் கொடுந்தெய்வத்தை நீக்கிப் பிதாவாகிய தெய்வத்தை நமக்குமுன் வைத்தார். தாம் செய்யத்தகாத எதையும் நாம் செய்யவெனத் தூண்டாத பரம்பொருளை நமக்குமுன் வைத்தார். 'எதையும்' பாவ மனஸ்தாபம் ஒன்று தவிர்ந்த வேறெதையும் எனக் கொள்ளவேண்டும். சிலுவையிலே

அவர் இந்த மனஸ்தாபமுங் கொண்டிருத்தல்கூடும். நமது பாவங்களின்பொருட்டு அவர் கொண்ட மனஸ்தாபமே சிலுவையோவெனவும் எண்ணலாம்.

ஷெயலர் மத்தேயுவெனும் சாஸ்திரியார், இதுவரை நாம் கடவுளைப் பிதாவென பாராட்டி வருகிறோம், இனி வருங்காலத்தில் அண்டகோளம் அனைத்தினுள்ளும் சர்வ வியாபகராய் ஜீவனளித்திலங்கும் ஒருவரே கடவுள் எனும் கோட்பாடுண்டாகும் என்கின்றனர். அவர் கூறுவது எனக்கு நியாயமாகத் தோற்றவில்லை. இயற்கைப் பொருட்களிலே கடவுளிருக்கிறார் என்றெண்ணி அவரைப் பார்க்கும்படி அங்கே நோக்குவோமாயின் ஏதோ ஜீவனளிக்கும் சக்தியாகமாத்திரம் அவர் காணப்படுவார். நாம் கடவுளைக் காணும்படி இயேசுவை நோக்குவோமெனில் இந்த ஜீவசக்தி பிதாவாகிய கடவுளே என விளங்கும். குமாரனின் திருமுகத்தை நாம் நோக்கினோம். அந்த நோக்கினால் பற்பல காரியங்கள் விளங்கலாமெனினும் பிதாவாகிய கடவுளும் அதன்மூலமாய் நமக்குத் தெளிவாய் விளங்குவார். "என்னாலேயன்றி ஒருவனும் பிதாவினிடம் வரான்" என இயேசுவானவர் கூறியது இதுபற்றியேயாகும். "பிதா" என்பதையே வற்புறுத்துகிறார். குமாரனின் முகத்தைக் கண்டாலன்றிப் பிதாவைக் காணமுடியாதென்கின்றனர். இங்கே பிதாவின் சாயல் தோன்றுகின்றது. அரிய திருச்சாயல்!

அவர் நம்மோடு பேசியிருக்கிற வார்த்தையின் மூலமாய்க் கடவுளைப்பற்றிய நமது அபிப்பிராயங்களை என்றென்றுமாக நமக்குச் சுத்தமாக்கியளித்திருக்கிறார்.

கடவுளே, இப்படிப்பட்ட கடவுளில் அன்புகூராமல் ஒருநாளளவேனுமிருப்பதெப்படி? இப்படிப்பட்ட கடவுளொருவர் உலகனைத்திலும் எங்களிலும் நிரம்பியிருக்கிறார் என்பதை நன்றியறிதலோடு அறிந்து வணங்குகிறோம். ஆமேன்.

எழுபத்துநான்காம் நாள்

தேவராஜ்யமேனும் கோட்பாட்டைச் சுத்தமாக்குதல்

லூக். 17: 20, 21; அப். 1: 3-8

கடவுளைப்பற்றிய நமது அபிப்பிராயத்தை அவர் தெளிவாக்கியது மாத்திரமேயன்றி அதற்கு மேலும் நமக்கு விளக்கிக்காட்டினார். கடவுளின் ராஜ்யத்தைப் பற்றிய அபிப்பிராயத்தையும் சுத்தமாக்கினார். உலகெங்கும் ஒரே ராஜ்யமாகவும் கடவுளே அதற்கு ராஜாவாகவும் யூத ஜாதியாரே அந்த ராஜ்யத்தின் தெரிந்து கொண்ட சுதந்தர ஜனமாகவு மிருப்பார்களென யூத ஜனங்கள் நினைத்திருந்தார்கள். இயேசுவானவரோ இவ்வபிப்பிராயத்தை நீக்கிப் பரலோக ராஜ்யம் ஒரு ஜாதியாருக்கு மாத்திர முரியதன்றெனவும் அது உலகின் சகல ஜாதியாருக்கு முரியதென்றும் கடவுளின் ஊழிய பரம்பரையால் அது ஆளப்படுவதெனவும் காட்டினார். இராஜ்ய பரிபாலனம் செய்யும் ஊழியர் அனைவரினும் பெரியவர் கடவுளே. நாம் செய்யும் ஊழியத்திற்குத் தக்கபடி ராஜ்யாதிகாரம் நமக்கெல்லாம் பகிர்ந்தளிக்கப்படுமெனவும் காட்டினார். ஜாதி, பிறப்பு, நிறவேறுபாடுகளின்றி எல்லாருக்கும் ஒன்றுபோலவே பக்ஷபாதமின்றிப் பகிர்ந்தளிக்கப்படுமெனக் காட்டினார்.

இந்த ராஜ்யத்திலோ ஹிட்லர், முசோலினி முதலிய ஏகநாயகர் இடர்ப்பட்டு வீழ்ந்தழிவார். தன் ஜாதியே மேல், தாமே உலகை ஆளுவோம் எனக்கொண்டிருக்கும் எண்ணம் சித்திபெறாது. மேசியாவின் ஆளுகையும் மேசியாவின் ஜனங்களும் என்றிருந்த நம்பிக்கையெல்லாம் அக்காலமே யகன்றன. இனி இருப்பது ஒரு ஜாதி ஜன ஆளுகையன்று; நாம் அது இன்னதென்பதைக் கண்டு கொண்டோம். கடவுளின் ராஜ்யம் என்றுமாகச் சுத்தமாக்கப்பட்டது. பழைய அபிப்பிராயங்கள் இனிமேற்

செல்லா. பரலோக ராஜ்யமே இனிமேற் காட்டப் படுவது.

சடப்பொருட்களைப்பற்றிய அபிப்பிராயங்களையும் தெளிவாக்கினர். ஒருபுறம் சடப்பொருட்கள் எல்லாம் கடவுளே என்றும் மறுபுறம் அவையனைத்தும் தீயனவே என்றும் உலகம் பலவிதமாய்ப் பாராட்டி வந்தது. ஒவ்வொரு மதத்தார் ஒவ்வொரு அபிப்பிராயங்கொண்டனர். சடவாதிகள் ஒருபுறம், இந்துமதம் மற்றொரு புறம். இயேசுவானவரோ இவ்வபிப்பிராயங்களை யெல்லாம் நீக்கித் தெளிவாக்கிக் கடவுள் "நல்லவர்" எனக் கண்ட உலகத்தை நமக்குமுன் வைத்தார். எனது சரீரம் எனக்கு விரோதமானதன்று. அது கடவுளால் படைக்கப்பட்டது. அதைத் தகுதியுள்ளதாகவும் நன்றாகவும் பாதுகாத்துக் கடவுளின் ராஜ்யத்திற்கென உபயோகிக்கவேண்டும். இது நமது பரமபிதாவின் உலகம். அதை அவருக்கென்று பிரதிஷ்டை செய்து உபயோகித்து அனுபவிக்கவேண்டும். வார்த்தையே "மாமிசம்" ஆனதை நாம் கண்ணாரக் கண்டபடியினால் நாம் சடப்பொருளாகிய மாமிசத்தைக் கண்டு பயப்படலாகாது. தெய்வீகம் இன்னதென்பதை அதுவே காட்டக்கூடிய நிலைமையிலிருக்கிறது. சடப்பொருளனைத்தையும் அவர் சுத்திகரித்துவிட்டார். நான் அவரைத் தரிசிக்குமுன் சடப்பொருளின் உண்மையான தன்மையைக் கண்டறிந்ததில்லை. அதைக் காணவே உலகம் புதிதாகக் காணப்படுகிறது. பாராட்டப்படத்தக்க உலகமாய் விளங்குகிறது. வரப்போகிற கடவுளின் ராஜ்யத்திற்கு அறிகுறியாயிருக்கிறது.

கடவுளே, நான் சடப்பொருள் நிறைந்த உலகிலிருப்பதற்காக உமக்கு நன்றி செலுத்துகிறேன். நான் அதைக் கண்டு பயப்படாமல் அதை உமது ராஜ்யத்திற்கென உபயோகிக்கும்படி எனக்குத் துணை புரிந்தருளும். ஆமேன்.

எழுபத்தைந்தாம் நாள்

இதர காரியங்களைச் சுத்தமாக்கல்

மத். 5: 31, 32, 43, 44, 45; யாக் 1: 27

அவர் அவ்வளவினும் நிற்கவில்லை. குடும்பத்தையும் சுத்தமுள்ளதாக்கிக் குடும்பமென ஒன்றிருக்க வேண்டுமென அதொன்றையே காட்டி அதற்காகப் பேசினார். அதைப் பாராட்டிப் பேசியது மாத்திரமன்று அதையும் சுத்தமுள்ளதாக்கிக் கொடுத்தார். ஒருவன் பல பெண்களை மணப்பதும் ஒருத்தி பலருக்கு வாழ்க்கைப்படுவதுமின்றி ஒருவனும் ஒருத்தியும் சமபொறுப்புடையராய் ஆயுள் காலமெல்லாம் இசைந்து வாழ்வதைச் சுட்டினார். கடைசியில் நிலைத்திருக்கக்கூடிய திஃதொன்றே. தற்காலம் பல விடங்களில் காணப்படும் தவறான ஒழுக்கங்கள் அனைத்தும் இறுதியில் ஒழிந்துபோம். தற்காலத்திலே இந்து ஸ்திரீகள் மகம்மதிய ஸ்திரீகளும் பலதாரம் படைக்கும் புருஷரை ஏளனம் செய்வதைக்காண்கிறோம். விபசாரம், வீழ்ந்த ஒழுக்கம் முதலியன இறுதியில் ஒழிந்து எல்லாவற்றுக்கு மேலான ஒழுக்கத்தையே உலகம் ஆதரிக்கும் என்பதை எதிர்பார்க்கலாம்.

அன்பையும் அவர் மேலானதாகச் சுத்தமுடையதாகக் காட்டினார். உலகில் அவர்தோன்றிய காலத்திருந்தது மோகம். அவர் உலகைவிட்டுப் போகா முன் நிலைநாட்டியது அன்பு. விவாகமானவரும் ஆகாதவருமாகிய ஆணும் பெண்ணும், ஆணும் ஆணும், பெண்ணும் பெண்ணும் ஐக்கியமுடையராய் அன்புடையராய் விளங்கலாம் எனக் காட்டிச்சென்றார். விவாகமாகியிருக்கும் ஒரு பெண்ணையோ ஆணையோ வேறு ஆணோ பெண்ணோ இழிவான காமமும் மோகமுமின்றித் தூயதான அன்புடன் நோக்கிச் சிநேகமா யிருத்தல்கூடும் எனப் போதித்தார். இயேசுவானவர் அன்பு என்பதை இவ்விதமாகச் சுத்திகரித்ததால் அதைச் சுத்தமுடையதாக்கிக் கொடுத்தார்.

ஜெபமென்பதின்னதெனவும் தெளிவாக்கினார். அவர் வந்த காலத்தில் ஜெபமானது மந்திரமாகவும் வேண்டு

கோளாகவுமே பாராட்டப்பட்டு வந்தது. அவரோ ஜெபம் என்பது கடவுளோடு நாம் பெறும் ஐக்கியம் எனக் காட்டினர். கடவுளினிடமிருந்து ஏதேனும் பெற்றுக்கொள்வதற்கென ஏற்பட்டதே ஜெபமன்று. நம் மிடமிருந்து கடவுள் பெற்றுக்கொள்ளுதற்கானதே ஜெப மெனக் காட்டினர். நம்மைக் கடவுளுக்கு நேராக இழுத்துச்சென்று மேலானவராகிய அவருடன் இசைவ தால் மேலான குணங்களும் வல்லமைகளும் நமக்குள் விளங்கும்படி செய்வதே ஜெபமாகும்.

மதம் என்பது இன்னதென்பதையும் விளக்கிச் சுத்த முள்ள மதம் இன்னதெனக் காட்டினர். தம்மையே மத மென்பதற்கு லக்ஷணிப்பாகப் பிரசித்தப்படுத்தினர். இயேசுவைப்போலிருப்பதே மதஜீவியம். இது விளங்கு மாயின் நமது இதயத்திலுள்ள சகல இழிகுணங்களும் அற்ப சுபாவங்களும் நம்மை விட்டகல்வனவாம். "மதம் இன்னதென்பதை இவ்வகை லக்ஷணிப்பின் மூலமாய் கூறுவதினுலே தகாத மதக்கோட்பாட்டையும் நீங்கள் தழுவியிருத்தலாகாதோ?" என ஒரு இந்து என்னிடம் கேட்டனர். தகாததைத் தழுவவில்லை. தகாததை மாசு நீக்கிச் சுத்திகரிக்கிறேன் எனவே கூறுவேன். நாம் எல்லாவற்றிலும் மேலான தெய்வ சுரூபத்தைத் தரிசித் தோம், அவர் ஜீவியத்தை அனுசரித்தே மதம் இன்ன தென்பதை நோக்குவோம். வேறு விதமாய் நோக்குதல் இயலாது.

கடைசியாக இயேசுவானவர் தமது சிஷரையும் சுத்தி கரித்தார். தாம் அவர்களோடு பேசிவந்த திருவார்த்தை யின் மூலமாய் அவர்களை முற்றுமாக, அந்தக்கரண முதல் சுத்திகரித்தார். அவர்களை மாத்திரமேயன்றி அவர் களிருந்த உலகையும் சுத்திகரித்தார்.

கடவுளே, பிதாவே, நீர் இவ்வாறு ஆழமும் அகலமுமாய்ச் சுத்தி கரிப்பின் செயலைப் புரிந்ததற்காக உமக்கு நன்றி செலுத்துகிறோம். இவற்றை முழுதுமாய் நாங்கள் ஏற்றுக்கொள்ளத் துணைபுரிந்தருளும். ஆமேன்.

எழுபத்தாறும் நாள்

அவரது விசுவாச அறிக்கை

மத். 4: 19; லூக். 22: 31, 32; மத். 28: 18–20

தாம் சீஷரோடு பேசிவந்த திருவார்த்தைகளின் மூலமாக இயேசுவானவர் அவர்களையும் அவர்கள் வசித்த உலகையும் சுத்தமாக்கினார் என்பதை முந்தின நாள் பார்த்தோம். அது மிகவும் தைரியமுடையதோர் செயலாகும். அவர் கூறிப்போந்தது முற்றுமுடிந்தவோர் செயலன்று. நம்பிக்கையின்மூலமாய் ஏற்றுக்கொள்ள வேண்டிய காரியமாகும். அநேக காரியங்களினின்று அவர்கள் சுத்தமாக்கப்பட்டார்கள் என்பது உண்மையே யெனினும், அவர்கள் "சுத்தம்" ஆகியிருந்தனர் எனக் கூறுவது உண்மையாகாது. தங்களில் யார் பெரியவன் என வாதாடினர். அக்கினி இறங்கி ஆட்களைப் பட்சிக்க வேண்டுமென விரும்பினர். தங்களோடு சேராத கூட்டத்தார் நற்செயல் செய்வது தவறெனக் கொண்டனர். இவையெல்லாம் சுத்தமானோர் குணங்களல்ல. எனினும் இயேசுவானவர் கூறியதுண்மையே.

தாம் சம்பந்தப்பட்டவளவில் அவர்கள் சுத்தமாகி விட்டார்கள். இது மிகவும் உண்மையான காரியமாக அவர் உறுதியாயிருந்தபடியினால் அவர்கள் சுத்தமான சங்கதி முடிந்து தீர்ந்த காரியமே எனக்கருதிப்பேசினார். தமது திருவார்த்தையிலே இதுவும் கூடவே அடங்கி யிருந்ததென்பதை அவர் மனதார உணர்ந்தவராய் இப்படிக் கூறினார். இது முழுவதும் நிறைவேறித் தீர இன்னும் அறுபது நாட்களிருந்தன. பெந்தெகொஸ்தின் நாளிலே அது நிறைவேறியது. ஆகவே அறுபது நாள் தவணைகொடுத்து, அதன்பின் உறுதியாய் நிறைவேறப் போகும் காரியத்தை இப்போதே நிறைவேறிய காரியமாகப் பேசினார். அது கிடைத்தபோது சீஷர் நிமிஷ

நேரமும் தாமதியாமல் அதற்கான கிரயமாகத் தங்களேயே தத்தம்செய்து அதைப் பெற்ருர்கள். அது அவர்களுடையதாயிற்று. தற்காலக் காரியங்களோடு ஒப்பிட்டுப்பேசினுல் அவர்கள் கையிலே ஒரு 'உண்டியல்' (செக்) எழுதிக்கொடுத்துப் போனுர். எச்சமயத்திலும் அவர்கள் அதை ரூபாவாகமாற்றிக்கொள்ளமுடியும். அவர்கள் செய்யவேண்டியதெல்லாம் கையெழுத்துப் போட்டுப் பணம் பெறவேண்டியதே. பட்டிக்காட்டிலேயே குடியிருந்துவந்த ஒரு குருவானவருக்கு ஒருசமயம் ஒருவர் ஒரு உண்டியல் அனுப்பினுர். இந்தக் குருவானவர் உண்டியல்கள் மாற்றிப் பழக்கப்பட்டவரல்ல. அவர் மிகுந்த மனபயத்தோடு அதைப் (பாங்குக்கு) உண்டியல் கடைக்குக் கொண்டுபோய் அதிற்கண்ட தொகை தமக்கு வேண்டுமெனக் கேட்டனர். அங்கிருந்த அதிகாரி இவர் அதிலே ஒப்பம் எழுதவேண்டுமெனக் கேட்டனர். குருவானவர் உடனே அந்தச் செக்கிலே "என் முழுமனதோடும் ஒப்பமிடுகிறேன்" என்று எழுதினுர். சீஷர் செய்ததும் இப்படியே. பெந்தெகொஸ்து நாளிலே அவர்கள் தங்கள் முழுமனதோடும் ஒப்பமிட்டார்கள். பரிசுத்தமாகுதல் அவர்களுக்குக் கிடைத்தது.

கிறிஸ்துவே, நீரே போதுமானவர் என்றும், எங்கள்மீது உமக்கு நம்பிக்கையுண்டென்றும் நாங்கள் மனதார அறிந்து உமக்கு நன்றி செலுத்துகிருேம். நீரே எங்களுக்குப் போதுமானவர் என ஏற்றுக்கொள்வோம். எங்கள்பேரில் உமக்குள்ள நம்பிக்கை கெட்டுப்போகாதிருக்கும்படி செய்வோம். ஆமேன்.

எழுபத்தேழாம் நாள்

உலகத்தை ஜெயித்தல்

1 யோ. 5: 4, 5; 4: 4; வெளி. 21: 7; 1 கொரி. 2: 1

இயேசுவானவர் நமக்கு உரைத்த வாக்குகள் அனைத்திலும் நமது நம்பிக்கையை வளர்ப்பதில் மிகவும் சிறந்ததும் மிகவும் ஆழ்ந்த கருத்துடையதும் இதுவே: உலகத்தில் உங்களுக்கு உபத்திரவமுண்டு; ஆனாலும் தைரியமாயிருங்கள், நான் உலகத்தை ஜெயித்தேன். (யோ. 16: 33).

நீங்கள் ஒருவேளை சொல்லலாம் "ஆம் அது சரிதான், அவர் உலகத்தை ஜெயித்தது மெய்யே. அது நடந்தோ இரண்டாயிரம் வருடங்களாயின. நான் தற்காலத்திலே இருக்கிறேன். அவர் அக்காலத்தை ஜெயித்தது இப்போது எனக்கு எப்படிப் பயன்படலாம்" என்கலாம். அதற்கு பதில் கூறுகிறேன். இங்கே இரண்டு கருத்துகள் ஒன்றுயிருக்கின்றன. "நீங்கள் இந்தச் சிறியரில் ஒருவனுக்கு எதைச் செய்தீர்களோ அதை எனக்கே செய்தீர்கள்" என்று இயேசுவானவர் கூறித் தம்மைப் பசியுடையோர், வியாதிப்பட்டோர், காவலிலிருந்தோர் முதலியவர்களோடு ஐக்கியப்படுத்தினர். மற்றுமோர் இடத்தில் "என்னில் உங்களுக்குச் சமாதானம்" ஏனெனில் "நான் உலகத்தை ஜெயித்தேன்" என்றார். இவற்றின் கருத்தென்ன? நமது அபஜெயங்களில் நமது வியாதி பசி முதலியவற்றில் அவர் தம்மை நம்மோடு இணைத்தபடியினல் அவருடைய ஜெயத்திலும் நாம் ஐக்கியப்பட்டவர்களாகிறோம். உலகத்தை அவர் ஜெயித்ததும் நாமே ஜயித்ததாகும். நாமோ அதை நமது மனதிலேயுணர்ந்து அனுபவித்து நம்மை அதனோடு சம்பந்தப்படுத்தி அதை நமதாக்கிக்கொள்ளவேண்டும்.

இந்த ஜெயம் எனக்குக் கிடைக்கவே, ஆச்சரியப்படத்தக்கதான பல காரியங்கள் எனக்குச் சாத்தியமாகின்றன. அவர் அடைந்த ஜெயம் ஒவ்வொன்றையும்

என்னுடைய வெற்றியாகவும் நான் அனுபவிக்கக்கூடும். என்னை முழுவதுமாய் அவரோடு இணைத்துச் சம்பந்தப் படுத்துவதால் அவர் ஜெயிக்கும்போது நானும் ஜெயிக்கிற வனுவேன். மற்றுமொருவருடைய ஜெயம், ஜீவியம் இவற் றின் மூலமாகவே நான் ஜீவிக்கிறேன்.

சற்று வயதானபின் விவாகஞ்செய்துகொண்ட புருஷ னும் மனையாளும் ஒரு ஊரிலிருந்தார்கள். அவர்கள் இரு வரும் ஒருவரிலொருவர் மிகவும் அன்புடையராயிருந்த னர். ஒருநாள் காலையில் அவ்விருவரும் தங்கள் வீட் டிற்கு வந்திருந்த சில விருந்தாட்களோடு உட்கார்ந்து சாப்பிட்டுக்கொண்டிருந்தபோது, கணவன் அன்றிரவில் தாம் கண்ட ஒரு சொப்பனத்தைச் சொல்லிக்கொண்டி ருந்தார். உடனே அவருடைய அம்மாள் அவரை இடை யில் நிறுத்தி "இந்தச் சொப்பனம் நீங்கள் கண்டதோ நான்கண்ட சொப்பனமோ" என்று கேட்டார். அவர்கள் இருவரும் ஒருவரோடொருவர் அவ்வளவாய் இசைந் திருந்தார்கள். தங்களில் உண்மையாகவே சொப்பனங் கண்டது யார் என்பது அவர்களுக்குச் சந்தேகமாய் விட்டது.

இவர்களுடைய அன்பின் ஐக்கியத்தைக் கண்டு நாம் ஒருவேளை புன்னகை செய்யலாம். ஆனால் கிறிஸ்துவோடு நாம் மிகவும் அன்புபூண்டு அவருடன் இணைந்தது உண்மையாயின் நாமும் அவரிடம் "ஆண்டவரே, உல கத்தை ஜெயித்தவர் நீர்தானு, நானு?" என்று கேட்க லாம். அவரும் அமர்ந்த குரலுடன் "நாம் இருவரும் கூடியே ஜெயித்தோம். என் ஜெயம் உன் ஜெயமே" எனப் பதிலுரைப்பார்.

கிறிஸ்துவே, அபாத்திரனுகிய நான், இந்த உலகத்தில் காணப் படும் மகா சிறந்த காரியமாகிய உமது ஜெயத்தில் நானும் பங்குபெறு வது கண்டு உமக்கு நன்றி பாராட்டுகிறேன். நான் முழுவதுமாய் என்னை அதனேடு சம்பந்தப்படுத்தி அதை எனதாக்கிக்கொள்ளும்படி எனக்குத் துணைபுரிந்தருளும். ஆமேன்.

எழுபத்தெட்டாம் நாள்

சாதாரண விஷயங்களையும் ஜெயித்தல்

லூக். 16: 10; அப். 6: 1–6; 2 தீமோ. 2: 15

அதிசாதாரண உலகத்தையும் அவர் மேற்கொண்டார். தேர்ச்சியென்பது சிறிதுமில்லாத ஒரு சிறு கிராமத்திலேயே முப்பது வருஷ காலம் தங்கி வெளியே செல்லாமலேயிருந்து, தச்சுவேலை செய்து விதவையான தன் தாயையும் உடன்பிறந்தவர்களையும் காப்பாற்றுவதானது அதனினும் சிறந்த ஜீவியமொன்று தனக்குண்டென அறியாதிருக்கும்வரையில் அத்தனை கஷ்டமான காரியமாகத் தோற்றாது. ஆனால் ஜீவனுள்ள கடவுள் உன்னை அழைக்கிறார் என்பதையும் இந்தப் பரிதாப உலகத்தைச் சீர்ப்படுத்தற்கு அவசியமான காரியம் உன்னிடத்தில் மாத்திரமே இருக்கிறதென்பதையும் நீ உணர்ந்து அறிந்தும் இந்தச் சாதாரணச் சிறுகிராமத்திலே உன் ஆயுள்காலத்திலே பத்தில் ஒன்பது பங்கு காலம் ஜீவித்துவிட்டு மீந்த ஒரு பங்கைமாத்திரம் உனது ஜீவியப் பெருநோக்கை நிறைவேற்றுவதற்காகச் செலவிடக்கூடியதென விருந்து அப்பொழுது நீ இவற்றையெல்லாம் சந்தோஷமாகவே செய்து வருவாயானால் அதுவே வெற்றியாகும்.

பிரான்சுக்காரர் ஒருவர் தாம் எழுதியுள்ள நூலிலே "சகலஜீவராசிகளுள்ளும் மானிடரே மிகவும் துன்பத்தையனுபவிக்கின்றனர். இதற்குக் காரணமென்னவெனில், மானிட ஜீவியம் இருபிரிவினையுடையதா யிருக்கிறது. உலக ஜீவிய நோக்கம் ஒருபுறம், பரம ஜீவிய நாட்டம் மறுபுறம், இவற்றினிடையே மனிதன் கஷ்டம் அனுபவிக்கிறான்" என்றனர். இயேசுவானவருக்கிருந்த கஷ்டமோ, ஒன்று நாசரேத்தில் வசிக்கவேண்டி நேர்ந்த குக்கிராம ஜீவியம், மற்றதோ உலக ஈடேற்றத்துக் கின்றியமையாதனவற்றை வழங்கவேண்டுமென்றது. இவ்விரண்டிற்குமிடையே பெருந்துயருக்காளாகி நைந்தார். பரமகாரி

யத்தை உலக காரியத்தோடும் உலக காரியத்தை பரம காரியத்தோடும் சம்பந்தப்படுத்தினர். ஏர் ஒன்றைச் செய்யும்போதே, ஏரினுல் உலகம் சீர்பெறு முலகமாம் என அறிந்தவராய் அதை வெகு நன்ருகச் செய்வார், உலக மீட்பர் எனத் தாம்கொண்ட சிறப்புப் பெயருக் கொப்ப அதைச் சிறப்பாகச் செய்வார். "அற்பமான காரியத்தையும் மகா சிறந்த காரியமாக நீ பாராட்டிச் செய்வாயாளுல், நீ பெரிய காரியத்தில் தலையிட்டுச் செய் யும்போது கடவுள் அதை ஒரு சிறிய காரியமேபோல் உனக்கு எளிதில் கைகூடுமாறு வாய்க்கச் செய்வார்" என ஒருவர் கூறினர். இப்படியே அவர் அதிசாதாரண சிறு கிராமமாகிய நாசரேத்திலே தங்கியிருந்து தாம் உலகின் எதிரே காணப்படும்போது தரித்துக்கொள்வதற்கான ஒரு சிறந்த அங்கியைத் தையலில்லாமல் முழுவதும் நெசவுவேலையாக நாளெல்லாம் சிறிது சிறிதாகப் பின்னி வந்தார்.

பால்க்கன் தேசத்திலே ஒரு அம்மாள் மிகவும் சிரமத் தொடுபொடிப்பொடித்தையலாகநாளெல்லாம் ஒரு அங்கி யைத் தைத்துக்கொண்டிருந்தது கண்ட ஒருவர் அந்த அம்மாளிடம் "ஏனம்மா, களைப்பின்றி மிகவும் பொடி யாகப் பல நாட்களாக இந்த உடுப்பைத் தைத்துக்கொண் டிருக்கிறீர்களே" என்று கேட்க அந்த அம்மாள் "இதிலே எனக்குக் களைப்பும் சலிப்புமில்லை. இது என் கலியாண உடுப்பு" என்று சொன்னர். இந்தத் தையல் அதிசாதா ரணமானதன்று. ஏதோ ஒரு பெரிய காரியத்தோடு சம் பந்தமுடையது.

கிறிஸ்துவே, மகிழ்ச்சி விளைக்காத சோர்பான வேலைகளையும் நெடு நேரம் செலவிட்டுக் களைப்பின்றிச் செய்துவந்தீர், அவற்றைப் பரம ராஜ்ய ஊழியத்தோடு சம்பந்தப்படுத்தினீர். நானும் அவ்வாறே செய்து பழக எனக்குத் துணைபுரிந்தருளும். ஆமேன்.

எழுபத்தொன்பதாம் நாள்

தன்னை வெறுக்கும் உலகைத் தான் மேற்கொள்ளுதல்

கொலோ. 3: 12–15; லூக். 23: 34; அப். 7: 59, 60

நம்பிக்கையுடையவன் எனச் சொல்லக்கூடியவன் பெரும்பாலும் நல்லுணர்ச்சியும் உற்சாகமுமுடையனு யிருப்பான். இப்போதிருக்கும் நிலைமை என்பதிலே திருப்தியுறுமல் அதற்குமேலாக ஒன்று கிடைக்கவேண்டு மென விரும்பி அதை அடைந்துகொள்ளும்படி உழைக் கிருன். அப்படி உழைக்க ஆரம்பிக்கவே ஜனங்கள் அவ னுக்கு விரோதமாய்க் கிளம்புவார்கள். மனிதர் பெரும் பாலும் "இருக்கும்" நிலைமையில் திருப்தியுறுவதின்றி இப்படி "ஆகவேண்டும்" என ஆசிப்பதில்லை. எனவே தான் ஆசிப்பதைப் பிறரும் ஆசியாதிருப்பது கண்டு அவர் களை வெறுக்கிருன். நம்பிக்கையுடையவன் தன்னை வெறுத்துரைக்கும் உலகை ஜெயிக்கவேண்டும்.

கடவுள்பேரில் நம்பிக்கையையும், பிறருக்கு மன்னிப் பதையும் இயேசுவானவர் இணைத்துப் பேசுவது கவனிக் கத்தக்கது. இயேசு அவர்களுக்குப் பதிலுரைத்து "கடவுள்மேல் நம்பிக்கையாயிருங்கள். எவனுகிலும் இந்த மலையைப் பார்த்து: நீ பெயர்ந்து சமுத்திரத்திலே தள் ளுண்டு போவென்று சொல்லித் தான் சொன்னபடியே ஆகுமென்று தன் இருதயத்தில் சந்தேகப்படாமல் நம்பி னுல் அப்படியே ஆகுமென்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன். ஆதலால் நீங்கள் எவைகளை ஜெபித்துக் கேட்டுக்கொள்வீர்களோ அவைகளைப் பெற்றுக்கொண் டோமென்று நம்புங்கள். அவைகள் உங்களுக்குக் கிடைக்குமென்று சொல்லுகிறேன். நீங்கள் ஜெபித்து நிற்கும்போதெல்லாம் ஒருவன்பேரில் உங்களுக்கு ஏதே னும் குறையிருக்குமானுல் அந்தக் குறையை அவனுக்கு மன்னியுங்கள்" என்று சொன்னுர். கடவுள்மேல் நம்பிக் கையையும் மனிதருக்கு மன்னிப்பதையும், ஒன்ருய்ச் சேர்த்துக் கூறுகிறுர். அவை ஒன்றுக்கொன்று சம்பந்தப்

பட்டனவே. பிறருக்கு மன்னிக்கும் குணமில்லா நம்பிக்கை நமது பக்தியை முரட்டாட்டமும் மூடத்தனமுமுள்ள தாக்கும். நம்பிக்கையில்லாத மன்னிப்பு பக்தியை ஏளனமுள்ளதாக்கி விர்த்தியைத்தடுக்கும். நம்பிக்கையும் மன்னிப்பும் சேர்ந்தவிடத்தே கிறிஸ்தவ பக்தியுண்டாகும். இதுவே கிறிஸ்தவனின் லக்ஷணம். மன்னிக்கும் தன்மையே நம்பிக்கையில் அன்பை வளர்க்கிறது. இவ்விதமாக "அன்பிலே நம்பிக்கை கிரியை செய்கிறது."

கடவுள்மேல் நம்பிக்கையுள்ள மனிதன் தன்னைக் குறைகூறிக் கண்டனஞ் செய்பவரை மன்னித்துவிடுகிறுன். தான் அறிந்திருப்பதை அவர்கள் அறிந்துகொள்ளவில்லையென்பதை அறிந்தவனுய் அவர்களுக்கு மன்னிக்கிறுன். மனுஷகுமாரன் எனப் பேர் வழங்கிய ஒருவரை இவன் பின்பற்றுகிறுன். அந்த மனுஷகுமாரனின் செயலென்ன? உலகம் புதிதான சீர்பெறும்படி அவர் செய்த முயற்சிகள் அவரைச் சிலுவையின் மரணத்திற்குட்படுத்தின. அவர் இரட்சிக்க விரும்பிய ஜனங்கள் அவரை விட்டு ஓடிவிலகினுர்கள். அவரோடிருப்பதாக வாக்குப் பண்ணின அவருடைய சொந்த சீஷரும் அவரைவிட்டோடிப் போனுர்கள். அவரை உலகத்திற்கு அனுப்பிய பிதாவாகிய கடவுளும் கைவிட்டவர்போல் காணப்பட்டார். இப்படியெல்லாமிருந்தும் அவர் தமது கடைசி நேரத்தில் இந்த ஜனங்களுக்காகவெல்லாம் ஜெபித்து அவர்கள் மன்னிக்கப்படவேண்டுமெனப் பிரார்த்திக்கிறுர். இதுவே ஜெயம். கடவுளில் நம்பிக்கையுள்ளவனும் இவ்வித ஜெயத்தையே பெறும்படி அவரைப் பின்பற்றுகிறுன்.

நாமும் இதன்மேல் ஜெயத்தைப் பெற்று வாழலாம். பிறர்பேரில் கோபித்து கொள்ளுதல், அவர்களை வெறுத்தல் என்பதற்கு இடமில்லை.

எவரையும் வெறுக்காத மனமுடைய கிறிஸ்துவே, எங்களுக்கும் அப்படிப்பட்ட மனதைக் கட்டளையிடும். கடவுளினிடம் எங்களுக்கு பூரண நம்பிக்கையைக் கட்டளையிட்டருளும். எங்களோடு இசையாதவரோடும் நாங்கள் பக்ஷமாயிருக்கும்படி எங்களுக்குப் போதித்தருளும். ஆமேன்.

எண்பதாம் நாள்

கவலைநிறைந்த உலகை ஜேயித்தல்

மத். 6: 25–34; பிலி. 3: 6, 7

"ஒன்றுக்காகவும் கவலைப்படாதிருங்கள். உங்களுக்கு தேவையானவைகள் இன்னவென்பதை ஜெபத்தின் மூலமாகவும் மன்றாட்டுகளின் மூலமாகவும் கடவுளுக்குத் தெரிவியுங்கள்." ஒன்றுக்காகவும் கவலைப்படாதிருங்கள்! வேறெக்காலத்திலுமில்லாத பிரகாரம் இக்காலத்திலே இந்த வாக்குத்தத்தம் எத்தனை அவசியமாயிருக்கிறது. எங்கெங்கும் கவலை. நமது இதயத்திலும் கவலை. இயேசுவானவரோ கவலைநிறைந்த உலகை ஜெயித்தார்.

நமது கவலைகளுக்குக் காரணமாயிருப்பன மூன்று காரியங்கள்: உணவு, தாபரிக்கும் இடம், பிற்காலப் பாதுகாவல். இந்த மூன்று காரியங்களில் எதுவும் இயேசுவுக்கு எக்காலத்திலும் திட்டமாய்க் கிடைக்குமென அவர் இருந்ததில்லை. ஆகவே அவர் மற்றெல்லாரிலும் அதிகமாகக் கவலைகொண்டவரா யிருந்திருக்கவேண்டும். அவர் செல்லுமிடங்களில் அங்கங்கே அவருக்கு யாராவது போசனங் கொடுப்பதன்றி அவருக்கு ஆகாரம் எப்படியும் உண்டு, என்றிருக்கவில்லை. தாபரிக்குமிடமென ஒன்று அவருக்கு இருக்கவில்லை. பலதடவைகளில் அவர் திறந்தவெளியில் மரத்தடிகளில் சுருண்டு படுத்திருந்ததுண்டு. தனக்குப் பாதுகாவல் இல்லையென்பதும் அவருக்குத் தெரியும். தனது ஜீவிய முடிவு சிலுவையென்பது தெரியும். நாம் அனைவரும் அதிகமான கவலையுடன் நாடும் மூன்று காரியங்களில் ஒன்றும் அவருக்குத் திட்டமாயிருந்ததில்லை. நமக்குள்ள குறைகளே அவருக்குமிருந்தன. எனினும் நமக்குள்ள கவலை அவருக்கு இருக்கவில்லை. அவர் அதை எப்படிச் செய்தார்.

இக்கவலையை நீக்குதற்கு அவரிடமிருந்த மருந்து மிகவும் எளிதான முறை. கடவுளுக்குக் கீழ்ப்படிதல், கடவுளை நம்புதல். இந்த நாலு வார்த்தைகளும் அவ

ருடைய ஜீவியத்தில் நாலு கோடிகளிலுமிருந்த கற்களாம். புசற்காற்று மோதியடித்தும் அஸ்திபாரம் அசையவில்லை. அவர் இந்தக் கற்களை ஒன்ருக இசைத்து வைத்திருந் தார். ஒருவர் கடவுளை முழுவதுமாய் நம்பினாலன்றி அவரில் அன்புகூர முடியாது. நீ வேலை செய்கிற இடத் திலே கடவுளுக்குக் கீழ்ப்படிந்து நடந்தாலன்றி நீ உடுப்பு உடுத்திக்கொள்ளும் உன் உள் அறையில் அவரை நம்புவதில்லை. ஒரு அம்மாள் தனக்கிருந்த நம்பிக்கை தளர்ந்துபோனதைப்பற்றி என்னிடம் பேசிக்கொண் டிருந்தார். "உங்களுக்குப் பிரியமானதை என்னிடம் கேளுங்கள் என வேதாகமம் கூறுகிறது. என் தகப்ப னூர் வியாதியாயிருந்தபோது அவர் குணப்படவேண்டு மென மன்ருடி ஜெபித்தேன். அவரோ குணமாகாமல் மரணமடைந்தார். அதுமுதல் கடவுள்பேரில் எனக் கிருந்த நம்பிக்கையும் தொலைந்தது" என்று அந்த அம் மாள் என்னிடம் சொன்னூர். எனினும் அந்த அம்மாள் முழுவாக்கியத்தையும் அறிந்து கூறவில்லை. "நீங்கள் என்னிலும் என் வார்த்தைகள் உங்களிலும் நிலைத்திருந் தால் நீங்கள் விரும்பியதைக் கேளுங்கள், அது உங்க ளுக்கு ஆகும்." கடவுளுக்குக் கீழ்ப்படியவேண்டும், அவரை நம்பவேண்டும்.

அப்பொழுதுதான் மிஷனெரியாக வந்த ஒருவருக்கு ஒரு போதகர் இப்படி எழுதினூர். "இதுவே நமது அன்ருடக ஜீவியத்தில் காணப்படவேண்டிய நம்பிக்கை. முதலாவது கடவுளுடைய சித்தத்தை நிறைவேற்ற வேண்டியது மனிதனின் கடமை. இரண்டாவது கடவுள் அம்மனிதனைப்பற்றித் தாமே கவலையெடுத்துக்கொள்ளு கிருர். மூன்ருவது அப்படிப்பட்ட மனிதன் எதற்கும் பயப்படவேண்டாம்."

கிறிஸ்துவே, உமது இதயத்தைக் கறைப்படுத்தும் கவலை யாதொன் றும் உமக்கு இருந்ததில்லை. எனக்கும் அப்படிப்பட்ட இதயத்தைக் கட்டளையிட்டருளும். கவலையின்றி இருக்கும் ஜீவியத்தைப் பெற்றுக் கொள்ளும் கிரையமாக, இதோ, நான் உமக்குக் கீழ்ப்படிந்து நடக் கிறேன். ஆமேன்.

எண்பத்தோராம் நாள்

தீமையின் அரசை ஜெயித்தல்

ரோ. 6: 2–7, 18–22

வெற்றியுள்ள வாழ்க்கையில் மிகவும் முக்கியமான காரியமொன்றுண்டு. அதாவது நாம் தீமைக்கு விரோதமாய் எதிர்த்துப் போராடும்போது, முன்னரே ஜெயித்து மேற்கொள்ளப்பட்ட ஒன்றுக்கு விரோதமாகத்தான் போராடுகிறோமென்பதை மறக்கக்கூடாது. இயேசுவானவர் சகல பாவங்களுக்கும் எதிர்த்து நின்று போராடி அவற்றை ஜெயித்தார். அநேகர் இதைத்திட்டமாய் அறிந்துகொள்ளாதவர்கள்போல் பாவத்தின்முன் தளர்ச்சியுற்றுத் தாழ்ந்த மனிதர்போல் நிற்கின்றனர். பாவம் அவர்களைத் தொந்தரவு செய்ய இடங்கொடுக்கின்றனர். பாவம் என்பது இயற்கையாகவே நிலைத்திருக்கும் ஒரு காரியமெனவும் அதை நீக்குவது கூடாத காரியமெனவும் நினைத்துக்கொள்ளுகின்றனர். ஆகவே பாவத்தோடு போராட ஆரம்பியாமலே பாவம் தங்கள் மனதை ஆட்கொள்ள விட்டுவிடுகின்றனர். பாவம் ஜெயிக்கப்பட்டுவிட்டது என்னும் உண்மையை நாம் உறுதியாகப் பற்றிக்கொள்ளவேண்டும். தனித்தனியே ஒவ்வொரு இதயத்திலும் மொத்தமாக ஜனசமூகத்திலும் காணப்படும் சகல பாவங்களும் ஜெயிக்கப்பட்டன. பூரண ஜெயம் என்னும் இந்த ஈவை நாம் நமதாக்கிக்கொண்டு அந்த ஜெயம் நம்மிலும் நம்மைச் சுற்றிலும் விளங்கும்படி செய்ய வேண்டும்.

ஆகவே பாவம் என்னைத் தொந்தரவு செய்ய ஆரம்பிக்கும்போது அது தன் கழுத்தை வளைத்து என்முன் வரும்படி செய்கிறேன். அது அப்படியே வரவே, இதோ, பாவத்தின் கழுத்திலே அதை ஜெயித்தவராகிய மனித குமாரனின் கால்தடம் இருப்பதை மகிழ்ச்சியோடு காட்டுகிறேன். பாவத்தின் முன் என்னைத் தாழ்ந்தவனாக நான் ஒருநாளும் எண்ணுவதும் காட்டுவதுமில்லை. என் பக்கம் ஜெயம்பெறும் பக்கம். ஜெயிக்கப்படாமல்

விடப்பட்ட எந்தப் பாவமுமில்லை. எனக்கு எதிரே காணப்படும் எந்தப் பாவமும் மேற்கொள்ளப்பட்டதே. தோல்வியடைந்த பகைவர் நடுவே ஜெயவீரனாக நான் உலாவித் திரிகிறேன். மத்திய இந்தியாவில் ஒரு கதையுண்டு. போர் செய்வதில் அடக்கமுடியாத ஆசையுடைய ஒருவர் ஒரு காலத்திலிருந்தாராம். ஒரு நாள் சண்டையில் அவர் தலை வெட்டுப்பட்டுப் போயிற்று. சண்டை செய்யவேண்டுமென்றே அவர் ஆவலாயிருந்தபடியினால் தனது தலை வெட்டுப்பட்ட பின்னும் தலையிலா முண்டமாய்ச் சண்டைசெய்து வந்தாராம். தலையிலாத இந்த முண்டம் பற்பலரைக் கொன்று திரிந்ததாம். இதைக்கண்ட ஒருபெண் "ஓகோ உனக்குத் தலையில்லையே, நீ மரித்துப்போனாய்" என்று சொன்னாளாம். அதைக் கேட்கவே அந்த முண்டம் கீழே விழுந்து இறந்துபோயிற்றாம்.

தீமையானது மிகவும் பலமுடையதாய் ஜெயிக்க முடியாததுபோல் எனக்குக் காணப்பட்டு அது மேற்கொண்டு விடுமோ எனத் தோன்றினால் "பாவமே பார், இதோ, உனக்குத் தலையில்லையே, என் ஆண்டவர் உன்னோடு போராடி உன்னை ஜெயிக்கவில்லையா? சிலுவையென்னும் பட்டயத்தினால் அவர் உன் தலையை வெட்டி எறிந்ததில்லையோ? என்முன் நிற்காதே, தலையறுந்த முண்டமே அகன்று ஓடிப்போ" எனச் சொல்லுவேன்.

தீமை போராடுகிறது. அதற்கோ அறிவில்லை, மூளையில்லை. பழைய கெட்ட எண்ணங்கள், துர்ப்பழக்கங்கள், காரணமில்லாமலே எழும் மனத்தோற்றங்கள் இவற்றின் மூலமாய்ப் போராடி மேற்கொள்ள வருகிறது. நன்மை, நலமானது என்பதே புத்திக்கிசைந்ததாயிருக்கிறது. நம்மோடு போராடி நிற்பதோ அறிவில்லாத மூர்க்கமான தலையிலா உருவமே.

கிறிஸ்துவே, எந்தச் சோதனையும் உம்மை மேற்கொள்ள நீர் இடங்கொடுக்கவில்லை யென்பதறிந்து உமக்கு நன்றி செலுத்துகிறேன். முற்றுமுடிந்த இந்த ஜெயத்தை நான் எப்படி எனதாக்கி எப்படி நான் அனுபவிப்பதென்பதை எனக்குக் காட்டியருளும். ஆமேன்.

எண்பத்திரண்டாம் நாள்

வெற்றியின் இரகசியமென்ன?

2 கோரி. 2: 14; கலா. 3: 27; யோ. 15: 1–11

“நான் உலகத்தை ஜெயித்தேன், நீங்கள் சந்தோஷமாயிருங்கள்” எனக் கூறப்பட்ட அதிஅற்புதத் திருவாக்கின் சம்பந்தமாய்ப் பலவற்றைக் கடந்த சில தினங்களாக ஆராய்ந்து வந்தோம். நீங்களோ “இது மிகவும் நல்லதுதான். ஆனாலும் நாம் எப்படி அவருடைய ஜெயத்தைப் பற்றிக்கொண்டு அதை நமதாக்கிக்கொள்வது” என்று சொல்லுகிறீர்கள்.

முழு வாக்கியத்தையும் பார்ப்போம். “என்னில் உங்களுக்குச் சமாதானம் இருக்கும்பொருட்டு இவைகளை உங்களுக்குச் சொன்னேன். உலகத்தில் உங்களுக்கு உபத்திரவமுண்டு; ஆனாலும் தைரியமாயிருங்கள். நான் உலகத்தை ஜெயித்தேன்” என்பது. ‘உலகத்தில்...... உபத்திரவம்; என்னில்......சமாதானம்.’ ‘என்னில்’ எனக் கூறப்பட்டிருப்பதின் தாற்பரியமென்ன?

நாம் அவரோடு இசைந்து ஒன்ருகும் நிலைமையை, அவரோடு கலந்து நிற்கும் நிலைமையைக் குறிக்கும். அப்படிக் கலக்கவே அவர் ஜெயம் நமக்காம். அப்படியே அவருடைய சமாதானமும் நமக்காகும். நம்மை அவருக்கு ஒப்புக்கொடுப்பதென்பதே அவரோடு நாம் ஒன்ருய் இணையும் தன்மையைக் குறிக்கும். அவர் ஜீவன் நமது ஜீவனேடும் அவர் மனது நமது மனதோடும் கலக்கவே அவரோடு ஒரே ஜீவியத்துக்குட்படுகிறேம்.

“அவருடைய மகிமையுள்ள கரம் மோசேயின் வலப்புறம் செல்லுமாறு செய்தவர் யார்? எனப் பழைய ஏற்பாட்டில் கூறப்படுகிறது. கடவுளின் வல்லமையும் மோசேயின் முயற்சியும் ஒன்றுசேருகிறது. மோசே தன் வலதுகரத்தை உயர்த்தும்போது கடவுளின் வலது

காரமும் அவன் கரத்தோடு சேர்ந்து உயர்கிறது. கடவுளின் கரமே தனிமையாக எல்லாவற்றையும் செய்யவில்லை. அப்படிச் செய்திருக்குமானல் மோசேயின் கரம் பலப்பட்டு வளரமுடியாது. மோசேயின் காமும் உயர்த்தப்பட வேண்டியதாயிற்று. அவன் உயர்த்தும்போதோ கடவுள் ஜெயமாக விளங்கினர்.

இதே காரியத்தை உன்னேடு சம்பந்தப்படுத்திக் கூறிப்பார். "நான் கிறிஸ்துவிலிருக்கிறேன், ஆகவே அவருடைய வல்லமை என் ஜீவியத்தில் ஒவ்வொரு சிறு விஷயமாகவும் ஒன்றுசேர்ந்து விளங்குகிறது. அவருடைய மகிமைபொருந்திய கரம் இன்றே எனது வலது கரத்துடன் செல்லும். நான் வேலைகளைச் செய்ய ஆரம்பிக்கும்போது எனக்கு வழக்கமாயுள்ள பலத்திலும் மிகவும் அதிகமான பலம் என்னில் காணப்படும். காரியங்களை எப்படிச் செய்வதெனத் தோன்ருமல் நான் மயங்கும்போது அவை எளிதில் முடிந்துவிடும். நான் பிறரோடு சம்பந்தப்பட்டு உறவாடும்போது என்னிடத்தில் மிகவும் அன்பு காணப்படும். எனது சிநேகமும் பற்றும் மிகவும் சந்தோஷத்தை விளைப்பனவாம். அவரோடு சேர்ந்தன்றி நான் எதையும் செய்யத் துணிவதில்லை. அவரோடே சேர்ந்தே யாவற்றையும் செய்து முடிப்பேன். தமது மகிமையுள்ள வலதுகரம் எனது வலதுகரத்தினேடு செல்லும்படி செய்வார். அதுவே போதும்.

என் குறைநடுவு அவர்தம் நிறைவு அருளுவார்
என் அமைதியிலவர் தம் அமைதியுமாம்.

கிறிஸ்துவே, நான் 'உமக்கு' உள்ளே இருப்பதையறிந்து உமக்கு நன்றி செலுத்துகிறேன். நான் உமக்குள்ளிருக்கிறேன் எனும் உண்மையை நன்குணர்ந்து அதன் வழியே இன்றும் என்றும் ஜீவிக்க எனக்குத் துணைசெய்தருளும். ஆமேன்.

எண்பத்துமூன்றும் நாள்

நமது இயற்கை ஆசைகளை மேம்படுத்தல்

2 கோா. 5: 16, 17; ரோ. 6: 13; 1 கோரி. 15: 9, 10

கிறிஸ்துவுக்குள்ளிருப்பதென்றால் என்னவென்பதைக் கடந்த வாரம் நோக்கினோம். அவருடைய திருநோக்கங்களோடு நாம் முற்றிலும் இசைந்தவர்களாகி அவருடைய வெற்றிகளை நமதாக்கிக்கொள்வதே அந்நிலைமை என்பதையும் கவனித்தோம். "கிறிஸ்துவுக்குள்" இருப்பதினால் விளைவன இன்னவென்பதை இப்பொழுது பார்ப்போம். பவுல் அப்போஸ்தலர் இங்ஙனம் கூறுகின்றார். "ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் புது சிருஷ்டியாயிருக்கிறான்; பழையன ஒழிந்துபோயின, இதோ, புதிதாயின." 'பழையன ஒழிந்துபோயின' எனக் கூறப்படுகிறதெனினும் அவை ஒழிந்துபோகவில்லை. 'இதோ, (பழையன) புதிதாயின.'

ஒருவழியாகப் பார்த்தால் பழையனவனைத்தும் முற்றிலுமாக ஒழிந்துபோயினவெனினும் மற்றொருவகையாகப் பார்த்தால் அவை ஒழிந்துபோகாமல் முற்றிலும் மாறிப் புதியனவாகித் திரும்பவும் வந்துவிட்டன எனலாம். இந்தப் 'புது சிருஷ்டி' பழைய சிருஷ்டியினும் முற்றிலும் மாறுபட்டது. எனினும் அந்தப் பழைய சிருஷ்டியே அதுவே புதிதாக்கப்பட்டதாம். தற்காலம் பீச்சுப் பழங்கள் என நாம் பிரியமாக அருந்தும் பழங்கள் ஒரு காலத்தில் மிகவும் விஷமுள்ள பழமாயிருந்தன. அக்காலத்தில் பாரசீகர் தமது அம்புநுனிகள் விஷமுடையன ஆவதற்கு அந்நுனிகளை இப்பழங்களில் தோய்ப்பதுண்டு. தற்காலப் பீச்சு ஒரு காலத்தில் விஷமுடையது. இப்போதுள்ள பீச்சு புதிய சிருஷ்டியான பழம். பழையன ஒழிந்தன. இதோ புதிதாயின. அது புதிதாயிற்று. அதன் விஷம் அதினின்று நீக்கப்பட்டது. அந்த மரமோ முன்னிருந்த மாதிரியாகவே இன்றளவு

மிருக்கிறது. ஆனாலும் அது கொடுப்பதோ முற்காலத்திலேபோல விஷம் நிறைந்த பழங்களல்ல. ஆனால் அவை மதுரமும் சுகத்துக்கேதுவாயினவுமான நற்பழங்களைக் கொடுக்கிறது. இதுவே புதிதாக்கப்படுதல்.

பழைய ஆசைகளிலிருந்த விஷம் நீக்கப்பட்டதென்பதைப் பவுல் அப்போஸ்தலர் கண்டார். அந்த ஆசைகளே புதிதாக்கப்பட்டனவாய் மறுபடியும் வந்து சேர்ந்தன. முற்காலத்தில் மரணத்துக்கேதுவான காரியங்களுக்கு உபயோகமாயிருந்த இவ்வியல்புகள் இப்பொழுது ஜீவனுக்கேதுவானவைகளாக உபயோகமாயின. பவுலாகிய தாம் முன்போலவே யூத ஜாதியாருக்குரிய குணங்குறிகளோடு இருந்தனரெனினும் தாம் முற்றிலும் மாறினவராகிப் புதிய நிலைமைக்கேற்பத் தமது போர் தானும் மாற்றப்படவேண்டியதாயிற்று என்பதை அவர் கண்டுகொண்டார். பழையகாலத் தொடர்பு அற்றுப்போயிற்றெனினும் ஒருவாறு அதனோடு தொடர்புமிருந்தது. மனந்திரும்புதல் என்பது விட்டுவிடுதலோடுமாத்திரம் அமையாமே காத்துக்கொள்ளுதலுமாம். தம்மை நடத்துவன புதிய ஆளுகைக்குட்பட்டுப் புதிய காரியங்களைச் செய்தற்கேதுவாயின எனக் கண்டார். இங்ஙனமாகப் புதிய சிருஷ்டியாக்கப்பட்டது.

கிறிஸ்துவே, சுத்தமாக்கப்படாததாயிருந்த மானிட ஜீவியத்தை நீர் ஆட்கொண்டு அதைச் சுத்தமாக்கிப் புதிதாக்கி அவைகள் உமது நோக்கத்தை நிறைவேற்றுவதற்கேதுவாக அவற்றை உபயோகப்படுத்துகிறீர். உமக்கு நன்றி செலுத்துகிறேன். எனது ஜீவியம் முழுவதையும் உம்மண்டையிற் படைக்கிறேன். உமது திருவருட்படியே அதை மாற்றி உபயோகப்படுத்தியருளும். ஆமேன்.

எண்பத்துநான்காம் நாள்

நமது இயற்கை ஆசைகளை மேம்படுத்தல்

2 கோரி. 6: 3–10; 5: 14, 15

நமது வாழ்வை இயக்கும் சக்திகள் நமது இயற்கை ஆசைகளே. நம்மை நடத்தி ஆள்வதற்கேதுவாய் நிற்கும் ஜீவிய வல்லமையானது மூன்று இயற்கையான வழிகளில் ஓடுகின்றது. அவையாவன: தான், இச்சை, ஜனசமூகம். இன்னும் சிற்சில ஆசைகளுமுள்ளனவெனினும் அவையெல்லாம் இவற்றில் வழியே உண்டானவைகளே. அவைகளும் மேற்கூறிய இம்மூன்றினுள்ளடங்கும். இவ்வாசைகள் மூன்று முறைகளில் வெளிப்படலாம்; பிறப்பினாலே உண்டான தன்மை, மாற்றியும், குறைத்தும் ஒடுக்கியும் அடக்கியும் வெளிப்படுவது, புதியதாய் மாற்றுதல்.

கிறிஸ்தவ ஜீவிய முறையானது நேர்மாறுவதையும் ஒடுக்குவதையும் விலக்கி வெளியிடுதல், அடக்கியாளுதல், புதிதாய்ப் பிறத்தல் எனும் முறைகளைக் கையாடுவது. ஒடுக்கிவிடுதலுக்கும் அடக்கியாள்வதற்கும் வித்தியாசமுண்டு? ஒடுக்கிவிடுதலால் இயல்பு குணத்தை அந்தக்கரணத்தின் உள்ளே தள்ளிக் கதவை மூடிவிடுவதுபோலாகும். இப்படிச் செய்வதால் விளைவது பெருங்கேடே. "இவ்வாறு ஒடுக்கி மூடிய இயற்கை ஆசைகள் பாடசாலையிற் படிக்கும் துஷ்டப்பிள்ளைகளையே போல, பள்ளிக்கூடம் முடிந்தவுடன் ஜன்னல்களில் கற்களை எறியும் கெட்ட பிள்ளைகளையே போலாகும்" என ஹேட்பீல்ட் ஆசிரியர் கூறுகின்றனர். அடக்கியாளும் முறையைக் கையாடினாலோ இயல்புகுணங்கள் புத்திபூர்வமான மனதினுள் காக்கப்படுகின்றன. சிற்சில காரியங்களில் செல்லாமல் தடுக்கப்படுகின்றன. மற்ற விடங்களில் சென்று புதிதாகுமாறு அவற்றை உபயோகப்படுத்துகிறோம். வேறுவிதமாகக் கூறினால்

கெட்ட பையன்களை வகுப்புகளில் அடைத்துவைத்து அவர்களை இடைவிடாது கவனித்தும் நல்வழியிற் செலுத்தியும் அவர்கள் நன்முயற்சிகளில் ஈடுபடுமாறு அவர்களுக்குப் போதிக்கிறோம். புதிதாய்ப் பிறவாமல் அடக்கிவிடுவது ஒடுக்கிவிடுவதே யாகும். இதனால் உண்டாவது தீமையே.

கிறிஸ்துமார்க்கம் ஜீவனின் இயல்பொழுக்கத்தைத் தழுவியது. தனியாகவோ, குடும்பமாகவோ, ஜனசமூகமாகவோ உள்ள நிலைமையைத் தழுவிச் செல்வது. கிறிஸ்துமார்க்கம் மானிட இயற்கைக்கு மாறுபட்டதன்று. மானிட இயல்புக்கு மாறுபட்ட மதங்களுமுண்டு. ஹிந்து சந்நியாசி ஒருவர் என்னிடம் "என் குடும்பம் இன்னதென நான் ஒருநாளும் கூறுவதில்லை. நான் சந்நியாசி, சாது" என்று கூறினார். புத்தர் மானிட இயல்பு அனைத்தையும் விலக்கி நிர்வாண தசை பெறுமாறு போதித்தது இயல்பு உணர்ச்சிகள் அனைத்தையும் தொலைத்துவிடுமாறு போதித்ததேயாகும். கிறிஸ்துமார்க்கமோ அப்படிச் செய்வதன்று. ஜீவிய இயல்பு சுபாவங்களை விட்டுவிடவேண்டியதென்பதன்று. அவற்றை நல்வழியில் உபயோகிக்கவேண்டுமெனப் போதிப்பது. தீயவழியெனத் தோன்றியவிடத்து அவற்றை அடக்கிக்கொள்ளுதலும் நல்வழி எனத் தோற்றியவிடங்களில் அவற்றை உபயோகிப்பதும் கிறிஸ்துமார்க்க முறையாம். இங்ஙனம் கிறிஸ்துமார்க்க மேலான கோட்பாடுகளுக்கிசைய அவற்றை அடக்கி நல்வழியிற் செலுத்தவே அவை புதிய பிறப்படைந்து விளங்கும். விளங்கவே உன்னத வாசல் திறக்கும்.

கிறிஸ்துவே, மானிட இயல்பை முற்றிலும் அடக்கிவிடவேண்டுமென்பதின்றி அவற்றை நல்வழியிற் செலுத்தி உமது திருச்சித்தத்தை நிறைவேற்றுதற்பொருட்டு அவற்றை முழுவதுமாய் உமக்கு ஒப்படைக்கும் வழியை எங்களுக்குக் காட்டினீரே. உமக்கு நன்றி செலுத்துகிறோம். எங்களை மீட்டருளும். ஆமேன்.

எண்பத்தைந்தாம் நாள்

தான் எனும் இயற்கை ஆசை மாறுபடுதல்

1 கொரி. 11: 1; யோ. 18: 20–23; 15: 16; பிலி. 4: 9

தான் எனும் இயற்கை ஆசையே எல்லாவற்றிலும் மிகவும் பெருமையும் அகங்காரமுமுடையது. நாம் செய்யும் அநேக காரியங்களுக்கு அதுவே காரணம். இதை நாம் ஆராய்ந்து பார்க்கவேண்டும். ஒருவனைப்பற்றி "இவன் தன்னை மறந்தவன்" எனக் கூறும்போது உண்மையாகவே நான் அதை ஒப்புக்கொள்வதில்லை. கிறிஸ்து வானவர் தன்னை மறந்தவரல்ல. பவுல் அப்போஸ்தலன் தன்னை மறந்தவரல்ல. எந்தக் கிறிஸ்தவனும் தன்னை மறந்திருக்கமுடியாது. நான் ஒரு சாதுவினிடம் அவர் எங்கே போய்க்கொண்டிருக்கிறார் எனக் கேட்க அவர் தாம் வழிபடு கடவுளின் பெயரை 'இராமா, இராமா' வெனச் சொல்லிக்கொண்டே சென்றார். நான் என்ன தான் கேள்வி கேட்டும் அவர் இவ்வாறே பதிலுரைத்துக் கொண்டிருந்தார். அவர் தன்னை மறந்தவராம். தான் என்பது போய் முழுதும் 'ராமா' வென்றே நின்றது. இது உண்மைதானோ? அல்லவேயல்ல. தனக்குத் 'தான்' என ஒன்றில்லையெனப் பலமாய் மறுத்துரைப்பதே அந்தத் தான் என்பதின் தன்மையன்றோ. 'தான்' என்பது தனக்கு இல்லையெனக் கூறுவது முற்றிலும் மாய்மாலமே. அது ஒருவரைவிட்டு நீங்குவதில்லை. நீங்கவும் கூடாது. எனினும் ஒருவரிலிருப்பது என்னவிதமான 'தான்' என்பதே நோக்கத்தக்கது.

எல்லாரினும் மிகவும் சாந்தமுடையவராயிருந்த இயேசுவானவரில் 'தான்' என்பது புதியதாக்கப்பட்டு புதியதன்மை காட்டி விளங்கி மேனிலை பெற்றது. அவரோ முழுவதும் தன்னையே வற்புறுத்தி வந்தார். அதிகாரத்தை விட்டுவிட்டார். தாம் அரசனாக்கப்படுவதை அவர் விரும்பவில்லை. எனினும் உலகில் வேறெவரும் எக்காலத்தும் வகித்திராத பெரிய அதிகாரத்தைத் தாம் வகித்துத் தன்னிலுள்ள 'தான்' என்பதைத் திருப்தி செய்தார். பவுல் அப்போஸ்தலன் தம்மைத் திருச்சபை

களுக்கெல்லாம் ஊழியனுக்கிச் சபைகளுக்கு நேர்ந்த துன்பங்களைத் தமது துன்பங்களாகவும் சபைகளின் பல வீனங்களைத் தமது பலவீனங்களாகவும் பாராட்டினார். அவரை நோக்கும்போது அவர் முற்றிலும் தன்னை இழந் தவர் என்றே கூற நேரிடும். ஆனாலும் அவர் அப்படிப் பட்டவரல்லர். அவரிலிருந்த 'தான்' எனும் குணம் புதி தாயிற்று. தான் எல்லாவற்றையும் வெறுத்துவிட்டதினா லேயே ஜனங்களிடம் அதிக சொற் சக்தியும் அதிகாரம், வல்லமையுமுடையராய் விளங்கித் தன்னிலிருந்த தான் எனும் இயல்பைத் திருப்தி செய்தார். அத்தகைய அதி காரத்தையும் மரியாதையையும் பெறவேண்டுமென அவர் தம்மை வெறுத்து ஜீவிக்கவில்லை. அங்ஙனமாயின் அது முழுவதும் கெட்ட காரியமாய் முடியும். அவர் தம்மை இழந்து ஜீவித்தபடியினால் இயல்பாகவே அவருக்குப் பிறர்மீது அதிகாரம் உண்டாயிற்று. தன்னை இழந்து விட்டதாலல்ல. தன்னை ஒன்றுக்கெனக் கட்டுக்குட்படுத் தாமல் எல்லாவற்றினும் கலந்துகொள்வதற்கு இடங் கொடுத்தார். வக்கீலாக இருந்த காலத்தில் காந்தியி லிருந்த தான் என்பது சிறியது. சிறுபான்மையோ ருக்கே பயன்படுவது. தான் எனும் இதை இழந்து இந் தியா நாடு முழுவதுக்கும் தன்னை ஊழியனாக்கவே அவரி லுள்ள தான் என்பது மிகவும் பிரபலமாகி மகாத்மா வென விளங்கி எல்லாரிடத்திலும் அதிகாரம் செலுத்தக் கூடிய 'தான்' ஆயிற்று. மகாத்மா காந்தி தன்னை இழந் தவரல்ல. அவருடைய சொற் சக்தியும் அதிகாரமும் அளவுகடந்தது.

உன்னிலுள்ள தான் எனும் பழைய குணம் சிலுவை யில் அறையப்படவேண்டும். அப்போது அது திரும்ப வரும். அதைக்கண்ட நீ 'பழைய தான் ஒழிந்தது. இதோ, அது புதிதாயிற்று' எனச் சொல்லக்கூடும்.

கிறிஸ்துவே, என்னிலுள்ள தான் எனும் இதை எடுத்து அதி லுள்ள தன்னயம் முழுதும் நீங்க அதைச் சுத்திகரித்து உமது சித் தத்தை நிறைவேற்றுதற்காக அதை உபயோகப்படுத்தியருளும். அப் படியானல் நான் அதின் வழியிலே நடப்பேன். நான் அதிலே மகிழ்ந்திருக்கவும்கூடும். ஆமேன்.

எண்பத்தாறும் நாள்

மாமிச இச்சை புதியதாகி மேம்படுதல்

மத். 23: 37–9; 2: 11, 12; கலா. 4: 18, 19

"மானிட ஜீவியம் ஆண் பெண் சம்பந்த மாமிச இச்சை நிறைந்தது." மானிட வர்க்க விர்த்தியின் பொருட்டு இந்த இயல்பு குணமாகிய காம இச்சை மனிதருக்குள் மிகவும் அதிகமாய்க் காணப்படுகிறது. இது அதிகமோ, கொஞ்சமோ எவ்வளவாயினும் சரியே, அது மனிதருக்குள் இயல்பாகவே அமைந்திருக்கிறது. அப்படியொன்றில்லையென நாம் விட்டுவிடாமல் அதைத் தெளிவாகக் கவனித்து நோக்கவேண்டியது அவசியம்.

தனக்குக் காம இச்சையுண்டென வெளியிடுவது வெட்கக்கேடான ஒரு காரியமல்ல. தனக்குப் பசியுண்டென உரைப்பதுபோல் இதுவும் ஒரு இயற்கை ஆசையே. வர்க்க விருத்தியின்பொருட்டு அது இயல்பாய் நடைபெறும் வழியே செலுத்தப்படுமாயின் அது சம்பந்தமான காரியம் விலக்கப்படுவதன்று. அங்ஙனமின்றி ஒருவருக்குள்ளிருக்கும் ஒரு இயல்பு குணமானது பிற இயல்புகளை அடக்கியாண்டு அவற்றை மேற்கொள்ளவோ இல்லாமற்செய்யவோ துணியுமாயின் இதனால் விளைவது திருப்திகரமானதன்று. உள்ளே போராட்டமும் துக்கமும் சம்பவிக்கும். ஸ்திரீ புருஷ சம்பந்த இயற்கை ஆசையை முற்றிலும் அடக்கி இயல்பாய் ஒழுகும் முறையில் அதற்கு இடமில்லையாகும்படி செய்தால் அதிகக் கஷ்டங்கள் நேரிடுவதுண்டு. அதை ஒடுக்கிநைப்பது மோசமாகும். அது புதியதாகி மேன்மையுறச் செய்தல் வேண்டும்.

இயேசுவானவரில் இவ்வாசை புதியதாக்கப்பட்டு மேன்மையடைந்தது. அவருடைய மனதிலும் ஆவியிலும் அவர் புதிதுபுதிதாய்ப் படைத்துக்கொண்டிருந்தார். புதியதான ஒரு ஜாதி, மானிடருக்குள் ஒரு மேலான வம்சம் தோன்றும்படி செய்தார். கடவுளின் வம்சமென

ஒன்று தோற்றுவித்து அதற்குப் பிதாவாகவும் மாதா வாகவும் விளங்கினுர். "எருசலேமே.........கோழி தன் குஞ்சுகளைத் தன் சிறகுகளின்கீழ் கூட்டிச் சேர்த்துக் கொள்ளும் வண்ணமாக எத்தனைதரமோ உன் பிள்ளை களைக் கூட்டிச் சேர்ந்துக்கொள்ள மனதாயிருந்தேன்." இதுவே புதியதாதல்: பவுல் அப்போஸ்தலன் சமுசார வாழ்க்கை யில்லாதிருந்தபடியினுல் சந்தோஷமற்றிருக்க வில்லை. அவர் தமது ஜீவியத்திலே இவ்வாசையை மேலானதாக்கி மனதிலும் ஆவியிலும் மேலானவற்றை உற்பத்தி செய்துவந்தார். தாம் சென்ற இடங்களிலெல் லாம் புதிதான பிறப்புண்டானது கண்டு மகிழ்ந்தார். ஆவியின் பிரகாரமாகப் பிதாவாய் விளங்கினுர். இந்தி யாவிலே பெண்பாலரான மிஷனெரிகள் ஆயிரக்கணக் கானவர் ஊழியஞ் செய்கின்றனர். அவர்களில் எவரும் மாமிச இச்சை வழிச்சென்று கெட்டுப்போனதாக என்னு டைய இருபத்தெட்டு வருஷ அனுபவத்தில் நான் கண்ட தும் கேட்டதுமில்லை. காரணமென்ன? அவர்கள் அனை வரும் பரிதாப நிலையிலுள்ளவர்களுக்கும் அநாதப் பிள்ளை களுக்கும் தாங்களே தாய்களாகி மாமிச இயல்பில் தாய்க ளாகும் நிலைமையில் நீங்கி ஆவிக்குரிய தாய்களாகித் தங் கள் இயல்புத்தன்மையை இங்ஙனம் மேலானதாக்கி ஜீவிக் கின்றனர்.

கிறிஸ்துவுக்குள்ளிருக்கும் எவனும் புதிய சிருஷ்டி யாகிறுன். பழைய இச்சை இயல்பு ஒழிந்துபோயின. இதோ, அது புதிதாயிற்று.

கிறிஸ்துவே, உள்ளாக என்னைக் கட்டியிருப்பவற்றினின்று நான் நீங்கியிருப்பதினிமித்தம் உமக்கு நன்றி செலுத்துகிறேன். என் ஆத்துமா புதிதான படைப்புத் தொழிலில் பிரவர்த்திக்கும்பொருட்டு அதன் கட்டைத் தளர்த்தியாக்கிவிடும். ஆமேன்.

எண்பத்தேழாம் நாள்

விஞவும் ஆசையையும் தற்பெருமையின் ஆசையையும் புதியதாக்கி மேம்படுத்தல்

பிலி. 1: 9–11; 1 தெச. 2: 19, 20

எதையும் அறிந்துகொள்ள வேண்டுமெனும் ஆசை குழந்தைப் பருவத்திலேயே வெளிப்படுகிறது. இது என்ன? அது என்ன? வெனக் குழந்தைகள் அடிக்கடி கேட்பதுண்டு. பெரியவர்களாகும்போது இவ்வாசை வளர்ந்து தகாத பிரகாரமாய் வெளிப்படுவதுண்டு. மற்றவர்களுடைய காரியங்களை அறிந்துகொள்ளவேண்டுமெனும் ஆசை, பிறர் காரியங்களில் தலையிட்டுக்கொள்ள வேண்டுமெனும் ஆசை முதலியன எழுகின்றன. காரியங்களை அறிந்துகொள்ளுமாறு எழும் இவ்வாசை ஆவிக்குரிய ஜீவியாபிவிர்த்திக்கும் மிகவும் உபயோகப்படலாம். அவ்வாசையைக் கிறிஸ்தவன் கீழான நிலைமையினின்று மேலான நிலைமைக்கு உயர்தற்கேதுவாகப் புதுப்பித்து மேலானதாக்கவேண்டும்.

கிறிஸ்தவனின் ராஜ்யம் எல்லையில்லாதது. கிறிஸ்தவன் நோக்கி நடக்கவேண்டியதும் மகோன்னதமானது. தான் எவ்வளவு மேலானதை நினைத்தாலும் அவனுக்கெதிரே அதனினும் மேலானதே காணப்படும். அவன் அறிந்துகொள்ள ஆசிப்பதற்கும் அர்தமும் வரையறையுமில்லை. அறிந்துகொண்டேபோயினும் இன்னும் அறிய வேண்டியன உண்டு. அர்த்தமின்றிப் பயனற்ற காரியமாய்ப் பிறர் காரியங்களை அறிந்துகொள்வதெனவின்றி இவனிலுள்ள அந்த ஆசையானது மேன்மையுள்ளதாய் வரையறையற்றதாய்ப் புதுப்பிக்கப்படுகிறது.

பெருமையெனும் இயல்பு குணமும் இங்ஙனமே புதியதாக மேன்மையடையலாம். எனது பெருமை கொல்லப்பட்டதெனப் பலர் கூறுவதைக் கேட்டிருக்கிறோம். அது அப்படிக் கொல்லப்படலாகாதென விரும்புகிறேன். நமது பெருமை கொல்லப்படுமாயின் நாமும் உயிரிழந்த

வரே யாவோம். உண்மைதான், நம்மில் காணப்படும் சாதாரணப் பெருமை அற்பமான பெருமையே. பிறர் காண விளங்கவேண்டுமெனும் இப்பெருமை ஒழியவேண்டும். எனினும் பெருமையானது கடவுளின் ராஜ்ய மகிமைக்கெனப் புதியதாகவேண்டும். புதிய தன்மையுடையதாய்க் காணப்படவேண்டும். பவுல் அப்போஸ்தலன் கூறுவதென்ன?"எங்களுக்கு நன்னம்பிக்கையும் சந்தோஷமும் பெருமைபாராட்டும் கிரீடமுமாயிருக்கிறவர்கள் யார்? நீங்கள்தானல்லவா. ஆம், நீங்களே எங்களுக்கு மகிமையும் சந்தோஷமுமாயிருக்கிறீர்கள்" என்று கூறுகிறார். பழைய பரிசேயப் பெருமை இங்கே மீட்புக்குரிய பெருமையாய் மாறிற்று. தமது பிறப்பு, கல்வி முதலியவற்றில் அவர் பெருமை பாராட்டவில்லை. தம்மால் புதிய பிறப்படைந்தவரைத் தமதுமுன் கண்டு மகிமையடைபவராய் இந்தப் புதிய சந்ததியைக் கண்டு பெருமையோடு பேசுகிறார். இயல்பாயுள்ள பெருமைக் குணமானது அற்பத்தனத்தினின்று நீங்கித் தளர்த்தியாகித் தாம் செய்யத்தக்க ஊழியத்தில் பெற்ற பெரும் பயனால் பெருமையடைகிறது.

இவ்விதமாகப் புதியதாக்கப்பட்டுப் புதிய தன்மை பெற்ற பெருமை நமக்கு இருக்குமாயின், கவலையீனப் பிரசங்கம், அரைகுறை ஊழியம், ஏனோதானோ வென்ற ஆவிக்குரிய ஜீவியம் முதலியவற்றினின்று நாம் நீங்குவோம். முழுமனதோடும் பூரணமான வேலை செய்வதற்கு இது நம்மைத் தூண்டும்.

அங்ஙனமாகவே, நாம் "பிறர் காரியங்களை அறிய விரும்பும் அற்பத்தன ஆசை ஒழிந்தது. இதோ, எல்லாம் புதிதாயின" எனச் சொல்லக்கூடியவராவோம்.

கிறிஸ்துவே, என்னிலுள்ள அறிவீனமான பெருமையை நீக்கிவிடும். எல்லாவற்றிலும் மிகவும் மேலானதும் சிறந்ததுமாய்க் காணப்படுவனவற்றைத் தவிர வேறொன்றையும் மதியாத உண்மைப் பெருந்தன்மையாகிய பெருமையை என்னில் வளரச் செய்யும். ஆமேன்.

எண்பத்தெட்டாம் நாள்

வெற்றி வாழ்க்கையும் ஜனசமூகக் கூட்டுறவும்

யோ. 3: 3; மத். 18: 3; 15: 19, 20

நாம் வெற்றிவாழ்க்கையைத் தேடி ஆராய்ச்சி செய்வதில் இதுவரைக்கும் நமக்குள்ளிருப்பனவாகிய தீயகுணங்களையே நோக்கி வந்தோம். வெற்றிவாழ்க்கை ஆராய்ச்சியை நமக்குள்ளிருந்தே ஆரம்பித்து வெளிச்செல்வது சரியே. நம்மில் பலர் ஜுரமுடையோர்போலிருக்கிறோம். படுக்கையில் அங்குமிங்கும் உருண்டு புரண்டு எவ்விடமாவது குளிர்ந்திருக்குமோவெனப் பார்க்கிறோம். உண்மையிலேயோ உஷ்ணம் நமக்குள்ளிருந்தே நம்மைக் காய்கிறது. படுக்கையை மாற்றிக் குளிர்ந்த விரிப்பை விரித்துப் படுக்கவைப்பதினால் ஜுரம் நின்றுவிடாது. ஜுரத்துக் கேதுவானவைகள் தேகத்தினுள்ளிருக்கும்வரை ஜுரம் விடாது. மனிதருக்கு நேரிடும் சகல கேடுகளையும் ஜனசமூகச் சீர்திருத்தமூலமாய் மாற்றலாம் எனத் தற்காலம் நினைப்போர் இதை மறந்துவிடக்கூடாது. நமக்குள் நின்று நம்மைக் கெடுப்பனவற்றைப் பராமுகஞ் செய்து வெளியே இடையூறுக நிற்பனவற்றை மாத்திரம் கவனிப்பது நமக்கு ஒருவாறு இயல்பாகிவிட்டது.

உல்லியம் ஆதாம்ஸ் பிரௌண் என்பவர் "தற்காலத்தவர் இதுதான் பாவம் என அறிந்துகொள்ளும் தன்மையை இழந்துவிட்டார்களென்பதன்று. நாம் பிரியப்படாதார்மேலும் நாம் ஒப்புக்கொள்ளாதார்மேலும் குற்றத்தைச் சுமத்தி அவர்களைக் குற்றமுடையராகப் பாராட்டும் குணம் நமக்கு வாய்த்துவிட்டது. மிகப் பெரிய வியாபாரிகள், பிறநாட்டாரை அடக்கியாள வேண்டுமெனும் அபேக்ஷைகொண்டோர், திரள் ஜனங்களைக் கூலியாட்களாக வேலை வாங்குவோர் முதலியவரிடம் இத்தன்மை மிகவும் தெளிவாய்க் காணப்படுகின்றது" என்று கூறுகின்றனர். இவ்வாறாகத் தமது குற்றத்தை மறைத்துப் பிறர்மீது குற்றத்தைச் சுமத்

துதல் நேரான ஒழுக்கமன்று. "நமது உள்ளிந்திரியங் களைச் சுத்திகரிக்கும் நம்பிக்கையை விளைவிக்கக்கூடியதே மதமெனப்படும். ஆகவே மதச்சார்பான முக்கிய ஒழுக் கம் உண்மை யொழுக்கமே, முற்றிலும் உண்மையான ஒழுக்கமே" என ஒயிற்று ஹெட் ஆசிரியர் கூறுகின்ருர்.

உண்மையான ஒழுக்கம் என்பதைக் கவனிக்கும் போது முதற்கண் அது நம்மிடம் உண்டா என்பதைத் தேடவேண்டும். அது பிறரிடம் உண்டா என ஆராயத் தொடங்குவது நமது தீயொழுக்கமேயாகும். நாம் எப் படியோ தப்பித்துக்கொள்ளுவோம் எனும் நினைவு நல்ல நினைவன்று. தனது ஜீவியத்தில் காணப்படும் குறை களைக் கவனித்து அவற்றை நீக்கிக்கொள்ளக்கூடாதவன் எவனும் உலகின் குறைகளைக் கவனித்து அவற்றை நீக்கக் கூடியவனல்லவென்பது துணிபு. ஜியார்ஜ் ஆர்லிஸ் என் னும் நடிகர், தாம் சிறந்த நடிகராகப் பாராட்டிக் கொண்டாடிய தம்மோடு சேர்ந்த மற்ருெரு நடிகராகிய ஜாண் மேசன் என்பவரைப்பற்றித் தமது ஜீவியக் குறிப்பு களில் அடியில் வருமாறு எழுதியிருக்கின்றனர். "ஜாண் மேசன் நாடகசாலையில் எத்தனை சிறந்த நேரான நடிக ராகக் காணப்பட்டாரோ அத்தகைய ஒழுக்கம் அவரு டைய சாதாரண ஜீவியத்திலும் காணப்பட்டிருக்குமா ஞல் அவரினும் சிறந்த நடிகர் அமெரிக்கா தேசத்தில் இருந்திரார் என்பது திண்ணம்" என எழுதியிருக்கிருர்.

உள்ளாகத் தனது சொந்த ஜீவியத்தைக் கவனியாமல் விட்டுவிட்டு, வெளியே ஜனசமூக சீர்திருத்தம் செய்யப் புகுவது இசையாத தாறுமாறேயாம். நாமோ, இந்த ஆராய்ச்சியில் நம்மைப்பற்றி ஆராயத் தொடங்குகிருேம். அவ்வளவிலேயே நாம் நின்றுவிடுவதில்லை.

கிறிஸ்துவே, நீர் உமது கரத்தை நீட்டி முதலாவது எங்கள் சொந்த இதயத்தைத் தட்டுவதற்காக உமக்கு நன்றிசெலுத்துகிருேம். நீர் செல்லுந் தூரமளவும் நாங்களும் உம்மைப் பின்பற்றி வருதற்கு எங்களுக்குத் துணைநின்றருளும். ஆமேன்.

எண்பத்தொன்பதாம் நாள்

இசைந்து வளரும் உயிரும் தகுதியான சுற்றுப்புறமும்

1 கோரி. 15; 33; மத். 11; 20–24; அப். 19: 23–27

வெற்றி வாழ்க்கை இன்னதென நாம் ஆராயும்போது முதல்முதல் நாம் நம்மையே திட்டமாய் ஆராயவேண்டு மென்பதை இதுவரை பார்த்தோம். முதல்முதல் அதை ஆராயவேண்டுமெனக் கூறியதால் கடைசிவரையும் அதையே ஆராய்ந்துகொண்டிருக்க வேண்டுமெனக்கொள் ளக்கூடாது. நமது சொந்தக் காரியங்களை ஆராயாது விட்டுச் சுற்றிலுமுள்ளனவற்றை மாத்திரம் ஆராயப் புகுவது ஏதோ நாம் உண்மைக்கு விலக வகைதேடுவ தாகும் எனப் பார்த்தோம். சுற்றிலுமுள்ளவற்றை நோக்காதிருந்துவிடுவதும் ஒருவாறு விலக வகைதேடு வதேயாம்.

வெற்றி வாழ்க்கை வாழ்வதற்கு இடையூறாயிருப்பன வற்றுள் மிகப் பல நமக்குள்ளேயே இருக்கின்றன. வெற்றி வாழ்க்கை வாழ்வதற்கு இடையூறான பல காரணங்கள் நமக்குப் புறத்தேயுமுண்டு. நமது ஜனசமூக ஒழுக்கத்தி லேயே அவை காணப்படுகின்றன. ஜனசமூகமென்பது தனித்தனியே யுள்ளவர்களின் கூட்டுறவினாலானதே எனப் போக்குச் சொல்லிவிடுவதால் காரியம் அமை யாது. தனித்தனியானவர்களே ஜனசமூக ஒழுக்கத்திற் குக் காரணமென்பது ஒருவாறு உண்மையே யெனினும் அது முற்றிலும் உண்மையாகாது. தற்கால ஜனசமூக ஒழுக்கமானது தற்காலம் ஜீவிக்கும் ஆட்களினாலே உண் டாய்விட்டதல்ல. அது தலைமுறை தலைமுறையாய்த் தொன்றுதொட்டுவந்த பற்பல பரம்பரையாரால் விளைந்த ஒழுக்கம். தற்காலத்தவர் தனித்தனியே அதில் ஏதோ ஒரு சிறிதுமாத்திரம் மாற்றக்கூடும். ஆகவே அவ்வொழுக்கம் எவர் ஒருவராலும் ஏற்பட்டதன்று. நாம் ஆராயவேண்டியது, இந்த ஒழுக்கம் நமது புதிய ஜீவியத்திற்கு ஏற்றதோ அன்றோ என்பதே.

உயிர் வாழ்க்கைக்கு ஆதாரமாய் நிற்பன இரண்டே: இசைந்து நடக்கக்கூடிய உயிர் இயல்பும், அதற்கிசைவான சுற்றுப்புறமுமே. நமது உயிரியல்பு மிகவும் இசைந்துபோகக்கூடியதா யிருக்கலாம். அதற்குச் சுற்றுப்புறமானவைகள் அதற்கு இசைவில்லாததாயிருக்குமானால் அந்த உயிர் செத்தேபோம். இதற்கு மாறாக, சுற்றுப்புறம் மிகவும் இசைந்ததாயிருந்தும் உயிரியல்பு அதற்கு இசைந்துபோகும் இயல்புடையதாயிராவிடின் அப்படியும் உயிருக்கு மரணமே சம்பவிக்கும். இவ்வாறாக, நம்மைச் சுற்றியிருப்பனவற்றுக்கு இசைந்து செல்வதிலேயே நமது ஜீவியமிருக்குமெனில், தற்கால ஜனசமூக ஒழுக்கம் கிறிஸ்தவனான ஒருவன் இசைந்து ஒத்து நடக்கக்கூடியதுதானோவென ஆராயவேண்டும். தன்னைச் சுற்றியிருக்கும் ஜனசமூக ஒழுக்கம் தன்னைப் போஷித்துக் காப்பதோ, அழித்து ஒழிப்பதோ என ஆராயவேண்டும். அது தன்னைப் போஷித்துக் காப்பதென்னில் அதை எவ்வாற்றாலும் பரிபாலித்துக் காக்கவேண்டும். அது விஷமாகித் தன்னை ஒழித்தற்கேதுவாயிருந்தால், பாரசீகப் பீச்சிப் பழத்தைச் செய்ததுபோல அதிலுள்ள விஷத்தை மாற்றி அதை நல்லதாக்கவேண்டும். அப்படி மாற்றக்கூடாதென்னில் அதை முற்றிலுமே ஒழித்துவிட்டுத் தன்னைப் போஷித்துக் காக்கக்கூடிய பிறிதொன்றை உண்டுபண்ணவேண்டும். நாம் ஜீவிக்கவேண்டும். ஜெயத்தோடு ஜீவிக்கவேண்டும்.

கிறிஸ்துவே, எங்களைச் சுற்றியிருக்கும் காரியங்களை நாங்கள் பார்த்து ஆராயும் இச்சமயத்திலே அவற்றின் உண்மை நிலையை விருப்பும் வெறுப்புமின்றித் திட்டமாய் அறிந்துகொள்ளக்கூடிய அறிவைக் கட்டளையிடும். பக்ஷபாதமில்லாத இதயமும் கண்ணுமுடையராய் அவற்றைத் தெளிவாய் அறிந்துகொள்ளத் துணைபுரிந்தருளும். ஆமேன்.

தொண்ணூறும் நாள்

பாவத்திற்கேதுவான சில காரணங்கள்

யோ. 2: 14; மாற். 14: 11; அப். 24: 26; 1 தீமோ. 6: 10

தற்காலத்தில் ஜனசமூகத்தில் காணப்படும் பாவத்திற்குக் காரணம் இன்னதென ஆராயும்போது இங்குமங்கும் அற்ப சொற்ப காரணங்களாகக் காணப்படுகின்றனவற்றை விலக்கி மிகவும் முக்கியமான காரணம் இன்னதென்பதையே நோக்கவேண்டியது அவசியமாகிறது. இந்த முக்கியமான காரணம் தனக்குத் தனக்கே லாபமுண்டாகவேண்டுமென ஒவ்வொருவரும் முயல்வதேயாம். சகல பாவங்களுக்கும் தீமைகளுக்கும் காரணமாயிருப்பது பிறருக்கு இடங்கொடாமல் தாம் தாமே நன்மையடையவேண்டுமென எழும் ஆசையே. இவ்வாசையுண்டாய்விடவே பாவ வளர்ச்சிக்கு அடிகோலியதாயிற்று. தானே லாபமடையவேண்டும், பிறருக்கு இடங்கொடுக்கக்கூடாதெனத் தீர்மானித்த உடனேயே பிறர்மீதுள்ள அன்பும் தயாளமும் பறந்தோடக் கடினமனதும் தயைதாக்ஷணியமின்மையும் உதயமாகின்றன. இந்த குணம் நலமானதென்பதைத் தடுத்துவிடுகிறது.

நான் இப்படிக்கூறும்போது சிற்சிலர் இதற்குவிரோதமாய் ஆக்ஷேபனை கூறவும்கூடும். அந்த ஆக்ஷேபனையை நான் முற்றிலும் மறுப்பதுமில்லை. என்ன? ஒருவரிலொருவர் மிஞ்சியவராய், சாமர்த்தியசாலிகளாய்க் காணப்படவேண்டுமெனும் மேலான ஆசையில்லாதவிடத்து, மானிடர் முயற்சிக்குப் பங்கமுண்டாகித் தனித் தனித் தேர்ச்சி என்பது குறைந்து ஜீவியம் உற்சாகமிழந்து முன் வராமல் தடைபட்டு நிற்காதோ எனும் ஆக்ஷேபனை உண்டாகலாம். இதுவும் உண்மையேயெனினும் நான் கூறியது தன்னயம் காரணமாகப் பிறரை மேற்கொண்டு விளங்கவேண்டுமென்றெழுந்த ஆசையாம். இந்த ஆசை கடியத்தக்கதே. தன்னயம் காரணமாகாமல் ஒருவரில் ஒருவர் மிஞ்சியவராய் விளங்க முயல்வதுமுண்டு. அப்படிப்பட்ட ஆசை பாராட்டத்தக்கது. பலர் கூடி முயல்வதிலும் ஒருவரில் ஒருவர் மிஞ்சி விளங்கவேண்டுமெனும் ஆசை காணப்படலாம். யாருடைய முயற்சியினால் அதிகமான பொதுநன்மை விளைந்ததெனும்படி

உழைத்தல் தவறன்று. இத்தகைய உழைப்பினுல் ஆக்கம் அதிகப்படுமேயல்லாது அழிவு சம்பவிக்காது. தனித் தனியே ஒவ்வொருவரிலுமுள்ள தன்னய உணர்வு மீட்கப் பட்டு நல்வழியில் செல்லுதற்கு ஊக்கப்படுவதுபோலவே பலருக்குள் பொதுவாய் எழுந்த சுயநல ஆசையும் மேலான வழியில் ஊக்கப்பட்டுப் பொதுஜன நலத்திற் கென உழைக்குமாறு செய்யவேண்டும். தான் எனும் உணர்வை எவ்விடத்திலும் மறந்திருக்க முடியாது. நன்மை விளைதற்பொருட்டு அதை உபயோகப்படுத்த வேண்டும். அது புதியதாக்கப்பட்டு மேலான நிலைக்கு வரவேண்டும். ஒருவரில் ஒருவர் மிஞ்சவேண்டுமெனும் ஆசையுண்டாவது இயல்பே. அது கிறிஸ்தவரின் ஆசை யாகக் கிறிஸ்துவின் ராஜ்ய அபிவிர்த்திக்கென உபயோகப் படவேண்டும்.

ஒருவரிலொருவர் மிஞ்சி விளங்கும் தற்கால ஜன சமூகச் சுயநல வேட்கையோ ஒருவாறு விபரீத தோற்ற முடையதுபோல் உலகில் காணப்படலாம். கடின சிந்தை படையாததுபோலவும் நாகரிகத் தேர்ச்சிபெற்றதுபோல வும் காணப்படலாம். அது இங்ஙனம் காணப்படினும் புலியின் பாதங்களுக்குக் கீழ் மறைந்துகொள்ளும் நகங் கள் இருக்கிறதுபோலும் பிறரைக் கிழித்துப் பக்ஷிக்கும் இயல்புடையது. இது உண்மைதானே? வெளிச்சென்று நோக்கினுல் இது உண்மையென விளங்கும். வேலை கிடைக்க வழியின்றி தேகமும் மனமும் மெலிந்து தளர்ந்த நடையினராய் தெருக்களில் அலையும் எண் ணிறந்தவர் தற்கால நாகரிகக் கொடுமையை உரக்க உரைப்பவராவார். மேற்காட்டப்பட்டது உண்மையே யென்பதை அவர்களும் கூறுவார். நாமும் அறிவோம். தற்கால நாகரிகம் தேகமெங்கும் காயமுடையதாய் இரத்தம் சிந்தி நிற்கிறது. தன்னயம், சுயநலம் காரணமா யெழுந்த உலகினர் முயற்சியே இதன் காரணம். சுய நலத்ததாய்ப் பிறரை மேற்கொள்ளுமாசையே பாவத் தின் முக்கிய காரணம்.

கிறிஸ்துவே, நாங்கள் அமைதியான மனதோடும் தைரிய நெஞ் சோடும் இதை எதிர்த்துப் போராடி அதைச் சீராக்கிக்கொள்வதற்கு எங்களுக்குத் துணைபுரிந்தருளும். ஆமேன்.

தொண்ணூற்றோராம் நாள்

இவற்றை நீக்குதற்கு என்செய்வது?

மத். 14: 15,16; லூக். 10: 30-37; 1 யோ. 3: 17

ஜனசமூகக் கட்டுப்பாடு அமைந்துள்ள முறையே பாவத்திற்கேதுவாய் அமைந்துள்ளதென்றும், பாவத்தை விளைக்கிறதென்றும் பார்த்தோம். பிறரைக் கெடுத்துத் தான் வாழ்தல், தொழிலாளிகட்கு ஏற்படுத்தப்படும் சம்பளமுறை, யுத்தம், ஜனப்பிரிவினை, ஏற்றத்தாழ்வான செல்வ நிலை, பலதரப்பட்ட கூட்டத்தார், வேலையில்லாத் திண்டாட்டம், ஒரு ஜாதியாரை மறு ஜாதியார் அடக்கி யாளுதல், தன் ஜனமென்ற அபிமானம், பெண்பாலரைத் தக்கவாறு நினைத்து நடத்தாமை, செல்வ விர்த்தியில் உறுதியில்லாமை முதலியன நமது ஜனசமூகக் கட்டுப் பாட்டில் இயற்கையாகவே அமைந்து வெற்றி வாழ்க்கை வாழ்தற்குப் பலவகையிலும் இடையூறு யிருக்கின்றன. வெற்றி வாழ்க்கை வாழமுடியாமல் இவை முற்றிலும் தடுத்துவிடுகின்றனவெனச் சொல்லமுடியாதெனினும் இவை காரணங்களால் வெற்றி வாழ்க்கை வாழ்வது மிகவும் கஷ்டமாய்விடுகிறது. ஒருவனிலுள்ள வெற்றி வாழ்க்கைச் சிந்தனையை இவை ஒழித்துவிடுகின்றன.

இந்நிலையிலிருக்கும் உலகைச் சீர்ப்படுத்துவதற்கு மதமானது நற்போதனை செய்யாமல், இவற்றைப் பொருட் படுத்தாமலே வெற்றி வாழ்க்கை வாழத் தூண்டினால் அம் முறையானது இவ்விடையூறுகளின் உண்மையை ஒப்புக் கொள்ளாமலே ஜீவிக்கத் துணிவதாம். அங்ஙனமாயின் வெற்றி வாழ்க்கையென்பது உண்மையாகாது. அது மன தறிய உண்மையற்ற ஜீவியமாய், இடையூறுகளை மேற் கொள்ளாத ஜீவியமாய் முடியும். வேண்டுமென்றே பின் தாங்கி நின்று அவற்றை மேற்கொள்ளலாமென்பதும் வீண் நினைவே. மன உண்மையில்லாத இம்முறையினால் வெற்றி வாழ்க்கை ஏற்படுவது பொய். இந்த இடையூறு களை ஒப்புக்கொள்ளாமலிருக்கும்வரை நம்மை நாமே வஞ்சித்து ஏமாற்றுவதாகும்.

இவைகள் பாவத்திற்கு ஏதுவானவைகள் என்பதை முதலாவதே ஒப்புக்கொண்டு இவை ஜனசமூகக் கட்டிலமைந்த தீமைகளென்பதை யறிந்து இவற்றை ஒரு சிறிதும் ஆதரியாமல் அகற்றுதற்கான முறைகளைக் கையாட வேண்டும். இப்படிச் செய்வதோ மிகவும் கஷ்டமான காரியம். ஜனசமூகக் கட்டுப்பாட்டில் இவை மாற்றவும் நீக்கவும் கூடாதவிதமாய் அமைந்திருப்பதாகப்பலர் எண்ணிக்கொள்ளுகின்றனர். நமது விருப்பு வெறுப்பு என்பதின்றி அவைகள் அப்படி இருந்தே தீரவேண்டியதாயிருக்கிறது என்பர். இப்படி நினைத்துக்கொள்வதை எப்படி மாற்றுவதென்பதே பெருங்கஷ்டம். எனினும் இப்படிப்பட்ட எண்ணத்தை மாற்றாமல் தீராது. தன்னிடங் காணப்படும் பாவங்களை அகற்றி மேற்கொள்ளுமொருவன் தான் அவற்றை மேற்கொள்ளக்கூடுமென நம்பவேண்டியது எத்துணை அவசியமோ அப்படியே ஜனசமூகத்தினிடையே காணப்படும் இவைகளும் அதைக் கெடுக்கும் நோய்களென்றும் அவை மானிட வாழ்க்கைக்கு இயல்பானவையன்றென்றும் அவற்றை முற்றிலும் நீக்கிவிடக்கூடுமென்றும் நம்பி முயலவேண்டும். ஜனசமூக நல்வாழ்வுக்கு இது இன்றியமையாதது.

கிறிஸ்துவே, நாங்கள் இது சம்பந்தமாய் மனதிலும் ஆவியிலும் மாறிப் பிறக்கவேண்டுகிறோம். உம்மால் எல்லாம் ஆகும் என நம்புகிற நம்பிக்கை எங்களில் வளரவேண்டும். எங்களுக்குள் இந்த நம்பிக்கையை யருளும், எங்கள் ஜனசமூக வாழ்க்கை மிகவும் அலங்கோல நிலையிலிருக்கிறது. ஆமேன்.

தொண்ணூற்றிரண்டாம் நாள்

பலவற்றை ஆராய்ந்து ஒரு முடிவுபெறுதல்

மத். 25: 14–30

நாம் இதுவரை பற்பல காரியங்களை ஆராய்ந்து கொண்டே வந்து தீர்மானமான ஒரு முடிவுக்கு வருகிறோம். மானிடன் தன் முயற்சியின் வழியே சிறிது சிறிதாய்த் தேர்ச்சிபெற்று வளருகிறான் என்பதைத் தற்காலத்தவர் வற்புறுத்தவே அது பார்த்தியக் கோட்பாட்டில் வந்து முடிந்தது. அதாவது நமது முயற்சியென்பது ஒரு சிறிதுமில்லை. கடவுளின் ராஜ்யமென்பது கடவுளின் அருள் வழியே கிடைத்த ஈவே என்பதாம். இதிற் காட்டப்படும் ஒவ்வொன்றும் ஒருவாறு உண்மையாகவே காணப்படுகிறதெனினும் அவை முற்றிலும் உண்மையல்ல. பாதி உண்மை, பாதி உண்மைக்கு மாறானது. கிறிஸ்தவ உலகம் இந்த அரைகுறை உண்மைகளின் மூலமாய்ப் பூரண உண்மையை அறிய நாடுகிறது.

இந்தப் பெரிய உண்மையாவது, புதிய ஏற்பாடு இவ்விரு முறைகளையும் போதிக்கிறதென்பதே. தரிசன ஆகமத்தில் கூறப்படும் காரியங்களை நாம் அப்படியே பொருள் கொள்ளமுடியாதெனவும் ஏதோ புதைபொருட்கள் அதில் அடங்கியிருக்கிறதெனவும் அப்புதை பொருட்களை அறிந்துகொள்வதோ கூடாத காரியமெனவும் தற்காலத்தவர் கருதுகின்றனர். தரிசன ஆகமமே முழுமையையும் உரைப்பதாம். ஷ்வீஜர் என்பவர், புதிய ஏற்பாடானது வரப்போகிற புதிய ராஜ்யமொன்றைப்பற்றி மாத்திரம் போதிப்பதென்றும், அந்த ராஜ்யம் தமது மரணத்தின் மூலமாய் லபித்துவிடும் என வீணே நம்பினவராய்க் கிறிஸ்துவானவர் மரணத்துக்குட்பட்டார் என்றும் கூறுகின்றனர். இங்ஙனம் கூறுவதில் பாதி ஒப்பத்தக்கது. மற்றும் பாதியோ உண்மைக்கு மாறானது. கிறிஸ்துவானவர் கொண்டிருந்த நம்பிக்கை தவறானதன்று. பரலோக ராஜ்யம் வந்துவிடுமென அவர் எதிர்பார்த்த காலம் ஒருவாறு தப்பிதமாயிருக்கலாம். அது வரும்

நேரம் இன்னதென்பதை எவரும் அறியார். "பிதா ஒருவரே தவிர குமாரனுங்கூட அதை அறியார்" என அவர் தாமே கூறியிருக்கின்றனர். எனவே அவர் எதிர்பார்த்த காலம் தவருயிற்று. அந்தநேரத்தைப்பற்றி அவர் தப்பிதமாய் எண்ணி எதிர்பார்த்திருந்ததே நியாயமாக விடவில்லையோ? ஒவ்வொரு மணி நேரமும் அது இப்போது வந்துவிடும், இப்போது வந்து விடும் என நாம் எதிர்பார்த்திருக்கவேண்டியது அவசியம். சரித்திரமுறையாய் அவர் எதிர்பார்த்த காலம் தவருனதாகிவிட்டதெனினும் ஒவ்வொரு மணி நேரத்திலும் அது இப்போதே வந்துவிடலாமென நாம்எதிர்பாராதிருப்போமெனில் அதுவும் தப்பிதமாகும்.

அவர் சிலுவை மரணத்துக்காளாகி மரித்தது கடைசியாகச் சரியெனவே முடியும். சரியாகாதென்பதற்குக் காரணமில்லை. அவர் செய்தது தப்பிதமெனச் சரித்திரவாயிலாய் இன்னும் ரூபகாரப்படவில்லை. சரித்திரம் இன்னும் முற்றுப்பெறவில்லை. மற்றெல்லா விஷயங்களிலும் அவர் கூறியதுண்மையாயிருத்தலின் இவ்விஷயத்திலும் அவர் செய்தது சரியென விருக்கலாம்.

சிறிது சிறிதாக ராஜ்ய வருகைக்கென உழைப்பதும் தரிசன ஆகம ராஜ்ய வருகையை எதிர்பார்ப்பதுமாகிய இருவகைகளையும் ஒரு சேரநோக்கி ஒப்புக்கொள்வதால், நாம் கிறிஸ்தவ நம்பிக்கையில் எவ்வளவு தூரம் செல்லவேண்டுமோ அவ்வளவுதூரம் போய்ச் சேர்வோம். சரித்திரப் போக்குக்கு விலகியவராகியிருந்தும் அதற்குட்பட்டவராவோம், பாடனுபவித்து இரத்தம் சிந்தி உலகைச் சீர்செய்யும் நிலைமைக்குட்பட்டவராகியும் அதற்கு மேற்பட்டவராகிக் கடைசி நியாயத்தீர்ப்பை நடத்துகிறவராகிய அவர் மூலமாய் அதை நியாயந்தீர்த்து விளங்குவோம்.

கிறிஸ்துவே, உமது ராஜ்யத்தைப்பற்றிய பெரிய உண்மைக்கு நீர் எங்களை வழிநடத்துகிறீர். நாங்கள் அதை ஏற்றுக்கொள்ளுகிறோம் எங்களுக்கிருக்கும் ஒரே நம்பிக்கை அந்த ராஜ்யமே யாதலின். **ஆமேன்.**

தொண்ணூற்று மூன்றும் நாள்

திருச்சபை நியாயாதிபதிஸ்தானம் வகிப்பதோ?

மத். 23: 4; யாக். 2: 12, 13

திருச்சபையானது ஜனசமூகச் சீர்திருத்தக் கிளர்ச்சிகள் எதிலும் தலையிடாமலும் அக்கிளர்ச்சிகளில் எதினுடைய கோட்பாட்டையும் திருச்சபை தன் ஏற்பாடாக ஒப்புக்கொள்ளாமலும் ஒதுங்கி நின்று அக்கிளர்ச்சிகளின் கோட்பாடுகளை ஒப்பு தப்பு எனத் தீர்க்கவேண்டுமென்று பற்பலர் அபிப்பிராயப்படுகின்றனர். இப்படிச் செய்வதானது தான் தப்பிக்கொள்ளவேண்டுமெனச் செய்வதாக எனக்குத் தோன்றுகிறது.

சீர்திருத்தக் கிளர்ச்சிகளில் தானும் கலந்துகொண்டு அதனால் விளையும் கஷ்ட நஷ்டங்களைத் தாங்கி இவ்விதமாக உடனிருந்து ஜனசமூக ஈடேற்றத்துக்கென உழையாமலிருப்பதானது தான் நியாயாதிபதியாக அதைச் சரி தப்பெனச் சொல்லிக்கொண்டிருந்தால் போதும் அதற்கெனத் தான் உழைக்கவேண்டாமெனச் சொல்வது போலாம். சீர்திருத்தப் போராட்டத்தில் நியாயாதிபதி ஸ்தானம் வகித்து வெளியே நின்றுகொண்டால் நாம் உண்மைக்கிறிஸ்தவராகவல்ல உண்மையில் பரிசேயனைப்போல் காணப்படுவோம். இத்தகைய கிளர்ச்சிகளுக்கு வெளியே நின்று பார்த்துக்கொண்டிருக்கும் முறைகளனைத்தையும் இயேசுவானவர் கண்டனஞ்செய்தார் என்பது நாமறியாததன்று. ஜனசமூக ஈடேற்ற வழிகளில் அவர் தாமே கலந்துகொண்டு ஜனங்களின் துக்கம், கஷ்டம், பாவம் அனைத்தையும் தமதாகவே கொண்டு சிலுவையைத் தாம் சுமந்து தீரவேண்டுமெனச் சம்மதிக்கவில்லையோ?

பிரித்தானியா நாட்டில் இரட்சணிய சேனை ஸ்தாபகமான காலத்தில் ஒரு வாலிபப்பெண்ணை நியாயாதிபதியின் முன் கொண்டுவந்து நிறுத்திக் கெட்டுப்போனவரைச் சீர்திருத்துவதற்கு அவள் அநுசரித்த முறை

அறவும் இழிவான முறையெனக் குற்றஞ்சாட்டினர். விசாரணை நடந்துகொண்டிருக்கும்போதே நியாயாதிபதி தனது ஆசனத்தினின்று இறங்கிவந்து தானும் அவளோடு நின்றுகொண்டார். அவள் செய்தது தனக்கும் உடன்பாடே என்றும் தன்னையும் அவளோடு நியாயவிசாரணை செய்யவேண்டுமெனவும் கூறினார். அவர் அவ்விதமாகச் செய்து "கடவுள் தமது குமாரனை உலகத்தைத் தீர்ப்பதற்கென அனுப்பாமல் உலகம் அவர் மூலமாய் இரட்சிக்கப்படவேண்டுமென்றே யனுப்பினார்" எனக் கூறப்படுவதின் உண்மையை வெளிப்படுத்தினார். இயேசுவானவர் நியாயாதிபதியின் ஸ்தானத்தை விலக்கியதனால் நேரிடுவதென்ன? இது விபரீதம்! தாம் அவர்களோடு கலந்துகொள்வதினால் தாம் நியாயாதிபதியாகவே விளங்குகிறார். திருச்சபையானது எவ்வளவு தூரம் ஜனசமூக சீர்திருத்தக் கிளர்ச்சிகளில் தானும் கலந்துகொண்டு அதன்பொருட்டுத் தான் கஷ்டம் அனுபவிக்கிறதோ அவ்வளவுக்கு அது அச்சீர்திருத்த முறைகளை நியாயந் தீர்ப்பதாகவுமிருக்கும். அப்படிக் கலந்துகொள்வதினால் திருச்சபைக்குச் சுதந்தரமும் அதிகாரமும் உண்டாகிறது. கலந்துகொள்ளாத விஷயத்தில் இவ்வதிகாரம் கிடைப்பதில்லை. விலகி நின்று வேடிக்கை பார்ப்பது கிறிஸ்துவானவர் காட்டிய முறையன்று.

கிறிஸ்துவே, சிலுவையினின்று நீர் எங்களை நியாயந்தீர்க்கிறீர். நாங்களும் அப்படியே மற்றவர்கள் பொருட்டுப் பாடுபட்டுச் சிலுவை சுமக்கிறவர்களாகி உலகில் அதிகாரம் வகிக்க எங்களுக்குத் துணைபுரிந்தருளும். ஆமேன்.

தொண்ணூற்று நான்காம் நாள்

சந்தித்து மீட்டல்

லூக். 1: 38; 7: 16; பிலி. 2: 5–8; எபி. 2: 9–18

ஜனசமூகக் கிளர்ச்சிகளில் கிறிஸ்தவன் தானும் கலந்துகொண்டு ஈடுபடுவதே பிறரை மீட்பதற்குரிய ஒரே வழி என்பதை நேற்று நோக்கினோம். நியாயாதிபதியாய்த் தான் விலகிநின்றுகொள்வதால் ஒரு நன்மையுமுண்டாகாது. கிறிஸ்தவன் நிலைமை இன்னதென்பதற்கு இது மிகவும் முக்கியமான காரியமாதலால் நாம் அதைத் தீரவிசாரித்து ஆராயவேண்டும். "அவர் தமது ஜனத்தைச் சந்தித்து அதற்கு மீட்பை உண்டுபண்ணினாரே" எனக் கூறியிருப்பது மிகவும் ஆழமான கருத்துடையது. தாம் சொன்ன சந்திப்பும் மீட்பும் எவ்வளவு ஆழமும் அகலமுமான கருத்துடையதென்பதை அவரே அறியாதிருக்கலாம்.

உலகை மீட்கும் விஷயத்தில் கடவுள் தமது வானலோகத்திலிருந்துகொண்டே உலகம் மீட்கப்படுவதாக என ஒரு கட்டளை பிறப்பித்திருக்கலாம். அல்லது ஒரு போதகராகவோ, குருவாகவோ, மாதிரியாகவோ அவதரித்திருக்கலாம். அல்லவென்றால் இப்போதவர் செய்திருக்கிற பிரகாரம் நம்மில் ஒருவராகி நமதுமேல் விழவிருந்த வனைத்தையும் தமதுமேல் விழத்தாங்கி அதன் மேலும் கஷ்டமுண்டாகச் சகித்திருக்கலாம். இதுவே சந்திப்பு.

இவ்விஷயத்தில் திருச்சபை அவர் காட்டிய வழியிலேயே நடந்து தீரவேண்டும். திருச்சபை தான் ஒரு உயர்வான ஸ்தானத்தில் இருந்துகொண்டு ஜனசமூகச் சீர்திருத்தக் கோட்பாடுகளைக் கண்டனம் பண்ணிக் கூறிவிடலாம் என்பது ஒவ்வாது. தன்னை அதனோடு சம்பந்தப்படுத்திக்கொள்ளாமல் தூர விலகிநின்று பார்த்துக்கொண்டிருக்கவாவது போதனாசிரியராக இடையிடையே ஏதோ பிரசங்கம் செய்வதாவது கூடாது. இது

வும் பொருந்தாத முறையே. இவ்வழிகளை யனுசரிப்பதால் திருச்சபை சித்திபெறுவதில்லை. திருச்சபையானது சந்தித்தே தீரவேண்டும். கிறிஸ்துவானவர் ஜனத்தைச் சந்தித்த முறைப்படியே, முழுவதும் அவர் தம்மை அவர்களோடு ஒன்றுக்கிய முறைப்படியே திருச்சபையும் சந்தித்துச் செய்யவேண்டும்.

இப்படி ஒன்றுகுவது பொதுப்பட ஒருவாறு சேர்ந்திருத்தல் எனவாகாமல் இன்ன காரியத்தில், இதற்காகவே எனத் திட்டவட்டமா யிருத்தல்வேண்டும். தான் எடுத்துக்கொண்ட காரியம் தலையிட்ட காரியம் இவற்றின்பொருட்டுப் பாடனுபவிக்கவும் சம்மதிக்கவேண்டும். வேட்கிராபோர்ட் சாஸ்திரிகள் கூறுகிற பிரகாரம் "திருச்சபையானது தன்னை மீட்டுக்கொள்ளக்கூடிய பிரகாரமாய் அது எந்தக் காரியத்தையும் திட்டப்படுத்தி அதற்கென உழைக்க முன்வருமோ என்பதே முக்கிய காரியம்." இயேசுவானவர் இன்னது செய்வதெனத் திட்டப்படுத்தித் தீர்மானித்து உழைத்தார். நாமும் அப்படியே செய்யவேண்டும். தாம் தீர்மானித்த அதன் பொருட்டு இன்னவிதமான பாடனுபவிக்க வேண்டுமென்றதும் தீர்ந்த காரியமாகவே இருந்தது. இன்னதெனும் தீர்மானமின்றிப் பொதுப்பட ஏதோ சீர்திருத்தமெனக் கூறிக்கொள்வது ஒன்றையும் கவனியாமல் ஏனோதானோவென விருக்கும் நிலைமையாகிவிடும். திட்டமான ஒரு காரியமென வரும்போது அவ்விஷயத்தில் திருச்சபை தானும் தலைகொடுத்து ஒத்துழைத்து முயலவேண்டும்.

சந்திக்க மறுத்தால் மீட்பைவிட்டு விலகுவது திண்ணம். ஒன்றையன்றி மற்றது வாய்ப்பதில்லை.

கிறிஸ்துவே, பற்பல சாக்குப்போக்குகளைச் சொல்லி எங்களைத் தப்பித்துக்கொள்ள நினைக்கும் நினைவுகள் எங்களில் காணப்படாதபடி எங்களைக் காத்தருளும். நாங்கள் இப்படித் தப்பிக்கொள்ள நினைத்தால் நாங்கள் மற்றவர்களை மீட்பது கூடாத காரியம். காரியத்தைத் தீர்மானித்து அதன் வழி நடக்கத்தக்க சக்தியை எங்களுக்கு அருளும். ஆமேன்.

தொண்ணூற்றைந்தாம் நாள்

வற்புறுத்தப்பட்ட இருகாரியங்களையும் ஒன்றுபடுத்தல்

மத். 18: 6, 10, 14; 21: 12–16; எபி. 11: 40.

தனிப்பட்ட மீட்பு, ஜனசமூக மீட்பு எனும் இரண்டையும் உயிருள்ள ஒரே காரியமாக இணைக்கவேண்டியது அவசியம் என்று அறிந்துகொள்ளும் விஷயத்தை இப்பொழுது ஆராய்கிறோம். இயேசுவானவர் அவற்றை அப்படியே செய்தார். “அவர் நியாயத்தை ஜெயத்துக்குக் கொண்டுவரும் வரைக்கும் நெரிந்த நாணலை முறியார், மங்கி யெரிகிற திரியை அணையார், புறஜாதியார் நன்னம்பிக்கை அவர் நாமத்தின் மேலிருக்கும்” என அவரைப்பற்றிக் கூறப்பட்டிருக்கிறது.

இரண்டையும் ஒன்றாய்க் கலந்திருப்பதை இங்கு பார்க்கிறோம். ஒவ்வொருவருக்காகவும் இரக்கம், பரிதாபம்—நெரிந்த நாணலை அவர் முறியார், மங்கி எரியும் திரியை அணையார்—ஜனசமூகத்திற்கு நியாயம். நியாயம் என்பது சட்டங்களுக்கு இசைந்து செய்யப்படும் தீர்ப்புகளைக் குறிப்பதன்று. நியாயம் என்பதினால் அறியக்கிடந்தது உலகின் சகல ஜனங்களுக்கும் ஒன்றுபோலவே எல்லா வசதிகளும் ஏற்படவேண்டுமென்பதைக் குறிக்கும்.

முதற்கண் தனித்தனியாயுள்ள ஒவ்வொருவர் மீதும் இரக்க சிந்தை ஏற்படுதல். காற்று, பெருமழை முதலிய இயற்கை காரணங்களால், ஜனங்களின் கால்களில் அகப்பட்டு நெரிந்துபோன நாணல்கள். இயற்கையில் உண்டாகும் கஷ்ட விபத்துக்களுக்கு ஆட்பட்டு நைந்தவர்களுக்கும் தாமே தமக்குத் தீமை செய்துகொண்டு நைந்தவர்களுக்கும் சுவிசேஷமானது பரிதாபங் காட்டி அவர்களைத் தேற்றுகிறது. மங்கி எரியும் திரிபோன்றவர்களுக்கும், அதாவது ஜீவியம் பிரகாசமிழந்து நம்பிக்கை குன்றி இவை அற்றுப்போகுமோ என நினைத்திருப்பவருக்கும் சுவிசேஷம் ஆறுதல் கூறுகிறது. இவ்வாறாக நைந்து

நெரிந்து கஷ்ட நிலையிலிருப்பவருண்டு. இவரையெல்லாம் குணமாக்கி ஜீவனளிக்கும் நம்பிக்கையின் சுவிசேஷத்தை இந்த நற்செய்தியை எல்லோருக்கும் வழங்கவேண்டும். உலகம் இத்தகைய கஷ்டங்கள் நிறைந்த உலகமே.

நாம் ஒவ்வொருவர் விஷயத்திலும் ஈடுபட்டு அவர் மீது பரிதாபமுடையராதலின் நாம் நியாயத்தை நிலை நாட்ட முயலவேண்டும். ஜனசமூகத் தவருன கோட்பாடுகளின் மூலமாய் ஒருவருக்கொருவரும் ஒரு ஜாதியாருக்கு விரோதமாய் மற்ற ஜாதியாரும் தீமை செய்யவே நெரிந்தும் மங்கியுமிருப்பவர்களுக்கு நியாயம் பிறக்கச்செய்ய வேண்டும். ஜனசமூக ஏற்பாடுகள் முற்றிலும் நியாயமானவைகளா யிருக்கவேண்டுமென்பதற்கு நாம் ஆத்திரத்தோடு போராடவேண்டும். தனித்தனியே ஒவ்வொருவர்மீது பரிதாபமிருப்பதுண்மையாயின் ஜனசமூக முழுவதின் மீதும் அப்பரிதாபம் கொள்ளவேண்டும். ஒன்றை மறப்பதால் மற்ருென்று மாத்திரம் தனியே முற்றிலும் பயன்படுவதில்லை.

கிறிஸ்துவே, தனித்தனியானவர் விஷயம், பொதுஜன விஷயம் எனப்பேதப்படுத்தாமல் இரண்டையும் ஒன்ருய்க் கருதியுழைத்தவரே, நாங்களும் இவற்றைப் பிரித்துநோக்காமல் இணைத்துநோக்கக் கிருபை புரிந்தருளும். ஆமேன்.

தொண்ணூற்றுமூன்றும் நாள்

நீதி என்பதன் பொருள்

சங். 82: 2–4; நீதி. 22: 27; ஏசா. 1: 17; 59: 14, 15; லூக். 11: 42.

தனிப்பட்ட காரியம் ஜனசமூக காரியம் இரண்டையும் ஒன்றுக்கித் தனித்தனியானவர்மீது பரிதாபமும் ஜனசமூக ஏற்பாட்டில் எல்லாருக்கும் ஒரே விதமான ஏற்பாடும் இருக்கவேண்டுமென்பதை நேற்று நோக்கினோம். நெரிந்த நாணல் முறிக்கப்படலாகாது. நீதி ஜெயமாக விளங்கவேண்டும். கிறிஸ்துவானவரைப்பற்றிக் கூறப்படுவனவற்றின் மூலமாய் இவ்விரண்டுமே அவர் ஊழியத்தில் சிறந்த காரியங்களாயிருந்தன என்பதை அறிகிறோம். அப்படியானால் நீதி என்பதன் தாற்பரியம் இன்னதென்பதை நாம் ஆராயவேண்டும். அது சரித்திர பரம்பரையாயுள்ளது. எபிரேய சரிதத்தில் தனித்தனியானவர் வேறே ஜனசமூகம் என்பது வேறே என்னும் கோட்பாடிருந்ததில்லை. இரண்டும் ஒன்றே. தெய்வ சித்தம் இன்னதென்பதை யூத ஜாதியார் அனைவரும் ஒரு ஜனமாகத் தங்கள் சமூக ஜீவியத்தில் நிறைவேற்ற வேண்டும். பக்தி, தெய்வவழிபாடு என்பன தனித்தனியே ஒவ்வொருவருக்கும் கடவுளுக்குமுள்ள காரியமென்பதைப் பழைய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசிகள் அறிந்தவர்களல்லர். யூத ஜாதி முழுவதும் ஒரு ஜனமாகக் கடவுளால் தெரிந்துகொள்ளப்பட்ட ஜாதி. இந்த ஜாதியார் தமது சமூக வாழ்க்கையில் கடவுளின் சித்தத்தை அவர் கட்டளையிட்ட பிரகாரம் நிறைவேற்ற வேண்டும். இதுவே அக்கால யூத மார்க்கம். ஆகவே நீதி என்றது அக்கால யூத ஜனசமூக வாழ்க்கையில் விளங்கிய சமத்துவம், பக்ஷபாதமின்மை, பிரமாணம், தெய்வ வழிபாடு முதலியவற்றைக் குறித்து நின்றது.

இயேசுவானவர் கொண்டிருந்த கருத்தும் இதுவே. யூத ஜனமானது கடவுளின் ராஜ்யமாக விளங்கவேண்டு

மென எதிர்பார்த்தார். அவர்கள் இடங்கொடுக்காமற் போகவே, அவர் அவர்களிடம் "கடவுளின் ராஜ்யம் உங்களிடமிருந்து நீக்கப்பட்டு அதன் கனிகளைக் கொடுக்கும் ஜனத்திற்குக் கொடுக்கப்படும்" என்று கூறினார். 'ஜனத்திற்கு' என அவர் கூறியது கவனிக்கத்தக்கது. கடைசியாக அவர் யூதஜனம் அனைத்தையும் குறிப்பதாக எருசலேமை நோக்கி "எருசலேமே, எருசலேமே, நான் எத்தனைதரமோ உன் பிள்ளைகளைக் கூட்டிச் சேர்த்துக் கொள்ள மனதாயிருந்தேன், நீங்களோ மனதில்லாதிருந்தீர்கள்" என்று சொன்னார். கப்பர்நகூம், பெத்சாயிதா முதலிய ஊர்கள், ஊர் முழுமையுமாக மனந்திரும்பிக் கீழ்ப்படிய வேண்டுமெனக் கேட்டார். நாமோ, புதிய ஏற்பாட்டில் போதிக்கப்படும் இவ்வுண்மையை மறந்தோம்; இந்த மறதியின் பயனாய் உலகானது வழிகாட்டியின்றி இங்கு மங்கும் அலைந்து திரிகிறது.

தற்காலக் கிறிஸ்துமார்க்கத்தில் தெய்வசித்தத்தை ஜனசமூகம் மொத்தமாக ஒன்றுசேர்ந்து நிறைவேற்றுதல் என்பதை விட்டுவிட்டோம். இம்முறையை மறக்கவே, கிறிஸ்துமார்க்கப் போதனையின் சிறப்பு குன்றியது. ஜனசமூக வாழ்க்கை சீர்கேடாகிவிட்டது. நாம் அதைத் திரும்பக் கண்டுபிடியாவிட்டால் மானிடவர்க்கத்தினுள்ளே போராட்டமுண்டாகி அது முற்றிலும் அழியும்.

கிறிஸ்துவே, நியாயத்தை ஜெயமாக அனுப்ப வந்தவரே, அதன் உண்மையை நாங்கள் மறுபடியும் கண்டுகொண்டு எங்களுடைய சமூக வாழ்க்கையில் அதை அனுசரித்துவர எங்களுக்குத் துணைபுரிந்தருளும். ஆமேன்.

தொண்ணூற்றேழாம் நாள்

நீதிமான்களின் விவேகம்

சங். 72: 2; ஏசா. 1: 27; ஆமோஸ் 5: 24

தற்காலம் மிகுந்த அவசியமாயிருப்பது நீதியை அதாவது ஜனசமூக வாழ்க்கையில் நீதியான ஒழுக்கத்தை நிலைநாட்ட வேண்டுமென்பதே. யோவான் ஸ்நானகனின் வரலாறு கூறப்படுமிடத்தில் "அவன் பிதாக்களுடைய இதயங்களைப் பிள்ளைகளிடத்திற்கும் கீழ்ப்படியாதவர்களை நீதிமான்களின் விவேகத்திற்கும் திருப்பிக் கர்த்தருக்குத் தகுதியான ஒரு ஜனத்தை அவருக்கு ஆயத்தப்படுத்துவார்" என்று சொல்லப்படுகிறது. 'ஒரு ஜனம்' தகுதியானதாய் ஆயத்தமாக்கப்பட்டுக் கடவுளின் சித்தத்தை நிறைவேற்றுவதற்கு ஆயத்தமாயிருக்க வேண்டுமென்று கூறப்படுகிறது. அவர்கள் ஆயத்தப்படுவது எப்படி? இருகாரியங்கள் செய்யப்படவேண்டும்:—பிதாக்களின் இதயங்களைப் பிள்ளைகளிடத்திற்குத் திருப்பவேண்டும். அதாவது என்ன? தற்காலம் ஆதிக்கம் செலுத்தும் சந்ததியானது தன்னுடைய சுயநலத்திற்காக உழைப்பதை விட்டுவிட்டு இனிவரும் சந்ததியின் நன்மைக்கென உழைக்கவேண்டும். "நீதிமான்களின் விவேகத்தை"த்தழுவி இதைச் செய்யவேண்டும்.

"நீதிமான்களின் விவேகம்" என்பது கவனிக்கத்தக்கது. பொருள் திருடப்பெற்றவர்களுக்கும் ஏழைகளுக்கும் அவசியமானது தர்மம் கொடுப்பதல்ல, நீதி செய்ய வேண்டியதே எனும் தெளிவான உண்மையை மாறிமாறி வற்புறுத்திக் கூறவேண்டும். அநீதமென்பது விவேகமின்மையே என்பதைக் கண்டறிந்தோம். தற்கால ஜன சமூக வாழ்க்கையின் முறை யென்ன? அறிவுத்தேர்ச்சி, சாஸ்திரமுதிர்ச்சி, இயந்திரப்பழக்கம், இவற்றால் விளையும் நன்மைகளை யாவரும் அடைந்து அனுபவிக்க விடாமல் காரிய பரிபாலனம் செய்யும் சிற்சிலர் மாத்திரம் அவற்றைத் தமக்கென வைத்துக்கொள்கின்றனர். இத

னல் விளைந்தது பெருங்கேடே. இம்முறையானது செல்வ விர்த்தியைத் தடுத்து யாவருக்கும் கேடு விளைப்பதா யிற்று. இது அநீதக்காரரின் விவேகமின்மையாலானது. தொழில் செய்வதற்கு அவசியமான பொருட்கள் கிடைப் பவற்றை யெல்லாம் ஒவ்வொரு ஜாதியாரும் தாம் தாமே வைத்துக்கொள்ள வேண்டுமென நினைக்கின்றனர். பிற ருக்கு என்ன நேரிட்டாலும் கவையில்லை யென்றிருக் கின்றனர். இதனல் விளைவதென்ன? ஜனத்திற்கும் ஜனத் திற்கும் கலகம். ஒருவரைப்பற்றி ஒருவருக்குப் பயம், போர், இது அநீதக்காரரின் விவேகமின்மையாலானது. கடவுளின் ராஜ்ய மென்பது சாத்தியமான காரியமன்று அது செல்லாது, நடவாது என்று சிற்சிலர் சொல்வார் கள். இங்ஙனம் சொல்வோர் யார்? உலகைத் தாறுமா ருக்கி இந்நிலைமைக்குக் கொண்டுவந்தவர்களே இங்ஙனம் கூறியலைகின்றனர். தற்கால சந்ததியார் இதைப்பற்றிப் பேசும் உரிமையுடையவர்களல்லர்.

பூரணமாய் எல்லாருக்கும் நீதமான முறையைக் கையாள்வதே ஜனசமூக விவேகமாகும். வேதாகமத்தில் சாந்தமாய்க் கூறப்படுவதற்கு நாம் செவி கொடாதே போனல், இதோ, உலகமனைத்தையும் பட்சிக்கும் போரும் பட்டயமும் அக்கினியும் கிளம்பி அவ்விவே கத்தை நமக்குப் போதிக்கும். இவற்றின் மூலமாய்ப் பேசுபவர் கடவுளே. நீதிமான்களுரைக்கும் விவேகம் கடவுளின் திருவார்த்தையேயாகும்.

கிறிஸ்துவே, நாங்கள் செய்துள்ள தப்பிதங்களினின்று எங்களைக் காத்தருளும். எங்களுடைய சகல சம்பந்தங்களிலும் நாங்கள் பக்ஷத் தோடு நியாயமுள்ளவர்களாய் நடந்துகொள்ள எங்களுக்குத் துணை புரிந்தருளும். அதை இப்பொழுதே நாங்கள் தொடங்கும்படி எங்க ளுக்கு உதவி செய்தருளும். ஆமேன்.

தொண்ணூற்றெட்டாம் நாள்

நீதி வெற்றியடைதல்

மத். 15: 13; ஆப. 2: 4–14; கோலோ. 2: 15; லூக். 10: 18

கடவுள் பேசுகிருரெனவும் நீதிமான்களின் விவேகம் இன்னதென நாம் கற்றுக்கொள்ள வேண்டுமென்றுரைக்கிருர் எனவும் நேற்றுப் பார்த்தோம். அவர் சொல்லுகிற பிரகாரம் கேட்டு நடப்பதற்கோ பயப்படுகிருேம். அம்முறை சாத்தியமான முறையன்றெனவும் அம்முறையை யனுசரித்தால் நமக்கு நஷ்டமுண்டாகுமெனவும் பயப்படுகிருேம்.

நீதியுள்ளவராய் நடப்பதால் நமக்குச் சிறிதளவும் நஷ்டமுண்டாகாதென நான் உரைப்பதில்லை. முற்றிலும் நீதியாய் நடக்கவேண்டுமானுலும் ஒவ்வொருவருக்கும் ஒரேவிதமான சுயாதீனமும் அனுகூலமும் கொடுக்கச் சம்மதிக்கவேண்டுமானுலும் முதலாவது நாம் நமக்குள்ளிருக்கும் தான் எனும் தன்னயத்தை விட்டுவிடவேண்டும். இது ஒருவாறு உண்மையான பரித்தியாகமாகும். உலகின் சகல நன்மைகளேயும் யாவரும் பட்சபாதமின்றிப் பகிர்ந்து அனுபவிக்கும்படி சகோதரராக வேண்டும். இந்நிலைமைக்கு வருவதற்கு நமக்குச் சம்மதியில்லை. கடவுளே தாம் கூறிய உவமையொன்றில் அதைப்பற்றிக் கூறுகிருர். முதல் வந்தவர்களும் கடைசியில் வந்தவர்களேயே போல ஒரே அளவு கூலியைப் பெற்றபோது முன் வந்தவர் முறுமுறுத்து எங்களேப்பிந்தி வந்தவரோடு சமமாக்கிவிட்டீரே எனச் சொன்னபோது அவர் “சிநேகிதனே, நான் உனக்கு அநியாயம் செய்யவில்லை” என்று பதிலுரைத்தார். எல்லாருக்கும் ஒன்றுபோலவே அனுகூலம். நீதி ஏற்பட்டால் நமக்கு நஷ்டம் உண்டாகுமெனப் பயப்படுகிருேம். அப்படியல்ல, சுயநலமுடைய ‘தான்’ என்பது ஒழிந்து, புதிதும் நீதியும் சகோதரத்துவமுமுள்ள ‘தான்’ என்பது பிறக்கும். அப்பொழுது

"சிநேகிதனே, நான் உனக்கு அநீதி செய்யவில்லை. உண்மையில் நான் உனக்குப் பெரு நன்மை செய்கிறேன்" என்று சொல்லக்கூடியதாகும்.

இப்படி யெல்லாம் ஏற்பட்டால் உலகியல் நடை பெருது எனப் பலர் எண்ணுகின்றனர். இயேசுவானவரைப்பற்றிய அந்த வாக்கியத்தில் "அவர் நீதியை வெற்றியடையச் செய்கிருர்" எனக் கூறப்படுகிறது. அவர் வெற்றியடையச் செய்வாரா? செய்வது கூடிய காரியமா? ஆம். கூடிய காரியமே. அவர் இப்பொழுதும் அதையே செய்துகொண்டிருக்கிருர். அநீதியுள்ள ஜனசமூக முறைகளை, நசித்துப்போன இம்முறைகளை, இன்றே தகர்த்துக் கொண்டிருக்கிருர். அவற்றை நொறுக்கி அழிக்கிருர். அவையனைத்தும் பொடிபட்டுத் தூளாகிப் பறக்கின்றன. அங்கங்கே காணப்படும் அநியாயங்களே அம்முறைகளை அழிக்கின்றன. இதுவே நியாயத்தீர்ப்பின் காலம்போல் காணப்படுகிறது. ஜனசமூக ஏற்பாட்டில் நீதி இருக்க வேண்டுமெனத் தீர்க்கப்படுதற்கிசைவாய்த் தற்கால முறைகள் தவறுள்ளன வெனக் கண்டனம் செய்யப்படுகின்றன. இப்போது நமக்கும் தீர்ப்பு இதுவே. நமது மூலமாய் நீதி பிறக்கும்படியாக நாமும் கண்டனம் செய்யப்படுகிரேம். இதோ, நீதி வெற்றியடையும்படி அவர் செய்கிருர். நித்திய கடவுள் தாம் கொண்ட மீட்பின் நோக்கத்தை விட்டிருப்பவரல்ல. உலகின் வாழ்க்கையனைத்தும் இம்மீட்புக்குள்ளாகவேண்டும்.

கிறிஸ்துவே, உமது மீட்பு அனைத்தும் ஜெயத்துக்கு வருமென்பது அறிந்து உமக்கு நன்றி செலுத்துகிரேம். அது இடையில் தடைபட்டு நின்றுவிடுவதில்லை. கடைசியில் எங்கள் நாவில் நிலைப்பது ஒரே வார்த்தை—ஜெயம், ஜெயம். நாங்கள் இப்பொழுதே அவ் வார்த்தையைக்கூறி அதை எங்களதாக்கிக்கொள்ளக் கிருபை செய்தருளும். ஆமேன்.

தொண்ணூற்றொன்பதாம் நாள்

நமக்குள்ள ஒரே நம்பிக்கை

ஏசா. 50: 5–10; 54: 2–4; 10: 14, 17; யோ. 6: 68

நம்பிக்கை யுண்டென்பதைத் தற்காலத்தவர் நன் கறியவேண்டும். நம்பிக்கை யுண்டென்றால் ஏளனஞ் செய்து இகழ்ந்துரைப்பார் சிலர். நம்பிக்கைக்கு இட மில்லையெனத் தலையசைத்துச் சாதிப்பார் பலர். இது மிகவும் பயங்கரமான நிலைமை. கடவுள் சொல்வதென்ன? "அனைவருக்கும் மன்னிப்பு அருளுவேன், நம்பிக்கை யில்லை என்று சொல்லாதபடி உங்களைக் காப்பேன்" எனக் கடவுள் கூறுவதாகப் பிரான்சிஸ் தாம்ஸன் என்பவர் கூறுகின்றனர். நம்பிக்கைக்கு இடமில்லையென நினைத்த மாத்திரமே கடவுளின் மீட்புக்கு இடங்கொடுப்பதில்லை யெனக் கதவை யடைத்துத் தாளிட்டது போலாகும். அங்ஙனமாயின் நமது நம்பிக்கையை நாம் மறுபடியும் பெற்றுக்கொள்வதெங்ஙனம்?

"புறஜாதியாரின் நம்பிக்கை அவர் நாமத்தின்மே லிருக்கும்" என நாம் முன்பார்த்த வாக்கியங்களிலிருக் கிறது. நமது நம்பிக்கை கடவுளிலிருக்கிறது. அவர் நெரிந்த நாணலை முறியார். நீதியை வெற்றியடையச் செய்பவர். இவற்றால் விளங்குவதென்ன? ஒவ்வொரு வருக்கும் மீட்பையும் ஜனசமூக முழுமைக்கும் நீதியை யும் கூறியறிவிக்கிறவராகிய ஒருவரில் அந்த நம்பிக்கை யிருக்கிறது என்பதே. இந்த மீட்பு நீதியும் வெற்றியு மாக முடியும். இதுவே நமது நம்பிக்கை.

இவ்விரண்டிலே ஒன்று இல்லாதவிடத்து மற்றொன்று மாத்திரம் வெற்றிபெறாது. இங்கொருவர் அங்கொரு வர் மாத்திரம் மீட்படைந்து வருவதினால் நமக்கு நம் பிக்கை யில்லை. இப்படிப்பட்ட மீட்பினால் ஜனசமூக வாழ்க்கை ஏற்படுவதில்லை. இது சம்பந்தமாய் எழுதிய ஹெர்பர்ட் கிரே ஆசிரியர் "குணப்படுதல் என்பது தனித்தனியே ஒவ்வொருவருடைய ஜீவியத்தில் ஏதோ சிற்சில மாறுதல்களைப் பிறப்பித்து அவ்வளவில் நின்று விடுகிறது. அதற்குமேல் அது செல்வதில்லை. செல்வ விர்த்தி, போர், பறிசெய்யப்பட்ட ஏழைகளுக்குரிய

சிலாக்கியம் இவ்விஷயங்களைப்பற்றிக் காலாகாலங்களில் அவர்கள் கொண்டிருந்த அபிப்பிராயங்களோ மாறுமலே நிலைத்துவிடுகின்றன. இவ்வாறுன குணப்படுதல் திருப்திகரமானதன்று" எனக் கூறுகின்றனர். குணப்படுதல் என்றுல் பொது ஜனசமூக வாழ்க்கையிலும் நீதி வெளிப்படவேண்டும். ஜனசமூக நல்வாழ்வு ஏற்படும் தனித்தனியே ஒவ்வொருவர் விஷயத்திலும் மாறுதலில்லாத விடத்து அதுவும் பயனற்றதேயாகும். மிகவும் வியாதியாயிருந்த ஒருவரைச் சமீபகாலத்தில் பார்த்து வந்தேன். அவருக்கு இருந்தது மிகவும் கஷ்டமான வியாதி. மிகுந்த வேதனை விளைப்பது. ரணவைத்தியர் அறுத்துச் சுகமாக்கினுலல்லது அது குணமாகாது என்றனர். அந்த நோயாளியோ தன்னைத் தன் சொந்த ஊருக்கு அனுப்பிவிடும்படி தொந்தரவு செய்தார். தனது ஊர் இப்போது அவர் இருந்த ஊரிலும் சற்று உஷ்ணமான இடமாகையினுல் அங்கே சென்றுவிட்டால் தான் சுகமாய்விடலாம் என எண்ணினுர். அறுத்துச் சுகமாக்கவேண்டிய வியாதி இடமாறுவதினுல் சுகமாகிவிடாது என்பதை அவர் அறியவில்லை. ஜனசமூக வாழ்க்கை சம்பந்தமாகவும் இப்படி இடமாறுவது போன்ற வெளிமாறுதலால் சீர்திருத்தமும் நன்மையும் உண்டாகாது. உள்ளான தப்பிதக் கோட்பாடுகளும் தாறுமாறுகளும் நீக்கப்படும் வரை உண்மையான நன்மை விளைவதற்கிடமில்லை.

நமது நம்பிக்கை தனித்தனி மனமாறுதலினுலாவது ஜனசமூக சீர்திருத்தத்தினுலாவது விளையாது. இரண்டும் பொருந்திய விடத்தே நல்நம்பிக்கை விளையும். கிறிஸ்துவிலும் அவருடைய ராஜ்யத்திலும் இவ்விரண்டையும் காணலாம். அவரிலேயே நமது நல்நம்பிக்கை இருக்கிறது.

கிறிஸ்துவே, எங்களுக்குத் தேவையான தின்னதென நாங்கள் தேடினுலும் ஜனசமூக வாழ்க்கைக்கு நலமான தின்னவெனத் தேடினுலும் எல்லாம் உம்மிலேயே, உமது திருப்பாதத்தண்டையிலேயே முற்றுப்பெறுகின்றன. நாங்கள் உமது பாதத்தண்டையிற் கிட்டிச் சேருகிறோம். பீடைகொண்ட உலகத்திற்கு உம்மையன்றி வேறே நம்பிக்கையில்லை. எங்களுக்கும் நம்பிக்கை நீரே. ஆமேன்.

PRINTED AT THE DIOCESAN PRESS, MADRAS—1939. B 5436